# புதுவை மக்களும் திரௌபதி வழிபாடும்



முனைவர்

உலக. வீரப்பன்

# புதுவை மக்களும் திரௌபதி வழிபாடும்

முனைவர் உலகை. வீரப்பன்,
எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பிஎச்.டி.
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி - 605 014

சேது நூலகம்
31, புதுத்தெரு, பிள்ளைச்சாவடி
புதுச்சேரி - 605 014

✦ ஆசிரியர் : உலக. வீரப்பன்

✦ நூல் தலைப்பு : புதுவை மக்களும் திரௌபதி வழிபாடும்

✦ பாடு பொருள் : சமயமும் சமூகவியலும்

✦ முதற்பதிப்பு : திருவள்ளுவராண்டு 2032
ஐப்பசித் திங்கள், நவம்பர் 2001

✦ எழுத்து : 11 அளவு

✦ பக்கங்கள் : 176

✦ விலை : உருபாய் - 75.00 மட்டும்

✦ கணினி அச்சு : சபாநாயகம் பிரிண்டர்ஸ்
176, கீழ ரத வீதி, சிதம்பரம் - 608 001.
✆ : 23040, 23020

✦ அச்சிட்டோர் : யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
101-D, ராயப்பேட்டை நெடுஞ்சாலை
லஸ், மயிலாப்பூர், சென்னை - 600 004
✆ : 4984693, 4661807

இறைமை சார்ந்த நூல்களை வெளியிட உதவும்
திருமலை - திருப்பதி தேவத்தானத்தின் நிதியுதவியுடன்
இந்த நூல் வெளியிடப் பெறுகின்றது.

## படையல்

பெற்றெடுத்து,
கல்வியூட்டி,
வளர்த்தெடுத்து
ஆளாக்கிய

இனிய பெற்றோர்
திரு.வீர. உலகநாதன்
திருமதி தனலட்சுமி
ஆகியோருக்கு...

# பொருளடக்கம்

பக்கம்

- வாழ்த்துரை (முனைவர் க.ப. அறவாணன்) v
- அணிந்துரை (முனைவர் நாகப்பா. நாச்சியப்பன்) viii
- மகிழ்வுரை (திரு. சீனு.வேணுகோபால்) xi
- நன்றியுரை xiii
- முன்னுரை xv
- பெண் தெய்வ வழிபாடு - ஓர் அறிமுகம் 17
- திரௌபதியம்மன் கோயில்: வழிபாட்டுச் சடங்குகள், விழாக்கள் 45
- மக்களின் நம்பிக்கைகள், வேண்டுதல்கள் 87
- திரௌபதியம்மன் கோயில்களும் சமுதாயப் பணிகளும் 110
- நிறைவுரை 137
- பின்னிணைப்புகள் 145
- துணைநூற் பட்டியல் 167

# திரௌபதியம்மன் இங்கே கண்ணகி எங்கே?

## வாழ்த்துரை

**முனைவர் க.ப. அறவாணன்**
*முன்னாள் துணைவேந்தர்*
*ம.சு. பல்கலைக்கழகம்*
*திருநெல்வேலி*

*தமிழர்களில் வழிபாட்டு வரலாறு விந்தைக்குரியது. இருபது நூற்றாண்டுகள் கடந்த பிறகும் பழங்குடிப் போக்கினர். இவர்தம் பல நூற்றாண்டுப் பழமை உடைய மரபு வழிபாடுகள் தத்துவ அடித்தளம் இல்லாதவை. உருவ/அருவ வழிபாட்டையும், சடங்குகளையுமே மேலாகக் கொண்டவை. பெரும்பாலும் முன்னோர் வழிபாட்டையும் மறுபிறவிகளையும் நம்பியவை; நம்புகின்றவை இவ்வியல்புகளே அயல்நாட்டு ஆண் தலைமைச் சமயங்கள் வெள்ளம் போல் அள்ளிச் செல்ல வழித்தடம் அமைத்துத் தந்தன. ஒருவரே இறைவன் என்ற கோட்பாட்டை அடியொற்றிய கிருத்துவ இசுலாமியப் படையெடுப்புகளுக்கு முன்பு, சமயப் படையெடுப்புகளுக்கு முன்பு பல்லுருவ, பல தெய்வ வழிபாடுகள் தடுமாறிப் போயின. நூற்றுக்கணக்கான பல்லுருவ வழிபாடுகளை கிருத்துவ இசுலாமுக்கு முன்பு சமண பௌத்த மதங்கள் மாற்ற முயன்றன. அன்னோர் முயற்சி வெற்றி பெறவில்லை. பின்னர் எளிதாகச் சமரசம் செய்துகொள்ளும் நிறுவன அமைப்பு இல்லாத சிவ விஷ்ணு வணக்கங்களுள் இச்சிறு தெய்வ வழிபாடுகள் மிகச் சாமர்த்தியமாக ஒருங்கிணைக்கப் பெற்றன. ஒரு குடைக்கீழ் கொண்டுவரப் பெற்றன. இந்த முயற்சியின் அழுத்தமான அடையாளமாக விளங்குவது தமிழகத்தில் உள்ள திரௌபதி அம்மன் வழிபாடு ஆகும்.*

*திரௌபதி கதை நிகழ்ந்த களம் தமிழகம் அன்று. தருமன் முதலான ஐவரை மணந்து கொண்ட திரௌபதி வாழ்க்கை முறை*

தமிழர்க்கு ஏற்புடையதும் அன்று. எனினும் திரௌபதி வழிபாடு தமிழகத்தில் ஏக சமய கோட்பாட்டில் பரப்பப்பட்டது. நிலை நாட்டப் பட்டது. தமிழர் இயல்பாகத் தாய்த் தெய்வ வழிபாட்டினர்; அம்மன் வழிபாட்டினர்; அம்மன் வழிபாட்டில் தமிழருடைய வழிபாட்டுத் தலங்களில் எளிதாக திரௌபதி அம்மன் வழிபாடு அமர்ந்து கொண்டது. ஆளும் அரசு பேணும் மதங்களையும் மதக்கோட்பாடுகளையும் அஞ்சிப் பின்பற்றும் மனப்போக்கினர் தமிழர். எனவே தெலுங்கு நாடான ஆந்திரத் தேசத்திலிருந்து வைணவ நாயக்கர் தமிழகத்தையும் புதுவையையும் ஆண்ட போது வைணவக் கதையான பாரதக் கதை அரசர் போற்றும் மதச் சார்பில் வந்து அமர்ந்துகொண்டது. நாயக்க மன்னரின் நன்கொடை திரௌபதி கோயில்கள் என்றால் அது மிகையன்று. தமிழ்ப் புதுவை வரலாற்றில் நாயக்கர் வரலாறு குறிப்பிடத் தக்கதாகும். நாயக்கர் ஆட்சியின் அடையாளச் சின்னமே திரௌபதி கோயில்கள் ஆகும். சோழநாட்டில் பிறந்து மதுரையில் பத்தினி என்பதை நிலை நாட்டி மதுரை நகரையும் கணவனுக்குக் கொலைத்தண்டம் விதித்த மன்னனையும் அவன் மனைவியையும் உயிர் முடித்து, சேர நாடு சென்று மலையேறி தெய்வம் கூறிய கண்ணகிக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க கோயிலைச் சேரன் செங்குட்டுவன் எழுப்பினான். பெண்ணுக்கு முதன் முதல் கட்டப்பட்ட கண்ணகி கோயிலும் கண்ணகி வழிபாடும் ஈழத்தில் பரவின. தமிழகத்திலும் பரவவில்லை. இந்தியாவிலும் பரவ வில்லை; தமிழர் புலம் பெயர்ந்து சென்று வாழ்ந்த ஏனைய உலகப் பகுதிகளிலும், பரவவில்லை; ஆனால் வடபுலத்துக் களங்களை மையமாகக் கொண்டு, புனையப் பெற்ற பாரதக் கதையும் அதன் தலைமை மாந்தரான திரௌபதியும் தமிழகத்தில் பரவினதும் தமிழரிடையே கோயிலாகக் குடிகொண்டிருப்பதும் ஆண்டு விழாவாகத் தொடர்ந்து நிகழ்ந்து வருவதும் தமிழருடைய உள்ளப் போக்கை எடுத்துக்காட்டும் நல்ல சான்று. இந்நிலையில் புதுச்சேரி வட்டாரத் திரௌபதி அம்மன் வழிபாடு பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடாகப் புதுவைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறை உருவாக்கங்களுள் ஒருவரான திரு உலக. வீரப்பனால் வடிக்கப் பெற்றுள்ளது. இத்தகு ஆய்வு ஆர்வம் கொண்ட பேராசிரியர் அ. அறிவுநம்பி வழிநடத்தலில் இவ்வாய்வு நிகழ்ந்திருப்பது இன்னொரு சிறப்பு.

தமிழர் திரௌபதி அம்மன் வழிபாட்டை ஏற்கும் பின்புலத்தில் தாய்த் தெய்வ வழிபாட்டினராக இருந்தனர் என்ற செய்தி

ஆய்வாளரால் விளக்கப் பெற்றுளது. சக்தி வழிபாடும் திரௌபதி அம்மனும் எனும் தலைப்பில் இடம் பெற்றுள்ள செய்திகள் பெண்ணைத் தமிழர் சக்தியாகப் பார்த்த சத்தியத்தை எடுத்துரைக்கிறது. விளக்க ஆய்வு முறையும் புதுவைப் பகுதி திரௌபதி அம்மன் கோயில் வழிபாடு, விழா முறை ஆகியன நிரல்பட ஆய்வாளரால் நேரில் சென்று அறிந்து அரங்கேற்றம் பெற்றுள்ளன.

ஆய்வாளரால் எடுத்துக்காட்டப் பெறும் போத்தராசா திரௌபதி அம்மன் வழிபாட்டின் ஆதி ஆந்திராவில் தொடங்கியது என்பதைக் காட்ட வல்லதாகும். ஆய்வாளர் சுட்டிக் காட்டும் இன்னொரு வியப்பான செய்தி முத்தால ராவுத்தர் சிலை ஆகும். தாடி, முண்டாசுடன் அமர்ந்த தோற்றத்திலிருக்கும் சிலையின் வரலாறு மேலும் ஆராயத் தக்கதாகும். ராவுத்தர் என்னும் பின்ஒட்டு தமிழர் இசுலாமியரைச் சுட்ட வழங்கியதாகும். இசுலாமிய மத மரபு உருவ வழிபாட்டை ஏற்பதுமில்லை.

அம்மன் கோயில்களில் அம்மன் மட்டுமே இடம் பெற்றிருக்கும் பண்டு ஆண் தெய்வம் உடன் இருத்தப் பெறுவதும் இல்லை. சிற்றூர்ப் புறப்பெண் சிறு தெய்வ வழிபாட்டில் இதனைக் காணலாம். பெருந்தெய்வமாகப் பெண் வழிபடப் பெறும் குமரிமுனை பகவதியம்மன் கோயிலிலும் சிவலிங்கம் இல்லை. ஏக தெய்வ வழிபாடும் ஆண் தெய்வ வழிபாடும் தமிழகத்தில் திணிக்கப் பெற்ற பிறகே தனி அம்மன் வழிபாடு ஆண் துணை அம்மன் வழிபாடாக மாற்றம் பெற்றது.

இளவல் வீரப்பனின் ஆய்வு சிறந்த விளக்கவியல் ஆய்வாக அமைந்துள்ளது. மேலும் ஆராய்ந்து அறிவிக்க வேண்டிய செய்திகள் நிரம்பவே உள்ளன. இளைஞரும் ஆர்வலரும் உழைப்பாளியுமான தம்பி வீரப்பன் இந்த தலைப்பில் தன் எஞ்சிய வாழ்நாளையும், செலவிட்டு அறிஞர் ஆல்ப் ஹில்டாபிடல் (Alf. Hiltebeitel) அவர்களைப் போன்று திரௌபதி அம்மன் வழிபாட்டியல் அறிஞர் வீரப்பன் எனும் பெயரை வருங்காலத்து நிறுவுவார் ஆக. வாழ்த்துகள்.

19.8.2001 — க.ப. அறவாணன்

# அணிந்துரை

**முனைவர் நாகப்பா. நாச்சியப்பன்**
*துறைத்தலைவர், தமிழாராய்ச்சித் துறை*
*காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு ஆய்வு மையம்*
*இலாசுப்பேட்டை, புதுச்சேரி - 605 008.*

*தமிழ்நாட்டில் தாய்த்தெய்வ வழிபாட்டிற்கு ஒரு சிறப்பிடம் பண்டு தொட்டு இருந்து வருகிறது. உலக அளவில் நோக்கினாலும் பெண் தெய்வ வழிபாடு முதன்மை பெற்றிருப்பதை அறிய முடிகிறது. சிந்து சமவெளியில் நடைபெற்ற அகழ்வாய்வுகளும் பெண் தெய்வ வழிபாட்டின் முதன்மையை, சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. வழிபாட்டு வளர்ச்சியில் படைத்தல் என்னும் ஒரு பெரிய செயல் பெண்ணிடம் இருப்பதை அறிந்த மானிடம் பெண்களுக்கு முதன்மை அளித்து பெண்மையைப் போற்றி வழிபட்டு வந்துள்ளதை நாம் காண்கிறோம். இவ்வாறு தோற்றமும் வளர்ச்சியும் கால்கோளும் பெற்ற பெண் தெய்வ வழிபாட்டிற்கான வழிபாட்டிடங்களும் வழிபாட்டு முறைகளும் பலதிறப் பட்டனவாய் அமைந்து உள்ளன.*

*நாட்டார் வழிபாட்டு மரபில் பெண் தெய்வ வழிபாடு அன்று தொட்டு இன்றுவரை உயரிய நிலையிலேயே இருந்து வருவது கண்கூடு. நாட்டுப்புற ஊர்களில் இயற்கைத் தெய்வ வழிபாட்டில் பெண் தெய்வ வழிபாடே தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இயற்கைச் சக்திகளைக் கூடப் பெண்ணாகப் பார்த்து வழிபடுவது மாந்தர் இனத்தின் பண்பாக உள்ளது. மண்ணையும் மரத்தையும் ஆற்றையும் பெண்ணாக எண்ணிப் போற்றி வழிபடும் வழிபாடு இன்றும் உள்ளது. இயற்கையின் எல்லையில்லாச் சக்தியை அளிக்கும் ஆற்றல் பெண் தெய்வத்திற்கே உண்டு என்று எண்ணும் மரபு நாட்டார் மரபாக உள்ளது. நாட்டார் மரபாகப் போற்றப்பட்டு வந்த தாய்த்தெய்வ வழிபாடுகள் பின்னர் ஆகம வழிபாடுகள் தோன்றிய கால கட்டத்தில் ஆகமக் கோயில்களின் வழிபாட்டிலும் இடம் பெறத் தொடங்கின. காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, திருக்கடவூர் அபிராமி, திருவானைக்காவல் அகிலாண்டேசுவரி ஆகிய வழிபாடுகள் புராண வரலாறுகளோடு இணைக்கப்பட்டு ஆகம வழிபாடுகளோடு இணைந்துள்ளன.*

தாய்த் தெய்வ வழிபாட்டின் முதன்மை அறிந்த பண்டைய அரசர்கள் தாய்த் தெய்வத்திற்கெனத் தனிக் கோட்டம் (திருக்காமக் கோட்டம்) அமைத்து ஆகமக் கோயில் வழிபாட்டில் இணைத்துள்ளமையை வரலாறுகள் நமக்கு உணர்த்துகின்றன. நாட்டார் வழிபாட்டில் தோற்றம் பெற்ற தாய்த்தெய்வ வழிபாடு ஆகம வழிபாட்டிலும் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றது.

தமிழ் இலக்கிய ஆய்வு உலகில் வழிபாடு பற்றிய ஆய்வுகள் பல வந்துள்ளன. பெண் தெய்வ வழிபாடுகள், சக்தி வழிபாடுகள் என்ற நிலையில் பல ஆய்வுகள் நிகழ்ந்து உள்ளன. நாட்டார் வழிபாடுகளிலும் ஆகமக் கோயில் வழிபாடுகளிலும் இதுபோன்ற ஆய்வுகள் பல நிகழ்ந்துள்ளன. நாட்டார் வழிபாட்டில் தோன்றிய ஒரு வழிபாடு புராணச் செல்வாக்கு பெற்றுத் தனித்ததோர் வழிபாடாகத் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் விரவி, பரவிக் காணப்படும் வழிபாடாக அமைந்ததே திரௌபதியம்மன் வழிபாடு.

'ஐவர்க்கும் தேவி அழியாத பத்தினி' என்னும் வழக்குச்சொல் அக்காலக் குழு வாழ்க்கையின் ஓர் எச்சத்தை நமக்குக் காட்டுமுகமாய் அமைந்தது. மாபாரதக் கதையில் இடம்பெறும் பாஞ்சாலி பாத்திரப்படைப்பு இம்மரபை ஒட்டியே அமைந்ததாகும். நாட்டார் வழிபாடாக இருந்த பெண் தெய்வ வழிபாடு புராணச் செல்வாக்குப் பெற்று திரௌபதியம்மன் வழிபாடாகப் பரிணமித்துள்ளது. தமிழ்நாட்டினைப் பல இடங்களில் பெரு வழக்காக உள்ள இவ்வழிபாட்டை, வழிபாட்டு மரபை எடுத்துக்கொண்டு புதுச்சேரி வட்டாரத்தில் இவ்வழிபாட்டின் நிலை பற்றிக் காண்பதே இந்நூலின் கருதுகோள். நூலாசிரியர் முனைவர் உலக. வீரப்பன் அவர்கள் திரௌபதியம்மன் கோயில் வழிபாட்டு முறைகளை இனம் காணுதல், இவ்வழிபாட்டின் புராண ஈடுபாடு, பிற ஈடுபாடு ஆகியவற்றைக் கண்டறிதல் மக்களின் நம்பிக்கைகளைத் தொகுத்துக் காணல் எனும் முறையில் இந்நூலைப் பகுத்துக் கொண்டு ஆய்வு செய்து எழுதியுள்ளார். புதுச்சேரிப் பகுதிகளான இரண்டு நகராட்சிப் பகுதிகள், ஆறு கொம்யூன்களை ஆய்வு எல்லைகளாகக் கொண்டு இவ்வாய்வு நிகழ்த்தப் பெற்றுள்ளது.

புராண இதிகாசச் சார்பு பெற்ற திரௌபதியம்மன் வழிபாடு தமிழகத்தின் வட மாவட்டங்களிலும் புதுச்சேரியிலும் குறிப்பிடத் தக்க இடத்தைப் பெற்றுள்ளது. திரௌபதியம்மன் மழைத் தெய்வமான மாரியம்மன், கங்கை அம்மன் ஆகிய பெண் தெய்வங் களோடு வைத்து எண்ணப்படும் சிறப்பைப் பெற்றுள்ளது. அரக்கு மாளிகை விழா, பகாசூரன் வதை விழா, அருச்சுனன் தபசு

நிகழ்ச்சி, அரவான் களபலி, தீ மிதித்தல், தருமர் முடிசூட்டுவிழா முதலிய நிகழ்ச்சிகள் நாடகப் பாங்கோடு இவ்வழிபாட்டில் அமைந்துள்ளமை இதன் புராணச் செல்வாக்கை நமக்குக் காட்டு கிறது. திரெளபதியம்மன் வழிபாட்டுடன் நாட்டார் வழிபாட்டுத் தெய்வங்களான போத்தராசா, முத்தால் ராவுத்தர், முத்தால் ராயர், அய்யனார், வீரன் முதலிய காவல் தெய்வங்களும் இடம் பெற்றுள்ளன. புதுச்சேரிப் பகுதியில் திரெளபதியம்மன் வழிபாடு ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரின் குல தெய்வமாக விளங்கி வருவது இந்நூலின்கண் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. இவ்வழிபாடு உடல் வருத்தம் சார்ந்தவை. உடல் வருத்தம் சாராதவை என்ற இரு நிலையில் அமைந்துள்ளமையையும் நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளமையையும் இந்நூல் எடுத்துக்காட்டி விளக்குகிறது. தாழ்த்தப்பட்ட சமூக இன மக்கள் தீ மிதிப்பது போன்ற வழிபாட்டில் கலந்துகொள்வது கிடையாது என்ற உண்மையையும் இவ்வாய்வு நூல் எடுத்துக் காட்டியுள்ளமை சாதிக்கொடுமை இன்றும் கோயில்களை விட்டு அகலவில்லை என்ற வருத்தத்தை நமக்குத் தருகிறது.

புதுவைப் பல்கலைக்கழகத்தில் சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி இலக்கிய உயராய்வு நிறுவனம் பல தரமான ஆய்வாளர்களை, ஆய்வேடுகளை, ஆய்வு நூல்களை உருவாக்கிய பெருமை பெற்றது. இந்நிறுவனத்தில் நூலாசிரியர் முனைவர் உலக. வீரப்பன் அவர்கள் ஒரு குறிப்பிட்ட வழிபாட்டு மரபை எடுத்துக்கொண்டு அகண்டதோர் ஆய்வை நிகழ்த்தி யுள்ளார். இவ்வாய்வு நூல் நாட்டார் வழிபாட்டின் பல கூறுகளையும் எடுத்துக்காட்டும் முறையில் அமைந்துள்ளமை கற்போர்க்குக் கழிபேருவகை தருவது. கள ஆய்வு முறையில் இலக்கியச் சான்றாதாரங்களோடு ஆய்வுப் பொருளை எடுத்துக் கொண்டு நூலாசிரியர் கையாளும் நடை சிறப்புடையது. புதுவைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் முனைவர் உலக. வீரப்பன் அவர்கள் தமிழ் ஆய்வு உலகத்திற்குச் செய்ய வேண்டிய பணிகள் பல உள்ளன. முதற்பணியாக ஒரு வழிபாட்டு மரபை எடுத்துக் கொண்டு முனைவர் உலக. வீரப்பன் ஆற்றியுள்ள ஆய்வுப் பணி பாராட்டுதற்குரியது. வடலூர் வள்ளல் வளர்சீர் கருணையால் வளர்தமிழ் ஆய்வுகள் வரிசையாகப் பெருக வாழ்த்துகிறேன்; வாழ்க வளமுடன்.

அன்புடன்

புதுச்சேரி
22.8.2001

நாகப்பா. நாச்சியப்பன்

## மகிழ்வுரை

செந்தமிழ்ச் செம்மல்
**சீனு. வேணுகோபால்,** க.மு.கல்.இ.,
(பட்டதாரி - தலைமை ஆசிரியர்)
**பிள்ளைச்சாவடி**

புதுவைப் பல்கலைக்கழகச் சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி மற்றும் இலக்கிய உயராய்வு நிறுவனத்தில் முனைவர் பட்டப் பேற்றிற்காக எனதருமை இளவல் திரு உலக. வீரப்பன் அவர்கள் புதுச்சேரி வட்டாரத்தில் திரௌபதி அம்மன் வழிபாடு பற்றி ஆய்வு செய்த பதிவுகள் அனைத்தும் இன்று ஓர் ஆய்வு நூலாகச் செப்பம் பெற்று வெளிவருவது பாராட்டுக்குரியதாகும்.

"எங்கெங்கு காணினும் சக்தியடா"- என்னும் புதுவைக் குயில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் தொடக்க கால வரிகளுக்கும், தமிழ் இலக்கியங்களில் காணப்பெறும் பெண் தெய்வ வழிபாட்டுச் சான்றாதாரங்கட்கும் இவர் தமது ஆய்வு நூலில் செய்திகளை அளித்திருப்பது இவரது சிறந்த ஆய்வு நிலையை நமக்குப் புலப்படுத்துகிறது.

பஞ்ச பூதங்கட்கும் தலைவியாய் நெருப்பிலே பிறந்து தமிழ் கூறும் நல்லுலக மாந்தர்களால் வழிபாடு செய்யப்படும் வீர பாஞ்சாலி என்னும் திரௌபதி அம்மன் வழிபாட்டின் இயல்புகளை இவர் விவரித்துள்ள பாங்கு மிகவும் சிறப்புக்குரியதாகும். குறிப் பாகவும் சிறப்பாகவும் இவர் தமது ஆய்வுக்காகக் காரைக்கால், மாகே, ஏனாம் பகுதி தவிர்த்த புதுவை வட்டாரத்தைச் சேர்ந்த பல்வேறு இடங்களில் திருக்கோயில் கொண்டுள்ள திரௌபதி அம்மன் வழிபாடுகளை மிகத் தெளிவாக விளக்கியிருப்பது கற்போர் தம் நெஞ்சைக் களிப்புறச் செய்யும் என்பதில் அய்யமில்லை.

தான் பிறந்த ஊரான பிள்ளைச்சாவடி சிற்றூரில் எழுந் தருளியிருக்கும் திரௌபதி அம்மன் ஆலய வழிபாட்டை அடித் தளமாகக் கொண்டும், இந்த வழிபாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவரிடம் நேர்காணல் கண்டும், விழா மற்றும் சடங்குகளை

உற்று நோக்கியும் களப்பயணங்கள் மூலம் கருத்துக்களைப் பெற்றும் தனது ஆய்வினை மேற்கொண்டு செய்திகளை ஆறு இயல்களாகப் பிரித்து அதற்கான சான்றுகளைப் பல்வேறு இலக்கியச் செய்திகளோடு தொடர்புபடுத்தியிருப்பது மிகவும் குறிப்பிட்டுப் பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

இந்த ஆய்வு நூலின்கண் இவர் பதிவு செய்துள்ள சான்றுகள் அனைத்தும் நம் தமிழ்நாட்டு மக்களின் பண்பாடு, கலாச்சார அம்சங்கள், மரபு நிலை ஆகியவற்றை ஒட்டி எவ்வாறு அமைந்து நிகழ்கின்றன என்பதைத் திரௌபதி அம்மன் வழிபாட்டின் பல்வேறு நிலைகளுடன் ஒப்பிட்டு விவரித்து இருப்பதும் நாம் எண்ணி மகிழத் தக்கதாகும்.

புதிய பார்வையுடன் இந்த ஆய்வு நூல் அமைந்திருப்பது மிகவும் போற்றுதற்குரியதாகும். இளமையிலேயே எதையும் ஆய்வு செய்து பார்க்கும் சிறந்த குணம் படைத்த என் அன்பு இளவலின் இயல்பு உணர்ந்து அப்போதே அவரை நான் "பண்டித லோக. வீரப்பன்" அவர்களே என அழைத்து மகிழ்வேன். அந்த மகிழ்வான எண்ணம் இன்று நிறைவேறியதில் எனக்கு அளவற்ற மகிழ்ச்சி. அரிய முயற்சி மேற்கொண்டு அயராது உழைத்துள்ளார். அனைவரின் பேருதவியோடு புதுமையான இன்னும் சொல்லப் போனால் எனக்குத் தெரிந்தவரை முதன்மையான ஓர் ஆய்வு நூலாக இந்தப் பொருள் பற்றி வெளிவரும் முதல் நூலாக இதுதான் இருக்கும் என்பது என் நிலை.

அற்புதமான செய்திகளை, ஆதாரங்களோடு இந்த ஆய்வு நூலில் படைத்து முனைவர் பட்டம் பெற்ற என் அன்பு இளவலை

**"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்"**

என்ற வள்ளுவரின் வரிகளின் பொருளுக்கு விளக்கமாய் உணருகிறேன். அவர் மேலும் பல நூல்களைப் படைத்து, சமுதாய வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்றும் அம்மனை வேண்டுகிறேன்.

அன்னாரின் இந்த நூல் வெளிவர உதவிய அன்புக்குரியவர் களுக்கு என் நன்றி!

இவண்

பிள்ளைச்சாவடி
20.11.2001

சீனு. வேணுகோபால்

# நன்றியுரை

புதுவைப் பல்கலைக்கழகத்தில் 11.10.1995-ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பயில்வதற்குத் தமிழியல் துறையில் வாய்ப்பளித்த பேராசிரியர் **அ. ஞானம்**, துணைவேந்தர் அவர்களுக்கும் பல்கலைக்கழகத்தில் மாணவர்களேயன்றி ஊழியர்களும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற உயரிய சிந்தனையில் முதன் முதலில் களம் அமைத்து உயர்த்தி உதவிய பேராசிரியர் அன்றைய துறைத்தலைவர் க.ப. **அறவாணன்** அவர்களுக்கும் என் முதற்கண் நெஞ்சார்ந்த நன்றிகள்.

புதுவைப் பல்கலைக்கழகத்தில் தமிழியல் துறையில் இளம் முனைவர் பட்டம், முனைவர் பட்டம் ஆகியவை பயில்வதற்கும் 'புதுவை மக்களும் திரௌபதி வழிபாடும்' என்ற இந்நூல் வெளிவருவதற்குக் களம் அமைத்தும் நெறிப்படுத்தி ஊக்க மளித்தவர் பேராசிரியர் முனைவர் **அ. அறிவுநம்பி** அவர்கள். அவர்கள் காட்டிய அன்பிற்கும் வழிகாட்டுதலுக்கும் நன்றிகள் பல.

என் முனைவர் பட்ட ஆய்வேட்டை, நூலாக வெளிக் கொணரும் நிலையில் அறிவுரைகள் பல வழங்கிய பேராசிரியர் முனைவர் **நாகப்பா. நாச்சியப்பன்** அவர்களுக்கும், பேராசிரியர் முதுமுனைவர் **ம.சா. அறிவுடைநம்பி** அவர்களுக்கும், இணைப் பேராசிரியை முனைவர் **இளமதி சானகிராமன்** அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

நூல் தொடர்பான பல நிலைகளிலும் உதவி செய்த விரிவுரையாளர்கள் முனைவர் **சிலம்பு நா. செல்வராசு**, முனைவர் **அ. அருள்தாசு**, முனைவர் **அரங்க. முருகையன்**, முனைவர் **எஸ். ஏழுமலை**, முனைவர் **ஏ. ஏகாம்பரம்**, **திரு க. கண்ணன்** அவர்களுக்கும் என் அன்பான நன்றியை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழியல் துறையில் பணிபுரியும் பேராசிரியப் பெருமக்கள் மற்றும் பல்துறைப் பேராசிரியர் பெருமக்கள் அனைவருக்கும் நான் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். மேலும் என்னுடன் பணிபுரியும் அத்தனை இனிய நண்பர்களுக்கும் என்

உளங்கனிந்த நன்றிகள். இந்நூலுக்குத் தேவையான விழா மலரை உவந்தளித்த அன்பு உள்ளங்களுக்கும் பல அரிய கருத்துக் களை வழங்கிய துறையின் சக ஆய்வாளர்கள், மாணாக்கர்கள், பிற தகவலாளர்கள், கோயில்களையும் விழாக்களையும் பார்க்க அனுமதி அளித்துதவிய அறங்காவலர் குழுவினர் மற்றும் ஊர்ப் பெரியோர்கள் ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

திருக்கோயில் பற்றிய நிழற்படங்கள் எடுக்க உதவி செய்த **திரு பெருமாள்** அவர்களுக்கும், உடன் பிறவாச் சகோதரர் **ஆர். குமாரவேலன்** அவர்களுக்கும், **திரு இரா. சானகிராமன்** அவர்களுக்கும், **திரு சீனு. மோகன்தாஸ், எம். பன்னீர்செல்வம்** மற்றும் **ஆர். சேகர்** அவர்களுக்கும் என் நன்றிகள்.

இந்நூலுக்குத் துணைநின்ற **திருமதி பானுமதி வீரப்பன்** அவர்களுக்கும் **வீர. சேதுராம், வீர. அருளாளன்** ஆகியோருக்கும் என் நன்றி.

இந்நூலுக்கு அழகு சேர்க்கும் வகையில் வாழ்த்துரை வழங்கி உதவிய முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் **க.ப. அறவாணன்** அவர்களுக்கும், அணிந்துரை நல்கிய தமிழ்த்துறைத் தலைவர் **நாகப்பா. நாச்சியப்பன்** அவர்களுக்கும், மகிழ்வுரை வழங்கிய **திரு சீனு. வேணுகோபால்** அவர்களுக்கும் சிரம் தாழ்த்தி வணங்கி நன்றி தெரிவிப்பதில் மகிழ்கின்றேன்.

இந்நூல் தங்கள் கரங்களில் மட்டும் அல்லாது உள்ளத் தளவில் நின்று நிலைத்திருக்கக் கூடிய அளவில், நல்ல முறையில் அச்சு வடிவம் கொடுத்த **திரு இரா. கௌதமசங்கர்** (உரிமையாளர், சபாநாயகம் பிரிண்டர்ஸ், சிதம்பரம்) அவர்களுக்கும் என் மன நிறைவான நன்றி.

இந்நூல் வெளிவருவதற்குத் துணைநின்ற அத்தனை இனிய உள்ளங்களுக்கும் என் மனமார்ந்த நன்றியையும் வணக்கத் தையும் மீண்டும் ஒருமுறை தெரிவிப்பது என் தலையாய கடமை.

அன்பன்

**உலை. வீரப்பன்**

## முன்னுரை

இயற்கை மனிதனுக்கு அச்சத்தை என்று ஏற்படுத்தியதோ அன்றே வழிபாட்டையும் ஏற்படுத்தி விட்டது எனலாம். வழிபாடு மனிதனுடைய வாழ்க்கையோடு ஒட்டி உறவாடக் கூடிய நிறுவனமான சமயத்தின்பாற்பட்டது. இத்தகைய சமயம் வைதீக சமயம், நாட்டார் சமயம் என இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டது. எனினும் இரு சமயத்திலும் உள்ள தெய்வங்களை மக்கள் வணங்கி வழிபட்டு வருகின்றனர். தென்னகத்தில் ஆண் தெய்வக் கோயில்களைக் காட்டிலும் பெண் தெய்வக் கோயில் களின் எண்ணிக்கை கூடுதலாகும். இப்பெண் தெய்வக் கோயில் களில் திரௌபதியம்மன் கோயில்களும் அடங்கும். ஆற்றல் வாய்ந்த சக்தியாகத் திரௌபதியம்மனை வணங்கும் போக்கு, தமிழகத்தின் வடமாவட்டங்களில் பரவலாகக் காணப் பெறு கின்றது. வட தமிழகத்தை ஒட்டிய புதுவைப் பகுதிகளிலும் சக்தி வாய்ந்த அம்மனான திரௌபதியம்மனை மக்கள் இன்றும் வழிபாடாற்றி வருகின்றனர். திரௌபதியம்மன் கோயில்களில் ஆண்டுக்கொரு முறை பல நாட்கள் தொடர்ந்து நடைபெறும் வழிபாட்டுச் சடங்குகள், விழாக்கள் போன்றவை மக்களிடையே கூட்டுணர்வை வளர்க்கவும் சமுதாயப் பணிகள் சிறப்பிடம் பெறவும் தெய்வ சக்தி மேலோங்கவும் திரௌபதியம்மனின் மீது நம்பிக்கைக் கொண்டு வழிபாடாற்றி வரும் தன்மையை நான்கு இயலில் விளக்குவதாக இந்நூல் அமைகிறது.

தொன்றுதொட்டு இன்று வரையில் தமிழர்களின் வாழ்வியல் முழுவதும் சமயம் பரவி இருந்ததைப் பலரும் மொழிவர். சமய வளர்ச்சியின் காரணமாகப் பல்வேறு நிலைகளில் வழிபாடுகள் பெருகின. பொது நிலையில் ஆண் தெய்வ வழிபாட்டைக் காட்டிலும் பெண் தெய்வ வழிபாட்டில் மக்களின் ஈடுபாட்டுணர்வும், பக்தியுணர்வும் மேன்மை அடைந்திருத்தலை நடப்பியல் வழி அறிய முடிகிறது. மேலும் பெண்ணே சக்தியின் வடிவமாக உருவகிக்கப்பட்டு அனைத்து இன மக்களாலும் வழிபடப்பட்டு வரும் பெண் தெய்வங்களாகப் படைக்கப்பட்டிருப்பதைப் புதை பொருள் சான்று பகரும். இலக்கண இலக்கிய நூல்களில் பெண் தெய்வங்கள் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன. எனினும் இலக்கியங்களில் இடம் பெறாத் திரௌபதியம்மன் புராணக்

கதையின் வாயிலாக மக்களிடையே இன்று செல்வாக்குப் பெற்று அனைத்து இன மக்களாலும் வழிபடப்பட்டு வரும் பொதுத் தெய்வ மாக விளங்குவதை **முதலாமியலில்** எடுத்துரைக்கப்படுகிறது.

ஆலய வழிபாட்டின் சிறப்பைப் பொன்மொழி சுட்டுவது உணர்த்தப்படுகின்றது. தெய்வத்தைப் பழங்கால முதற்கொண்டு இன்று வரையிலும் அகலாது வணங்கி வழிபட்டு வந்தனர் என்பதை இலக்கியவழி அறிய முடிகிறது. தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் உருவான விழா மரபுகள், நாடு, இனம், மொழி, குழு ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்டு விளங்கினாலும் வழிபாட்டுச் சடங்குகளும், விழாக்களும் ஒரே நோக்கினது என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்டுக்கொருமுறை நடைபெற்று வரும் திரௌபதியம்மன் திருவிழாவில் வழிபாட்டுச் சடங்கு முறையில் பல மேற்கொள்ளப்பட்டிருப்பதை இலக்கியத்தோடு தொடர்புபடுத்தி **இரண்டாமியலில்** விளக்கப்படுகிறது.

மனித வர்க்கம் தோன்றியது முதற்கொண்டு அவ்இயற்கை தம்மைக் காக்கும் என்ற எண்ணம் எழுந்தது வரை சமய நம்பிக்கைகள் மனித வாழ்வில் பெரிதும் பரவி நிலைத்தன. இதன்வழி மக்களிடையே நிலவும் சமய நம்பிக்கைகளும் வேண்டுதல்களும் திரௌபதியம்மன் வழிபாட்டோடு தொடர்பு படுத்தப்பட்டு இலக்கிய வழி ஆராயப்படுகிறது. மேலும் நம்பிக்கையின் பாற்பட்ட பல்வேறு நேர்த்திக் கடன்களும், வேண்டுதல்களும் விரிவாக **மூன்றாமியலில்** விளக்கப்பட்டுள்ளன.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பொன்மொழிக்கு ஏற்ப, வீதிகள் தோறும் பல திருக்கோயில்கள் அமைக்கப் பெற்றிருப்பது நடப்பியல் வழி விளக்கப்படுகிறது. மனித உறுப்புக்களோடு திரௌபதியம்மன் திருக்கோயிலின் கூறு களைத் தொடர்புபடுத்தி விளக்குவதாக இவ்வியல் அமைகிறது. இதன்வழி மக்கள் திருக்கோயிலின் மேல் கொண்டுள்ள ஈடுபாட்டை அறிய முடிகிறது. மேலும் அறங்காவலர் குழுவின் சமுதாயப் பணிகள் போன்ற பல செய்திகளைத் தொகுத்து விளக்குவதாக **நான்காம் இயல்** அமைக்கப் பெற்றுள்ளது.

நான்கு இயல் செய்திகளின் சுருக்கமாக **முடிவுரை** அமைகின்றது. இறுதியில் **துணைநூற் பட்டியலில்** ஆய்வுக்கு உதவிய நூல்கள், கட்டுரைகள், இதழ்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. நிழற்படங்கள் போன்றவை **பின்னிணைப்பில்** தரப்பெற்றுள்ளன.

இயல் 1

# பெண் தெய்வ வழிபாடு - ஓர் அறிமுகம்

## *முன்னுரை*

சமயம் என்பது மக்களிடையே வளர்ந்து வாழ்ந்து வரும் சமூக நிறுவனங்களில் ஒன்று எனலாம். சமயம் என்னும் நிறுவனத்தின் மிகப் பெரும் ஆற்றல்களாகச் சடங்குகளும் வழிபாட்டு மரபுகளும் திகழ்கின்றன. "இவை சமூக இனத்தை ஒன்றிணைத்துக் கட்டுக்கோப்பாகச் செயற்பட வைப்பதில் பெரும் பங்காற்றுகின்றன. ஒவ்வொரு சமயத்திலும் தனி மனிதர்களாக ஈடுபடாமல் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து மேற்கொள்ளும் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும் இடம் பெற்றுள்ளன. இவ்வாறான நிகழ்ச்சிகள் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களையும் ஒன்று சேர்த்து அவர்களுக்கிடையே கூட்டுணர்வை வலுப்படுத்துகின்றன. சமூகப் பிணைப்பை மிகுதிப் படுத்துகின்றன"[1] என்பார் சீ. பக்தவச்சலபாரதி. "மனித இனத்தை நல்வழிபடுத்திடச் சான்றோரால் காணப் பட்டதே சமயம். உலகச் சமயங்கள் பலவும் இந்த நன்னோக்கம் உடையனவே"[2] என்ற கருத்தும் கருதத்தக்கது. மேலும் "சங்க காலத்தில் தமிழினத்தின் வாழ்வில் சமயம் ஒரு பகுதியாக இருந்ததில்லை. சமயம் வாழ்க்கை முழுவதும் படர்ந்து கால் கொண்டிருந்தது"[3] என்ற தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் கருத்து சுட்டத்தக்கது.

## *சமயத்தின் தேவையும் பயனும்*

குறைவுடைய மனிதனை நிறைவுடையவனாக்கக் கல்வி துணை செய்யும். அதைப் போலவே சமயங்களும் மனிதர் களுக்கு ஒழுக்க நெறியுடனும் பக்திச் சிந்தனையுடனும் கூடிய துணை செய்வதாகக் குறிப்பர். இதன்மூலம் உள்ளத்திற்கு நிறைவை அளிப்பதும் முழு மனிதனாக்குவதும் சமய ஈடுபாட்டின் உள்ள பக்தியே எனக் கொள்ளலாம். கோயில் பூசைகள் தடைப்படுவதன் காரணமாக நாட்டிற்கு ஏற்படும் தீங்குகளைத் திருமந்திரம் பாடல் மூலம் திருமூலர் எடுத்துரைக்கின்றார்.

''முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னவர்க்குத் தீங்கள வாரி வளங்குன்றும்
கன்னம் களவு மிகுந்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தாளே''[4]

இதன்வழி கோயில் வழிபாட்டின் தேவையை அறியமுடிகிறது. இப்பக்தி நிலையில் ஆண் - பெண் தெய்வங்களின் அருளைப் பெற, குறிப்பாக அம்மனின் அருளைப் பெற, பல்வேறு வழிபாட்டுச் சடங்குகளை மக்கள் வெவ்வேறு நிலையில் மேற்கொள்கின்றனர். இதன்வழி பெண் தெய்வ வழிபாடு பல நிலைகளில், பல்வேறு முறைகளில் பல சூழல்களில் நடத்தப் பெற்று முதன்மை நிலையில் இருப்பதை நடப்பியல் வழி அறியலாம்.

இவ்வியலின் தொடக்கத்தில் வழிபாடு என்னும் சொல்லுக்குப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. இதனை யடுத்து, பழந்தமிழ் மக்களிடையே நிலவிவந்த வழிபாட்டு முறைகளின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றியும் இவ்வழிபாட்டு முறை இயற்கை வழிபாடாகவும் முன்னோர் வழிபாடாகவும் தாய்த் தலைமை வழிபாடாகவும் ஆவி வழிபாடாகவும் பிற வழிபாட்டு முறைகளாகவும் தோற்றங் கொண்டமை பற்றியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

## வழிபாடு : பொருள் விளக்கம்

'வழிபடு' என்ற வேர்ச் சொல்லினின்று பிறந்ததே 'வழிபாடு' என்ற சொல்லாகும். இச்சொல் ஆழ்ந்த பொருளை உள்ளடக் கியது. வழிபாடு என்ற சொல்லிற்கு வழியிற் செல்லுகை (Proceeding on the way), பின்பற்றுகை (Following), வணக்கம் (Reverence adoration), பூசனை (Ritual workship) என்ற பல்வேறு பொருள்கள் இருப்பதை அகராதிகள் சுட்டுகின்றன. வழிபாடு என்பது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்துகின்றது. இறைவனுக்குச் செய்யப்படும் வணக்க முறைகள் பொதுவாக 'வழிபாடு' என்றே குறிக்கப் பெறுகின்றன. மேற்கண்டவற்றுள் இருந்து 'வழிபாடு' என்பதற்குக் கோட்பாடு, செல்லுதல், பின்பற்றுதல், வணங்குதல் என்ற பொருள்கள் வழங்கப் பட்டுள்ளதை அறியமுடிகிறது'' முன்னோர் காட்டிய அல்லது வகுத்த வழியில் செல்லுதலே வழிபாடு''[5] என மு. அ. மாணிக்கவேலு கூறும் கருத்து இங்கே சுட்டத்தக்கது. மேலும் இவ்வழிபாடு என்பது ''ஓர் உயிர் தன்

உயர்வுக்காகத் தானே செய்யும் ஒருவகை அறிவுப் பயிற்சி; உணர்வுப்பயிற்சி''[6] என்பர். இதன்மூலம் வழிபாட்டின் பொருள் விளக்கத்தையும் சிறப்பையும் அறியமுடிகிறது.

தெய்வங்களுக்காக மக்கள் பக்தியுடன் செய்யும் அனைத்துச் செயல்களும் வழிபாட்டில் அடங்கும். புதுவை மக்களும், திரௌபதி வழிபாடும் என்னும் இந்நூலில் புதுச்சேரி மக்களிடத்தே வேரூன்றி நிற்கும் பெண் தெய்வ வழிபாடு, பக்தியுணர்வு, வழிபாட்டுச் சடங்குமுறைகள் அவற்றை ஒட்டி கோயிலில் நடைபெறும் திருவிழாக்கள் போன்ற பலவற்றையும் உள்ளடக்கிய நிலையிலேயே வழிபாடு என்ற சொல் கையாளப் படுகிறது.

## வழிபாட்டின் தொடக்கம்

''மாந்தன் விலங்கு நிலையினின்று மாந்த நிலையை எய்தி குழுவாகத் திரண்டு நின்றபோது மெல்லச் சிந்திக்கத் தொடங்கிய தன் வெளிப்பாடே வழிபாடு''[7] என்பார் க.ப. அறவாணன். கற்கால மனிதன் ''இயற்கையோடு இயைந்து வாழ்ந்து வந்தான். இயற்கையின் மூலமாகக் கிடைத்த நன்மைகளையும் தீமை களையும் கண்டு ஒருபுறம் மகிழ்ச்சியடைந்தான் மறுபுறம் துன்பப்பட்டான். பிறகு நன்மைக்கு நன்றி செலுத்தவும் தீமை வராமல் தடுக்க வேண்டுதல் செய்யவும் முயன்றான்''[8] என்பர். இதனடிப்படையில் உருவானதே வழிபாட்டின் தொடக்கம் எனலாம்.

## வழிபாட்டுக்கு அடிப்படை

வழிபாடு தோன்றுவதற்கு முதற்காரணமாகவும், மூல காரணமாகவும் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. அச்சம்
2. அன்பு
3. நன்றியுணர்வு

மனித சமுதாயத்தின் முதற்படி 'இயற்கை வழிபாடு' எனலாம். கொடிய செயலுக்குப் பின்னால் ஏதோ ஒரு சக்தி இருப்பதாக நம்பினான். காலப்போக்கில் அச்சத்தின் காரணமாக அதனையே வழிபடத் தொடங்கினான். இதுவே மனித சமுதாயத்தின் 'அடிப்படை நிலை' என்று கூறலாம்.

## இறை வழிபாட்டின் தோற்றம்

"மனித மனத்தில் தோன்றிய அச்சம், குற்ற உணர்வு போன்ற மனவியல் பண்புகளின் பரிணாம வளர்ச்சியே வழிபாட்டு நெறிக்கு வித்திட்டது"[9] எனக் கலைக் களஞ்சியம் சுட்டும். இதன்படி தொடக்க காலத்தில் பண்டைத் தமிழர்கள் ஞாயிறு, திங்கள், ஆறு, கடல், மலை, நெருப்பு போன்ற இயற்கையைத் தெய்வங்களாக வழிபட்டனர்.

**"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"[10]**

என்னும் தொல்காப்பிய நூற்பா இங்கே எண்ணத்தக்கது. மேலும் நற்றிணையில்,

**"குணகடல் இவாந்து குருஉக்கதிர், பரப்பிப்**
**பகல்கெழு செல்வன் குடமலை மறையப்"[11]**

என்றும் அகநானூற்றில்,

**"பகல்செய் பல்கதிர்ப் பருதியஞ் செல்வன்**
**அகல்வாய வானத் தாழி போழ்ந்தென"[12]**

என்றும் குறிக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில், மங்கள வாழ்த்துப் பாடலில் ஞாயிறு, திங்கள், மாமழை போன்வற்றைச் சுட்டியிருக்கின்றார்.

## இறை நம்பிக்கையின் தோற்றம்

மனித சமுதாயம் பல்வேறு படிநிலைகளைக் கொண்டது. ஆதிகால மனிதன் இயற்கையின் ஆற்றலுக்குப் பொருள் புரியாமல் இருந்தான். "இயற்கையின் அளப்பறியா ஆற்றலுக்கு முன் மனித சக்தி ஈடுகொடுக்க முடியாத போது அந்தச் சக்தியினை மனிதன் வணங்கத் தலைப்பட்டான். எனவே இயற்கையின் அச்சம் தரும் செயல்களே மனிதனைக் கடவுள் நெறிக்கு இட்டுச் சென்றது என்னும் மானிடவியலார் கருத்துப் பொருத்தமானதாகும்"[13] என்பார் க. காந்தி. "காலப்போக்கில் இயற்கையைச் சாந்தப்படுத்த சில சடங்கு முறைகளைக் கையாண்டனர். அதனடிப்படையில் விழா எடுத்து நன்றிக்கடன் ஆற்றினர். இயற்கை வழிபாடே உலகின் தொன்மையான வழிபாடாகக் கருதப்படுகின்றது"[14]

## இறை வழிபாட்டின் வளர்ச்சி நிலை

மனித வாழ்க்கையின் முதல்கட்டம் இயற்கை வழிபாடே. அப்போது கடவுளுக்கென்று உருவம் இல்லை. ''காலப்போக்கில் மனித இனம் இயற்கைக்கு உருவம் கற்பித்து வணங்கத் தொடங்கியது. இதனை மனித உருவக் கற்பனை''[15] என்று மானிடவியலார் சுட்டுவதாகத் தே. லூர்து குறிப்பிடுகின்றார். இவ்வியற்கை வழிபாட்டுடன் தொடங்கிய மனிதனின் பக்தி நிலை பல்வேறு வகைகளில் முளைத்து வளரத் தொடங்கியது. இயற்கைப் பொருட்களையும், நிகழ்ச்சிகளையும் உயிரும் ஆற்றலும் உடையனவாகக் கருதி வழிபடுவது ஆன்ம வாதம் (Animism) எனப்படுகிறது. கண்ணுக்குத் தெரியாத ஆவிகள் தம்மை ஆட்டிப் படைப்பதாகக் கருதிப் பழந்தமிழர் ஆவியை வழிபட்டனர். இம்முறை ஆவி வழிபாடு (Spiritism) என்றும் கல், மரம் போன்ற சில குறிப்பிட்ட பொருட்களைப் புனித மாகக் கருதி வணங்கும்முறை கருதல் வழிபாடு (Fitishism) எனவும் பழங்கால மக்களிடையே நிலவின. மேலும் இறந்து போன மூதாதையர்களை வழிபடுகின்ற மற்றொரு முறையும் (Ancestor workship) மக்களிடத்தே தோன்றியுள்ளது. இவை போல்வன சிறு தெய்வ நிலைக்குச் சென்றிருப்பதைக் காண முடிகின்றது.

## இயற்கை வழிபாட்டின் வளர்ச்சி நிலை

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்தினின்றும் தன்னைக் காத்துக் கொள்வதற்காக அதனையே தெய்வமாக எண்ணி வழிபடத் தொடங்கினான். இவ்வழிபாடு மனிதனுடைய அச்ச உணர்ச்சியினின்றும், குற்ற உணர்ச்சியி லிருந்தும் தோன்றியதாக உளவியல் அறிஞர் சுட்டுவர். மேலும் தன் உயிரைக் காத்துக் கொள்வதற்காகப் பிற உயிர்களைப் பலியிடத் தொடங்கினான். பலியிட்டு வழிபடுவதன் மூலம் வழிபடு பொருளின் சீற்றத்தைத் தணித்து விடலாம் என்று எண்ணினான். அவ்வடிப்படையிலேயே இயற்கை வழிபாடு களும் திருவிழாக்களும் தோற்றம் பெற்றன.

காலச் சுழற்சியால் இயற்கைக்கு உருவம் கற்பிக்கப் பட்ட வுடன் பல தெய்வ வணக்கம் தோற்றம் பெற்றிருக்கலாம். ''புராண மக்கட் கூட்டத்தினர் கருவளத்தையும் பயிர் வளத்தை யும் (Fertility) ஒருங்கே பெறுவதற்காகவே மந்திரங்களையும் கையாண்டனர். அதன் தருக்க ரீதியான முடிவாக, வழிபாடு

தோன்றியிருக்கலாமெனக் கருதுகிறார்''[16] க. கைலாசபதி இது போலப் பல்வேறு சூழல்களில் வழிபாடுகள் பெருகின.

### முன்னோர் வழிபாடு

பண்டைத் தமிழர்கள் வீரத்திற்கு முதலிடம் கொடுத்து வந்தார்கள். நன்மை செய்து வந்த ஒப்பற்ற வீரர்களைக் கடவுளர்கள் என்று மதித்து வந்தனர். இவர்கள் இறந்தபின் மக்கள் அவர்களைக் கடவுளர்களாக வழிபடத் தொடங்கினர். சமுதாயச் சிறப்புமிக்க இயல்புகளைக் கொண்டிருந்தவர்களின் இறப்பிற்குப் பின் அவர்களது நினைவாக நடப்பட்ட கல்லே, நடுகல். இதனை, அகநானூறு

> **''பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்**
> **அட்ட போலுந ரடாஅ நெடுங்கல்''[17]**

எனச்சுட்டுகிறது. மேலும் வீரத்தினைப் போற்றும் பண்பின் அடிப்படையில் தோன்றிய நினைவுச் சின்னம் காலப்போக்கில் ஆவி பற்றிய நம்பிக்கையின் பாற்பட்ட நிலையில் நடுகல் வழிபாடாக உருப்பெற்றது. ''வீரயுகத்தில் நினைவுச் சின்ன மாகக் கருதப்பட்ட ஒன்று காலப்போக்கில் வழிபாடாக மாற்றம் பெற்றதனையே இது காட்டுகிறது''[18] என்பர்.

வீரர்களுக்கு மட்டுமின்றிக் கற்புடைய பத்தினிப் பெண்டிருக்கும் நடுகல் வழிபாட்டில் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது என்பதைப் பண்டைய இலக்கியத்தின் வாயிலாக அறியமுடிகிறது. சான்றாகக் கண்ணகி பத்தினித் தெய்வமான தைச் சிலப்பதிகாரம் கீழ்க்கண்டவாறு சுட்டுகின்றது.

> **''நம் அகல் நாடடைந்த இப்பத்தினிக்**
> **கடவுளைப் பரசல் வேண்டும்''[19]**

இதன் மூலம் பத்தினிப் பெண்டிர் தெய்வநிலைக்கு உயர்த்தப் பெற்று வழிபடப் பட்டிருப்பதை இலக்கியவழி அறியமுடி கின்றது.

### ஆவி வழிபாடு

காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்த ஆதி மனிதன் குழு வாகவும் திரளாகவும் வாழ்ந்து வந்தான். இவ்வாறு வாழ்ந்து வந்த மனிதன் திடீரென்று இறந்து விட்டதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தான். இறப்புக்குப் பின்னர் இரவில் அவர்களைக் கனவில் கண்டான். கனவின் விளக்கம் தெரியாத பண்டைய

மனிதன் இறந்தவனை வணங்கத் தலைப்பட்டான். இதனை 'ஆவி வழிபாடு' தோன்ற முதன்மைக் காரணமாகக் கொள்ளலாம்.

நாளடைவில், ஆவி வழிபாடு நடுகல் வழிபாட்டோடு தொடர்புற்றிருப்பதைக் காணமுடிகிறது. காலப்போக்கில் இறந்தவனுடைய ஆவியைச் சாந்தி செய்யும் பொருட்டு வணங்க ஆரம்பித்தனர். இத்தகைய ஆவி நல்லதாகவும் இருக்கலாம். கெட்டதாகவும் இருக்கலாம் என்று நம்பினர். கெட்ட ஆவி, தீமை செய்யும் என்றும், நல்ல ஆவி நன்மை செய்யும் என்றும் நம்பினர். இந்நம்பிக்கையின் அடிப்படை யிலேயே இருவகை நிலையில் துட்ட தேவதை, நல்ல தேவதை எனப் பெண் தெய்வங்களை மக்கள் வழிபட்டு வருவதைக் காணமுடிகின்றது.

## தலைமைப் பொறுப்பு

தொடக்க நிலையில் ஆடவரைக் காட்டிலும் பெண்டிர் தலைமை நிலையைச் சில காலத்திற்கு வைத்திருந்தனர் எனலாம் ''உணவுச் சேகரிப்பு நிலையில் இருந்து வேட்டை யாடும் நிலைமை வந்தபோது ஆட்கள் தேவைப்பட்டனர். பூசலுக்கும் போருக்கும் மிகுதியான ஆட்(ண்)கள் தேவைப் பட்டனர். அவர்களைப் பெற்றுத் தருவதில் இயல்பாகவே பெண்டிர் முதன்மை எய்தி இருத்தல் வேண்டும். அன்று மனிதனின் கைச் சக்தியும் உழைப்புச் சக்தியும் மேலோங்கி இருந்தன. எனவே குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்க்கும் பெண்டிர் முதன்மை எய்தி இருந்தனர்''[20] எனக் குறிப்பிடுவர். இதன்மூலம் குழந்தையைப் பெற்றெடுக்கும் பெண்ணே 'தலைமைப் பொறுப்பு' ஏற்று இருந்தாள் எனக் கருத முடிகின்றது.

மேலும் ஓய்வுநேரத்தில் பெண்கள் காட்டில் உள்ள புல், பூண்டு முதலியவற்றின் உற்பத்தித் திறனைக் கண்டு 'போலச் செய்தல்' (Imitation) அடிப்படையில் விதைகளை விதைத்து அறுவடை செய்து வந்தனர். எனவே ஆண்கள் கொணடுவரும் பொருள்களைக் காட்டிலும் பெண்களின் உற்பத்திப் பொருள்கள் அதிகமாக இருந்தன. எனவே பொருளாதார முறையில் பெண் களின் பங்கு 'தலைமை நிலையை'' அடைந்திருந்ததை அறிய முடிகிறது.

## தாய்த் தலைமை வழிபாடு

ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரை அனைத்துயிர்க்கும் அடிப்படையாய் அமைந்துள்ளது தாய்மையே எனலாம்.

இதனைச் சிறப்பிக்கப் பின்வரும் பொன் மொழிகள் வலுவூட்டு வனவாய் இருப்பதைக் காணலாம்.

> **''தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை''**
>
> **''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்''**
>
> **''மாதா பிதா குரு தெய்வம்''**

இவ்வாறு தாய்மைக்கு முக்கியத்துவம் தந்திருப்பதை எண்ணமுடிகின்றது. தாயின் வடிவில் இறைவனைக் காணும் பொழுது தன்னையறியாது வேண்டுதலில் சில சடங்கு முறை களைக் கையாள முடிகின்றது. எனவே மனிதன் தனது எண்ணங் களுக்கு ஏற்பவும் குணத்திற்கேற்பவும் தான் வழிபடும் தெய்வத்தின் உருவினை வரைந்து வழிபட்டான். மேலும் கன்னித் தெய்வநிலையும் இந்நிலையில் வைத்து வழிபடப் பெறுகிறது.

## பெண் தெய்வ வழிபாடு

மனித வாழ்வின் வளர்ச்சிக் கட்டத்தின் கூரான ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்ட பின் வேட்டையாடுதல் மற்றும் ஆடு, மாடுகள் மேய்த்தல் போன்றவற்றை ஆண்கள் மேற்கொண்டனர். பெண்கள் குழந்தையைப் பேணிக் காப்பது போன்ற செயலில் ஈடுபட்டு வந்தனர். ''பெண்களே புராதனப் பண்பாட்டை உருவாக்குவதில் முக்கியப் பங்கு பெற்றனர். வேட்டை முக்கியத் தொழிலாக இருந்தது மாறிப் பயிர்த்தொழில் முக்கியத் தொழிலாயிற்று. பயிர்த் தொழிலில் பங்குபெற்ற பெண்களும் ஆண்களைவிட உயர்வு பெற்றனர்''[21] என நா. வானமாமலை கூறும் கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது.

சமூகத்தில் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெண்களின் உழைப்பு முதன்மையானதாக இருந்ததால் பெண் களுக்குச் சமூக மதிப்பு உயர்ந்தது. இச்சமூக மதிப்பு உயர்வுக்குக் காரணமாக அமைவது பெண்களின் உடல் அமைப்பு எனலாம். ''பல ஆடவரை ஆட்டிப் படைக்கும் வாய்ப்பும் வலிமையும் உடல் வாகும் பெண்களுக்கு இருந்தன. எனவே பெண்களே தொடக்க காலத்தில் முதன்மை எய்தி இருக்க வேண்டும்''[22] என்பார் கருத்து குறிப்பிடத்தக்கது. இச்சமூக மதிப்பின் வெளிப் பாடாகச் சக்தி வாய்ந்த தெய்வங்கள் பெண் தெய்வங்களாகவே இருந்தன என்றும் பெண் தெய்வங்களையே முதன்மைத் தெய்வங்களாக மக்கள் கொண்டனர் என்றும் இதன் வழி உறுதி

செய்யமுடிகிறது. இன்றும் நடைமுறையில் பெண்தெய்வ வழிபாட்டிடங்கள் மிகுந்திருப்பதைச் சான்றாகக் கொள்ளலாம்.

## தாயே வல்லமை படைத்தவள்

இன்று தந்தை குடும்பத்தில் தலைவனாய் இருப்பது போலத் தாய் ஒரு காலத்தில் தலைவியாய் இருந்திருப்பாள். அக்காலத்தில் தந்தைக்கு முதன்மை உண்டாகாமையால் பிள்ளைகள் தாய்வழி அறியப்பட்டனர். தாயே சொத்துக்களுக்கு உரியவளாய் இருந்தமையால் சொத்துக்கள் தாய் வழியாகப் பிள்ளைகளை அடைந்தன. தாயே எல்லா வல்லமையும் என நினைத்தமையால் அவர்கள் கடவுளைத் தாய்வடிவில் வழிபட்டார்கள். ''இந்நாட்டில் மட்டும் அன்றி அயல்நாடு களிலும் பெண் ஆதிக்கச் சமுதாயம் தோன்றி வளரும் சரித்திர முற்காலத்தில் பெண் தெய்வங்கள் தோன்றின'[23] என்பார் நா. வானமாமலை. இதற்கு அடிப்படையாக அமைவது பெண்கள் செழிப்புத் தன்மையில் மேலோங்கி இருந்ததே. மேலை நாடுகளிலும் இப்பெண் தெய்வங்கள் படைக்கப் பெற்று வழிபாடாற்றுவதைக் காணமுடிகிறது. இதன்வழி தாய் வழிபாடு மிகத் தொன்மைக் கால வாழ்க்கை முறையில் பண்பாட்டில் சிறப்புடையதாகக் கருதப்பட்டது. மேலும் தொன்மைக் காலத் தாய் வாழிபாட்டைப் பற்றிய செய்திகளாலும், தாய் வழிபாட்டுக் கூறுகளாலும் இதனைக் கருதமுடிகின்றது.

## தாய்த் தலைமை வழிபாட்டின் அடிப்படை ஆதாரங்கள்

பண்டைத் தமிழர்கள் தாய்த் தெய்வத்தினை வழிபட்டனர் என்பதை வரலாற்றுச் சான்றுகள் மூலம் அறியமுடிகிறது.

### 1. புதைபொருள் ஆதாரம்

இந்தியாவின் பண்டைய நாகரித்தின் உறைவிடங்களான மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் கிடைக்கப் பெற்ற புதைபொருள்களில் பல தேவி உருவச் சிறபங்களாகும். சிந்துவெளி மக்கள் வழிபட்ட தெய்வங்களை முக்கியத்துவத்தின் படி வரிசைப்படுத்திய ஜான் மார்ஷல் அன்னைத் தெய்வத்தையே முதலில் கூறியுள்ளார். இப்பெண் வடிவச்சிலைகள் சக்தி அல்லது இயற்கை அன்னையின் உருவங்களாக இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ''இச்சக்தி வழிபாடு தாய்த் தெய்வ வழிபாடாகவும் இருப்பதும் சிந்துவெளி நாகரிகத்திலும் இதன்மூலக் கூறுகள் இருப்பதையும் கவனிக்கலாம் என்பார்'[24]

ப. கிருஷ்ணசாமி. பிற்காலத்தில் இந்து சமயத்தில் திராவிடப் பண்பாக விளங்கும் சக்தி வழிபாட்டின் மூலக் கரு, சிந்துவெளி அன்னை வழிபாடாக விளங்குகிறது எனலாம்.

2. வரலாற்று ஆதாரம்

கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே பெண் தெய்வ வழிபாடு சிறப்புற்றிருந்தது என்பதற்குச் சான்றாக "இயக்கி வழிபாடு இந்தியத் தொல்குடியினரிடத்துத் தோன்றி வளர்ந்த தொன்மைமிக்க வழிபாடாகும். ஆரியரின் இந்திய வருகைக்கு முன்னரே இந்திய நாட்டில் இருந்துவந்த தொல்குடியினரிடத்து இவ்வழிபாடு செல்வாக்குப் பெற்று விளங்கியிருக்கின்றது"[25] என்று சுட்டுகிறார் வெ. வேதாச்சலம். இதன்மூலம் 'அன்னை வழிபாடு' பண்டைக்காலம் தொட்டு நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது என அறியலாம்.

கி.மு. ஐந்தாவது நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாவது நூற்றாண்டு வரை பௌத்த சமயம் இந்தியாவில் மேலோங்கி இருந்தது. இக்காலத்தில் கூடத் 'தேவி வழிபாடு' அகலாது வழக்கிலிருந்தது என்பதற்குச் சான்றுகள் உண்டு. இதை உறுதி செய்யப் பின்வரும் சான்று இடந்தருகிறது. "கி.மு. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆதிச்ச நல்லூர் புதைபொருளில் உலோகத்தால் ஆன சிறிய தாய்த் தெய்வச் சிற்பம் கிடைத் துள்ளது"[26] இத்தெய்வத்தின் உருவம் தாய்மையை நினை வூட்டும் வகையில் அமைந்து இருப்பதால் பண்டைக் காலம் தாயைத் தலைமையாகக் கொண்டு விளங்கியது என்றறியலாம்.

பண்டைய திராவிட மக்களில் பெரும்பான்மையினர் தாய்வழி உரிமையையே கடைபிடித்தனர். இதன் காரணமாகப் பெண்தெய்வ வழிபாடு திராவிட மக்களிடையே பெருவழக்கா யிருந்தது என்று கூறும் கருத்துக்கள் இங்கு நினைவு கூரத்தக்கன.

## தமிழ் இலக்கணம் சுட்டும் பெண் தெய்வங்கள்

பெண் தெய்வங்கள் பற்றிய சில குறிப்புகள் தமிழ் இலக்கண நூலில் இருப்பதைச் சில சான்றுகள் மூலம் கண்டறியலாம். தமிழர்கள் தாங்கள் வாழ்ந்து வந்த நிலத்தை, நிலத்தின் தன்மைக்கேற்ப ஐந்து வகையாகப் பகுத்து அதனைத் தெய்வத்தோடு தொடர்புபடுத்தி இருப்பது தெய்வத்தின் மேல் உள்ள ஈடுபாட்டைக் காட்டுவதாகும்.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"[27]**

என்ற தொல்காப்பிய நூற்பா வழி அறியமுடிகிறது. மக்கள் வாழ்ந்த இயற்கைச் சூழலுக்கு ஏற்ப நிலத்தைக் கருப் பொருளாகக் கொண்டு தெய்வத்தோடு இணைத்துக் கூறுவது சுட்டத்தக்கது. பாலை நிலத்தின் தேவதையாக விளங்கி யிருக்கும் கொற்றவை என்னும் பெண் தெய்வத்தை வணங்கி வழிபட்ட செய்தியை இதன்வழி அறியமுடிகிறது. மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகியோரை வகுத்த மக்கள், இந்நிலத்திற்கு மட்டும் பெண் தெய்வத்தை முதன்மையாகக் கொண்டது சிந்திக்கத்தக்கது. அந்தந்த நில மக்கள் வழிபடுவதற் கென, குறிப்பிட்ட தெய்வம் இருந்தது என்பது புலனாகிறது. தன்னை எட்டி உதைக்கின்ற குழந்தையையும் எடுத்து அணைக் கின்ற தன்மை தாய் ஒருத்திக்கே உள்ளது எனத் தெளிந்த மக்கள் தம்மை வறட்சியினின்றும் நோயினின்றும் காக்கக் கூடியவளும் தண்ணளி அளிப்பவளும் அவளே என எண்ணிக் கொற்றவை யைத் தெய்வமாகக் கொண்டனர்.

மறவர்கள் தம் வெற்றிக்குத் துணைசெய்த பெண் தெய்வ மான 'கொற்றவையை' வணங்குவதும் அத்தெய்வத்தைப் புகழ்ந்து வாழ்த்தி வணங்கும் விழாவுக்குக் 'கொற்றவைநிலை' என்று பெயரிட்டிருப்பதும் தொல்காப்பியத்தால் உணரப் பெறுகின்றன.

**"மறம் கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த**
**கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே"[28]**

மேலும் புறப்பொருள் வெண்பா மாலையில், கொற்றவை நிலை பற்றி வரும் அடியாவது

**"நீடோனான் வென்றி கொள்கென நிறைமண் டைவலனுயரிக்**
**கூடாரைப் புறங்காணுங் கொற்றவை நிலை உரைத்தன்று"[29]**

இதன்மூலம் பண்டைத் தமிழர்கள் கொற்றவை என்னும் பெண் தெய்வத்தை வணங்கி, வாழ்த்தி விழா செய்து வழிபட்டனர் என்பதை அறியலாம்.

## தமிழ் இலக்கியம் சுட்டும் பெண் தெய்வங்கள்

பழந்தமிழ் இலக்கியத்தில் பெண் தெய்வங்கள் பற்றியும் வழிபாடு பற்றியும் பல செய்திகள் விரவிக் கிடக்கின்றன. சான்றாகச் சங்க இலக்கியத்திலும் இரட்டைக் காப்பியங்களிலும் பெண் தெய்வத்தைப் பற்றிய சில முக்கியக் குறிப்புகள் காணப் படுகின்றன. இக்குறிப்புகளை ஆராய்ந்து பார்த்தால் மூன்று வகையான பெண் தெய்வங்கள் தமிழ் இலக்கியத்தில் சுட்டப் படுவதைக் காணமுடிகின்றது அவையாவன.

1. கொற்றவை - பண்டைத் தமிழர்களின் தாய்த் தெய்வம்.

2. காளி - இந்திய ஆரியரது (Indo - Aryan) கலப்பால் தோன்றிய தாய்த் தெய்வம்.

3. பழையோள் - திராவிடருக்கும் முன்னரே இந்தியாவில் குடியிருந்த பழங்குடி (Austric) இனத்தாரிடையே வழங்கிய தாய்த் தெய்வம்.

சான்றாகத் திருமுருகாற்றுப்படையில் தமிழரிடையே வளர்ந்த தாய்த்தெய்வம் குறிப்பாகச் சுட்டப்பட்டுள்ளது.

> "மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
> வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவ
> இழையழி சிறப்பிற் பழையோள் குழவி"[30]

இப்பாடல் வரிகளின்மூலம் முருகனின் தாயாக மலைமகளும் கொற்றவையும் பழையோளும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். வரலாற்று முறைப்படிப் பார்த்தால் தமிழரின் தாய்த் தெய்வம் பழையோள், கொற்றவை, மலைமகள் (பார்வதி) என்று மூன்று தாய்த் தெய்வங்களை இலக்கியத்தில் காணமுடிகிறது. இத்தாய்த் தெய்வ வழிபாட்டில் இருவகைக் கூறுகள் உள்ளன. "மக்கள் அனைவரையும் பெற்றெடுத்தவள் என்ற கோட்பாட்டில் தாயாகவும் என்றும் அழியாத தன்மை உடையவள் என்ற கோட்பாட்டில் கன்னியாகவும் பெண் வழிபடப் பெறுகிறாள்'[31] என்பார் இரா. சீனிவாசன் மேலும் 'கன்னித் தெய்வம்' என்ற கருத்தும் பழங் காலத்தது என்றே தெரிகின்றது. "ஆண் உறவின்றிக் கன்னியாகவே எல்லோரையும் தானே பெற்ற தாய் (Virgin Mother Goddess) என்று கருதப்படுவாள்"[32] என்பார் பி.எல். சாமி. இதன்மூலம் கன்னித் தெய்வத்தைத் தாய்த் தெய்வமாகக் கருதுவது தெளிவா கின்றது.

## காடுறை பெண் தெய்வங்கள்

தொல்காப்பியர், 'மாயோன் மேய காடுறை உலகமும்' என்று கூறி இருப்பதால் மாயோனுக்கு முன்னரே காடுறை கடவுளாகப் பெண் தெய்வம் இருந்தது என்பதை,

> ''நாஞ்செல விழைந்தன மாக வோங்குபுகழ்க்
> கானமர் செல்வி யருளலின் வெண்காற்''[33]

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள் மூலம் அறியலாம். மணிமேகலையில் காடமர் செல்வி எனக் கூறப்பட்டுள்ளது. ''தாய்த்தெய்வம் விந்தியாவாசினி போன்று பழங்குடி மக்கள் தொழுது வந்த ஒரு தெய்வம் என்பது தெரிகின்றது. இந்தத் தாய்த் தெய்வத்தையே ஆரியர் துர்க்கையென்று கொண்டு தங்கள் தெய்வங்களில் ஒன்றாகச் சேர்த்தனர். அதுபோன்றே பழந் தமிழரும் கானமர் செல்வியைக் கொற்றவையோடு ஒப்பிட்டுத் துர்க்கையென்றும் கொண்டனர். இந்தத் தாய்த் தெய்வம் மிகப் பழமையான குடிகளிடமிருந்து மிகப் பழங் காலத்தில் தமிழர் பெற்ற தெய்வமாதலால் பழையோள் என்றழைக்கப்பட்டாள்''[34] என்பர். மேலும் பொருநராற்றுப்படையில் கொற்றவையைக் காடுறை கடவுள் என்று பின்வரும் பாடல் அடிகள் சுட்டும்.

> ''வலை வலந்தன்ன மென்னிழன் மருங்கிற்
> காடுறை கடவுள் கடன் இழப்பிய பின்றைப்''[35]

என்றும் இரட்டைக் காப்பியமான சிலப்பதிகாரத்தில் காடுகிழாள், காடுகிழவோள் என்றும் குறிப்பிட்டிருப்பதை இலக்கியவழி அறியலாம். மேலும் அமரி, குமரி, சுமரி, சூலி, அந்தரி என்று முதலிய பல பெயர்களைச் சுட்டுவதைக் காணமுடிகிறது. இச்சொற்கள் அனைத்தும் காட்டில் வாழும் துர்க்கையைக் குறிப்பதாகத் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. இதன்மூலம் காடுறை தெய்வங்களாகப் பல பெண் பெயர்கள் வழங்குவதை இலக்கியவழி அறியமுடிகிறது.

## மலையுறை பெண் தெய்வங்கள்

மலையில் உறைந்திருந்த பெண் தெய்வம் ஒன்று சூலி என்ற பெயரில் வழிபடப் பெற்றிருக்கின்றது. சூல் கொண்டு விளங்கும் இத்தெய்வம் வளமை வழிபாட்டின் உருவமாக அந்நிலத்து மக்களால் போற்றப் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. அகநானூற்றில்

''துனியில் கொள்கையையோ டவர்நமக் குவந்த
இனிய உள்ளம் இன்னா வாக
முனிதக நிறுத்த நல்கல் எவ்வம்
சூருறை வெற்பன் மார்புறத் தணிதல்
அறிந்தனள் அல்லள் அன்னை''[36]

என்றும், மேலும் அகநானூற்றில்,

''அ அய் நன்னாட்டு அணங்குடைச் சிலம்பில்
கவிரம் பெயரிய உருகெழு கவா அன்
நேர்மலர் நிறைசுனை உறையுஞ்
சூர்மகள் மாதோ என்னுமென் னெஞ்சே''[37]

என்றும், திருமுருகாற்றுப்படையில்,

''கோழி யோங்கிய வென்றடு விறற் கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளி ராடுஞ் சோலை''[38]

என்று பலவாறாக அழைக்கப்படுவதை சங்க இலக்கிய வழி அறிய முடிகிறது. ''இத்தெய்வம் வருத்தும் தன்மை படைத்த தாக இருந்தமையால் இதற்குச் சூர்மகள் என்ற பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். இதன் வருத்தும் தன்மை கருதி அக்கால மக்கள் இதற்கு அஞ்சி வழிபாடு செய்திருக்க வேண்டும்''[39] என்பார் வெ. வேதாச்சலம்.

### கடலுறை பெண் தெய்வங்கள்

பழந்தமிழ் மக்கள் கடலில் உறைந்திருந்த பெண் தெய்வத்தை வணங்கி வழிபட்டு வந்தனர் என்பதை இலக்கிய வழி அறியமுடிகிறது. சான்றாக அகநானூற்றில்,

''கடல்கெழு செல்வி கரைநின் றாங்கு
நீயே கானல் ஒழிய யானே''[40]

எனக் குறிப்பிடுவதன்மூலம் பண்டையத் தமிழர்கள் நீர் நிலையில் உள்ள பெண் தெய்வத்தை வழிபட்டு வந்திருக்கின்றனர் என்றறிய முடிகின்றது.

### பொதுநிலைப் பெண் தெய்வங்கள்

பழந்தமிழ் இலக்கியத்தில் பெண் உருவை ஓவியமாக வரைந்தும் பல்வேறு வகையான பொருட்களில் பாவையைச்

செய்தும் அனைத்து மக்களும் போற்றி வழிபடும் தெய்வமாகப் போற்றினர் என்பதை இலக்கியவழி அறியமுடிகின்றது. இப்பாவையை மணல், வண்டல்மண், தாது, பொன், பதவு, தெற்றி, கோரை முதலிய பல பொருட்களைக் கொண்டு செய்து வழிபட்டு வந்திருக்கின்றனர்.

பாவையைப் போன்றே அணங்கும் எல்லா நிலை மக்களாலும் ஆங்காங்கே வைத்து வழிபடப் பெறுகிறது. இவ் அணங்கு தெய்வத்தை வணங்குதல் முதற்கண் அச்சத்தால் தோன்றியது. தகாத செயல் செய்தால் தெய்வம் துன்புறுத்தும் என்று மக்கள் நம்பினர். இதன் விளைவாக அணங்கைப் போற்றி வழிபட்டனர் என்பதையும் இத்தெய்வம் மலைகளிலும் மலைச் சாரல்களிலும் நகரின் நிலைவாயில் முதலான பல இடங்களை உறைவிட மாகக் கொண்டதை இலக்கியவழி அறியமுடிகிறது. சான்றாக மலையில் அணங்கு உறைவதை நற்றிணை கொண்டு அறியலாம்.

> **''அருவி ஆர்க்கும் அணங்குடை நெடுங்கோட்டு**
> **ஞாங்கர் இளவெயில் உணீஇய ஓங்குசினை**
> **மூலி மஞ்ஞை பெடையோடு ஆடும்**
> **குன்ற நாடன் பிரிவிற் சென்று''[41]**

என்ற வரிகள் குறிக்கத்தக்கன.

> **''அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்**
> **கணம்கொள் அருவிக் கான்கெழு நாடன்''[42]**

என்றும் அகநானூறு கூறுவதை அறியலாம். உருத்தாத பார்வையும் வனப்பு மிக்க தோற்றத்தையும் பெற்று தான் வேண்டிய உருவினை எடுத்துக்கொண்டு வரும் தன்மைகளைக் கொண்ட அந்த அணங்கை மக்கள் வழிபட்டனர். பின்வரும் பதிற்றுப்பத்து பாடலும் அதைச் சுட்டும்.

> **''அருஞ்சமத்து அருநிலை தாங்கிய புகர்நுதல்**
> **பெருங்களிற்று யானையொடு அருங்கலம் தரா அர்**
> **மெய்பனி கூரா அணங்கெனப் பராவலின்**
> **பலிகொண்டு பெயரும் பாசம் போல''[43]**

பாவை என்ற பெண் தெய்வத்தோடு இவ் அணங்கை ஒப்பிடும் போது பாவையை மக்கள் எவ்வித அச்சமும் இன்றி வழிபட்டதைப் பழந்தமிழ் பாடல்கள் சுட்டுகின்றன. இப்பெண் தெய்வங்களே பண்டைத் தமிழரின் பெண் தெய்வங்களாகத் தொடக்க

காலத்தில் வணங்கி வரப்பெற்ற பெண் தெய்வங்களாக இருக்க வேண்டும் எனக் கருத இடமுள்ளது.

பண்டைத் தமிழர்கள் பெண் தெய்வத்தினை வணங்கி வழிபட்டு வந்தனர் என்பதைப் பின்வரும் இலக்கியச் சான்றுகள் மூலமும் அறியலாம்.

## இலக்கியச் சான்றுகள்

சமுதாயத்தின் வளர்ச்சி நிலைகளையும் வரலாற்றுப் பின்னணிகளையும் அறிய உதவும் அடையாளச் சின்னங்களும் இலக்கியச் சான்றுகளும் குறிப்பிடத் தக்கன. சங்க காலம் தொட்டு இக்காலம் வரை பெண் தெய்வ வழிபாடு போற்றி வளர்க்கப்படுகிறது. சங்க காலம் என்பது சமுதாயப் படிநிலை களில் நிலவுடைமைக் கட்டம் என்று கூறலாம். ''ஆரியரின் வருகைக்குமுன் தமிழகத்தில் தாய்வழிச் சமுதாயம் (Matrilineal Society) நிலைபெற்றிருந்தது என்றும் ஆரியர் வருகைக்குப் பின் தந்தைவழிச் சமுதாயம் (Patrilinear Society) உருவாயிற்று''[44] என்றும் குறிப்பார் ஆறு. இராமநாதன். எனவே ஆரியர் வரவு தாய்த் தலைமையைச் சிதைக்கத் தொடங்கியது என்றே சொல்லலாம்.

பழந்தமிழ் நூலான தொல்காப்பியத்தில் கொற்றவையை நிலத் தெய்வமாகக் கூறாமல் போர்நிலைகளில் ஒன்றுக்குக் கொற்றவை நிலையென்று பெயரிடுகின்றார். மேலும் கொற்ற வைக்குப் 'பழையோள்' என்ற பெயரும் வேறு பெயரும் உண்டு. எனவே இத்தெய்வத்தைத் தாயாகக் கருதி வழிபடும் வழக்கம் மிகப்பழமையானது என்பது தெளிவாகிறது.

இத் தாய் தெய்வ வழிபாடு தமிழர்களுக்கு உரியது என்பதைப் புதுச்சேரி, தமிழகம் போன்ற பகுதிகளில் வாழும் கிராம மக்கள் ஏராளமான கிராமத் தேவைதைகளை வணங்குவதின் மூலம் அறியலாம். இந்தியா முழுவதிலும் இத்தகைய நிகழ்ச்சி நடைபெறுகின்றது. குறிப்பாகத் தாய் தெய்வ வழிபாடே பண்டைத் தமிழரின் பெண் தெய்வ வழிபாடாக இருக்க வேண்டும் என்பது இலக்கியவழி அறியலாகும் செய்தி. ''இப்பெண் தெய்வ வழிபாடு தோன்று வதற்கு அடிப்படைக் காரணம் அது தோன்றிய சமுதாயத்தில் தாய்வழி முறை நிலவியதே என்பது ஆராய்ச்சியாளர் காட்டும் உண்மையாகும்''[45] என்பார் க. கைலாசபதி.

## கொற்றவை பற்றிய பல பெயர்கள்

கொற்றவை பல பெயர்களைக் கொண்டுள்ளாள் என்பதை நிகண்டுகள் வழி அறிய முடிகிறது. சான்றாகப் பிங்கல நிகண்டு என்ற இலக்கண நூல் மோடி, காரியதாய், கொற்றி, மாரி, சூரி, வடுகி, மூதணங்கு என்று சுட்டுகின்றது. மேலும் சூடாமணி நிகண்டு வருகின்றாய், மூதணங்கு, மோடி, கொற்றி, சூரி, வடுகி, மாரி என்ற பல பெயர்களைக் கூறுகின்றது. இவைப் போன்று திவாகர நிகண்டும் பல பெயர்களை மொழிகிறது தாய்த் தெய்வமான சக்தி பற்றிக் கூறும் விளக்கம் நோக்கத்தக் கதாக உள்ளது. ''இந்திய மரபு தாய்த் தெய்வத்திற்கு மிகுதியான பெயர்களை வழங்குகிறது. ஆனால் இவை ஒரே தெய்வத்தின் பெயர்களல்ல. நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு குழுக்களால் பல்வேறு தெய்வங்களின் பெயர்கள். பிற்காலத்தில் இப்பெயர்கள் இத்தாய்த் தெய்வத்திற்குப் பெயர்களாக்கப் பட்டன''[46] என்கிறார் அழகு கிருஷ்ணன். இவ்வாறு ''தமிழர் களின் காடுகிழாள், கொற்றவையாகி கொற்றவையைத் தான் - துர்க்கை என்றும் காளி என்றும் பல பெயர்களாய் கூறுவர்''[47] என்பார் சாமி சிதம்பரனார். இவை ஆரியருடைய வரவால் சக்தி, காளி என்று மாறி அதனுடைய அவதாரமாகப் பல்வேறு தெய்வங்கள் தோன்றின என்பதை அறியலாம்.

## சக்தியின் கூறுகள்

சக்தி என்பது ஒரு பெரும்பொருள். அதன் ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. பல பெயர்கள் பெற்றிருப்பினும் சக்தி என்பது ஒன்றேயாகும். ''ஆரியை, காமக் கோட்டி, அம்பிகை, சக்தி, நாயகி, கௌரி, தேவி, சாம்பவிஷ், தருமச்செல்வி, மலைமகள், சங்கரி, மாதவி, வேதமுதல்வி, விவலை, முக்கண்ணி, ஐயை, பதை, உருத்திரை, பார்வதி, அந்தரி, நீலி, கமலி, நிமலி, கமயமுதல்வி, அமலை, இமயவதி, அயிதாணி, தற்பரை, மனோன்மணி, சிவை, உமையம்மை, அரனிடத்தவள், அகமின்றவள், பவானி, அன்னை, புண்ணிய முதல்வி என முப்பத்துதெட்டுப் பெயர்களைக் கூறுகிறது''[48] பிங்கல நிகண்டு.

இறைவன் உறையும் இடங்களைக் குறிப்பிடும் வகையில் கோவில், ஆலயம், தளி, நகரம், நியமம், பொதியில், தானம், அம்பலம், மன்றம் என்னும் பல பெயர்கள் உள்ளன. இவற்றில் கோயில், ஆலயம் என்பவை பெருவழக்கில் இறைவன்,

இறைவி இருக்கும் இடங்களைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகின்றன.

## *சக்தி வழிபாடும் திரௌபதியம்மனும்*

'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் இறை யுணர்வினால் மக்கள் தொன்றுதொட்டுப் பல தெய்வங்களை அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப வழிபடுகின்றனர். இவ்வகையில் சக்தி வழிபாடு தொன்மையானது. இவ்வகை சக்தி வழிபாடாகிய பெண் தெய்வ வழிபாடு, கொற்றவை வழிபாடாக இருந்த நிலை, சான்றுகள் வழியாகக் கூறப்படுகின்றன.

இன்று தாய்த் தெய்வக் கோயில்களின் வேர்ப்பகுதி யாகவும் அடிநாதமாகவும் விளங்குவது பண்டைய தமிழரின் கொற்றவை வழிபாடேயாகும். கொற்றவையிலிருந்து கிளைத் தவையே இன்றைய பெண் தெய்வங்களின் பல்வேறு படி நிலைகள் என்று கூறலாம். இவ்வாறு வெவ்வேறு தெய்வங் களான கொற்றவையும் காளியும் காலப்போக்கில் ஒன்றாகி உச்சினி (உச்சயணி) மாகாளி, ஆந்திரா சக்கம்மாதேவி, பாஞ்சாலத்துத் திரௌபதியம்மன், ரேணுகாதேவி (பரசுராமனின் தாய்), மலையாள பகவதி, கண்ணகி போன்ற பெண் தெய்வங்கள் தோன்ற வழிவகுத்தன எனலாம். இவற்றில் இன்று மக்களிடையே திரௌபதியம்மன் செல்வாக்குப் பெற்று வழிபாடாற்றுவதைக் காணமுடிகிறது.

திரௌபதியம்மன் வழிபாடு புதுச்சேரி உள்ளிட்ட தமிழகத்தில் உருவாகி இருக்கிறது. தமிழ் இலக்கியங்களில் திரௌபதியம்மன் வழிபாடு இடம்பெறவில்லை. திரௌபதி திராவிடரின் பூர்வீகத் தெய்வமன்று. ஆரியரின் சிந்தனையில் உருவாக்கப்பட்டுத் திராவிடரின் தெய்வத்தோடு சேர்க்கப்பட்ட தெய்வமாகத் திரௌபதியம்மன் இருக்க வேண்டும் என்பதற்குக் கோயில் அமைப்பு முறையும் வழிபாட்டுச் சடங்குமுறைகளும் சான்றாக அமைகின்றன.

புராணங்களைப் பின்பற்றியே காப்பியத் தலைவிகள், காப்பியங்களில் காட்டப் பெறுகின்றனர். அரசாண்ட மன்னன் ஒருவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்துச் சிறப்புச் செய்திருப்பதும் மணிமேகலையை மணிமேகலா தெய்வத்தோடு ஒப்புமைப் படுத்துவதும் கருதத்தக்கன. இவற்றின் மூலம் பெண்ணைத் தெய்வமாக வடிவமைத்து வழிபட்டு வந்ததை இலக்கியவழி

அறியமுடிகின்றது. மேலும் புராணங்களை இணைத்துக் காப்பியங்கள் அமைவதைப் போல மன்னர் வழியைப் பின்பற்றி மக்கள் கோயில் வழிபாட்டை மேற்கொண்டிருக்க வேண்டும் எனவும் கருத இடமுள்ளது.

## பண்டைக்காலக் கோயில் அமைப்புமுறை

தொடக்ககாலக் கோயில் அமைப்பை மணிமேகலை வழி அறியலாம் சான்றாக,

> **"குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன**
> **சுடும ணோங்கிய நெடுநிலைக் கோட்டமும்"**[49]

என்ற மூலம் மிக உயர்ந்த கோயில்கள் அக்காலத்தில் கட்டப்பட்டிருந்ததை இலக்கிய வழி அறியலாம். நடுகல் கால வளர்ச்சியில் வருணப் பாகுபாடுகள் தோன்றிய பின்பு கோயிலான நிலையைக் கூறுகிறது. "கண்ணகிக்குக் கல்லெடுத்துக் கோட்டம் சமைத்திருக்கிறான் இவ்வரசன். பெருங்கல் வடிவப் புதைகுழியிலிருந்து கோயிற் கட்டிடக்கலை வந்திருக்கலாம் என்று அறிஞர் கூறுவது இங்குச் சுட்டத்தக்கது என்கிறார்"[50] க. கைலாசபதி, இம்முறையிலே நடுகல் வழிபாடு கோயில் வழிபாடாக மாற்றமடைந்து தமிழகத்தின் பல்வேறு தாய்த் தெய்வக் கோயிலாகக் காட்சியளிக்கின்றன என்று கூறலாம். சில தெய்வங்கள் கோர உருவுடனும் சில சாந்தமான முகத்துடனும் காட்சியளிக்கின்றன. இவ்வாறு தோன்றிய வழிபாட்டு முறை காலப்போக்கில் மாற்றம் பெற்றிருக்கலாம். இதற்கு அடிப்படைக் காரணம் சமுதாயமே. "சமுதாயத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர், மேலோர், கீழோர், பெரியவர், சிறியவர், முதலாய பாகுபாடுகள் தோன்றி வளர்ந்ததைத் தொடர்ந்து மனிதனது நிலைமையைப் பிரதிபலிப்பது போலத் தெய்வங்களும் பெருந்தெய்வம், சிறுதெய்வம் எனப்பகுப்பட்டனர்'[51] என்பர்.

## சிறு தெய்வங்கள்

பண்டைக்காலத்தில் சிற்றூர்களில் வாழ்ந்த தமிழ் இன மக்கள் தனித் தனியாகவும் குழுவாகவும் வாழ்ந்தபோது தங்களுக் கென்றே ஒருகுல தெய்வத்தையும் வீட்டுத் தெய்வத்தையும் வைத்து வணங்கினர். பின்னர் பேரூர்களில் வாழ்ந்த போது ஊருக்கென்று காவல் தெய்வத்தை வைத்து வணங்கி வழிபட்டனர். இதனைத் தமிழ் இலக்கியங்கள் சுட்டும். பண்டைக் காலத்தில் மக்கள் மத்தியில் பல தெய்வ வணக்க முறை மட்டுமே இருந்து

வந்தது. சமயம் மக்கள் வாழ்வில் தலையிட்டபோது சமயத்திற் கென்று பல தலைவர்கள் தோன்றலாயினர். சமயத்திற்கென்று பல்வேறு தலைமைத் தெய்வங்கள் தோன்றலாயின. இதனடிப்படையில் தோன்றியதே ''சிறுதெய்வங்கள், பெருந் தெய்வங்கள், இடைத்தெய்வங்கள்''[52] என்பார் சரஸ்வதி வேணுகோபால்.

சிறுதெய்வ வழிபாடு தோன்ற அடிப்படைக் காரணம் அச்சமே என்பார் உளவியல் அறிஞர் பிராய்டு. ஒரு மனிதனுடைய வழிபாட்டுக்குக் காரணம் அவன் இயற்கையிடமும் மரணத் திடமும் நிலையாமையிடமும் கொண்ட அச்சமே என்று கூறுகிறார். இத்தகைய சிறு தெய்வங்கள் கிராம மக்களால் உருவாக்கப்பட்டவை. கிராம மக்களுடைய வாழ்வில் ஒன்றி வாழ்ந்து வரக்கூடியவை பேய், பூதம், அணங்கு, சூர் போன்றவை வருத்தும் தெய்வங்களாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டுகின்றன. பிறரைத் துன்புறுத்தும் தன்மை கொண்டது அணங்கு என்றும். சூரர மகளிர் கூட்டம் கூட்டமாகச் சென்று, தான் நினைத்த உருவை எடுத்துக் கொண்டு பிறரைப் பயமுறுத் துவர் என்றும் சங்க இலக்கியங்கள் மொழிகின்றன. இத்தகைய ஆவியை மோகினிப் பேய் என்றும் சுட்டுவர். இத்தகைய கூட்டத்தைக் கிராம மக்கள் ஏழு சகோதரிகள் என்றும், அவர்கள் ஆண்களை வருத்தும் தன்மை கொண்டவர்கள் என்றும் நம்பு கின்றனர். இவ்வடிப்படையிலேயே ஏழு கன்னிமார் வழிபாடும் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருத இடம் உள்ளது.

## பெருந்தெய்வங்கள்

பொதுவாக ஊருக்கு நடுவிலே பெரும்பாலான மக்களால் ஆகம முறைப்படி வழிபடப்படும் தெய்வமே பெருந்தெய்வம் எனக் கூறலாம் ''பண்டைத் திராவிட மக்களிற் பெரும் பகுதியினர் தாய்வழி உரிமை, தாயமுறை முதலியவற்றைக் கடைப்பிடித்தனர். இதன் காரணமாகப் பெருந்தெய்வ வழிபாடு திராவிட மக்களிடையே பெருவழக்காயிருந்தது''[53] என்பார் க. கைலாசபதி. சிறு தெய்வ வழிபாடு என்பது ஆரவாரமிக்க வழிபாட்டு முறையைக் கொண்டது. இத்தகைய வழிபாட்டு முறையிலேயே கலாச்சார கலப்பில் அடிப்படை மாறாமல் பெருந்தெய்வ வழிபாடாக மாறியிருக்க வேண்டும். இங்கே பீலி சூட்டுவதற்குப் பதிலாக மணியோசை எழுப்பியும்,

கள்ளிற்குப் பதிலாகத் தேங்காய் உடைத்தும் பெருந்தெய்வக் கோயில்களில் இன்றும் வழிபாடு நடப்பதைக் காணலாம்.

பெருந்தெய்வக் கோயில்களில் இன்று நிலவும் பலிபீடங்கள் பண்டைய மரபின் எச்சத்தைச் சுட்டும் பொருளாக இருக்க வேண்டும். காலப்போக்கில் சமயங்கள் அதற்கு நுண்மைப் பொருளை உருவாக்கி இருக்க வேண்டும். எனவே வழிபாட்டுக்கு அடிப்படையாக விளங்குவது நாட்டார் வழிபாடு எனலாம். இன்றும் பெருந்தெய்வங்கள், பெருந்தெய்வத்தை நோக்கி நடைபோடும் தெய்வங்கள் எல்லாம் நாட்டார் வழிபாட்டின் வளர்ச்சி நிலை என்று கூறலாம். இவ்வாறு உருவாக்கப்பட்ட தெய்வங்கள் காலப்போக்கில் ஆகம நெறிகளைக் கடைபிடிக்கும் பெண் தெய்வங்களாக மாற்றப்பட்டன. இதில் மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, கனக துர்க்கையம்மை, முத்தாலம்மன் போன்று பலியிடுதல் நிகழ்ச்சியில்லாத பிராமண அர்ச்சகர்களாகக் கொண்ட தெய்வங்கள் அனைத்தும் அடங்கும்.

## இருபிரிவுகளின் கூறுகளைக் கொண்ட தெய்வம்

சில கோயில்களில் சிறு தெய்வங்களுக்குரிய கூறுகளையும் பெருந்தெய்வங்களுக்குரிய கூறுகளையும் காணமுடிகிறது. இவ்வகையிலான தெய்வங்கள் காலப் போக்கில் ஏதேனும் ஒரு பிரிவில் அடக்கப்பெறும். இந்நிலையில் இருபிரிவுகளின் கூறுகளை உள்ளடக்கிய தெய்வமான திரௌபதியம்மனைக் காணவேண்டியது அவசியமாகிறது.

இந்தியாவில் தோன்றிய பேரிலக்கியங்களில் ஒன்று மகாபாரதம். அந்நூலின் கதைத் தலைவியான பாஞ்சாலிக்குத் திரௌபதி என்று பெயர். தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் இத்திரௌபதிக்குக் கோயில்கள் காணப்படுகின்றன. பெண் தெய்வ வழிபாட்டில் குறிக்கத்தக்க இடம் பெற்றுள்ள திரௌபதியம்மன் பற்றிக் காண வேண்டியது இன்றியமை யாதது. வழிபாட்டுச் சடங்கு முறைகள், திருவிழாக்கள், கோயில் அமைப்பு முறைகள் போன்றவை காணப்பெறவேண்டும். புராணக் கூறுகளின் வழியிலும் களஆய்வின் மூலமும் திரௌபதியம்மன் பற்றிய செய்திகளைக் காணவேண்டியதும் பொருத்தப்பாடுடையதாகும்.

## வழிபாட்டு முறையில் திரௌபதியம்மன் பெறுமிடம்

திரௌபதி மகாபாரத்தில் வரும் காவியத் தலைவியாவாள். மகாபாரதம் புராணக் கூறுகளை உள்ளடக்கியது. இத்தகைய மகாபாரதம் ஆரியரின் சிந்தனையில் உருவானது. திராவிடருடைய மூல தெய்வம் கொற்றவை. இத்தெய்வம் போலவே அயலாரின் கலப்பைப் பெற்றுத் திரௌபதியம்மன் புதுச்சேரி உள்ளிட்ட தமிழகப் பகுதிகளில் தாய்த் தெய்வமாக வெளிப்படுகிறாள். ''திரௌபதியம்மன் கதைப் பாடல்கள் மக்கள் மத்தியில் இக்காலத்தில் பரவலாகத் தமிழ்நாட்டில் பல பகுதிகளிலும் காணப்படுகின்ற ஒரு வழிபாடாகும். இலக்கியத்தில் சிறப்பிக்கப்பட்ட ஒரு பெண் தெய்வமாக மக்கள் மத்தியில் பிரபலமடைந்துள்ளது சிறப்பான செய்தியாகும்''[54] என்பார் க. குளத்தூரான்.

## கதைக்கரு

பாரதக் கதை என்பது மிக நீளமான புராணக்கதை, வாய்வழியாக மக்களிடையே பல் நூறு ஆண்டுகளாக இக்கதை வழங்கி வருகிறது. திரௌபதி பற்றிய கதைப்பாடல் எல்லாத் திரௌபதியம்மன் கோயில்களிலும் பாடப்படுகிறது. இக் கதைப்பாடல்கள் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே நடைபெறும் போரைக் குறிப்பது. பாண்டவர்களாகத் தருமர், வீமர், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோரும் கௌரவர்கள் பக்கம் துரியோதனன், துச்சாதனன், சகுனி போன்று நூற்று ஒருவரும் இக்குழுவில் அடங்குவர். இப்புராணக் கதையில் பெண் மாந்தரான திரௌபதியம்மனுக்கு மட்டுமே கோயிலில் அமரும் முக்கியத்துவம் கொடுத்து இருப்பதால் அத்தகைய அம்மன் தொடர்பான பல செய்திகளை மட்டுமே காண்பது பொருத்தமுடையதாகும்.

## திரௌபதியம்மன் பற்றிய அறிமுகச் செய்திகள்

மகாபாரத்தில் கதைத் தலைவியான திரௌபதி பாஞ்சால தேசத்து மன்னனின் மகளாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். ''வடநாட்டில் பாஞ்சாலத்தில் பிறந்து வளர்ந்த பாஞ்சாலி அம்மனையே திரௌபதியம்மன் என்று தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மக்கள் போற்றுகின்றனர். வடநாட்டில் இவ்வம்மனை 'அக்கினியம்மன்' என்று போற்றுகின்றனர்''[56] என்பார் எல். கணபதிராமன். இன்றும் புதுச்சேரி வட்டாரத்தில் திரௌபதியம்மனை ஸ்ரீவீரபாஞ்சாலி என்று குறிப்பிடுவர்

அக்கினியில் பிறந்தவள் என்றும் முற்பிறவியில் நளாயினி என்ற பெயரோடு புகழுடன் வாழ்ந்தவள் என்றும் வில்லிபாரதம் கூறும்.

> "மூளா ரழலுற் பவித்தாளிவண் முற்ப வத்தில்
> நளா யனியென் றுரைசால்பெரு நாம மிக்காள்"[56]

திரௌபதி, பூமாதேவியின் பிள்ளை என்றும் கூறுகின்றனர். இவள் வளர்ந்து திருமணப் பருவத்தை அடைந்தவுடன், பாஞ்சால தேசத்து மன்னனின் வில்லையொடித்து வெற்றி பெறுவோருக்குத் தன் மகளை மணம் செய்து வைப்பதாக உறுதி கூறுகிறான். அப்போது பாண்டவர்கள் வில்லையொடித்துத் திரௌபதியைத் திருமணம் செய்து கொள்கின்றனர். பின்னர் ஐவருக்கும் மனைவியாகத் திரௌபதி திகழ்கிறாள்.

## துரியோதனன் சீற்றமும் - பழிவாங்கும் செயலும்

அருச்சுனனுக்கும் திரௌபதிக்கும் திருமணம் முடிந்தவுடன், வீட்டில் திரௌபதி தனியாக இருந்தபோது முற்றத்தில் உலாவிக் கொண்டிருந்தாள். அப்போது துரியோதனன் அருச்சுனன் வீட்டிற்கு வர, கால் தவறிக் கீழே விழ அவனைப் பார்த்து திரௌபதி சிரிக்கிறாள். இதை அவமானமாக எடுத்துக் கொண்ட துரியோதனன் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று நினைத்து மாமன் சகுனியின் சூழ்ச்சியோடு பாண்டவர்களைப் பகடைக்கு அழைத்து அனைத்துப் பொருட்களையும் கைப்பற்றிக் கொள்கிறான். அடுத்து, திரௌபதியையும் பணயம் வைக்கச் சொல்லுகிறான். அவ்வாறே பணயம் வைத்துத் தோற்றுவிடுகின்றனர் பாண்டவர்கள். பணயப் பொருளாக மாற்றப்பட்ட திரௌபதியைச் சபைக்கு அழைத்து வருமாறு கட்டளை இடுகிறான் துரியோதனன். காவலாளி சபையில் நடந்தவற்றைக் கூறி அழைக்கிறான். அவ்வமயம் தான் வீட்டுக்கு விலக்காக இருப்பதாகக் கூறி அனுப்பி விடுகிறாள்.

இச்செய்தியைச் சற்றும் கேளாமல், அடுத்துத் தம்பி துச்சாதனனை அனுப்பி அழைத்து வருமாறு ஏவுகிறான். துச்சாதனன் வருவதைக் கண்ட திரௌபதி அன்புடன் வரவேற்கிறாள். வரவேற்பதைப் பொருட்படுத்தாமல் சென்ற உடனேயே துச்சாதனன் ஒரு பெண் என்றும் பாராமல் தலைமுடியைப் பிடித்து இழுத்து வருகிறான். இந்நிகழ்ச்சியைக் கண்டும் சபையில் உள்ளவர்கள் எவரும் வாய்திறந்து பேச

வில்லை. அது மட்டும் அல்லாமல் சபையின் நடுவிலேயே துகில் உரியச் சொல்லுகிறான் துரியோதனன். அண்ணன் கட்டளையை ஏற்றுத் துச்சாதனன் துகில் உரிய, திரௌபதி கண்ணனை வேண்ட, அவனால் திரௌபதியின் மானம் காப்பாற்றப்படுகிறது.

## *திரௌபதியின் சபதம்*

இக்கொடிய நிகழ்ச்சியைக் கண்ட அருச்சுனனும், அவனுடைய சகோதரர்களும் துரியோதனனை அழிப்பதாகச் சபதம் எடுத்துக் கொள்கின்றனர். பாதிப்புக்கு உள்ளான திரௌபதி தன்னுடைய கூந்தலை அவிழ்த்துவிட்டுத் தன்னை மானபங்கப் படுத்திய துரியோதனனின் மார்பு எலும்பைச் சீப்பாகவும், அவனுடைய இரத்தத்தை எண்ணெயாகவும் தடவித் தன் கூந்தலை முடிப்பேன் என்று சபதம் ஏற்கிறாள். சபதம் செய்த பிறகு திரௌபதியோடு பாண்டவர்கள் ஊரைவிட்டு வெளியேறி விடுகின்றனர். இதன் நினைவாகவே ஆறாம் நாள் உற்சவத்தன்று 'படுகளம்' என்ற சடங்கு (பகற்பொழுது) செய்து துரியோதனனைக் கொன்று விடுவதாகக் கதைப்பாடல் நிகழ்கிறது.

## *புராணக் கதையின் வாயிலாக அறியப்படும் சமூகச் செய்திகள்*

புராணம் என்பது பண்டைய சமுதாயத்தின் வெளிப்பாடு என்பது அறிஞர்கள் கொண்ட முடிவு. புராணம் என்பது கடவுளாலோ அல்லது தன்னை மீறிய சக்தியாலோ தோன்றிய தன்று. சுருங்கக் கூறின் சமுதாயத்தின் போக்கையும் மக்கள் மனத்தையும் விளக்கும் ஊடகமாகப் புராணம் விளங்குகிறது எனலாம்.

"உளவியல் அறிஞர்கள் இதை மனவியல் தொடர்பானது என்று கருதுகின்றனர். மனித மனத்தில் புராணத்தை உருவாக்கும் பகுதியினைக் கூட்டு நனவிலி மனம் என்று கூறுகின்றனர். கனவுகள், புராணங்கள் அல்லது உருவெளித் தோற்றங்களுக்குக் காரணம் மனம் வெவ்வேறு காலங்களிலும் ஒரே மாதிரியாகச் செயல்பட்டு வந்திருப்பதுதான்"[57] என்பார் சச்சிதானந்தம் இதனைக் கொண்டு இப்புராணக் கதையினை நோக்கினால் உண்மை புலனாகும்.

இன்றும் புதுச்சேரி உள்ளிட்ட தமிழகத்தில் பாண்டவரை நினைவுபடுத்தும் ஊர்ப்பெயர்கள், ஆட்பெயர்கள் உள்ளன. ஆங்காங்கே திரௌபதியம்மன் கோயில்களும் உள்ளன.

''கி.பி. 4,5 ஆம் நூற்றாண்டுக்குப் பின், களப்பிரர் வீழ்ச்சிக்குப் பின் தமிழகத்தில் ஆரியச் சார்புடைய அயலார் ஆட்சிகள் பரவின. அக்காலத்துப் பக்தி இயக்கம் வெறிகொண்டு பரவியது. ஆரிய வேதங்களைக் கொண்ட வைதிகச் சமயங்கள் கால் கொள்ளத் தொடங்கின. அப்போதுதான் திரௌபதி பற்றிய கதைகளும் ஆரியருடைய இன்ன பிற கதைகளும் தோன்றலாயின''[58] என்பார் க.ப அறவாணன்.

## செவிவழிச் செய்திகள்

வாய்வழிக் கதையை உற்று நோக்கினால் பின்வரும் உண்மைகள் புலனாகின்றன. பாரதக் கதை என்பது பெண் படைப்பான திரௌபதியைக் கொண்டு தொடங்குகிறது. சக்தியின் வடிவான திரௌபதிக்குப் பல தீங்குகள் ஏற்படுகின்றன. பின்னர் திரௌபதி அனைத்தையும் வெற்றிகொண்டு இன்று மக்களால் தெய்வமாக்கப்பட்டிருக்கிறாள். அவளுக்குக் கோயில் கட்டி மக்கள் வழிபாடு செய்து வருதலை அறிய முடிகிறது. புதுச்சேரிப் பகுதியில் இவ்வாறு புராணக் கதைகளின் அடிப்படையில் உருவான கோயில்கள் பல உள்ளன. ரேணுகையம்மன், திரௌபதியம்மன், தீப்பாய்ந்தம்மன் போன்றவை குறிக்கத் தக்கவை. எண்ணிக்கையில் அதிகமாக இடம் பெறுவதும், திருவிழா பல நாட்கள் சிறப்பாக நடை பெறுவதும் திரௌபதியம்மன் கோயில்களிலேயே. எனவே திரௌபதியம்மன் வழிபாடுகள் புதுச்சேரி வட்டாரத்தில் சமூகத்தோடு இணைந்த நிலையில் அமைகின்றன.

## தொகுப்புரை

1. சமூகத்தை ஒன்றிணைக்கவும், கூட்டுணர்வாகச் (Team Spirit) செயற் படவும் சமயம் பெரும் பங்காற்றுகின்றது.

2. கல்வியைப் போன்றே சமயமும் மனிதனை முழுமனிதனாக்கும். இதன்வழி சமயத்தின் தேவையும் பயனும் நன்கறியப்படும்.

3. அச்சம் தரும் செயல்களே மனிதனை இயற்கை வழிபாட்டிற்கு அழைத்துச் சென்றது என்பார் மானிடவியலார். பின்னர் காலப்போக்கில் மனித இனம் இயற்கைக்கு உருவம் கற்பித்து வணங்கத் தொடங்கியது.

4. உயிர்ப்பலி தொடங்கியதன் வெளிப்பாடாகப் பலிச் சடங்கு களும் விழாக்களும் தோற்றம் பெற்றன எனலாம்.

5. வீரத்தினைப் போற்றி வழிபட்டதைப் போன்று, கற்பில் சிறந்து விளங்கிய பத்தினிப் பெண்டிரையும் அக்காலத்தில் வீரர்களுக்கு இணையாக நடுகல் நட்டு வழிபட்டனர் என்பதைச் சான்றுகளின்வழி அறிய முடிகிறது.

6. ஆவி வழிபாட்டில் நல்ல தேவதையென்றும், துட்ட தேவதையென்றும் மக்கள் வழிபட்டு இருந்ததை அறிய முடிகிறது.

7. தொடக்க நிலையில் குழந்தையைப் பெற்றெடுக்கும் பெண்ணே தலைமைப் பொறுப்பு ஏற்று இருந்தாள் என வரலாற்றுச் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன.

8. தலைமைப் பொறுப்பே, தலைமை வழிபாடாக மாறியது. இந்நிலை நம் நாட்டில் மட்டும் அன்று அயல் நாடுகளிலும் பெண்கள் செழிப்புத் தன்மையில் மேலோங்கி இருந்ததால் பெண் தெய்வங்கள் படைக்கப் பெற்று வழிபாடு செய்யப் பெற்று வருவதைக் காணமுடிகிறது.

9. பன்னூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பெண் தெய்வ வழிபாடு சிறப்புற்றிருப்பதை இயக்கி வழிபாடு மூலம் அறியலாம்.

10. பெண் தெய்வங்கள் பற்றிய குறிப்புகளைப் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களின்வழி பல்வேறு நிலைகளில் வெவ்வேறு காலகட்டங்களில் காண்பதன் மூலம் பெண் தெய்வ வழிபாட்டின் தொன்மை புலனாகிறது.

11. பழந்தமிழ் இலக்கியங்களில் இடம்பெறாத திரௌபதி யம்மனைத் திராவிடரின் பூர்வீகத் தெய்வமாகக் கருதுதல் இயலாது. பிற்காலத்தில் ஆரியரின் சிந்தனையில் உருவாக்கப்பட்டுத் திராவிடரின் தெய்வத்தோடு சேர்க்கப் பட்ட தெய்வமாகத் திரௌபதியம்மன் திகழ்வதைக் கோயில் அமைப்பு முறைகளும் வழிபாட்டு முறைகளும் காட்டுகின்றன.

12. திரௌபதியம்மன் வழிபாட்டு முறையை நோக்கும் போது இவ்வம்மனைச் சிறு மரபிலும் பெருமரபிலும் கொள்ளாமல் இடைப்பட்ட நிலையில் அதாவது பொதுநிலையில் வைத்து வழிபடப்படுவதை அறியலாம். இதற்குச் சான்றாக வழிபாட்டுச் சடங்கு முறைகளைக் கொள்ளலாம்.

13. மக்கள் வழிபாட்டில் பெண் தெய்வமான திரௌபதி சக்தி உள்ள அம்மனாகப் பன்னூற்றாண்டுகளாக வழிபடப் பெற்று வருவதைத் திருவிழாக்களும், சடங்கு முறைகளும் பறைசாற்றுகின்றன.

*சான்றெண் விளக்கம்*

1. சி. பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப. 548.
2. அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப. 608.
3. குன்றக்குடி அடிகளார், நமது நிலையில் சமயம் சமுதாயம், ப. 5.
4. திருமூலர், திருமந்திரம் பாடல் எண். 501.
5. மு. அ. மாணிக்கவேலு, தமிழ்நாட்டில் நடராசர் வழிபாடு, பக். 207 - 208.
6. குன்றக்குடி அடிகளார், நமது நிலையில் சமயம் சமுதாயம், ப. 39.
7. க.ப. அறவாணன், தமிழர்தம் மறுபக்கம், ப. 192.
8. க.ப. அறவாணன், மர வழிபாடு, ப.4.
9. கலைக் களஞ்சியம், தொகுதி - 6, ப. 451.
10. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா எண், 1034.
11. நற்றிணை, 215 : 1-2.
12. அகநானூறு, 229 : 1-2.
13. க. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 261.
14. சு. சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு, ப. 140.
15. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல், ப. 2.
16. க. கைலாசபதி, பழந்தமிழர் வாழ்வும் வழிபாடும், ப.4
17. அகநானூறு, 269 : 6-7.
18. க. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், பக். 248- 249.
19. சிலப்பதிகாரம், காதை எண் 5 : 113 - 114.
20. க. ப. அறவாணன், தமிழர்தம் மறுபக்கம், பக். 45 - 46.
21. ந. வானமாமலை, தமிழர் வரலாறும் பண்பாடும், ப. 74.
22. க. ப. அறவாணன், தமிழர்தம் தலைமை வழிபாடு, ப. 46.
23. ந. வானமாமலை, தமிழர் வரலாறும் பண்பாடும், ப. 75.
24. ப. கிருஷ்ணசாமி, கொங்குநாட்டு வரலாறும் அண்ணன்மார் வழிபாடும், ப. 47.
25. வெ. வேதாச்சலம், இயக்கி வழிபாடு, ப. 113.
26. ந. வானமாமலை, பழங்கதைகளும் பழமொழிகளும், ப. 12.
27. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா எண். 951.

28. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா எண். 1005.
29. புறப்பொருள் வெண்பாமாலை, நூற்பா எண். 5.
30. திருமுருகாற்றுப்படை, வரி. 257 - 259.
31. இரா. சீனிவாசன், சக்தி வழிபாடு, ப. 17.
32. பி.எல். சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு, பக். 40 - 41.
33. அகநானூறு, நூற்பா எண். 345 : 3 - 4.
34. பி.எல். சாமி, தமிழ் இலக்கியத்தில்தாய்த் தெய்வ வழிபாடு, பக்56 - 57.
35. பொருநராற்றுப்படை, பாடல் எண் 51 -52.
36. அகநானூறு, 98 : 2-6.
37. அகநானூறு, 198 : 14-17.
38. திருமுருகாற்றுப்படை, 38 - 41.
39. வெ. வேதாச்சலம், இயக்கி வழிபாடு, ப. 18.
40. அகநானூறு, 370 : 12 - 13.
41. நற்றிணை, 288 : 1 - 4.
42. அகநானூறு, 22 : 1 - 2.
43. பதிற்றுப்பத்து, 71 : 20 - 23.
44. ஆறு. இராமநாதன், நாட்டுப்புற இயல் ஆய்வுகள், ப. 221
45. க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 3.
46. பொ. அழகு கிருஷ்ணன், சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும் சமுதாயமும், ப. 270.
47. சாமி, சிதம்பரனார், பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், ப. 21.
48. பிங்கல நிகண்டு, தெய்வத்தின் பெயர்கள், ப. 12.
49. மணிமேகலை, காதை வரிகள் 54 - 55.
50. க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 55.
51. க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 61
52. சரஸ்வதி வேணுகோபால், நாட்டுப்புறவியல் நம்பிக்கை, ப. 32
53. க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 3.
54. க. குளத்தூரன், தஞ்சை நகரிய சக்திக் கோயில்கள், ப. 13.
55. எல். கணபதிராமன், திருநெல்வேலிப் பகுதியில் சிறு தெய்வ வழிபாடு, ப. 48.
56. வில்லிபாரதம், மாலையிட்ட சருக்கம் எண் 73 : 1-2.
57. வை. சச்சிதானந்தம், ஒப்பிலக்கியம் ப. 82.
58. க. ப. அறவாணன், தமிழர் மேல் நிகழ்த்த பண்பாட்டுப் படையெடுப்புகள், ப. 138.

# இயல் 2

# திரௌபதியம்மன் கோயில்: வழிபாட்டுச் சடங்குகள், விழாக்கள்

*முன்னுரை*

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற பொன்மொழிக்கு ஏற்ப இறைவனை மக்கள் பழங்காலம் முதற் கொண்டு வணங்கி வந்தனர் என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. இவ்வாலய வழிபாடு மனிதனுடைய வாழ்க்கையோடு தொடர்புடையது. "வழிபாட்டின் ஒரு பகுதியான விழாக்கள், பண்பாட்டின் அடிப்படையில் உருவான விழா மரபுகள் அவை நாடு, இனம், மொழி, குழு ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்டு விளங்குவதுண்டு"[1] என்பர். "மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவு களாக வாழ்ந்திருந்த போதிலும் அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களும் பண்டிகைகளும் என்பார்."[2] சு. சக்திவேல். இதன்மூலம் மக்களிடத்தில் இருக்கும் பிரிவினை யைப் போக்கி ஒருங்கிணைக்க வழிபாடும் விழாக்களும் முதன்மையாக வைத்துப் போற்றப்படுகின்றன. இவ்வகையில் பெண் தெய்வமான திரௌபதியம்மன் கோயிலின் வழிபாட்டுக் கூறுகளையும் புராணத்தோடு தொடர்புடைய விழாக்களையும் காணுதல் தேவையாகின்றது. இவைபற்றிய தரவுகளை உற்றுநோக்கல், நேர்காணல், வினாநிரல் ஆகியவற்றின் மூலம் சேகரிக்கும் பணி நிகழ்வுற்றது. அவற்றை அடிப்படையாகக் கொண்டே இவ்வியலின் உள்ளடக்கங்கள் அமைகின்றன. பொதுவாக வழிபாட்டை இரு வகைப்படுத்தலாம்.

1. புற வழிபாடு
2. அக வழிபாடு

*புற வழிபாடு*

புறவழிபாட்டின் ஒரே நோக்கமாவது "விலங்குத் தன்மையை ஒழித்து மனிதத் தன்மையை அடக்கி தெய்வத் தன்மையை

ஒளிவீசச் செய்வதே என்கிறார்'' [3] வ. தேனப்பன். இதன்வழி மக்கள் ஒழுக்க நெறியோடு வாழ்வதற்குப் புற வழிபாடான கோயில்கள் பெரிதும் துணைபுரிகின்றன. கோயில்களில் மக்கள் பொது வழிபாட்டையும் சிறப்பு வழிபாட்டையும் காலத்திற்கு ஏற்றவாறு நடத்துகின்றனர். ''மக்கள் துன்பங்கள் நீங்கி உலகியல் இன்பங்களைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கே வழிபாடு செய்து வந்துள்ளனர்'' [4] என்பர். கோயில் வழிபாடான - புற வழிபாட்டு முறையை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. பொது வழிபாடு
2. சிறப்பு வழிபாடு

என்பனவாகும்.

## பொது வழிபாடு

இவ்வழிபாட்டில் நாள் வழிபாடு, வார வழிபாடு, மாத வழிபாடு போன்றவை அடங்கும். தினசரி நடைபெறும் வழிபாடுகள் நித்திய வழிபாடென்றும், ஆண்டுக்கொரு முறை நடக்கும் உற்சவங்களான வீதியுலா, திருவிழா ஆகியவற்றைச் சிறப்பு வழிபாடுகள் என்றும் அழைப்பர். பயன் அடிப்படையில் வழிபாட்டை இருவகைப்படுத்தலாம். மக்கள், அவரவர் தேவைக்குச் செய்யப்படும் தனிப்பட்ட வழிபாடு தன்னல வழிபாடு எனக் கொள்ளலாம். உலக நன்மைக்காகச் செய்யப் படும் வழிபாடு, பொதுநல வழிபாடு. (சான்று : உலக அமைதி வேண்டியும் மழை வளம் பெறவேண்டியும் நடத்தப்படும் கூட்டு வழிபாடுகள்)

### நாள் வழிபாடு

திரௌபதியம்மன் வழிபாட்டில் காலை முதல் இரவு வரை நடக்கும் நிகழ்ச்சியைத் தினசரி வழிபாடு எனலாம். தினசரி - ஒவ்வொரு நாளும் கோயில் பூசாரி அல்லது அர்ச்சகர் விடியற் காலையில் நீராடிய பின்பு கோயிலைச் சுத்தம் செய்து திரௌபதியம்மன் முன்பு வெண்பொங்கல் இட்டு, கற்பூர தீபம் ஏற்றி வழிபாடு செய்வர். இவ்வழிபாடு எல்லா நாட்களிலும் இடைவிடாது நடைபெறுகிறது. இத்திருக்கோயிலில் - தினசரி நடைபெறும் வழிபாட்டை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. காலை வழிபாடு
2. நண்பகல் வழிபாடு
3. மாலை அல்லது இரவு வழிபாடு

### காலை வழிபாடு

திரௌபதியம்மன் கோயில்களில் முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமானை முதலில் வழிபட்டு, பின்னர் மூலவரான திரௌபதியம்மனுக்கும் உடன்உறை தெய்வங் களான போத்தராசா, முத்தால் ராவுத்தர் போன்ற காவல் தெய்வங்களுக்கும் காலை வழிபாடு எல்லா நாட்களிலும் கோயிற் பூசாரியைக் கொண்டு தவறாது நடைபெறுகிறது.

### நண்பகல் வழிபாடு

வழிபாடு நண்பகல் வேளையில் நடைபெறுவதால் நண்பகல் வழிபாடு என்பர். கோயிற் பூசாரி விநாயகப் பெருமானைப் பூசை செய்த பின்னர் மூலவரான திரௌபதியம்மனுக்கு எண்ணெய்க் காப்பு முதல் ஸ்நானம் முடிவாக அனைத்து வழிபாடு (அபிடேகமும்) செய்து அலங்கரித்து கற்பூர தீபம் ஏற்றிக் காண்பிப்பர். அதன் பின்னர் அனைவருக்கும் வீரகாந்தம் அளிக்கப்படுகிறது. ''இவ்வீரகாந்தம் என்பது சிவசக்தியை நினைவுபடுத்துவதான, தெய்வீகத் தன்மை பொருந்திய மஞ்சள் நிறப்பொடி என்பார்''[5] விசுவநாத அய்யர். இது மஞ்சளும் பச்சரிசியும் கொண்டு செய்யப்பட்டதாகும். ''வீரகாந்தம் என்பது போத்தராசா - (போர் மன்னன்) என்பாருக்குரிய பொருள்களில் ஒன்றான காந்த பொருளே''[6]. இவ்வழிபாடு வாரத்தின் சிறப்பு நாளான வெள்ளிக் கிழமைகளிலும் மாதத்தின் சிறப்பு நாட்களிலும் நடைபெறுகிறது.

### மாலை வழிபாடு அல்லது இரவு வழிபாடு

மாலை வழிபாட்டைச் சாயங்காலப் பூசை என்று அழைப்பர். இவ்வழிபாடு பகலவன் மறைவதற்கு முன்னும் பின்னும் நடைபெறும். வழிபாட்டில் திரௌபதியம்மன் மற்றும் காவல் தெய்வங்களுக்குச் சிறப்பான வழிபாடுகள் நடைபெறும். வழிபாட்டில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் அதிகமாக இடம்பெறுகின்றனர். மேலும் இளஞ்சிறார்களும் வந்து வழிபடுகின்றனர். குழந்தைகளுக்குத் தெய்வ உணர்ச்சி இளமையில் தானே பதியும் வண்ணம் அவர்களைக் கோயில்களுக்குத் தம்முடன் அழைத்துச் சென்று வழிபடச் செய்வர். இது பண்டைய மரபு. சான்றாகக் கலித்தொகையில்

> **''............................... எல்லா**
> **கடவுட் கடிநகர் தோறும் இவனை**
> **வலம் கொளீஇ வா''[7]**

எனத் தலைவி ஒருத்தி தன் மகளை இறைவன் உறையும் கோயில்தோறும் வலம் வந்து வணங்கி வரும்படித் தோழியிடம் கூறுவதாக அமைகிறது. இன்றும் நடப்பியலில் இம்முறை பின்பற்றப்பட்டு வருகின்றது. சிறப்பு நாட்களில் மட்டும் இவ்வழிபாடு பொலிவுடன் நடைபெறுகிறது.

### வார வழிபாடு

வாரத்தின் ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் ஊர் மக்கள் திரௌபதியம்மன் கோயிலுக்குச் சென்று பச்சரிசியைக் கொண்டு செய்யப்பட்ட கொழுக்கட்டை மற்றும் சுண்டல் வைத்து படைப்பர். பின்னர் பூசாரியால் கற்பூர தீபம் ஏற்றிக் காண்பிக்கப்பட்டு அனைவருக்கும் பிரசாதம் வழங்கப் படுகிறது. அதன்பின்னர் திரௌபதியம்மன் கோயிலை மும்முறை வலம் வந்து வணங்கிச் சிறிது நேரம் வெளி மண்டபத்தில் அமர்ந்து பிரசாதத்தை உண்டு மனமகிழ்வுடன் தம் இல்லம் திரும்புவர். இம்முறையையே போன்றே பிற திருக்கோயில் களிலும் பின்பற்றப்படுகிறது.

### மாத வழிபாடு

திரௌபதியம்மன் கோயில்களில் சித்திரை மற்றும் மார்கழித் திங்களில் சிறப்பான வழிபாடுகள் நிகழ்கின்றன. வழிபாடுகள் ஊர்ப் பெரியோர்கள் மற்றும் அறங்காவலர் குழுவின் துணைகொண்டு சிறப்பாகச் செய்யப்பெறுகின்றன. தமிழ் ஆண்டின், சித்திரைத் திங்கள் முதல் நாளன்று காலை வேளையில் மூலவர் திரௌபதியம்மனுக்கு அபிடேகம் செய்வர். பின்னர் கோயிலில் இடம்பெறும் வெண்கலச் சிலைகளுக்கும் அபிடேகம் செய்யப்படுகிறது. விநாயகர் திரௌபதியம்மன் (விக்கிரங்களை) ஆகிய சிலைகளைச் சாற்றுப்படி செய்து வாகனங்களின் மேல் அமர்த்தி மாட வீதி வழியாக, மேள தாளங்கள் முழங்க ஊர்வலமாக எழுந்தருளச் செய்வர். ஒவ்வொரு குடும்பத்தாரும் தம் வீட்டருகே வரும் திரௌபதியம்மனுக்குக் கற்பூர தீபம் ஏற்றி வழிபடுகின்றனர்.

இவ்வாறாகத் திரௌபதியம்மன் வீதியுலா முடிந்து திருக்கோயிலை வந்தடைந்ததும் வாகனத்தில் இருந்து இறக்கிக் கொண்டு வந்து வெளிமண்டபத்தில் வைப்பர். அவ்வமயம் அனைவரும் கோவிந்தா! கோவிந்தா! என வேண்டுவர். பின்னர் கோயிற் பூசாரி அலங்கரிக்கப்பட்ட திரௌபதியம்மனின் முன்பு

கற்பூர தீபம் ஏற்றிக் காட்டுவார். அனைவருக்கும் வீரகாந்தம் கொடுக்கப்படுகிறது. அன்றைய தினத்தில் ஊரில் உள்ளோர், பெரும்பாலோர் தத்தம் வீடுகளை வண்ண ஒளி விளக்குகளால் அலங்கரிப்பது வழக்கம். மேலும் சுப காரியங்களும் தொடங்கப் படுகின்றன. இவ்வாறு செய்வதால் ஆண்டு முழுவதும் திரௌபதியம்மனின் அருளால் குறையின்றி நல்ல காரியம் நடைபெறும் என்ற நம்பிக்கை மேலோங்கி இருத்தலைக் காண முடிகிறது.

### மார்கழி மாத வழிபாடு

மார்கழி மாதத்தில் விருப்பமுள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும் தம் உறவினருடன் வந்து திரௌபதியம்மனுக்கு அபிடேகம் செய்து வழிபடுகின்றனர். ஊர்ப் பெரியோர்கள் மற்றும் அறங்காவலர் குழுவின் உதவியுடன் இம்மாதம் முடியச் சிறப்பு அபிடேகங்கள் நடத்தப்படுகின்றன. அபிடேகத்திற்குரிய பொருளை அல்லது அதற்குரிய பணத்தைக் கோயில் பூசாரி பெற்றுக்கொண்டு செவ்வனே செய்கிறார். இம்முறையைப் போன்றே பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் நடைபெறுகின்றன.

மார்கழித் திங்களில், கன்னிப் பெண்கள் விடியற் காலையில் துயிலெழுந்து நீராடிய பின்பு தம் இல்லங்களின் எதிரே வண்ணக் கோலமிட்டு அழகு செய்வர். இம்மாதத்தில் காணப்படுகின்ற உற்சாகமும் சுறுசுறுப்பும் பிற மாதங்களில் காண்பதரிது. நல்ல கணவன் கிடைக்கவேண்டும் என்பதற்காகக் கன்னிப்பெண்கள் நோன்பு இருத்தலும் நீராடியபின், ஈர ஆடை யுடன் திருக்கோயிலை மும்முறை வலம் வந்து வணங்குவதும் குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

### அக வழிபாடு

புற வழிபாட்டில் தேர்ந்த பிறகே அக வழிபாட்டிற்குரிய தகுதி வந்தடையும். இவ்வகையில் நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்கள் முதலியோர் இறைவனைத் தம் மனக் கோயிலில் வைத்து வழிபாடு செய்தனர். இது பக்குவம் பெற்ற நிலை.

### விழாக்கள்

"தெய்வங்களை வணங்குவதற்கான சடங்குகளை ஏற்படுத்தி மனிதன் விழாக்களையும் அமைத்துக் கொண்டான்.

பழங்காலந் தொட்டுப் பல விழாக்களும் அவற்றிற்கான சடங்குகளும் நிகழ்ந்துள்ளன"[8] என்பார் சு. வித்தியானந்தன். இதன் வழி மக்களின் வாழ்க்கையோடு ஒன்றியவையாக விழாக்கள் கொண்டாடப்பட்டு வந்ததை இதன்வழி அறியலாம். விழாக்களும் சமயம் சார்ந்த சடங்குகளும் ஒன்றோடொன்று தொடர்புடையன.

ஆதிகால மனிதன் இயற்கையின் செயலுக்குக் காரணம் அறியமுடியாத நிலையில் இயற்கையை வெல்லச் சில மந்திரங்களைப் பயன்படுத்தினான். இயற்கையில் மாற்றம் ஏற்பட்டபோது தன்னுடைய ஆரவாரத்தைச் சில ஆடல்களின் மூலம் வெளிப்படுத்தினர். இவ்வாறான ஆடல்களின் தொடர்ச்சி நிகழ்ந்தது. நாளடைவில் விழாக்கள், தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தன எனலாம். சிறப்பு விழாக்களை இருவகைகளாக பிரிக்கலாம். அவையாவன:

1. ஆண்டுத் திருவிழாக்கள்
2. குடமுழுக்குப் பெருவிழா

என்பனவாகும்.

## ஆண்டுத் திருவிழாக்கள்

வருடத்திற்கொருமுறை ஊர்ப் பொதுமக்கள் ஒன்றுகூடி நிகழ்த்தும் உற்சவத்தை ஆண்டு வழிபாடு எனலாம். இதைத் திருவிழா எனக் கொள்வர். "சடங்குகளே விழாக்களுக்கு அடிப்படை. சடங்குகளின் ஒன்றிணைக்கப்பட்ட கூட்டுத் தொகுதியினை விழா எனக் கூறலாம். சடங்கு என்பது வாழ்வியல் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது"[9] என்பார் க. காந்தி. விழா என்பது மகிழ்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு மக்களின் வாழ்க்கையோடு இணைந்த ஒன்றாகக் கொண்டாடப்படுகின்றது. ஒவ்வோராண்டும் திருவிழா சிறப்பாக அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களிலும் மக்களின் பொருளாதார நிலைக்கு ஏற்பப் பல நாட்கள் நடைபெறுகிறது. பதினெட்டு நாட்கள் போரை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் பதினெட்டு நாட்கள் விழா ஆற்றுவதைக் கூனிச்சம்பட்டு, புதுச்சேரி திரௌபதியம்மன் கோயில்களில் காணலாம். இந்திரவிழா இருபத்தெட்டு நாட்கள் தொடர்ந்து நிகழ்ந்ததைக் காப்பியங்கள் சுட்டுகின்றன. பழங்காலந்தொட்டே ஆண்டுக்கொரு முறை இத்திருவிழாக்கள்

பல நாட்கள் தொடர்ந்து நிகழ்ந்தமையை அறிய முடிகிறது. ஊர்கூடி விழாவில் மகிழ்ந்ததை,

> **"விண்ணவர் தலைவனை வணங்கிமுன் னின்று**
> **மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்**
> **மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த**
> **நாலேழ் நாளினு நன்கினி துறைகென**
> **அமரர் தலைவ னாங்கது நேர்ந்தது"[10]**

என்றும்,

> **"அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்"[11]**

என்றும் பாடுவதன் மூலம் அறியலாம்.

## குடமுழுக்குப் பெருவிழா

கோயில்கள் பழுதுபடும்போது "எல்லாக் கற்சிற்பங் களுக்கும் மருந்து சாத்தி நிலைபெறச் செய்வதும் செப்புத் திருமேனிகளுக்குப் புளிக்காப்பிட்டு ஒளிபெறச் செய்வதும் பழுதுபட்ட கட்டடப் பகுதிகளில் மராமத்து வேலைபார்த்துச் சீர்பெறச் செய்வதும் சுதைச் சிற்பங்களுக்கும் கோபுரம் முதலிய பிற பகுதிகளுக்கும் வண்ணம் பூசி அழகுபெறச் செய்வதும் உண்டு."[12] என்பார் வ. தேனப்பன். பின்னர் நல்ல நாளில் ஊர்ப் பெரியோர்கள் துணைகொண்டும் சமயத் தலைவர்களின் நல்லாசியுடன் மகா கும்பாபிடேகம் எனப்படும் குடமுழுக்கு நன்னீராட்டைச் செய்வர். "திரௌபதியம்மனின் அருள் சக்தி மேலோங்கவும் புனிதத் தன்மை கெடாமல் கோயில் கலை நயத்துடன் இருக்கவும் இக்கும்பாபிடேகம் நடைபெறுகிறது"[13] என்பர். இதன்மூலம் குடமுழுக்கு விழாவின் சிறப்பு நன்கு புலனாகும். இப்பயன் கருதிப் பல திரௌபதியம்மன் கோயில்களில் குடமுழுக்கு விழா நடத்தி வருகின்றனர். சில ஊர்களில் திரௌபதியம்மன் கோயிலைப் புதுப்பிக்கும் பணிகள் சிறப்பாக நடந்துவருகின்றன. (சான்று : வாதானூர், கரிக்கலாம்பாக்கம் போன்றவை குறிப்பிடத் தக்கவை)

## விழா - சொல் விளக்கம்

மன மகிழ்ச்சியை வெளியிடும் பாங்கில் நம்பிக்கையின் அடிப்படையில் விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. மக்களே விரும்பி ஏற்றுக் கொண்டாடும் நிகழ்ச்சியாதலின் அது

'விழா' எனப் போற்றப்படுகின்றது. பண்டைத் தமிழ் இலக்கியங் களில் ஒன்றான அகநானூற்றில் விழவு என்றழைத்ததை,

*"அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்ப்*
*பழிஇலர் ஆயினும் பலர்புறங் கூறும்"*[14]

என்றும் வரிகள் உணர்த்தும். விழாவினைப் பற்றிக் கலித்தொகையில்,

*"ஆலமர் செல்வன் அணிசால் மகன் விழாக்*
*கால்கோளென் றுக்கிக் கதுமென நோக்கி"*[15]

எனவும்,

*"காதல குழைய ராகப் பெரிதுவந்து*
*சாறுகொ ளூரிற் புகல்வேல் மன்ற"*[16]

எனச் 'சாறு' என்ற சொல்லால் சுட்டியிருப்பதைக் குறுந்தொகைப் பாடல்கொண்டு அறியலாம். விழா என்பதற்கு விழைவு என்று பொருள் கொள்ளலாம். அவ்வாறு கொண்டால் அது இறைவனை நோக்கி மனிதன் விழையும் செயலைக் குறிக்கும்.

## திருவிழாத் தோன்றக் காரணம்

தமிழர்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்குவன வற்றுள் திருவிழாக்களும் பண்டிகைகளும் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. இன்று நடைமுறையில் "ஊரில் மழை தண்ணீர் இல்லை, ஊர் மக்களிடையிலும் ஒன்றுமில்லை உறவுக்காரர் களையெல்லாம் அழைத்து சந்தோஷப்படுத்த வேண்டும். இதுபோன்ற காரணங்களால் கொடை நடத்தும் எண்ணத்தை உருவாக்குகிறது"[17] என்பார் சு. சண்முகசுந்தரம். கொடை என்பது திருவிழாவைக் குறிக்கும் பிறிதொரு சொல்லாகும். இதன் சிறப்பு, ஊரில் திருவிழா தோன்றக் காரணமாக அமைகிறது எனலாம்.

## விழா நாட்கள் குறிக்கும் முறை

'நாள் செய்வதை நல்லவர் செய்யார்' என்ற பொன்மொழிக்கு ஏற்ப அறங்காவலர் குழுவும் ஊர் உபயதாரர்களும் திரௌபதியம்மன் கோயிலில் ஒன்று கூடித் திருவிழாவை எந்நாளில் நடத்தலாம் என்று கலந்து ஆலோசிப்பர். பொதுவாகக் கோடைக் காலங்களில் அமாவாசைக்குப் பிறகு வளர்பிறை நாளில் திருவிழாவைத் தொடங்கலாம் என்று ஒருமனதாக நாள் குறிக்கப்படுகிறது. இம்முறை பெரும்பாலான திரௌபதியம்மன்

கோயில்களிலும் பின்பற்றப்படுகிறது. "பெரும்பாலும் விவசாய வேலை முடிவு பெற்றவுடனும் மழை இல்லாத காலம் பார்த்தும் விழா நாள் குறிக்கப்படுவதாகக் கூறுவர்"[18] சான்றாகச் சிலப்பதிகாரத்தில் முழுமதி நாளில் இந்திரவிழா தொடங்கிய தனைப் பின்வரும் அடிகள் சுட்டும்.

> "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென
> வெற்றிவேல் மன்னற் குற்றதை யொழிக்கென"[19]

இன்று நடைமுறையில் கோடைகாலத்தில் தொடங்கிய திருவிழா முழுமதி நாளில் நிறைவு பெறுவது நினைவு கூரத் தக்கது. திரௌபதியம்மன் கோயில்களில் தீ மிதித் திருவிழா பெரும்பாலும் வெள்ளிக்கிழமை வருமாறு அமைக்கப்படு கிறது. 'கூனிச்சம்பட்டு, சஞ்சீவி நகர் போன்ற ஊர்களில் தீமிதி விழா திங்கட்கிழமை வருமாறு நாள் குறிக்கப்படுகிறது. இவ்வாறு காலம் காலமாக முந்தையோர் விழா செய்வதை மரபாகக் கொள்கின்றனர்.

## திருவிழா பற்றி அறிவித்தல்

திருக்கோயிலில் எடுத்த முடிவுப்படிக் குறிப்பிட்ட நாளில் கொடியேற்றம் என்றும் கூழ் வார்த்தல் என்றும் உற்சவம் என்றும் முரசு முழங்குபவர் மூலம் ஊரில் விழாவைப் பற்றி அழைப்பிதழ் மூலமாகவும் நாளிதழ் மூலமாகவும் தெரிவிக்கப் படுகிறது. 'விழாவறைதல்' என்பது விழா நாட்களைப் பொதுமக்களுக்கு அறிவித்தல் ஆகும். இந்நிகழ்ச்சியைப் பற்றிச் சங்க இலக்கியத்துள் காணமுடிகிறது.

> "யாறுகிடந் தன்ன அகனெடுந் தெருவிற்
> சாறென நுவலு முதுவாய் குயவ"[20]

இதன்மூலம் விழாவறைவோராகக் குயவர் இருந்தமையை நற்றிணை தெரிவிக்கின்றது. இதுபோன்ற செய்திகளை மணிமேகலையும் பேசும்.

## ஊரணிப் பொங்கல்

விழா நாள் குறிக்கப்பட்ட பின்பு ஊர்மக்கள் அனைவரும் திங்கட்கிழமையில் அய்யனார் கோயிலுக்குச் சென்று பொங்கல் இடுகின்றனர். "இக்கிராம காவல் தெய்வமான அய்யனார் ஊரைக் கொடிய ஆவிகளிடமிருந்து இரவு பகலாகக் காப்பாற்று வதாகக் குறிப்பிடுகிறார்.'[21] இத்தெய்வத்திற்குப் பொங்கல்

வைத்து வழிபடுகின்றனர். பொங்கல் இடுவதற்கு முதல் நாளே மேளம் அடித்து ஊர் முழுவதும் அறிவிக்கப்படுகிறது. மறுநாள் மாலை வேளையில் பொங்கல் வைத்துப் படைக்கப்படுகிறது. அன்றைய பொழுதே ஆடு, கோழி போன்றவை பலியிடப் படுகின்றன. தற்போது இவ்வழக்கம் குறைந்துவருகிறது. சில சமயங்களில் திருவுருவுகட்குப் பால் அபிடேகம் செய்கின்றனர். அதனையடுத்து விபூதி முதலியவற்றைத் தூவிச் சாற்றுப்படி செய்கி' றனர். பின்னர்க் கற்பூரதீபம் கொடுத்து வழிபட்ட பின்னர் மேளக்காரர் பொங்கல் கூடை ஏந்தியவர்கள் அனைவரையும் மேள முழக்கத்துடன் கோயிலிலிருந்து வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார். சஞ்சீவி நகர் ஊரின் புறத்தே இருக்கும் கன்னிமார் சிலைகளுக்குப் பொங்கல் இட்டு வழிபாடு செய்வர்.

## எல்லை கட்டுதல்

திரௌபதியம்மன் கோயிலிருந்து பூசாரியும் காத்தவராயன் (மரச்சிலை) சிலையும், வீரவாள், வீரச்சாட்டை, சூலம் போன்றவைகளுடன் மேள தாளங்கள் முழங்க ஊரார், ஊரின் எல்லைப் புறத்தே சென்று ஒரு எலுமிச்சம் பழத்தை நான்கு பாகமாக அறுத்து அதில் சிவப்பைத் தடவி நான்கு திசைகளிலும் தூக்கி எறிந்துவிடுகின்றனர். ''ஊரின் எல்லையில் இருக்கும் கொடிய ஆவிகளிடமிருந்தும் அம்மையினின்றும் காவல் காத்து வரும் தெய்வமாகப் பிடாரியைச் சுட்டுவார்.''[22] அக்கொடிய ஆவிக்குப் பலி கொடுக்கவேண்டும் என்ற நம்பிக்கையில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. எலுமிச்சம்பழத்தில் இருந்து ஒழுகும் சாறு சிவப்புடன் சேர்ந்து இரத்தத்தைப் போல இருப்பதால் இதனைப் பலியிடுவதாக நம்புகின்றனர். அன்றிரவு மாரியம்மன் தெருக்கூத்து நிகழ்ச்சி இடம் பெறுகிறது.

## கொடியேற்றம்

கோயிற் பூசாரியைக் கொண்டு கருவறையைச் சுத்தம் செய்தபின்னர் திரௌபதியம்மனுக்குக் (மூலவர் கற்சிலை) கற்பூர தீபம் ஏற்றி வழிபாடு நடைபெறுகிறது. அதன்பின்னர் பூசாரி, ஊர்ப் பெரியோர்கள் மற்றும் உபயதாரர்கள் அனைவரும் அருகில் உள்ள நீர் நிலைக்குச் செல்கின்றனர். அங்கே பூசாரி மட்டும் ஈர உடையுடன் வேப்பிலை வைக்கப்பட்ட நீர் நிரம்பிய கலசக்குடத்தைத் தலையில் சுமந்தவாறு மேள தாளங்கள் முழங்கப் பழம்பெரும் கோயிலில் குடிகொண்டிருக்கும் முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமானின் கோயிலுக்குச்

செல்கின்றனர். அங்கு விநாயகர் வழிபாடு நடைபெறுகிறது. பின்னர் கெங்கையம்மன் ஆலயத்திற்குச் சென்று வழிபட்ட பின்னரே ஊரை வலம் வந்து திரௌபதியம்மன் கோயிலை வந்தடைகின்றனர். உடன் பாண்டவர் (மரச்) சிலையும் திரௌபதியம்மன் (மரச்) சிலையும் கொண்டு வருகின்றனர். பின்னர் பிராமணரைக் கொண்டு பலிபீடத்தருகில் அமைந்திருக்கும் கொடிமரத்தில் நல்லவேளையில் கொடியேற்றம் நடைபெறு கிறது. அவ்விடத்தில் நவதானிய விதைகளை ஒரு புதுப் பானையில் வைத்து நீர் ஊற்றி வளர்க்கின்றனர். இவ்வாறு வளரும் நவதானிய வளர்ச்சியைப் போன்றே ஊரில் உள்ள மக்களும் நன்கு செழித்து வாழ வேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இது செய்யப்படுகிறது. முன்னதாகப் பிராமணர் மூலம் பூசாரி மற்றும் தர்மகர்த்தா அல்லது அறங்காவலர் குழுவின் தலைவருக்குக் காப்பு கட்டப்பட்டுக் கொடியேற்றம் நிகழ்ச்சி காலை வேளையில் நடைபெறுகிறது. அனைவருக்கும் வீரகாந்தம் கொடுக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சி அனைத்து திரௌபதியம்மன் கோயில்களிலும் பொதுவாக ஆகம முறைகளின்படி நடைபெறுகிறது.

உற்சவ நாளில் பூவால் அலங்கரிக்கப்பட்ட கரகத்தின் நடுப்பாகத்தைப் புடைத்திருப்பது போல அமைத்திருப்பர். இது கருப்பையின் குறியீடாக அமைந்திருக்கிறது. நூல் சுற்றப்பட்டு நீர் நிரம்பிய கும்பத்தில் வாய்ப்பகுதியில் தேங்காய் ஒன்றை வைத்து அதனைச் சுற்றி மாவிலைகள் வைக்கப்படுகின்றன. மாவிலையும் தேங்காயும் தாவரச் செழிப்பை உணர்த்தும் வகையிலேயே வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது சிந்தனைக்குரியது. ''கும்பமானது பெண்ணின் கருப்பையின் குறியீடாக அமைகிறது. கருப்பையில் இடம் பெறும் விந்தாகக் கும்பத்திலுள்ள நீர் அமைகிறது இது தொத்து மந்திரத்தின் பாற்பட்ட செழிப்பு மந்திரமாகும்.''[23] என்பார் தே. லூர்து. இவ்வாறு கலசம் கொண்டுவந்து கொடி கட்டுதல் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இன்று நடைமுறையில் விழாக் காலத்தில் கொடியேற்றம் நிகழ்ச்சி பழங்காலத்தின் விழாத் தொடக்கத்தின் அறிகுறியாக அமைகிறது. கொடி ஏற்றி அதனை விழா நாட்கள் வரை அவிழ்க்காது பாதுகாக்கும் மரபு இன்றும் உள்ளது. சான்றாக மதுரைக் காஞ்சியில்,

> **"சாறயர்ந் தெடுத்த உருவப் பல்கொடி"**[24]

என்றும் சிலப்பதிகாரத்தில்,

> **"தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து**
> **மங்கல நெடுங்கொடி வானுற வெடுத்து"**[25]

என்றும் வரும் பாடலடிகள் கருதத்தக்கன. இதனை "விழா நடப்பதை அவ்வூராரேயன்றிப் பிறரும் அறிந்து கொள்ளும் நிலையில் ஓர் அறிகுறியாக அமைவதும் குறிப்பிடத்தக்கது"[26] என்பர். இவ்விழாவின் தொடக்கமாகக் கொடியேற்றம் அனைத்து திரௌபதியம்மன் கோயில்களிலும் நிகழ்கிறது. கொடியேற்றம் முதற்கொண்டு திருவிழா முடியும்வரை கோயிலில் பாரதச் சொற்பொழிவு நடைபெறும்.

### கூழ்வார்த்தல் நிகழ்ச்சி

காலைப்பொழுதில் கொடிகட்டுதல் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றவுடன் அன்றைய தினமே 'கூழ்வார்த்தல்' நிகழ்ச்சி நடைபெறுகிறது. மேளம் அடிப்பவர் மூலம் ஊரார்க்கு முன்பே இது பற்றி அறிவிக்கப்படுகிறது. அதன்படிக் கோயிலின் எதிரிலோ அல்லது ஊரின் மையப் பகுதியிலோ காலம் காலமாக நடந்துவருமிடத்தில் கூழ்வார்க்கும் நிகழ்ச்சி நடை பெறுகிறது. சிலர் பச்சரிசியைக் கொண்டு கஞ்சி கொணர்வர். பலர் கேழ்வரகும் கம்பும் சேர்த்து கூழ் வார்ப்பர். இதைத் தனித் தனியே கொணருவார்கள். பெரிய கலயத்தில் கஞ்சி வகைகள் சேர்க்கப்பட்டு மாரியம்மன் சிலை (மரம் உருவம்) முன்பு வைப்பர். பின்னர் மாரியம்மன் கதையை உடுக்கைப் பாட்டுடன் இணைத்து வருணிப்பர். அவ்வமயம் சில பெண்களுக்கு மருள் வந்து ஆடுவர். அவர்களிடம் ஏதேனும் குறை உண்டா? குறையிருப்பின் சொல்லு தாயே! என வினவுவதும் பெரும் பாலான திரௌபதியம்மன் கோயில்களில் நடைபெறுகின்றது. குறையைச் சொன்னவுடன் அதனைச் செய்வதாக உறுதியளித்த பின்னர் உடுக்கைக்காரர் மற்றும் பெரியோர்களின் கூற்றுக்கிணங்க மாரியம்மனுக்குக் கூழ் வார்ப்பர். இதனை 'மாரியாத்தாகூழ்' என்று அழைப்பர்.

இதை வாங்கி உண்டால் நோய் நீங்கி நற்பயன் பெறலாம் என்ற நம்பிக்கை உண்டு. குறிப்பாகத் திருமணமான பெண் உண்டால் குழந்தைப் பேறு கிடைக்கும் என்றும் நம்புகின்றனர். இதன்மூலம் உள்ளமும் உடலும் நிறைவு பெற்றுத் தம் இல்லம்

திரும்புவர். இவ்வாறு கூழ்வார்த்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மழை கொடுத்த மாரியை அமைதிப்படுத்த வேண்டியும் மக்கள் அனைவரும் ஒற்றுமையுணர்வுடன் பகிர்ந்துண்டு வாழ வேண்டும் என்பதை உணர்த்தவும் இக்கூழ்வார்த்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது எனலாம். இதற்காகத் திருக்கோயிலின் முன் பந்தல்போட்டு அலங்கரிப்பர்.

## திருக்கோயிலை அலங்கரித்தல்

திருவிழாவை மையமாகக் கொண்டு ஊரில் உள்ள உபயதாரர்கள் ஒன்றுகூடித் திரௌபதியம்மன் கோயிலைச் சுத்தம் செய்வர். பின்னர்ப் பல வண்ணங்கள் கொண்டு பூசுவேலை செய்து கோயிலை அழகு செய்வர். கோயிலின்முன் பெரிய பந்தலிட்டு வண்ண ஒளி விளக்குகளால் அலங்கரிப்பர். இதுபோன்ற நிகழ்ச்சியைச் சித்திரிக்கும்வகையில் பண்டைத் தமிழர்கள் தத்தம் வீடுகளிலும் தெருக்களிலும் அழகு கூட்டுவர் என்பதை அகநானூறு மூலம் அறியலாம்.

*''மழைகால் நீங்கிய மாக விசும்பின்
குறுமுயல் மறுநிறங் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரு மதலிருள் நடுநாள்
மறுகு விளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுட னயர''*[27]

இலவ மரத்தில் நெருக்கமாக மலர்ந்துள்ள பூக்கள் பெரு விழாவில் ஏற்பட்ட விளக்குப்போல் காட்சியளித்ததைப் பின்வரும் பாடலடிகள் சுட்டும்.

*''அருவி யான்ற வுயர்சிமை மருங்கிற்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலையில் மலர்ந்த இலவமொடு
நிலையுயர் பிறங்கல் மலையிறந் தோரோ''*[28]

இதன்மூலம் விழாவில் விளக்குகள் நிறையப் பயன் படுத்தியமையை அறிய முடிகிறது. இன்று விழாக் காலங்களில் கோயில் மதிற்சுவர் ஒட்டி இருமருங்கிலும் புதுமணல் கொண்டு தரையைச் செப்பனிடுவர். இந்நிகழ்ச்சியைப் போன்றே சங்க இலக்கியத்திலும் காணமுடிகிறது.

*"வார்கழற் பொலித்த வன்கண் மழவர்*
*பூந்தொடை விழவின் தலைநா ளன்ன*
*தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்"[29]*

என்றும்,

*"விழவுமலி மூதூர் வீதியு மன்றமும்*
*பழமணன் மாற்றுமின் புதுமணற் பரப்புமின்"[30]*

என்றும் பாடலடிகள் சுட்டுகின்றன. இதன்மூலம் பழைய மணலை மாற்றிப் புதுமணலைப் பரப்பி விழாவைத் தொடங்கினர் பண்டையோர் என்பதை இலக்கியவழி அறியலாம். தம் இல்ல விழாவைக் காட்டிலும் கோயில் திருவிழாவில் மக்கள் அனைவரும் பங்குகொண்டு புத்துணர்வுடன் காணப்படு கின்றனர். திரௌபதியம்மன் கோயிலை அழகுபடுத்துவது போன்று தத்தம் வீட்டையும் வண்ண ஒளி விளக்குகளால் அழகு படுத்துவர். இவ்வாறாகக் கோயில்களும் வீடுகளும் புத்தொளி பெற்றிருப்பதை விழாக் காலங்களில் காணமுடிகிறது.

## விருந்தினர்க்கு உணவு படைத்தல்

விழாக் காலங்களில் தத்தம் உறவினர்கள் அனைவரையும் அழைத்து விருந்து படைப்பர். பகையுடன் இருப்பவர்கள் அன்று பேசித் தீர்த்துக் கொள்வதற்கு இது வாய்ப்பாக அமை கிறது. பகைமையைப் போக்கி ஒற்றுமையுணர்வுடன் வாழ்வதற்கு 'விருந்தோம்பும்' நிகழ்ச்சி அடிப்படையாய் அமைவதை இன்றும் நடப்பியல் வழி அறியமுடிகிறது.

## மூலவர்க்கு அபிடேகம் செய்தல்

உற்சவத்தன்று பகற்பொழுதில் முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமானுக்கு அபிடேகம் மற்றும் கற்பூர தீப வழிபாடு நடைபெறும். கோயிலின் அருகே உள்ள கெங்கையம்மன் ஆலயத்திற்குச் சென்று அபிடேகம் செய்யப்படுகிறது. அறங்காவலர் குழுவின் துணையோடு ஊர்ப் பெரியோர்களின் முன்னிலையில் திரௌபதியம்மனுக்கு அபிடேகம் மற்றும் கற்பூர தீப வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. மேலும் கோயிலில் இடம்பெறும் அனைத்து வெண்கலச் சிலைகளான திரௌபதியம்மன், அருச்சுனன், மகாவிஷ்ணு, விநாயகர் ஆகிய விக்கிரகங்களுக்கு அபிடேகம் செய்யப்படுகிறது. பின்னர்ப் பிரசாதமாக வீரகாந்தம் வழங்கப்படுகிறது. இவ்வழிபாட்டில்

பங்கு கொள்ளும் அனைத்து பொறுப்பாளர்களுக்கும் தேங்காய், பழம், பூ, வெற்றிலைப் பாக்குடன் கூடிய தாம்பூலம் கொடுத்து சிறப்புச் செய்வர். இந்நிகழ்ச்சி அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களிலும் விழாக்காலங்களில் தவறாமல் நடைபெறு கிறது.

## விழாவில் நாட்டம் கொள்ளுதல்

உபயதாரர்கள் பெரும்பாலோர் உற்சாகத்துடனும் பட படப்புடனும் விழா இனிது நிறைவேற வேண்டும் என்ற வேட்கையில் தம் தொழிலை மறந்து விழாவில் கவனம் செலுத்துவர். இதைப் போன்றே பண்டை நாளிலும் இருந்திருக்க வேண்டும். பட்டினப் பாலையில் பரதவர் குலத்தவர் விழா நாளில் தொழிலாற்றுவதில்லை என்பதைப் பின்வரும் பாடல்கள் மூலம் அறியலாம்.

> **''சினைச் சுறவின் கோடுநட்டு**
> **மனைச் சேர்த்திய வல்லணங்கினான்**
> **மடற்றாழை மலர் மலைந்தும்**
> **பிணர்ப் பெண்ணைப் பிழிமாந்தியும்**
> **புன்றலை யிரும்பரதவர்**
> **பைந்தாழைமா மகளிரொடு**
> **பாயிரும் பனிக்கடல் வேட்டாஞ் செல்லா''[31]**

ஒவ்வோர் ஊரின் பொருளாதார நிலைக்கு ஏற்பத் திருவிழாக் களை மூன்று நாட்கள், ஐந்து நாட்கள், ஏழு நாட்கள், ஒன்பது நாட்கள் என்று ஒற்றை எண்ணில் வருமாறு வகைப்படுத்திக் கொள்கின்றனர். அதன் அடிப்படையில் மக்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் உற்சவங்களை மிகச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

## வழிபாட்டுச் சடங்குகள்

''வழிபாட்டில் எவ்வித எதிர்பார்ப்புமின்றி வழிபாடு ஒன்றினையே நோக்கமாகக் கொண்டு செய்யப்படும் சடங்கு களை வழிபாட்டுச் சடங்குகள்''[32] என்பார் தே. ஞானசேகரன். பெரும்பாலும் இவ்வழிபாட்டுச் சடங்குகளை விழாக் காலங் களில் காணலாம். இச்சடங்கினைக் கோயிற் பூசாரியே முன்னின்று நடத்துகின்றனர். வழிபாட்டுச் சடங்கினை இரு நிலையாகப் பகுக்கலாம்.

1. உயிர்ப் பலிச் சடங்கு

2. மலர்ச் சடங்கு

என்பனவாகும்.

## வழிபாட்டில் பலியிடுதல்

உயிர்ப் பலியிடுதல் என்பது வழிபாட்டில் சிறப்பு அம்சமாக இருந்திருக்கிறது. இத்தகைய முறை பண்டைத் தமிழர்களால் செய்யப்பட்டு வந்ததை இலக்கியத்தின் வாயிலாக அறியமுடிகிறது. இப்பலியிடும் நிகழ்ச்சி வழிபாட்டுச் சடங்கு களுடன் இரண்டறக் கலந்திருப்பதைக் காண்முடிகிறது. உயிர்ப் பலியிடுவதன் மூலம் உயிருடன் இருப்பவர்களுக்கு உயிர்ப்புச் சக்தியை அளிக்கவும் அதிகரிக்கவும் முடியும் என மனிதன் நம்பினான். அதனடிப்படையில் இரத்தத்தின் சிவப்பு நிறமே உயிர்ப்புச் சக்திக்குக் காரணம் என்று எண்ணிய நிலையில் இரத்தப் படையல் தோன்றிச் சடங்கு முறையாக வளர்ந்தது எனலாம். சிறு தெய்வ வழிபாட்டில் உயிர்ப்பலிச் சடங்குமுறை முதலிடம் பெறுகிறது. மலர்ச் சடங்கு பெருந் தெய்வ வழிபாட்டில் இடம்பெறுகிறது.

## உயிர்ப் பலிச் சடங்கு முறை

உயிர்ப் பலிச் சடங்குமுறை பண்டைத் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்ததைப் பின்வரும் சான்று மூலம் அறியலாம்.

பாரதப் போரின் போது பாண்டவர்கள் வெற்றிபெற வேண்டும் என்று எண்ணி அரவானைக் களப்பலியிட்ட முறையை நோக்கும் போது அக்காலத்தில் பலியிடும் முறை ஒரு வழக்காக இருந்து வந்ததை அறிய முடிகிறது. மேலும் வீரர்கள் தம் அரசரின் வெற்றி வேண்டித் தம்மையே காளிக்குப் பலியிட்டுக் கொள்ளும் வீர நிகழ்ச்சியைக் கலிங்கத்துப் பரணி முதலாகப் பல இலக்கியங்கள் கூறும். சங்க இலக்கியத்தில் வழிபாட்டில் மறியறுத்துப் பலி கொடுக்கும்முறை சுட்டப்படு கிறது. இடையில் சமண பௌத்தச் சமயத் தாக்கத்தால் பெருவழக்காய் இருந்த உயிர்ப் பலி குறைந்து தற்போது சிறு தெய்வ வழிபாட்டில் மட்டும் உயிர்ப் பலி கொடுக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சி பண்டைத் தொடர்பினை நினைவுபடுத்துவதாக அமைகிறது எனலாம்.

பாரதக் கதையை அடிபொற்றிப் பல்வேறு திரௌபதியம்மன் கோயில்களில் சிறப்பு நிகழ்ச்சிகளை மையமாக்குவர். விழாக் காலங்களில் பகற்பொழுதில் பல வழிபாட்டுச் சடங்குமுறை களை மேற்கொள்கின்றனர். அவற்றுள் குறிப்பிடத் தக்கவை யாகப் பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

1. அரக்கு மாளிகை விழா
2. பகாசூரன் வதை விழா
3. அருச்சுனன் தபசு
4. மாலையீடு (திருக்கல்யாணம்)
5. அரவான் களப்பலி
6. தீ மிதித் திருவிழா
7. மஞ்சள் நீராட்டு விழா
8. முடிசூட்டு விழா (தருமர் பட்டாபிஷேகம்)

### 1. அரக்கு மாளிகை விழா

உற்சவத்தின் முதல் நாள் மாலைப் பொழுதில் 'அரக்கு மாளிகை விழா' நடைபெறுகிறது. முன்னதாகக் காலையிலேயே அரக்கு மாளிகை கட்டும் பணி தொடங்குகிறது. நான்கு மூலைகளிலும் சவுக்கு மரங்களை நடுகின்றனர். சுற்றிலும் மரத்தால் வேலி அமைக்கின்றனர். மரத்தின்மேல் அட்டையால் மாளிகை போன்று அமைக்கின்றனர். அதனுள் உப்பு, வெடி மருந்து போன்ற பற்றக்கூடிய பொருள்களை வைத்துக் கட்டு கின்றனர். அட்டையால் செய்யப்பட்ட போலி அரக்கு மாளிகை ஊரின் நடுவில் உள்ள மந்தைவெளி என்னுமிடத்தில் கட்டப் படுகிறது. ஊரார்க்கு அறிவித்த பின்னர் அரக்கு மாளிகை கொளுத்தும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அவ்வமயம் பஞ்ச பாண்டவர்கள் போன்று வேடம் புனைந்தவர்கள் அதனுள் இருந்து வெளியேறுவதாகவும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சி பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் நடைபெறுகிறது. சிறப்பாக "அரும்பார்த்தபுரத்தில் இருக்கும் திரௌபதியம்மன் கோயிலில் அரக்குமாளிகை விழா மிகச் சிறப்பாக ஊர் மக்களால் நடத்தப்படுகிறது"[33] என்பார் தில்லை நந்தகோபாலன். இன்றும் அரக்கு மாளிகை இருக்குமிடத்தை மின்னத்து மங்கலம் என்றே வழங்குகின்றனர்.

போலி அரக்குமாளிகை வெடி சப்தத்தோடு எரிந்து சாம்பலாகும். பிறகு மக்கள் அந்தச் சாம்பலை வீட்டிலும் நிலத்திலும் கொண்டுபோய் தெளிக்கின்றனர். இத்தகைய சாம்பலால் வீடும் நிலமும் நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கையில் இவ்வாறு செய்யப்படுகிறது.

### புராணத்தின் தாக்கம்

புராணத்தின் தாக்கமாக நடப்பியலில் சஞ்சீவி நகர் மற்றும் ஏம்பலத்தில் உள்ள ஊர்களில் திரௌபதியம்மன் கோயிலின் முகப்பில் வீமன் தனது தோளிலும் கைகளிலும் தூக்கநிலையில் உள்ள தனது சகோதரர்களையும் தாய் குந்தி தேவியையும் சுமந்து செல்வதைப் போன்று சுதைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இந்நிகழ்ச்சி எரிந்த அரக்குமாளிகையிலிருந்து பாண்டவர் வெளியேறுவதை நினைவுபடுத்துவதாக அமைகிறது.

### பகாசூரன் வதை விழா

வீமன், சூரனை அழிக்கும் நிகழ்ச்சியாகப் பாகசூரன் வதை விழா நிகழ்த்தப்படுகிறது. பகாசூரன் வதை விழா அனைத்து திரௌபதியம்மன் கோயில்களிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. காலைப்பொழுதில் பகாசூரன் போன்று ஓர் உருவத்தைச் செய்து வைக்கின்றனர். இதன் உடல் வைக்கோலாலும் மரத்தாலும் செய்யப்படுகிறது. அதனுடைய தலை மட்டும் கோர உருவத்துடன் களிமண்ணால் செய்யப் பட்டு உருவம் தீட்டப்படுகிறது. தற்போது கூட்டுக் கலவையால் செய்யப்பட்ட உருவம் வைக்கப்படுகிறது.

### சோறு படைத்தல்

மாலைவேளையில் சூரனுக்குச் சோறிடும் நிகழ்ச்சியாக இரு மாடுகளைப் பூட்டிய வண்டியில் வீமன் சிலையை (மரம்) நிற்கவைத்து அதன் அருகில் வீமனைப் போன்று உருவம்பூண்ட ஒருவரை நிற்கவைத்து ஊர்வலமாக மந்தைவெளி நோக்கிப் புறப்படுகின்றனர். அவ்வண்டியில் உணவு கொண்டு செல்லப் படுகிறது. இதனைப் 'பகாசூரன் சோறு' என அழைப்பர்.

மந்தைவெளி அடைந்த பின்னர் பகாசூரனைப் போன்று வேடம் புனைந்தவரை நாற்காலியில் அமரச் செய்து அவர் அருகில் பகாசூரன் உருவப் பொம்மை நிறுத்துவர். பின்னர் பாரதக் கதையைச் சுருக்கமாகப் படிப்பர். அவ்வமயம் சூரன்,

பசி பசி என உரத்தக் குரலில் சொல்ல வீமன் அனைத்துச் சோற்றையும் உண்டு ஏப்பம் விடுவதைப் போன்று நிகழ்ச்சியை நடத்துகின்றனர். இதைக் கண்ட பகாசூரன் கோபமடைந்து வீமனைத் தாக்க முடிவில் வீமன் பகாசூரனை வென்று அழிப்பதாக நடத்தப்படுகிறது. பின்னர் வெடி வெடிக்கப்பட்டு பகாசூரன் உருவப் பொம்மையைத் தீயிட்டுக் கொளுத்து கின்றனர். வண்டியில் கொண்டுவந்த பகாசூரன் உணவை அனைத்து மக்களும் வாங்கி உண்ணுகின்றனர். வீட்டுக்கும் எடுத்துச் சென்று பிறருக்கும் கொடுக்கின்றனர். இவ்வுணவை உண்டால் நோய் நீங்கிக் குடும்ப நலம் சிறக்கும் என்ற நம்பிக்கையால் இது நிகழ்கிறது. இவ்விழா பிள்ளைச்சாவடி திரௌபதியம்மன் கோயிலில் சிறப்பாக நடைபெறுகிறது. பகாசூரன் சோறு ஊருக்கு ஊர் ஒரே குடும்பத்தாரே செய்வதும் சில ஊர்களில் உள்ள மக்களே அசைவ உணவு - உலர்ந்த மீன் குழம்பு செய்து வண்டியில் இடுவதும் சில ஊர்களில் கோயிலிலேயே சைவ உணவாகக் காய்கறிகள் மற்றும் கீரை கொண்டு செய்து மந்தை வெளிக்குக் கொண்டு செல்கின்றனர். இவ்விழா பகாசூரனுக்குச் சோறு படைத்தலை மையமிட்டதாக அமைகிறது.

வீமன், பகாசூரன் வேடத்தை அவ்வூரில் உள்ளவர்களே காலம்காலமாகத் தொடர்ந்து புனைந்து வருகின்றனர். சில திரௌபதியம்மன் கோயில்களில் கூத்தில் இடம்பெறும் கூத்துக் கலைஞர்களைக் கொண்டு இந்த நிகழ்ச்சி நிகழ்த்தப்படுகிறது.

## இந்நிகழ்ச்சிக்கான காரணம் (புராணக் கதை)

அரக்கு மாளிகையிலிருந்து தப்பிவந்த பாண்டவர்களும் தாய் குந்திதேவியும் விராடபுரத்தை அடைகின்றனர். அங்கே குந்திதேவி ஒரு பிராமணர் வீட்டில் வேலை செய்து அதன் மூலம் கிடைக்கும் உணவு தானியங்களைக் கொண்டும் ஊதியத்தைக் கொண்டும் பாண்டவர்களைக் காப்பாற்றி வருகிறாள். அப்போது அவ்வூரில் பகாசூரன் என்பவன் ஒரு நாளைக்கு ஒரு வண்டிச் சோறும் ஒரு பிள்ளையையும் கொடுக்க வேண்டும். இல்லையானால் இவ்வூரை அழித்துவிடுவேன் என்று அச்சுறுத்தி வருகிறான் . அச்சத்தின் பேரில் அவனுடைய கோரிக்கையை அவ்வூர் மக்கள் நிறைவேற்றி வருகின்றனர். வழக்கமாக ஒருநாள் குந்திதேவி வேலை செய்யும் வீட்டு முறை வருகிறது. உடனே அவ்வீட்டுப் பிராமணப் பெண் விவரத்தைக்

குந்தியிடம் கூறுகிறாள். குந்திதேவி தன்னுடைய மகனான வீமனை அனுப்புவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டுத் தன் மகனை அனுப்புகிறாள். வழக்கமாக ஒரு வண்டிச் சோறும் இரண்டு மாடுகளும் செல்கின்றன. ஒரு பிள்ளை என்ற இடத்தில் வீமன் செல்லுகிறான். அவ்வமயம் பகாசூரன் பசியால் துடிக்கிறான். அப்போது வீமன் பகாசூரனை வதை செய்து கொன்றுவிடுகிறான். இந்நிகழ்ச்சியையே விழாச் சடங்காகக் கொண்டாடுகின்றனர்.

இன்று நடைமுறையில் திரௌபதியம்மன் கோயில் விழாக்களில் சைவ உணவும் அசைவ உணவும் பகாசூரன் சோறு நிகழ்ச்சியில் இடம் பெறுகின்றன. "மேலும் மரபு மீறாமல் மாடு பூட்டிய வண்டியை வாதானூர் திரௌபதியம்மன் கோயிலில் பயன்படுத்துகின்றனர்"[34] என்பர்.

*அருச்சுனன் தபசு*

விழாக்காலங்களில் பகல் பொழுது உற்சவமாக அருச்சுனன் தபசு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சி பொது விடம் எனப்படுகின்ற மந்தைவெளி இடத்தில் நடைபெறுகிறது. பிள்ளைச்சாவடி திரௌபதியம்மன் கோயிலில் பனைமரத்தை வெட்டி கொண்டுவந்து நடுகின்றனர். அதன் மேல் பகுதியில் செவ்வக வடிவில் பலகையை வைக்கின்றனர். அதன் உச்சியில் அருச்சுனன் தபசு மர உருவச் சிலையைக் கட்டுகின்றனர். இடது காலைத் தூக்கியும் இரண்டு கைகளைத் தலைமேல் உயர்த்தியும் வடதிசையை நோக்கிச் சிவனைக் கும்பிட்டவண்ணம் அவ்வுருவம் காணப்படுகிறது. இதனை 'அருச்சுனன் தபசு' என்கின்றனர். இதே அமைப்புப் போன்றே பூரணாங்குப்பம் திரௌபதியம்மன் கோயிலில் நடைபெறுகிறது. அதன்பின்னர் வில்வளைத்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

*அருச்சுனன் வில்வளைத்தல்*

வில் வளைப்பதற்கென்றே பெரிய பச்சை மூங்கில் மரத்தை வெட்டிவந்து மந்தைவெளியில் அருச்சுனன் தபசு மரத்தின் அருகில் நடுகின்றனர். திருக்கோயிலிருந்து ஐவருடைய சிலையையும் (மரச்சிலை) கொண்டுவந்து நிறுத்துகின்றனர். அருச்சுனன் சிலையை மட்டும் அம்மரத்தின் அருகில் நிறுத்தி மஞ்சள் துணியை அம்மூங்கில் மரத்தின் முனையில் கட்டி இழுத்து வில் போன்று வளைத்துக் கட்டுகின்றனர். வில்

வளைத்துக் கட்டியவுடன் ஐவர் சிலைகளையும் கோயிலுக்குக் கொண்டு செல்கின்றனர், இத்துடன் வில் வளைத்தல் நிகழ்ச்சி நிறைவு பெறுவதாக அமைகிறது.

### இந்நிகழ்ச்சிக்கான அடிப்படைக் காரணம்

இந்நிகழ்ச்சி புராணத்தில் உள்ள கருத்துக்களை மனதில் கொண்டே நடைபெறுகிறது. பாஞ்சால தேசத்து மன்னன் தன்னிடம் உள்ள வலிமை பொருந்திய வில்லை யார் வளைக்கிறார்களோ அவர்களுக்குப் பூமியின் மகளான தன் மகளைத் திருமணம் செய்து வைப்பதாகத் தெரிவிக்கிறான். அதன்படி வலிமை பொருந்திய அருச்சுனன் வில்வளைக்க முன்வருகின்றான். அனைத்து தேசத்து மன்னர்களும் வில்லை வளைக்க முன் வருகிறார்கள். ஆனால் அருச்சுனன் எல்லாவற்றிக்கும் மேலான சிவபெருமானை வணங்கி வில்லை வளைத்து வெற்றிபெற வேண்டும் என்று சிவனை நோக்கித் தவமிருக்கின்றான். பின்னர் வெற்றிகரமாக வில்லை வளைத்துத் தேவி பாஞ்சாலியைத் திருமணம் செய்துகொள்கிறான். பாஞ்சாலியே அருச்சுனன் உள்ளிட்ட ஐவருக்கும் மனைவி என்றும் 'அழியாப் பத்தினி' என்றும் பெயர் பெறுகிறாள். இச்செய்தியை நினைவூட்டும் வகையில் மந்தைவெளியில் அருச்சுனன் தபசும் வில் வளைத்தல் நிகழ்ச்சியும் நடத்தப்படுகின்றன.

### மாலையீடு (திருக்கல்யாணம்)

வில் வளைத்தல் நிகழ்ச்சிக்கு மறுநாள் மாலையீடு (திருக்கல்யாணம்) நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதை மாலையீடு நிகழ்ச்சி என்றழைப்பர். காலை முகூர்த்த நேரத்தில் பாஞ்சாலி என்ற கன்னிகைக்கும் அருச்சுனனுக்கும் திருமணம் நடைபெறும் என்று அழைப்பிதழ் மூலம் ஊரில் உள்ள அனைத்துப் பொது மக்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. அதன்படித் திரௌபதியம்மன் கோயிலின் வெளிமண்டபத்தில் திருமண மேடைபோன்று அமைக்கின்றனர். அம்மேடையில் அருச்சுனன் சிலையையும் (மரச்சிலையும்) திரௌபதி சிலையையும் (மரச்சிலை) தனித் தனியே கிழக்குத் திசை நோக்கியவாறு வைக்கின்றனர். திருமணத்திற்கு வேண்டிய அரசாணைக்கால் மற்றும் சாலுங்கரகம் போன்றவை வைக்கப்படுகின்றன. மேலும் தட்டு வரிசைகள் உட்பட அனைத்தும் சபை எதிரே வைக்கப் படுகின்றன. பின்னர் பெண் வீட்டார் என்றும் மாப்பிள்ளை வீட்டார் என்றும் சம்பந்தம் செய்துகொண்டு மாலை மாற்றிக் கொள்கின்றனர்.

## சான்றோர் பெருமக்கள் வருகை தருதல்

திருக்கல்யாண நிகழ்ச்சியைக் காணச் சான்றோர் பெரு மக்களும் ஊர்ப் பொதுமக்களும் அழைப்பிற்கிணங்க வருகின்றனர். அவர்களைத் தக்க மரியாதையுடன் அறங்காவலர் குழுவினரும் உபயதாரர்களும் இன்முகத்தோடு வரவேற்று அமரச் செய்கின்றனர். பின்னர் மஞ்சள் கலந்த பச்சரிசியோடு பூவும் கலந்து சபையில் உள்ளவர்களுக்குக் கொடுக்கின்றனர். பிராமணர் தாம்பூலத் தட்டில் தேங்காய் வைத்து அதன் மேல் மாங்கல்யக் கயிற்றை (தாலி) வைத்து சில மந்திரச் சொற்களைக் கூறுவர். அம்மாங்கல்யத்தைச் சான்றோர் பெருமக்கள் தொட்டு வணங்குவர். அதனையடுத்துப் பிராமணர் மந்திரம் கூற இரண்டு தெய்வச் சிலைகளையும் மாற்றி மாற்றி வைக்கின்றனர். முகூர்த்த நேரம் வந்தவுடன் பிராமணர் மாங்கல்யத்தை எடுத்துக் கொடுக்கத் திருமணம் ஆகாத கன்னிப்பெண் அதை வாங்கி திரௌபதியின் கழுத்தில் அணிவிப்பர். இவ்வாறு திருக் கல்யாணம் நிகழ்ச்சி மங்கல ஓசையுடன் சபையின் ஆசீர்வாதத் துடன் இனிதே நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சி அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களிலும் மிகச்சிறப்பாக நடை பெறுகிறது. திருமண நிகழ்ச்சியைச் சித்திரிக்கும் வகையில் அனைத்துத் திரௌபதியம்மன் கோயிலின் முன் முகப்பு வாயிலில் (கோபுரத்தில்) மகாவிஷ்ணு அருகில் இருக்க அருச்சுனனும் திரௌபதியும் மாலை மாற்றிக் கொள்வதைப் போன்று இருப்பதைக் காணலாம். ''ஒரு காலத்தில் மாலையீடு நிகழ்ச்சிக்கு முதல்நாள் அருச்சுனன் (மாப்பிள்ளை) வீட்டுக் காரர்கள் பெண்பார்க்கத் திரௌபதி வீட்டிற்குச் சென்று இரவு தங்கி உணவு உண்டு மறுநாள் காலை வருவதுபோல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது''[35] என்பார் கோ. ஜெயராமன்.

## மக்களின் நம்பிக்கைகள்

பெரும்பாலான திருக்கல்யாணத்தன்று மணமாகாத கன்னிப்பெண் திரௌபதியம்மன் கழுத்தில் தாலி அணிவித்தால் அப்பெண்ணுக்குத் தாலி பாக்கியம் கிடைக்கும் என்று நம்புவ தோடு அதை உறுதியும் செய்கின்றனர். சில திரௌபதியம்மன் கோயில்களில் சுமங்கலிப் பெண் தாலி அணிவிப்பதை. நீண்ட நாள் சுமங்கலியாக வாழ இம்முறை பின்பற்றப்படுகிறது என்பர். ''மேலும் பாகூர் போன்ற ஊர்த் திரௌபதியம்மன் கோயிலில் பிராமணரைக் கொண்டு தாலி அணிவிக்கப்படுகிறது''[36] என்பார் பாவாடை.

## உணவு பரிமாறுதல்

திருக்கல்யாண நிகழ்ச்சிக்குப் பிறகு பணம் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து வருகைத் தந்த அனைவருக்கும் இலைபோட்டுச் சிற்றுண்டி பரிமாறப்படுகிறது. இந்நிகழ்ச்சி பிள்ளைச்சாவடி திரௌபதி அம்மன் கோயிலில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. சில கோயில்களில் தயிர்ச் சோறு, புளிச்சோறு வழங்கப்படும். இதை உண்டால் நற்பயன் கிட்டும் என்ற நம்பிக்கையில் தவறாது உண்டு செல்கின்றனர். சிலர் வேண்டுதலின் காரணமாகவும் திருக்கல்யாணத்தன்று உணவு வழங்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து அரவான் களபலிக்கான வேலை தொடங்குகிறது.

## அரவான் களபலி

காலை வேளையில் அரவான் தலையை எடுத்து வர மேளக் கச்சேரியுடன் அரவான் தலை செய்யும் குயவர் வீட்டிற்குச் செல்கின்றனர். அங்கு முன்பே குயவருக்கு முன்பணம் கொடுத்து இருப்பதால் அரவான் தலை மட்டும் செய்து வைத்திருப்பார். ஆனால் கண் மட்டும் திறந்து வைத்திருக்க மாட்டார். அவ்வரவான் உருவத்தை மஞ்சள் துணியால் மூடி மேள முழக்கத்துடன் எடுத்துவந்து கோயிலை அடைகின்றனர். அங்கே கண் திறத்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

## கண் திறத்தல் நிகழ்ச்சி

அரவான் தலையைச் செய்த குயவர் அருகில் இருக்க, பூசாரி திரௌபதியம்மனுக்குக் கற்பூர தீபம் ஏற்றிக் காண்பிப்பர். குயவர் அம்மனின் அருகில் வைத்து கருப்பு நிறத்தைக் கொண்டு உருவத்தின் கண்களில் வைத்து உருவம் தீட்டுவர். இதைக் கண் திறப்பு நிகழ்ச்சி என்றழைப்பர். உடனே மஞ்சள் துணியால் முகத்தை மூடிப் படுகளம் போடுவதற்காக மந்தைவெளிக்கு எடுத்துச் செல்கின்றனர். அங்கே உடல் முழுவதும் வைக்கோலால் செய்யப்பெற்ற உருவத்தை வைக்கின்றனர். மஞ்சள் துணியுடன் அத்தலையை வைக்கோல் உருவத்தில் வைத்துப் பொருத்துகின்றனர். தற்போது மண்ணால் செய்த உருவத் தலைக்குப் பதிலாகக் காகித அட்டையால் செய்த உருவத் தலையையே பெரும்பாலான இடங்களில் பயன்படுத்துகின்றனர்.

### படுகள விழா

திரௌபதியம்மன் கோயில்களில் படுகளம் நிகழ்ச்சி சிறப்புப் பெற்றிருக்கிறது. பாரதக் கதை, பாடலாகவும் உரைநடையாகவும் பாரதம் படிப்போரைக் கொண்டு கூறப் படுகிறது. பதினெட்டாம் நாள் அன்று சதுரவடிவில் நான்கு பக்கங்களிலும் புளியங் கொம்பால் வேலி அமைக்கின்றனர் உள்ளே செல்வதற்கு நான்கு பக்கங்களிலும் வாயிற் படி போன்று வழி அமைக்கின்றனர். உள்ளே நான்கு பக்கங்களிலும் வேப்பிலையைப் போடுகின்றனர். நடுவில் மரத்தால் செய்யப் பட்ட இருக்கையை வைத்து அதன் மேலே துரியோதனன் வேட மிட்ட ஒருவரைப் படுக்கச் செய்கின்றனர். பின்னர் மற்றவர் களை நான்கு புறத்திலும் படுக்க வைக்கின்றனர். அவர்கள் மீது மஞ்சள் நிறத் துணியைக் கொண்டு உடல்முழுவதும் மூடுகின்றனர். அருகில் ஒருவர் அவர்களின் நினைவு இருப்பதற்காக நீண்ட கொம்பால் தட்டிக் கொண்டேயிருப்பர். "ஒருமுறை இவ்வாறு செய்யாது போகவே சுயநினைவு இழந்தனர். பின்னர் திரௌபதியம்மன் முன்பு கொண்டுபோய் சேர்த்தவுடன் சுயநினைவு திரும்பியதாகக் கூறுவர்"[37] உடனே கோயிலிருந்து திரௌபதியம்மன் சிலையையும் பஞ்ச பாண்டவர்களின் (மரம்) சிலையையும் தலையில் சுமந்தவாறு படுகளத்திற்கு வேகமாகக் கொண்டு வருகின்றனர். பாரதக்கதை சுருக்கமாகப் படிக்கப் பட்டு படுகளத்தை வலம் வருகின்றனர். இந்நிகழ்ச்சி பிள்ளைச் சாவடி திரௌபதியம்மன் கோயிலில் மட்டும் அல்லாது அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களிலும் வெகுச் சிறப்பாக ஊர் பெரியோர்களால் நடத்தப்படுகிறது. பாரதப் போரில் பாண்டவர்கள் வெற்றிபெற வேண்டுமென்பதற்காகப் படுகளம் போட்டு அரவானை களப் பலியிட்டு, தீமிதித்து, சபதத்தை நிறைவேற்றுவர்.

### உதிரச் சோறு அறைதல்

படுகளத்தை வலம்வந்த பின்பு அரவான் முன்பாக ஒரு கோழியினைப் பலி கொடுத்து அதனுடைய உதிரத்தைப் பச்சரிசி சோற்றுடன் கலந்து உருண்டையாக்கி அரவான் உருவத்தின் வாயிலே அறைவர். இதனை 'உதிரச் சோறு அறைதல்' எனக் கூறுவர். பின்னர் அரவான் உருவத் தலையைத் திருப்புவர். இவ்வாறு செய்தால் அரவானை களபலி இட்டதாகக் கொள்வர். இந்த உதிரச் சோறு அறைதல் என்பது எளிதான செயல் அன்று. உதிரச் சோற்றை அரவான் முகத்தில் எடுத்து

அடிக்க அடித்தவர் முகம் விகாரமாக மாறுபடுவதோடு மட்டும் அல்லாமல் உடல் நலம் குன்றிவிடுவர். இவர் உடல்நலம் சரியாகக் குறைந்தது ஒரு வாரம் ஆகும். இத்துடன் அரவான் களபலி நிகழ்ச்சி நிறைவு பெறுகிறது. திரௌபதியம்மன் அல்லாத கூத்தாண்டவர் கோயிலில் இந்நிகழ்ச்சியை மையமிட்டு அலிகள் அரவானை மணம்செய்து கொள்வர். மாலையில் காளிவேடம் பூண்ட ஒருவர் அரவானை இடுகாட்டிற்கு அழைத்துச் சென்று களபலி இடுவர். "அலிகள் அனைவரும் வளையல்களை உடைத்து பூவைப் பிய்த்து எறிந்தும் தாலியை அறுத்தும் ஒப்பாரி வைப்பர். இவர்கள் மகாவிஷ்ணுவின் வம்சா வழியினர் எனக் கூறினர்."[38] இந்நிகழ்ச்சி வெகு விமரிசையாகப் பிள்ளையார்குப்பம் கூத்தாண்டவர் கோயிலில் இரண்டு நாட்கள் திருவிழாவாக நடத்தப்படுகிறது. மேலும் கூவாகம், கொத்தட்டை, தைலாபுரம் போன்ற ஊர்களில் கூத்தாண்டவர் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

## தீ மூட்டுதல்

படுகளத்தில் இருந்து புறப்பட்ட திரௌபதியம்மன் உருவச்சிலை கோயிலை வந்தடைகிறது. கோயிலில் பிராமணர் தீயை வளர்த்து அதில் ஒரு கனலை எடுத்து வேப்பிலையுடன் சேர்த்து அம்மன் மடியில் வைத்துக் கட்டுவர். பின்னர்த் தீக்குழி உள்ள இடத்திற்குக் கோயில் பூசாரி கொண்டு வருவர். "இவ்வாறு மடியில் நெருப்புக் கட்டிக் கொண்டு செல்லும் திரௌபதியம்மனின் சேலை சே. நம் ஏற்பட்டதேயில்லை" [39] என்பார் சீனு. வேணுகோபால். மேலும் நெருப்பு கனன்று கொண்டே மடிச்சேலையில் இருக்கின்றது. இதனைச் சக்தியின் வெளிப்பாடாகவே மக்கள் கருதுகின்றனர். திரௌபதியம்மன் மடியிலிருந்து கனலை எடுத்துத் தீயை மூட்டி மும்முறை வலம் வருகின்றனர். இத்துடன் வீரச்சாட்டை, சூலம், வீரவாள் போன்றவை வலம்வரக் கோயிலை அடைகின்றனர்.

மந்தைவெளியில் நான்கு புறமும் மூங்கில் அல்லது சவுக்கு மரத்தால் வேலி கட்டி உள்ளிடத்தில் பெரிய மரத்தைப் போட்டு நெருப்புமூட்டிக் கொழுந்துவிட்டெரியும்படிச் செய்கின்றனர். தீயை மூட்டவும் தீயைக் கலைக்கவும் மறலை மக்கள் சிலர் வேப்பிலையுடன் தீக் களத்தில் உள்ளே இருக்கின்றனர். உள்ளே பெரிய பாத்திரங்களில் நீர் நிரப்பிக் கொள்கின்றனர். மேலும் குழாய் மூலமாகவும் நீர் வந்து கொண்டிருக்கிறது. வெப்பம்

அதிகமாக உடலைத் தாக்கும்போது நீரை உடல்மேல் ஊற்றிக் கொள்கின்றனர். நெருப்பு கொழுந்து விட்டெரியும்போது மக்கள் கற்பூரம் மற்றும் எலுமிச்சம்பழம் போட்டு வணங்கு கின்றனர்.

### நெருப்புகளைக் கலைத்தல்

தேவையான அளவு நெருப்பு எரிந்தபிறகு நெருப்புக் கலைத்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பெரிய நீண்ட மரத்தைக் கொண்டு வன்னிய இனத்தவர் எட்டிநின்று நெருப்பைக் கலைக்கின்றனர். சவுக்கு மரத்தால் அமைக்கப்பட்ட நெருப்புக் குழியின் முன்புறம் நீண்ட நுழைவாயிலும் மறுபுறம் வெளியேறும் வாயிலும் உள்ளன. வெளியேறும் வாயிலின் வழியில் செவ்வக வடிவில் பாத்தி போன்று அமைத்து நீரை விடுகின்றனர். நெருப்புக் குழியில் இறங்கும் மறலை மக்கள் அடுத்து நீரில் இறங்கும்வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனைப் 'பாலாறு' என்று கூறுகின்றனர்.

### திருத்தேர் உலா வருதல்

அருச்சுனன் திரௌபதி திருமணம் முடிந்தவுடன் சாற்றுப்படி செய்து திருத்தேரில் அவ்வுருவுகளை அமர வைத்து மேள தாளங்கள் முழங்க மாலை வேளையில் ஊரை வலம் வருவர். அவ்வமயம் ஊரில் உள்ளோர் தவறாது கற்பூர தீபம் கொடுத்து வழிபடுகின்றனர். பின்னர்த் திருத்தேர் தீமிதி இடத்தைச் சென்றடைகிறது.

### காப்புக் கட்டுதல்

ஊரில் கொடியேற்றம் நிகழும்போது நெருப்பு மிதிப்பவர் களில் ஆடவர் சிலர் காப்புக் கட்டிக் கொண்டு அன்று முதலே விரதத்தை மேற்கொள்கின்றனர். பெரும்பாலோர் தீமிதி விழாவின் போது காப்புக் கட்டிக் கொள்வர். வெளியூரில் இருந்து வருபவர்கள் விரதத்தை விடாது கோயில் தர்மகர்த்தா விடம் சென்று காணிக்கைச் செலுத்தி மஞ்சள் கட்டிய கயிற்றை அல்லது மாவிலையில் வீரகாந்தம் வைத்து கட்டிய கயிற்றை ஒரு ரூபாய் கொடுத்துப் பெறுகின்றனர். அதை வாங்கி வலக் கரத்தில் கட்டிக் கொண்டு மஞ்சள் ஆடை அணிந்துகொண்டு கழுத்திலும் கைகளிலும் பூவைச் சூடிக்கொண்டு தயாராக இருக்கின்றனர். சக்திக் கரகம் மற்றும் திரௌபதியம்மன் (மரவுருவச் சிலை) வீரவாள், வீரச்சாட்டை, சூலம் போன்றவை

நெருப்புக்குழியில் (பூக்குழி) முன்னே செல்ல அதனைத் தொடர்ந்து மறலை மக்கள் ஒவ்வொருவராகத் தீ மிதித்த பிறகு பாலாற்றைக் கடக்கின்றனர். பின்னர் நேராகச் சென்று வீரச் சாட்டைப் பெறுகின்றனர். பின்னர்ப் பூக்குழி இறங்கியோருக்கு உறவினர்கள் மோர் அல்லது பானகம் கொடுத்து வெப்பத்தைத் தணிக்கின்றனர். தீ மிதித் திருவிழாவைக் காணச் சுற்றுவட்டாரங் களில் உள்ள ஊர் மக்கள் திரளாக வந்து பார்க்கின்றனர். காவல் துறையைச் சார்ந்தவர்களும் இளைஞர் அமைப்பைச் சார்ந்தவர் களும் எவ்வித அசம்பாவிதமும் நிகழாமல் பார்த்துக் கொள்கின்றனர். மற்ற நாள் உற்சவத்தில் கலந்துகொள்ள முடியாதவர்கள் தீமிதி விழாவின் போது வந்து நிகழ்ச்சியைக் காண்கின்றனர். தீமிதி விழா உற்சவ அழைப்பிதழ் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது.

## திருத்தேர் கோயிலை அடைதல்

தீமிதித்த பின்பு சக்திக் கரகம் மற்றும் திரௌபதியம்மன் (மரம் உருவம்) சிலை, வீரவாள், வீரச்சாட்டை, சூலம் போன்றவை ஊர்வலமாக எடுத்துவரப்பெறும். அதனைத் தொடர்ந்து திருத்தேர் திருக்கோயிலை வந்தடைகிறது. தலைவிரி கோலமாக இருந்த திரௌபதியின் கூந்தல் முடியப்பட்டுத் கற்பூர தீப வழிபாடு கொடுக்கப்படுகிறது. அத்துடன் அன்றைய பகற்பொழுது நிகழ்ச்சிகள் நிறைவு பெறுகின்றன. இரவில் மாலையீடு தெருக்கூத்து நிகழ்ச்சி கூத்துக் கலைஞர்களால் நிகழ்த்தப்படுகிறது.

## இந்நிகழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம்

பாஞ்சாலி எடுத்த சபதத்தை நிறைவேற்றும் வகையில் இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. பாஞ்சாலி என்பவள் கற்புடன் வாழ்பவள். கற்பு கனல் போன்றது. அதை அழிக்க நெருங்குபவன், நெருப்புக்கு முன்னால் எரிந்துவிடுவான் என்னும் பொருளை உணர்த்தும் வகையில் நெருப்பு மிதிக்கப்படுகிறது. தங்கள் பாவங்களை அழிக்கும் ஒரு சக்தியாக இத்தீமிதித்தல் நிகழ்ச்சி நடைபெறுவதாகப் பரவலாகக் கூறப்பெறுகிறது.

## தீ மிதிப்பதற்கான கதை

பாரதக் கதையினை அடியொற்றியே தீ மிதித் திருவிழா அமைக்கப்பெறுகிறது. பதினெட்டு நாள் போர் முடிந்ததும்

தருமர், கிருட்டிணனைப் பார்த்துக் கிருஷ்ணா! போரில் கணவனை இழந்து கதறிப் புலம்புகின்ற மக்களிடையே நான் ஏன் ஆட்சி செய்ய வேண்டும் என்று கேட்டபோது, திரௌபதியை அழைத்துத் தீயில் அவள் பிறந்ததை நினைவுபடுத்தி நீ தீயில் புகுந்து மீண்டு வா அப்படிச் செய்தால் அழுது புலம்புகின்ற அத்தனைப் பேரும் அவ்வாறு செய்யட்டும் நம்பிக்கை உள்ளவர்கள் தீயில் புகுந்து திரும்பி வந்தால் அவர்களுக்கு ஆட்சியைத் திருப்பித் தருவோம் என்று கூறினான். திரௌபதி தீயில் இறங்கி மீண்டும் திரும்பினாள். நம்பிக்கையற்றவர்கள் தீயிலே இறந்து போயினர். அதன்பிறகு பட்டாபிஷேகம் நடந்தது. இதன் காரணமாகவே மக்கள் இன்றும் தீ மிதிக் கின்றனர் என்கிற கதை மக்களிடையே வழங்கப்படுகிறது.

## மஞ்சள் நீராட்டு விழா

மறுநாள் காலை கோயிலிலிருந்து திருத்தேர் ஊரை வலம் வருகிறது. அவ்வமயம் மக்கள் கற்பூர தீபத்துடன் சிறிதளவு மஞ்சள் நீர் வைத்து வழிபடுகின்றனர். பின்னர் அந்நீரை உறவுடைய மாமன் மகன் அத்தை மகள் மீது ஊற்றிக் கொள்கின்றனர். இவ்வாறாகத் திருத்தேர் ஊரை வலம் வந்து கோயிலை அடைகிறது. அத்துடன் அன்றைய நாள் நிகழ்ச்சி நிறைவு பெறுகிறது.

## முடிசூட்டு விழா (தருமர் பட்டாபிஷேகம்)

மறுநாள் காலை வேளையில் - நல்ல நேரத்தில் தருமர் சிலைக்கு ஊர்ப் பொதுமக்கள் உற்சவதாரர்கள் மற்றும் அறங்காவலர் குழுவின் துணைக்கொண்டு மேள தாளங்கள் முழங்க முடிசூட்டுவிழா எனப்பெறும் பட்டாபிஷேகம் நடை பெறுகின்றது. இதனைத் தொடர்ந்து கோயிலில் பங்குபெறும் அனைவருக்கும் தயிர்ச்சோறு, எலுமிச்சைச்சோறு, சுண்டல் போன்றவை ஊரின் வசதிக்கேற்பக் கொடுக்கப் படுகிறது. இத்துடன் தர்மர் முடி சூட்டுவிழா இனிது நிறைவுபெறுகிறது.

## விழா நிகழ்ச்சிகள் நிறைவுபெறுதல்

முடிசூட்டுவிழா (பட்டாபிஷேகம்) நிறைவுபெற்ற பின் கோயிலின் எதிரே உள்ள கொடிக்கம்பத்தின் மீது சுற்றப்பட்ட கொடியைப் பிராமணரின் துணையோடு இறக்குவர். இந்நிகழ்ச்சியைக் கொடி இறக்குதல் என அழைப்பர். விழாவை நினைவுபடுத்துவதற்காகக் கொடிமரம் நடப்படுகின்றது.

இறக்கிய கொடியைப் பெரிய தாம்பூலத்தட்டில் வைத்துத் திரௌபதியம்மனின் முன்பு கற்பூர தீபம் காண்பித்துவிட்டு திருவிழாவை நிறைவுபெறச் செய்வர். இத்துடன் பகற்பொழுதுச் சடங்குமுறைகள் இனிதே நிறைவுபெறுகின்றன. கொடியேற்றம் முதற்கொண்டு கொடியிறக்கம் வரை வெளி மண்டபத்தில் நாள்தோறும் பாரதக் கதைச் சொற்பொழிவு நடைபெறும்.

## திரௌபதியம்மனை அலங்கரித்தல்

விழாக்காலங்களில் இரவு நேரத்தில் திரௌபதியம்மன் வீதியுலா வரவேண்டி காலை வேளையில் அபிடேகம் செய்யப் பெற்ற வெண்கல உருவத்திற்கு மாலை நேரத்தில் சாற்றுப்படி செய்வர். சாற்றுப்படி செய்வோர் பலவித வண்ண ஆபரணங் களைக் கொண்டும், பட்டுத் துணிகளைக் கொண்டும், பல வண்ணப் பூக்களைக் கொண்டும், அலங்காரம் செய்வர். பின்னர் அவ்வுற்சவத்தில் இடம்பெறும் பங்காளிகள் அல்லது தலைக் கட்டுகள் (இரத்த உறவுடையோர்) எனக் கூறப்படும் அனைவரும் குழுமியிருந்து அலங்கரிக்கப்பட்ட திரௌபதியம்மனுக்கும், மூலவருக்கும் சுண்டல் போன்றவற்றைப் படைத்துக் கற்பூர தீபம் காண்பிப்பர். பின்னர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப் படுகிறது. இந்நிகழ்ச்சி ஊருக்கேற்றவாறு தலைக்கட்டுகள் என்ற அமைப்பிலும் அல்லது தெருவாரியாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் உற்சவத்தை மிகச்சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

## பூங்கரகம் உலா வரல்

அலங்கார வாகன ஊர்தியில் சாற்றுப்படி செய்யப்பட்ட திரௌபதியம்மன், அருச்சுனன், மகாவிஷ்ணு, விநாயகர் போன்ற உருவச் சிலைகளைத் தனித்தனியாக வைத்து ஊர்வல மாகக் கொண்டு வருவர். இந்நிலையில் கருவறையின் உள்ளே இருக்கும் வீரவாள், வீரச்சாட்டை, சூலம் போன்றவை விழாக் காலங்களில் பூங்கரகமுடன் வர, ஒவ்வோர் ஊரிலும் காலம் காலமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வழித் தோன்றல்களே ஊர்வலமாக எடுத்து வருவர்.

''கருவறையிலிருந்து வெளிவரும் பூங்கரகம் மருள் வந்து ஆடிவருவது போன்று காணப்படுகிறது. இக்கரகத்தை இரு கரங்களால் மார்புக்கு நேராக ஏந்தியவாறு மண்டியிட்டுத் தவழ்ந்த நிலையில் பக்திப் பரவசத்துடன் சீனு. வேணுகோபால்

எடுத்துவரும் காட்சி திரௌபதியம்மனே நேரில் வந்து அருள் பாலிப்பது போன்று கண்கொள்ளாக் காட்சியாக அமைகிறது. இந்நிகழ்ச்சி அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களிலும் வெகு சிறப்பாகச் செய்யப்படுகிறது. மக்கள் அனைவரும் இப்பூங்கரகத்தைத் தொட்டு வணங்கிச் செல்வர். இக்கரகம் மாடவீதி என்றழைக்கப்படும் முக்கிய வீதியைத் தவிர்த்து அனைத்துத் வீதிகளுக்கும் சென்று கற்பூர தீபம் பெறுகிறது. இதைத் தொடர்ந்து திரௌபதியம்மன் வீதியுலா நிகழ்ச்சி நடைபெறுகிறது. அவ்வமயம் வண்ண வாண வேடிக்கைகள் உண்டு. மேள தாளங்களும் நையாண்டி மேளமும் இடம்பெறும்.

## திரௌபதியம்மன் வீதியுலா வருதல்

இந்நிகழ்ச்சியைக் காண இரவில் மக்கள் கண்துயிலாது உலாவரும் திரௌபதியம்மனுக்குத் தாம்பூலத்தட்டில் பூ, கற்பூரம், ஊதுவத்தி, வாழைப்பழம், தேங்காய் வைத்து அம்மனை வேண்டித் தம் இல்லம் திரும்புவர். அகநானூற்றில்

> ''இரும்பிழி மகா அரிவ் வழுங்கல் மூதூர்
> விழவின் றாயினுந் துஞ்சா தாகும்''[40]

என்ற வரிகளில் விழாக் காலங்களில் மக்கள் கண் துயிலாது இருந்த நிலையைக் காணலாம்.

## உலா வரவேண்டிய சூழல்

''மக்கள் எல்லோராலும் எல்லா நேரத்திலும் கோயிலுக்கு வரும் வாய்ப்பில்லை வயது முதிர்வு, நோய்வாய்ப்பட்டிருத்தல், இன்ன பிற காரணங்களால் திருக்கோயில் வாராதோருக்கு வாய்ப்பாகவும் பிற காரணங்களுக்காகவும் இறையுரு திருவீதியுலா வரவேண்டிய சூழல் எழுந்தது''[41] என்பார் அ. அறிவுநம்பி. இதன்வழி இறையுரு உலா வரும் சிறப்பினை அறியலாம்.

## தெப்பத் திருவிழா

திருக்கல்யாணம் நிகழ்ச்சிக்குப் பின்னர், திரௌபதியம்மன் மடிமீது அருச்சுனன் தலை வைத்துப் பள்ளிகொண்டிருப்பதைப் போன்று மாலை வேளையில் சாற்றுப்படிச் (அலங்காரம்) செய்வர். சாற்றுப்படி முடிவடைந்த உடன் தீப ஆராதனை கொடுப்பர். பின்னர் குளத்தின் அருகே தயாராக வைக்கப் பட்டுள்ள தெப்பத்தில் (படகு போன்று) வைத்து மும்முறை குளத்தை வலம் வரும் நிகழ்ச்சி நடக்கிறது. ஊர்மக்கள்

அனைவரும் குளத்தைச் சுற்றி நின்று இந்நிகழ்ச்சியைக் கண்டு களிக்கின்றனர். பின்னர் வண்ண வான வேடிக்கைகளும் மேள தாளங்களும் விண்ணை பிளக்கும் அளவிற்கு ஒலிக்கின்றன. மக்கள் அனைவரும் அம்மனுடன் உலாவரும் சுவாமிக்குக் கற்பூர தீபம் ஏற்றி வழிபட்டுத் தம் இல்லம் திரும்புவர். மற்ற நாள் திருவிழாவைக் காட்டிலும் தெப்பத் திருவிழா மிகவும் சிறப்பாகவும், சுலபமாகவும், விரைவாகவும் நடத்தப்படுகிறது. இதில் செட்டியார், ஆசாரி, பத்தர் போன்ற சமூக இனத்தவர்கள் பங்கு பெறுகின்றனர்.

### ஊஞ்சல் திருவிழா

திருக்குளம் இல்லா ஊர்களில் திரௌபதியம்மனையும் அருச்சுனனையும் சாற்றுப்படிச் செய்து ஊஞ்சல் கட்டி அதன்மேல் அமரவைத்துப் பக்திப்பாடல் பாடித் தாலாட்டுவர். இந்நிகழ்ச்சியைக் காண மக்கள் ஆவலுடன் திருக்கோயிலை வந்தடைகின்றனர். ஊஞ்சலில் இருக்கும் தெய்வங்களின் பாதத்தைத் தொட்டு வணங்கியபின்பு ஊஞ்சலை ஆட்டு கின்றனர். இவ்வாறு தாலாட்டினால் நற்பயன் பெறலாம் என்ற நம்பிக்கையில் இவ்வாறு செய்கின்றனர்.

### விழா தொடர்ந்து நடைபெறல்

திரௌபதியம்மன் கோயில்களில் ஊரின் பொருளாதார நிலைக்கு ஏற்பப் பல நாட்கள் விழா தொடர்ந்து நடைபெறு வதை மகா உற்சவப் பத்திரிக்கை மூலம் அறியலாம். இதைப் போன்று சங்ககாலத்தில் விழாக்கள் தொடர்ந்து நடந்து வந்ததை அகநானூறு கொண்டு அறியலாம்.

***"பூந்தொடை விழவின் தலைநா ளன்ன***
***தருமணல் ஞெமிரிய வியங்கிய கரரே"[42]***

என்றும், மதுரைக்காஞ்சியில்

***"மழைகொளக் குறையாது புனல்புக மிகாது***
***கரைபொரு திரங்கு முந்நீர் போலக்***
***கொளக் கொளக் குறையாது தரத்தர மிகாது***
***கழுநீர் கொண்ட எழுநா ளத்தி***
***ஆடுதுவன்று விழவின் நாடார்த் தன்றே"[43]***

என்றும் இடம்பெறும் வரிகள் பல. இதன்வழி திருவிழாக்கள் மக்கள் சமுதாயத்தோடு ஒன்றி இருந்ததை அறியலாம்.

### விழாவும் சமயமும்

விழாக்கள் சமயத்தோடு எந்த அளவுக்கு நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கின்றனவோ அதே அளவுக்குச் சமுதாயத்துடனும் தொடர்பு கொண்டிருக்கின்றன எனலாம். விழா நாள் என்பது நாட்டை வாழ்விக்க வந்த ஒரு நல்ல நாளே எனலாம். ''மக்களின் வாழ்வில் சோர்விளைப் போக்கி இன்பமும் மலர்ச்சியும் புத்துணர்ச்சியும் ஊட்டுவன விழாக்களே''[44] என்பர் க. காந்தி. இதன்வழி விழாவின் சிறப்பு புலனாகும்.

### விழாக் கடைகள்

விழாக் காலங்களில் வயதுடைய ஆடவரும் பெண்டிரும் திரௌபதியம்மனுடன் சுவாமி உலாக் காட்சியையும் கலை களையும் கண்டு மகிழ்வதைப் போன்று இளஞ்சிறார்கள் விழாக் காலங்களில் இடம்பெறும் கடைகளில் வேண்டியதை வாங்குவர் விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதைப் பொழுது போக்காக மேற்கொள்கின்றனர். இக்காலங்களில் இளஞ்சிறார்களும் பெண்களும் தம்மை ஒப்பனைச் செய்து கொண்டு விழாவைக் காணச் செல்வர். இக்காட்சியைப் போன்றே சங்க காலத்திலும் நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. சான்றாக அகநானூற்றில்

> **''அரிமல ராம்பலொ டார்தழை தைஇ**
> **விழவாடு மகளிரொடு தழூஉவணிப் பொலிந்து''[45]**

என்று சுட்டப்பட்டுள்ளது.

### கூட்டுணர்வை விழா ஏற்படுத்துதல்

விழாக்கள் முழுக்க முழுக்கச் சமயத் தொடர்பானதாக இருப்பினும் அவற்றில் தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகள் வெளிப்படுகின்றன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பொதுமைப் பண்பாடு தமிழர்களுக்கு உரியதாகும். விழாக்கள் பொருட்டு வேற்றூர்களிலிருந்து வருவோரையும் உறவினர் களையும் நண்பர்களையும் அரவணைத்து உபசரிக்கும் நிலை விழாக்காலங்களில்தான் ஏற்படுகிறது. எவ்வளவுதான் வேறுபாடுகள் இருப்பினும் அவை விழாக் காலங்களில் மறக்கப்பட்டு உறவுகொண்டு கூட்டுணர்வு (Team spirit) ஏற்படு கின்றது. இக்கூட்டுணர்வை வளர்ப்பதில் சமயத்தின் பங்கு சிறப்பானதாகும்.

## விழாவும் கலையும்

கலைகள் விழாக்களால் வளர்க்கப்படுகின்றன. பண்டைத் தமிழர் போற்றி வளர்த்த கலைகளில் கூத்தும் ஒன்று. இக்கூத்து திரௌபதியம்மன் கோயில்களில் விழாக் காலங்களில் பல நாட்கள் தொடர்ந்து நடைபெறுகின்றது. இதில் குறிப்பிடும் படியாகப் பகலில் நடைபெறும் 'திருக்கல்யாணம்' என்ற நிகழ்ச்சி இரவு நேரத்தில் மந்தைவெளி எனப்படுகின்ற பொதுவிடத்தில் திரௌபதியம்மன் மாலையீடு என்ற பெயரில் தெருக் கூத்தாக நடத்தப்படுகிறது. ''இசைக்கலையோடு இணைந்து வளர்ந்த கலை இதுவாகும். இக்கலை ஆடவர், பெண்டிர் இரு சாரார்க்கும் பொதுவாகும். விழாக்களின்போது கூத்தர்கள் மக்களைத் தம் ஆடல் பாடல்களால் மகிழ்வித்தனர்''[46] என்பார் அ. தட்சிணாமூர்த்தி. ஆனால் ''இன்று நடைமுறையில் ஆடவர் மட்டும் கூத்துக் கலையில் ஈடுபடுகின்றனர். பெண்டிர் இடம்பெறுவது இல்லை''[47] என்பர். ஆனால் ஆடவர் மட்டும் பெண் வேடம் புனைந்து கூத்துக்கலை நிகழ்ச்சிக்கு ஏற்பப் பங்கு பெறுகின்றனர். மேலும் கூத்துக் கலைஞர்கள் ஒரே இடத்தில் நிலையாக இல்லாமல் வெவ்வேறு இடம் சென்று கூத்துக்கலை நிகழ்த்துவதால் தற்போது பெண்டிர் இடம்பெற இயலவில்லை என்பர்.

தெருக்கூத்து நிகழ்ச்சியை மக்கள் கண் துயிலாது கண்டும் கேட்டும் மகிழ்கின்றனர். கோயில் வழிபாட்டின் ஒரு பகுதியாகத் தெருக்கூத்து நிகழ்வதால் இறையுணர்வை எழுப்பக் கூடிய பக்திக் கதைகளே தெருக்கூத்தில் இடம்பெறுகின்றன. ''இத்தெருக்கூத்து மக்களுக்கு ஒரு நல்ல பொழுதுபோக்காக அமைந்திருப்பதோடு நீதி புகட்டும் வாயிலாகவும் உள்ளது''[48] என்று கலைக் களஞ்சியம் கூறும்.

## தெருக்கூத்து துவக்கம்

திரௌபதியம்மன் வீதியுலா இரவு வேளையில் புறப்பட்ட உடனே அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களிலும் தெருக்கூத்து நிகழ்ச்சி மந்தைவெளி எனப்படுகின்ற பொது இடத்தில் நடைபெறுகிறது. ஆனால் கூனிச்சம்பட்டு திரௌபதியம்மன் கோயிலில் மட்டும் திரௌபதியம்மன் வீதியுலா முடிவடைந்த பின்னரே தெருக்கூத்து நிகழ்ச்சி நடை பெறுகிறது. இதற்குக் காரணம் மக்கள் அனைத்து நிகழ்ச்சி களையும் காணவேண்டும் என்ற எண்ணமாகும்.

### கலைஞர்களைச் சிறப்புச் செய்தல்

தெருக்கூத்து நிகழ்ச்சியில் இடம்பெறும் கலைஞர்களுக்கு அவ்வூர் உபயதாரர்கள் உண்ண உணவும் தங்க இடமும் கொடுப்பர். கலைஞர்கள் பகலில் உறங்கி இரவில் கண் துயிலாமல் தெருக் கூத்து ஆடி மக்களை மகிழ்விப்பர். இறுதியில் அனைத்து உற்சவ தாரர்களும் ஒன்றுகூடிக் கலைஞர் களுக்கு அறுசுவை உணவுடன் பணமும் பொருளும் கொடுத்து (வேட்டித் துண்டு) மன மகிழ்வுடன் வழி அனுப்பி வைப்பர். விழாவைச் சார்ந்து கூத்துக் கலைஞர்கள் திகழ்வதால் விழாவும் கலையும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டிருத்தலை அறிய முடிகிறது. ''தெருக் கூத்தைப் பொழுதுபோக்கும் அம்சமாகக் கருதாமல் இறை வழிபாட்டின் ஒரு பகுதியாகக் கருதி வருவதை இதன்மூலம் உணரலாம்''[49] தெருக்கூத்தென்பது கோயிற் சடங்காகவே இன்றும் கருதப்பட்டு வருவதை இதன்வழி அறியமுடிகிறது.

### கலை நிகழ்ச்சிகள்

உற்சவதாரர்களின் வசதிக்கேற்பத் திரௌபதியம்மன் கோயிலில் இன்னிசை நிகழ்ச்சி (பாட்டுக் கச்சேரி) நடத்தப் படுகிறது. இந்நிகழ்ச்சி இரவு நேரத்தில் திரௌபதியம்மன் வீதியுலா நடைபெறுவதற்கு முன்பு மந்தைவெளியில் நடத்தப் படுகிறது. இந்நிகழ்ச்சியைக் காணச் சுற்று வட்டாரத்தில் உள்ள மக்கள் குறிப்பாக இளைஞர்கள் தவறாது கலந்து கொள்கின்றனர். குறைந்தபட்சம் இரண்டு மணி நேரம் இசைக் கச்சேரி நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. மக்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்பப் பாடலைக்கேட்டு மகிழ்கின்றனர். இசை நிகழ்ச்சி நடத்த அந்தந்த உபயதாரர்கள் தம் சொந்த செலவில் ஏற்பாடு செய்கின்றனர். சில சமயங்களில் வசதி படைத்த ஒருவர் அதற்குரிய செலவை ஏற்றுக் கொள்வர். இதுபோன்ற கலை நிகழ்ச்சிகள் ஒவ்வோர் ஊரிலும் விழாக்காலங்களில் நடை பெற்று வருவதைக் காணமுடிகிறது.

### கோயிலே நீதி மேடையாகத் திகழ்தல்

இன்னிசை நிகழ்ச்சிகளை மக்கள் போற்றும்படியாக இருந்தாலும் அதில் சில குறைபாடுகள் இளைஞர்களால் ஏற்படுவதுண்டு. சில நேரங்களில் இளைஞர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் பாடலுக்கேற்றவாறு ஆடுவதுண்டு. இதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அதன்பின்னர்க் கோயிலிலே

பஞ்சாயத்துக் கூட்டம் கூட்டிச் சமரசம் செய்யவும் நீதி வழங்கவும் திரௌபதியம்மன் கோயிலே நீதி மேடையாக நிற்கிறது. திரௌபதியம்மன் வீதியுலா புறப்படுவதற்கு முன்னதாக இசை நிகழ்ச்சியை இசைக்குழுவினர் முடித்துக் கொள்வர். இசை நிகழ்ச்சியைத் தொடங்குவதற்கு முன்னும் பின்னும் பக்திப் பாடல் பாடி நிறைவு செய்வர். இந்நிலையில் விழாவை வலுப் படுத்த இசை நிகழ்ச்சிகளும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன எனலாம்.

## மேடை நாடகம்

மக்களின் பொருளாதார வசதிக்கேற்பச் சில நாட்களில் இன்னிசை நிகழ்ச்சி அல்லது தெருக்கூத்திற்குப் பதில் மேடை நாடகங்கள் நடத்தப்படுகின்றன. இதற்குரிய செலவை அந்தந்த உற்சவதாரர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். மேலும் அவ்வூரில் இருக்கும் இளைஞர்களால் மன்றத்தின் சார்பாக வேடம் புனைந்து சமுதாய நலன் கருதி மேடை நாடகங்கள் நடத்தப் படுகின்றன. இசை நிகழ்ச்சியைப் போன்றே மேடை நாடகங் களும் திரௌபதியம்மன் வீதியுலா வருவதற்கு முன்னதாக நடத்தி முடிக்கப்படுகின்றன. சில சமயங்களில் மேடை நாடகமேயன்றி வழக்காடு மன்றம் பட்டிமன்றம் போன்ற வற்றை நடத்துவர். இவையாவும் கலைஞர்களை வளர்ப்ப தோடு மட்டும் அல்லாமல் மக்களை நல்வழிப்படுத்திடச் செய்யும் ஒரு கருவியாகவே அமையும்.

## கரக ஆட்டம்

கரகத்தைத் தலையில் வைத்து ஆடும் ஆட்டம் கரக ஆட்டம் எனப்பெயர் பெறுகிறது. கரகம், கும்பம் என்பன பானை என்ற பொருளைக் குறிக்கும். இக்கரக ஆட்டத்தை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. வழிபாட்டுச் சடங்கின் ஓர் அங்கமாகத் திகழும் கரகாட்டம். இது சக்திக் கரகம் அல்லது அம்மன் கரகம் எனப்படும்.

2. சமூக வழிபாட்டுச் சடங்கையொட்டி நடைபெறும் கரகாட்டம், இதை ஆட்டக் கரகம் எனவும் அழைப்பர்.

பொதுவாகக் 'கரகம்' என்ற சொல் பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களில் புனித நீர் வைக்கும் கமண்டலத்தைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது. நாளடைவில் இன்று

புனிதநீர் வைக்கும் குடம் அல்லது செம்பினைக் கரகம் என்று சுட்டும் நிலையினைக் காணலாம். அம்மன் கோயில்களில் மட்டும் இது நிகழ்கிறது.

வழிபாட்டுச் சடங்கினை மையமாகக் கொண்டு இரவு நேரத்தில் திருவிழாக் காலங்களில் கரகாட்டம் நடத்தப் படுகிறது. கரகாட்டம் திரௌபதியம்மன் முன்னே ஆடிவர அக்கரகாட்டத்தில் அழகிய இரு மகளிர் மக்களைக் கவரும் வகையில் மேளம் தாளத்திற்கேற்றவாறு ஆடிவருவர். இவ்விரு வரும் மேளங்களைத் தொட்டு வணங்கிய பிறகு ஆடுவர். கோயிலின் முன்புறம் சிறிது நேரம் ஆடலை நிகழ்த்திவிட்டு மாடவீதி வழியே வருவர். இதைத் தொடர்ந்து திரௌபதியம்மன் வீதியுலா நிகழ்வுறும். இந்நிகழ்ச்சியை ஆண்களும் பெண்களும் குழுமியிருந்து கண்டு களிப்பர். பெரும்பாலும் கரகாட்டம் திரௌபதியம்மன் கோயிலில் இடம் பெறுவது குறிப்பிடத் தக்கது.

## தொகுப்புரை

1. பண்டைக் காலம் தொட்டு இறைவனை மக்கள் வழிபட்டு வந்தனர் என்பதைப் பண்டைய இலக்கியங்களின் மூலம் அறியலாம்.

2. மக்களிடத்தில் இருக்கும் பிரிவினையைப் போக்கி ஒருங்கிணைக்க வழிபாடும் விழாவும் முதன்மையாக வைத்துப் போற்றப்படுவதைக் காணலாம்.

3. ஞானிகள் இறைவனைத் தம் மனக் கோயிலில் வைத்தே வழிபடுவர்.

4. மக்கள் ஒழுக்க நெறியோடு வாழ்வதற்குப் புறவழிபாடான திருக்கோயில் பெரிதும் துணைபுரிகின்றது.

5. தன்னல வழிபாடும் பொதுநல வழிபாடும் மக்களிடையே செல்வாக்குப் பெற்று வருவதைக் காணமுடிகிறது.

6. பெண்கள் அனைவரும் ஊரின் புறத்தே உள்ள காவல் தெய்வமாகிய அய்யனார் கோயிலுக்குச் சென்று பொங்க லிட்டுப் பலி கொடுத்து வழிபடுகின்றனர். பலியிடும் நிகழ்ச்சியின் மூலம் தீமை வராமல் தடுக்கவும் நற்பயன் வேண்டியும் இவ்வழிபாடாற்றுவதைக் காணலாம்.

7. ஊரின் வெளியே உள்ள கொடிய ஆவிகளுக்கு விழாக் காலங்களில் எல்லை கட்டுகின்றனர். எல்லை கட்டாமல் விட்டால் கொடிய ஆவியான எல்லைப்பிடாரி மக்களைத் துன்புறுத்தும் என்ற நம்பிக்கையில் எல்லைகட்டி எலுமிச்சம்பழம் அறுத்து அதில் சிகப்பு தடவி நான்கு பக்கங்களிலும் எறிவர். உயிர்ப்பலி கொடுப்பதைப் போன்று இச்சடங்கு முறை நடைபெறுகின்றது.

8. அவ்வூராரேயன்றி வேற்று ஊர் மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் விழாக் காலங்களில் பிராமணரைக் கொண்டு கொடியேற்றம் நடைபெறுகிறது. பின்னர் அதைத் தொடர்ந்து விழா முடியும் வரை பாரதக்கதைச் சொற்பொழிவு வெளிமண்டபத்தில் நிகழ்வுறும்.

9. திரௌபதியம்மனின் கோயிலில் கொடி கட்டியதைத் தொடர்ந்து அன்றைய தினமே மாரியம்மனுக்குக் கூழ்வார்த்தல் நிகழ்ச்சி ஊரின் பொதுவிடத்தில் நடைபெறுகிறது. மழை கொடுத்த மாரியம்மனுக்குச் சிறப்புச் செய்வதையும் மழைவளம் தொடர வேண்டியும் இக்கூழ்வார்த்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

10. கோயிலைச் சுத்தம் செய்த பின்னர் வண்ணப்பூசு வேலை செய்து அழகு செய்வர். புதுமணல் பரப்பிப் பந்தலிட்டு மாவிலைத் தோரணங்கள் மற்றும் மின் விளக்குகள் இட்டுப் புதுப்பொலிவுடன் செய்வர்.

11. பகைமையைப் போக்கிக் கொள்ள விழாக் காலங்களில் தத்தம் உறவினர்களை அழைத்துப் பேசி விருந்து படைப்பர். இதன்மூலம் கூட்டுணர்வை (Team Spirit) வளர்க்க விழா ஏற்றகாலமாக அமைகிறது.

12. விழாக் காலங்களில் அனைத்து உற்சவத்திலும் பகற் பொழுதில் மூலவர் சிலைக்கும் வெண்கலச் சிலைக்கும் சிறப்பு அபிடேகம் அறங்காவலர் குழுவின் துணையோடும் ஊர்ப் பெரியோர்களின் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெறுகிறது. இரவு நேரத்தில் திரௌபதியம்மன் வீதி உலா நடைபெறும்.

13. வழிபாட்டுச் சடங்கை மையமாகக் கொண்டு அரக்கு மாளிகை விழா ஊர்மக்களால் மந்தைவெளியில் (பொதுவிடம்) நடத்தப்படுகிறது. இதன் சாம்பலை எடுத்து வீட்டிலும்

நிலத்திலும் வைத்தால் நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மக்கள் அவ்வாறே செய்கின்றனர்.

14. பகற்பொழுதில் நடக்கும் நிகழ்ச்சியாகப் பகாசூரன் வதை விழா ஊர்ப் பொதுமக்களால் நடத்தப்படுகிறது. வீமன், பகாசூரனை அழித்து வெற்றிக் கொண்டதாக எண்ணி பகாசூரனுக்குக் கொண்டுவந்த சோற்றை மக்கள் வாங்கி உண்டால் குடும்பநலம் செழிக்கும் என்ற நம்பிக்கையில் வாங்கி உண்பர்.

15. பகற்பொழுது உற்சவமாக 'அருச்சுனன் தபசு' நிகழ்ச்சி ஊர்ப் பொதுவிடத்தில் நிகழ்கிறது. ஐவருக்கும் தலைவனான அருச்சுனன் வலிமை பொருந்தியவில்லை வளைத்துப் பாஞ்சாலியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று சிவனை நோக்கித் (வடதிசையில்) தவம் இருப்பதாக இச்சடங்கு முறை நடத்தப்படுகிறது.

16. அருச்சுனன் திரௌபதி 'திருக்கல்யாணம்' நிகழ்ச்சி கோயில் வெளிமண்டபத்தில் பிராமணரைக் கொண்டு நடைபெறு கிறது. இதைத் தொடர்ந்து அனைவருக்கும் இலைபோட்டு உணவு பரிமாறப்படுகிறது. இதை உண்டால் நற்பயன் கிட்டும் என்ற நம்பிக்கையிலும் திருக்கல்யாணத்தைக் கண்டால் மோட்சம் கிட்டும் என்ற நம்பிக்கையிலும் வந்து வணங்கிச் செல்வர்.

17. அரவான் களபலிச் சடங்குமுறை பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் மிக அழகாக நடத்தப் படுகிறது. அரவானைப் பலி கொடுத்தால் பாரதப் போரில் வெற்றி பெறுவது உறுதி என்பதை உணர்ந்து பலி கொடுக் கின்றனர். இதை நினைவுபடுத்துவதாக ஆடு அல்லது கோழி போன்றவற்றைப் பலி கொடுக்கின்றனர். ஆனால் அரவானை மட்டும் தனியாக வைத்து வழிபடுகின்ற வழக்கம் பிள்ளையார் குப்பம் என்னும் ஊரில் இரண்டு நாட்கள் திருவிழாவாக, மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இதைக் காண வேற்று நகரத்திலிருந்து அலிகள் வந்து தாலி கட்டிப் பின்னர் அறுத்து ஒப்பாரி வைப்பர். புராணத்தின் தாக்கமாக அரவான் களபலிச் சடங்குமுறை நிகழ்வதைக் காணமுடிகின்றது.

18. திரௌபதியம்மன் கோயில் என்றாலே தீ மிதித்தல் விழா நினைவுக்கு வரும். அந்த வகையில் 'தீ மிதித்தல் நிகழ்ச்சி' சிறப்பாக நடைபெறும். திரௌபதியம்மன் கோயில்களில் பெண்களைத் தவிர மற்றவர்கள் தீ மிதிக்கின்றனர். பெண் களும் மிகவும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களும் இதுவரை தீ மிதித்ததில்லை என்பது களஆய்வில் பெறப் பட்ட செய்தி. மேலும் அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டியதாகத் தீ மிதித்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

19. கையில் காப்பு கட்டிக் கொண்டு மஞ்சள் ஆடை உடுத்திக் கொண்டு கையில் வேப்பிலையுடன் வருவோரை தீ மிதிக்க அனுமதிக்கின்றனர். இவர்களை 'மறலை மக்கள்' என்று அழைக்கின்றனர். பிறரைத் தீ மிதிக்க அனுமதித்தால் புனிதத் தன்மை கெட்டுவிடும் என்ற நம்பிக்கை மேலோங்கி இருக்கிறது.

20. பூக்குழி மிதித்துப் பாலாற்றைக் கடந்த பிறகே சாட்டை அடி கொடுக்கப்படுகிறது. பின்னர், களைப்பு மற்றும் வெப்பம் நீங்குவதற்காகப் பானகம் கொடுக்கப்படுகிறது.

21. தீ மிதித்த கனலை அணைத்த பிறகே மக்கள் சாம்பலை எடுத்துச் செல்ல அனுமதிப்பர். இதை எடுத்துச் சென்று வீட்டிலும் நிலத்திலும் வைத்தால் வளம் பெருகும் என்பது நம்பிக்கையாகும்.

22. தீ மிதித்தலின் போது எரிகின்ற கனலை வேற்று ஊர் மக்கள் எடுத்துச் சென்றால் அத்திரௌபதி அம்மனின் தெய்வச் சக்தி குறைந்துவிடும் என்ற நம்பிக்கையில் கவனமாக இருந்து நெருப்பை அணைத்த பிறகே அனுமதிப்பர்.

23. திருவிழா சிறப்பாக நடைப்பெற்று முடிந்ததை மகிழ்ச்சி யாகக் கொண்டாடுகின்றனர். அவ்வமயம் மஞ்சள் நீராட்டுச் சடங்கு முறை திரௌபதியம்மன் திருத்தேரில் உலா வரும் போது நிகழ்கிறது.

24. பாரதப்போரில் பஞ்ச பாண்டவர்கள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து தருமருக்கு முடிசூட்டுவிழா (பட்டாபிஷேகம்) காலை வேளையில் கோயிலில் நடைபெறுகிறது. பின்னர் உணவு பரிமாறப்படுகிறது.

25. தருமருக்கு முடிசூட்டு விழா நிறைவு பெற்றபின் பிராமணரைக் கொண்டு கொடிமரத்தில் சுற்றப்பட்ட மஞ்சள் ஆடையை எடுத்து மூலவர் சன்னதியில் வைத்து வணங்குவர். இத்துடன் பகற்பொழுது வழிபாட்டுச் சடங்கு முறைகள் நிறைவு பெறுகின்றன.

26. ஒவ்வோர் உற்சவத்திலும் வெவ்வேறு நிலைகளில் சாற்றுப் படிச் செய்து திரௌபதியம்மன் வீதியுலா வருகிறது. இவ்வம்மனைக் காண மக்கள் கண் துயிலாது இருந்து தீப ஆராதனை கொடுத்து மன மகிழ்வர்.

27. இரவு தெப்பத் திருவிழா நிகழ்ச்சியில் திரௌபதியம்மன் மடியில் அருச்சுனன் தலை வைத்து பள்ளிக்கொண்டிருப் பதைப் போன்று அலங்காரம் செய்து திருக்குளத்தை வலம் வருவர்.

28. திருக்குளம் இல்லா ஊரில் திரௌபதியம்மன் கோயிலில் ஊஞ்சல் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

29. கலைநிகழ்ச்சிகள் இல்லாத விழாக்களே இல்லை எனலாம். அந்தளவில் விழாவும் கலையும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு இருத்தலை அறிய முடிகிறது.

30. தெருக்கூத்து நிகழ்ச்சி திரௌபதியம்மன் கோயிலுடன் தொடர்பு கொண்ட ஒரு சடங்கு முறையாகவே காணப்படு கிறது.

31. மேடை நாடகங்கள் பொதுவாக இளைஞர் மன்றத்தின் சார்பாகத் திரௌபதியம்மன் கோயில் வழிபாட்டின் ஒரு பகுதியாக நிகழ்கிறது.

32. கரகாட்டம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம் போன்றவை உபயதாரர்களின் துணையோடும் சான்றோர் பெருமக்களாலும் பொதுவிடத்தில் நிகழ்த்தப்படுகின்றன.

**சான்றெண் விளக்கம்**

1. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 57.
2. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 145
3. வ. தேனப்பன், ஒன்பது நகரக் கோயில்கள், ப. 58
4. ஆறு. இராமநாதன் (பதிப்பாசிரியர்) நாட்டுப்புறவியல் ஆய்வுமுறைகள், ப. 307
5. விசுவநாத அய்யர், நேர்காணல், வயது 79, மண்ணாடிப்பட்டு, நாள் 11.05.99

6. Alf. Hiltebeitel, The Cult of Draupadi of Hindu Ritual and The Goddess, Vol - II ப. 25
7. கலித்தொகை, 84 : 5-7
8. க. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப.147
9. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 51
10. மணிமேகலை, விழாவறை காதை, பாடல் வரிகள். 5-9
11. அகநானூறு 115:1
12. வ. தேனப்பன், ஒன்பது நகரக் கோயில்கள், ப. 184
13. அனந்தராமன், நேர்காணல், வயது 35, வில்லியனூர், நாள் 29.11.99
14. அகநானூறு, 115 : 1-2
15. கலித்தொகை, 83 : 14-15
16. குறுந்தொகை, 41 : 1-2
17. க. சண்முகசுந்தரம், சுடலை மாடன் வழிபாடு, ப. 145
18. பாவாடை, நேர்காணல், வயது 52, பாகூர், நாள் 27.11.1999
19. சிலப்பதிகாரம், 5 : 64-65
20. நற்றிணை, 200 : 3-4
21. Right Reverend Henry White head D.D, The village gods of South India, P. 33.
22. Right Reverend Heny White head D.D, The village gods of South India, P. 32.
23. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல், ப. 45
24. மதுரைக்காஞ்சி, 366 : 1
25. சிலப்பதிகாரம், 5 : 145-146
26. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 60
27. அகநானூறு, 141 : 6-11
28. அகநானூறு, 185 : 10-13
29. அகநானூறு, 187 : 7-9
30. மணிமேகலை, விழாவறை காதை, பாடல் வரிகள். 50-51
31. பட்டினப்பாலை, 86-93
32. தே. ஞானசேகரன், மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள், ப. 7
33. தில்லை நந்தகோபால், நேர்காணல், வயது 35, அரும்பார்த்தபுரம், நாள் 15.08.98
34. கே. முனிசாமி, நேர்காணல், கோயில் பூசாரி, வயது 65, வாதானூர் நாள் 15.11.99
35. கோ. ஜெயராமன், நேர்காணல், வயது 45, கூனிச்சம்பட்டு, நாள் 15.11.99
36. இரா. சண்முகம், நேர்காணல், வயது 55, கூனிச்சம்பட்டு, நாள் 15.11.99

37. இ. லட்சுமணன், நேர்காணல், வயது 60, பிள்ளைச்சாவடி, நாள் 14.11.99
38. ஏ. இராஜகோபால், நேர்காணல், வயது 65, பிள்ளையார்குப்பம், நாள் 14.11.99.
39. சீனு. வேணுகோபால், நேர்காணல், வயது 45, பிள்ளைச்சாவடி, நாள் 14.11.99
40. அகநானூறு, 122 : 1 - 2
41. அ. அறிவுநம்பி, உருவு, தேடல் மூன்றாம் தொகுதி, ப.25
42. அகநானூறு, 187 : 8 - 9
43. மதுரைக்காஞ்சி, 424 - 428
44. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 25
45. அகநானூறு, 176 : 14 - 15
46. அ. தட்சிணாமூர்த்தி, தமிழக வரலாறும் பண்பாடும், ப. 348
47. வி. அரிகிருஷ்ணன், நாடக ஆசிரியர், நேர்காணல், வயது 55, பொன்னம்பூண்டி, நாள் 11.06.99
48. கலைக் களஞ்சியம், ஆறாம் தொகுதி, ப. 131
49. அ. அறிவுநம்பி, தமிழகத்தில் தெருக்கூத்து ப. 25.

## இயல் 3

# மக்களின் நம்பிக்கைகள், வேண்டுதல்கள்

*முன்னுரை*

"சமயம் என்பது புனிதமான ஒன்றைப் (sacred thing) பற்றிய நம்பிக்கைகளும் செயல்முறைகளும் அடங்கிய ஓர் ஒழுங்கமைந்த முறையாகும்"[1] என்பார் எமிலி தர்கைம். இந்நம்பிக்கைகள் பெரும்பாலும் மனிதனின் அச்ச உணர்வினை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாகவே காணப் படுகின்றன. "இயற்கையின் புதிரான செயல்களை உணர இயலாத போதும் மனித வாழ்வில் நிகழும் ஊறுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையிலும் மனிதமனம் சில வற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவை நம்பிக்கைகளாக உருப் பெருகின்றன"[2] என்பார் க. காந்தி.

பழமையான எல்லா இனங்களிடத்தும் பல நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. அவற்றில் பலவும் இன்று வரையில் ஆற்றலோடு வாழ்ந்து வருவது வியப்புக்குரியதாகும். "நன்மை யின்பால் உள்ள ஆர்வமும் தீமையின்பால் உள்ள அச்சமும் பெரும்பான்மையான நம்பிக்கைக்கு அடிப்படை"[3] என்பர். மக்கள் அறிந்தோ அறியாமலோ சமய நம்பிக்கைக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டுவிட்டனர். "மனித வர்க்கம் தோன்றியது முதல் அவ்வியற்கை தம்மைக் காக்கும் என்ற எண்ணம் எழுந்தது வரை சமய நம்பிக்கைகள் மனித வாழ்வில் பெரிதும் ஊடுருவிப் பரந்து நிலைத்தன. மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஆற்றல் ஒன்றுள்ளது என்ற தொன்மை மக்களின் நம்பிக்கையே சமயம் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது"[4] என்பார் சி. பக்தவச்சல பாரதி. இந்நம்பிக்கை வாழ்க்கை வாழ்வதற்கு அடித் தளமாக அமைந்துள்ளது.

*நம்பிக்கை : பொருள் விளக்கம்*

தொல்காப்பியம், பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நம்பிக்கை என்ற சொல் இடம் பெறவில்லை. தொல்காப்பியத்தில்

"நம்பும் மேவும் நசையாகும்மே"[5]

என்ற நூற்பாவில் நம்பு என்ற சொல் இடம்பெற்று உள்ளது. இச்சொல் விருப்பம் என்ற பொருளை உணர்த்துகிறது. ஆனால் நற்றிணையில்

"சேரிஅம் பெண்டிர் சிறுசொல் நம்பிச்
சுடுவான் போல நோக்கும்"[6]

இப்பாடல் வரியால் 'நம்பி' என்ற சொல் விருப்பத்தை உணர்த் தாமல் நம்பிக்கை என்ற பொருளை உணர்த்துவதை அறியலாம்.

"நாடல் சான்றோர் நம்புதல் பழிஎனில்
பாடில கலமும் கண்ணொடு சாஅய்ச்
சாதலும் இனிதே காதல்அம் தோழி"[7]

என்ற அடிகளால் 'நம்புதல்' என்ற சொல் நம்பிக்கை என்ற பொருள் உணர்த்துவதை அறியலாம். இதன்வழி நம்பு என்ற சொல் தொடக்க நிலையில் விருப்பத்தையும் பின்னர் நம்பிக்கை என்ற பொருளையும் உணர்த்துவதை அறியமுடிகின்றது. எனவே விருப்பத்துடன் கூடிய எதிர்பார்ப்பு ஒரு காலத்தில் நம்பிக்கையின் அடித்தளமாக இருந்திருக்க வேண்டுமென்பது புலனாகின்றது.

## நம்பிக்கையின் சிறப்பு

இந்நம்பிக்கை மனித வாழ்வின் மைய அச்சு என்பர். மேலும் "மக்களுக்கு நம்பிக்கை மூன்றாவது கை"[8] எனவும் சுட்டுவர். "நம்பிக்கை என்ற தண்டவாளங்கள் இல்லாவிட்டால் மனித குல இரயில்கள் பயணம் செய்ய முடியாது என்பார்"[9] சு. சண்முகசுந்தரம். இதன்மூலம் நம்பிக்கையின் சிறப்பு உணர்த்தப் படுகிறது.

## தெய்வ நம்பிக்கையின் தோற்றம்

தமிழர்கள் கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள், பல தெய்வங் களை வணங்கியவர்கள் என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. "மக்கள் கட்டுப்பாட்டுடன் வாழ - நல்லொழுக்க முடன் வாழக் கடவுளைப் பணிந்து வந்தனர். தங்கள் வாழ்வு செழிப்பதற்காகவே கடவுளை வழிபட்டனர். தங்களுக்கு வேண்டியவைகளையெல்லாம் கடவுள்களால் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையுடனேயே கடவுளர்களுக்கு விழாச் செய்து கொண்டாடினர்"[10] இவ்விழாவிற்கு

அடிப்படையாய் அமைவது, இயற்கை நிகழ்வுகளால் மக்களிடையே ஏற்பட்ட அச்சமே. அது தெய்வ நம்பிக்கையை உண்டாக்கியது.

சமூகத்தின் பண்பாட்டு மரபினை அறிவிக்க வல்லன அச்சமுதாயத்தின் நம்பிக்கைகள். நம்பிக்கைகள் மக்களால் ஏற்படுத்தப்பட்டு - பெரும்பாலும் மனிதனின் அச்ச உணர் வினை மையமாகக் கொண்டு தோன்றியவை என இலக்கியவழி அறியலாம். மனித மனத்தின் விருப்பால் நம்பிக்கை தோன்று கிறது. இயற்கையால் படைக்கப் பட்டுள்ள பொருட்களுக்கும் மனிதன் செயல்களுக்கும் தொடர்புண்டு என்ற கருத்தேற்றத்தின் அடிப்படையில் அவை தோன்றியவையாகவே காணப்படு கின்றன. அச்சத்தின் காரணமாக மனிதன் இயற்கையின் தோற்றத்தினையும் செயற்பாடுகளையும் தனது வாழ்வியல் நடப்புக்களோடு இயைந்து நோக்கிய நிலையில் நம்பிக்கை தோற்றம் கொண்டது. இந்நம்பிக்கைகள் காரண காரியங்களால் விளக்க முடியாதவையாகும்.

மக்கள் தீமைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் நன்மைகளை வேண்டுவதும் மனத்தின் இயல்பு என்ற நிலையில் மனித மனம் சிலவற்றை வரையறுத்துக் கொண்டு செயலாற்றுகின்றது. மக்கள் "தங்களுக்கு நன்மை ஏற்பட்டால் அது தெய்வத்தால் வந்தது என்று கூறிப் போற்றுவர். அதேபோல தீமை ஏற்பட்டால் அது தெய்வத்தின் கோபத்தால் வந்தது என்று நினைத்துத் தெய்வங்களை வேண்டிக் கொள்வர்"[11] என்பர். இதன்வழி காரண காரியங் களை வரையறுத்துக் கொண்டு பழந்தமிழர்கள் நம்பிக்கைகளை உருவாக்கினர் என்பதை இலக்கியவழி அறியமுடிகின்றது. எனவே தெய்வத்தின் மீதான நம்பிக்கைகளைப் பழந்தமிழர்கள் கொண்டிருந்தனர் என்பதை உணரவியலுகிறது.

## தெய்வம் பற்றிய இதிகாசச் செய்திகளும் நம்பிக்கைகளும்

தெய்வ நம்பிக்கை என்பது மனித சமுதாயத்தோடு உடன் பிறந்தது எனலாம். மனிதச் சிந்தனையில் ஆட்பட்டு இலக்கியம் படைக்கத் தொடங்கியபோது அக்காலச் சமுதாயத்தை இறையியல் தன்மையோடு இதிகாசத்தின் வாயிலாக வெளிப் படுத்தத் தொடங்கினான். இவை மானிடப் பிறவிகளுடன் இறைவனை இணைத்துக் கூறுவதாக அமைந்திருக்கின்றன. இத்தகைய புராணக் கதைகள் உண்மையாக நடந்தவை என்ற

நம்பிக்கைகளைக் கொடுக்கக் கூடியனவாகவும் நீண்ட நெடுங்காலத்தில் நடந்தனவாகவும் புனிதம் வாய்ந்தவை யாகவும் மனித மனம் சாராதோரைப் பற்றிக் கூறுவனவாகவும் நம்பப்படுகின்றன; நம்பவைக்கப்படுகின்றன. இவற்றைப் படிப்போர் வீடுபேறு அடைவர் என்ற நம்பிக்கையில் இவற்றைப் படிக்கின்ற சூழலையும் எண்ணுதல் வேண்டும்.

இன்றைய மனிதர்களின் வாழ்வியல் கூறுகள் முழுவதும் பண்டைய மக்களின் கலாச்சாரத்தைப் பின்பற்றியவை. கோயிலும் கோயில் தொடர்பான இறை நம்பிக்கையும் எந்த அளவிற்கு மக்களுடைய வாழ்வியலில் இடம்பெற்றுள்ளன என்பதைக் 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்னும் பழமொழி உணர்த்துகின்றது. இறையின்மீது இவ்வளவு நம்பிக்கைகொண்ட மனிதன் தன்னால் முடிக்க முடியாத ஒன்றை இறைவனால் மட்டுமே முடிக்க முடியும் என்று நினைக்கும் நிலையை உடையவன். எடுத்த காரியத்தில் வெற்றியடைந்த போது இறைக்கு நன்றி செலுத்தும் முகமாக முன்னர் நேர்ந்து கொண்டு அதனை நேர்த்திக் கடனாகச் செலுத்த ஆரம்பித்தான். இவ்வாறு நம்பிக்கையையும் நேர்த்திக் கடனும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக அமைகின்றன. இப்பின்னணியில் புதுச்சேரி வட்டாரத் திரௌபதியம்மன் கோயிலில் நடைபெறும் வேண்டுதல்களையும் அவை தொடர்பான மக்களின் நம்பிக்கைகளையும் காணுதல் தேவையானதாகின்றது.

### வளர்பிறை நாளில் விழாத் தொடக்கம்

அறங்காவலர் குழுவும் உற்சவத்தாரர்களும் மற்றும் ஊர்ப் பெரியோர்களும் திரௌபதியம்மன் கோயிலில் ஒன்றுகூடி வேனிற் காலத்தில் அமாவாசைக்குப் பிறகு நல்ல நாளில் நல்ல நேரத்தில் விழாவைத் தொடங்கலாம் எனத் தீர்மானிக்கின்றனர். அதன்படி கொடிகட்டுதல் நிகழ்ச்சி நடை பெறுகிறது. இந்நிகழ்ச்சி பிராமணரைக் கொண்டு நிகழும். அவ்வமயம் செஞ்ஞாயிற்றுக்குக் கற்பூர தீபம் ஏற்றிக் காண்பித்த பிறகே கொடிகட்டுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பண்டை யோர் இயற்கையை வழிபட்டு வந்தனர் என்ற கருத்து இங்கு நினைவுக் கூரத்தக்கது. இந்நிலையில் இது மரபு வழிப்பட்ட நம்பிக்கையாகக் கொள்ளப்படுகிறது. விழாக்கள் பெரும்பாலும் வளர்பிறை மற்றும் மதிநிறைந்த நாட்களில் தொடங்கி வருவதை இலக்கியவழி அறியலாம். சான்றாக மார்கழி நோன்பாகிய

தைந்நீராடல் வளர்பிறையில் தொடங்கியதைப் பரிபாடல் சுட்டும்

*"ஞாயிறு காயா நளிமாரிப் பற்குனத்து*
*மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை*
*விரி நூல்அந்தணர் விழவு தொடங்கப்*
*புரிநூல் அந்தணர் பொங்கலம் ஏற்ப"*[12]

மேலும், கார்த்திகைத் தீப விழா முழுமதி நாளில் தொடங்கி யதை அகநானூற்றுப் பாடல் கொண்டு அறியலாம்.

*"மழைகா லீங்கிய மாக விசும்பிற்*
*குறுமுயன் மறுநிறங் கிளர மதிநிறைந்*
*தறுமீன் சேர மகலிரு ணடுநாண்"*[13]

என்பர். சிலப்பதிகாரத்தில் இந்திரவிழா முழுமதி நாளில் தொடங்கியதைப் பின்வரும் பாடல் அடிகள் சுட்டும்

*"சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென*
*வெற்றிவேன் மன்னற் குற்றதை யொழிக்கெனத்*
*தேவர் கோமா னேவலிற் போந்த"*[14]

இதன்மூலம் பண்டையோர் தேய்பிறை நாளில் திருவிழாவைத் தொடங்காமல் நன்மை வேண்டியும், வளர்ச்சி வேண்டியும், வளர்பிறை நாளிலும், முழுமதி நாளிலும் விழாவைத் தொடங்கி ஆற்றியதன் சிறப்பையும் மக்களின் நம்பிக்கையையும் தெளிவுற அறியமுடிகிறது.

### கிழமையும் நம்பிக்கையும்

இம்முறையைப் பின்பற்றியே பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் வளர்பிறை நாளில் கொடியேற்றித் திருவிழாவைத் தொடங்குகின்றனர். பின்னர் வெள்ளிக்கிழமை நாளில் தீ மிதித்தலை மேற்கொள்கின்றனர். பண்டையோர் மேற்கொண்ட செயலுக்கு ஒப்பாக இதனைக் கொள்ளலாம். எனினும் இரு திரௌபதியம்மன் கோயில்களில் மட்டும் திங்கட்கிழமைகளில் தீ மிதித்தலை மேற்கொள் கின்றனர். முன்னோர் வாழையடி வாழையாக மேற்கொண்ட செயலைப் போன்று தாமும் அவ்வாறே செயலாற்றி வருவ தாகக் கூறுகின்றனர். இதன் வழி மரபு மீறாமல் பொன்னே போல் போற்றி வருவதைக் காணமுடிகிறது. திங்கட்கிழமையும் நன்னாளாகக் கருதப்பெறுவது குறிக்கத்தக்கது.

## காவல் தெய்வத்திற்குப் பொங்கலிடல்

விழாத் தொடங்குவதற்கு முன்னதாக ஊரின் புறத்தே காவல் காத்திருக்கும் ஆண் தெய்வமான அய்யனார் கோயிலுக்கு ஊரார், அணி அணியாகச் சென்று பொங்கலிட்டு வழிபடுவர். இதனை 'ஊரணிப் பொங்கல்' என்று அழைப்பர். இவ்வாறு பொங்கலிடுவதன் மூலம் அத்தெய்வம் பசி, பிணி நீங்கச் செய்து ஊர் மக்களைக் காக்கும் என்று நம்புகின்றனர். இந்நிலை சிலப்பதிகாரத்தில் இந்திர விழாவுடன் ஒப்பு வைத்து எண்ணத் தக்கது.

> ''பசியும் பிணியும் பகையு நீங்கி
> வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி
> பாதற் கோலத்து வலவையி துரைக்கும்''[15]

மழைவளம் வேண்டியும் பசி, பிணி, பகை நீங்கிச் சிறக்க வேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் விழாவுடன் இது ஒப்பு நோக்கத்தக்கது. மேலும் மழை பெய்யவில்லையானால், வெயிலின் கொடுமை காரணமாக அம்மை நோய் வருமானால், வேளாண்மை தடைப்படுமானால் பொங்கலிட்டு இறையை யேத்தும் நிகழ்ச்சி நடைபெறும்.

இப்பொங்கலிடும் சடங்கு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வின் பல்வேறு சூழல்களிலும் இடம் பெற்றுவரும் சடங்காகும். பொங்கி வழிதல் 'பொங்கல்' என்பது பொதுவான பொருள். பல்வேறு நிகழ்வுகளில் வழிதலென்பது நம்பிக்கையின் ஒரு கூறாகக் கொள்ளப்படுகிறது. ''பொங்கலென்பது சமைத்தல், மிகுதி, உயர்ச்சி, பொலிதல், சோறுவகை எனப் பல பொருள்களைச் சுட்டுகிறது''[16] செந்தமிழ் அகராதி.

## பொங்கலை வளமை வழிபாடாகவே கொள்ளல்

பொதுவாகத் திரௌபதியம்மன் கோயிலில் இடம்பெறும் பொங்கலில், புதுப்பாத்திரத்தில் ஊற்றிய நீர் கொதித்துப் பொங்கி ஒருமுறையாவது விளிம்பைத் தொட்டு வழிந்த பிறகே பச்சரிசியை இடுவர். இது பொங்கலின் சிறப்புக் கூறாகும். கோயிலில் இடும்பொங்கலை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. இனிப்புச் சேர்த்து இடும் பொங்கல்
2. இனிப்புச் சேர்க்காமல் இடும் பொங்கல்

மக்கள் வேண்டுதலுக்கேற்பப் பொங்கலிட்டு வழிபாடாற்று கின்றனர். "வேளாண்மைச் சமுதாயத்தில் செய்யப்படும் பெரும் பாலானச் சடங்குகள் வளம் வேண்டுதலாக அமைந்துள்ளன. இயற்கை தமக்கு உதவ வேண்டுமாயின் தாமும் இயற்கையைப் போல நடக்க வேண்டுமென்றும் இதனால் தாம் செய்வதைப் பார்த்து இயற்கையும் அதேபோலச் செய்யும் என்று நம்பினர். இந்நம்பிக்கை செழிப்புப் பற்றிய நம்பிக்கை (Fertility belief) எனப்படுகிறது"[17] என்பார் தே. ஞானசேகரன். இந்நம்பிக்கை யின் காரணமாகச் செய்யப்படும் சடங்குகள் வளமைச் சடங்குகள் (Fertility Rituals) எனப்படும். இதன் வளர்ச்சியே வள வழிபாடாகும். (Fertility Cult). இவ்வள வழிபாட்டின் அடிப்படையில் திரௌபதியம்மனுக்குப் பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெறுவது ஒப்பிடத்தக்கது. இந்த வருடம் எதிர்பார்த்த அளவு நெல் விளைந்ததால் பொங்கலிடுவதையும் பலருக்குச் சோறு போடுகிறேன் என்பதையும் கள ஆய்வில் காண முடிகின்றது. இது வள வழிபாட்டுக்குத் திரௌபதியம்மனின் அருட்சக்தியும் மக்களின் வேண்டுதல்களும் மேலோங்கியிருத் தலை அறியலாம்.

## மாவிளக்கு ஏற்றுதல்

மாவிளக்கு ஏற்றுதல் என்பது பொங்கல் இடும்போது அனைத்து திரௌபதியம்மன் கோயில்களின் வழிபாட்டிலும் நடைபெறுகின்றது. ஊறவைத்த பச்சரிசியை இடித்து தூளாக்கி எடுத்து அதில் வெல்லம் அல்லது சர்க்கரை சேர்த்து சிறிதளவு தண்ணீர்விட்டு பிசைந்து பந்துபோல் உருட்டி நடுவில் பள்ளம் அமைத்து அதில் நெய் அல்லது நல்லெண்ணெய் ஊற்றி திரியைக் கொண்டு விளக்கேற்றுவர். இதனை மாவிளக்கு என்றழைப்பர். கிராமங்களில் உள்ளவர்கள் இம்முறையைப் பின்பற்றுகின்றனர். நகர் வாழ்மக்கள் பெரும்பாலோர் அரைத்த மாவைப் பயன்படுத்துவர். சிலர் மாவுக்குப் பதிலாக வாழைப்பழத்தைக் கொண்டும் மாவிளக்கு போன்று செய்து விளக்கேற்றுவர். திரௌபதியம்மனை வழிபட்ட பிறகு எரிகின்ற மாவிளக்கோடு பொங்கல் கூடையில் வைத்து வீட்டிற்குக் கொண்டு செல்வர். வீட்டில் கற்பூர தீபம் கொடுத்த பிறகே மாவிளக்கைக் குளிர (நிறுத்துதல்) வைக்கின்றனர். இதன்மூலம் திரௌபதியம்மனின் அருள் சக்தியானது தமக்குக் கிடைக்க வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பும் மாவிளக்கு எரிவது போன்று வீட்டு வாழ்க்கையும் ஒளிமயமாக இருக்கும் என்ற

நம்பிக்கையும் வெளிப்படுகின்றன. இதில் கன்னிப்பெண்கள் அதிக அளவில் பங்கு கொள்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. இந்நிகழ்ச்சி அனைத்து திரௌபதியம்மன் கோயில் களுக்கும் பிற கோயில்களுக்கும் பொதுவான ஒன்றாகக் கருதப்படுகின்றது.

## எல்லைகட்டும் நிகழ்ச்சி

விழாக் காலங்களில் திரௌபதியம்மன் கோயிலிலிருந்து பூக்கரகம், காத்தவராயன் மரச்சிலை, வீரவாள், வீரச்சாட்டை, சூலம் போன்றவற்றை உடன்வரக் கோயிற் பூசாரியும் பிறரும் மேள தாளங்களும் பம்பையும் உடுக்கையும் முழங்க ஊரின் எல்லைப் புறத்தே செல்வர். அவ்விடத்தில் கோயில் பூசாரி ஒரு எலுமிச்சம் பழத்தை நான்கு பாகமாக அறுத்து அதில் சிகப்புத் தடவி நான்கு திசைகளிலும் எறிந்துவிடுவர். இதை எல்லை கட்டுதல் நிகழ்ச்சி எனக் குறிப்பிடுவர். இந்நிகழ்ச்சி "ஊரின் எல்லையில் உள்ள எல்லைப் பிடாரி என்னும் கொடிய ஆவியை உடைய பெண் தெய்வம் இருப்பதாகவும் விழாக்காலங்களிலும் மற்ற நாட்களிலும் மக்களுக்குத் தீமை செய்யாமல் இருப்பதற் காகவும் அதனைச் சாந்தி செய்யும் பொருட்டு உயிர்பலி கொடுக்கும் சடங்கு போன்று இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது"[18] என்பர். இதுபோன்று எல்லைகட்டும் நிகழ்ச்சி மாரியம்மன் கோயில்களிலும் பச்சைவாழியம்மன் கோயில்களிலும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. இதன்வழி எல்லை கட்டும் நிகழ்ச்சி அனைத்து அம்மன் கோயில்களுக்கும் பொதுவான ஒன்றாக இருப்பதை உணரமுடிகிறது.

விழாக்காலங்களில் ஒவ்வோர் ஆண்டும் வழிபாட்டுச் சடங்குக்கான எல்லை கட்டும் நிகழ்ச்சி நடைபெறுவதால் மக்களின் அச்சம் கலந்த நம்பிக்கையுணர்வு மேலோங்கியிருத் தலை அறியமுடிகிறது. இந்நிகழ்ச்சியைக் காணும்பொழுது பழங்காலத்தில் பேய்க்கு நின்று கொண்டு பலிப்பொருளை எறிந்த நிலையை 'நின்நெறி பலி' எனச் சுட்டியுள்ளதை மணிமேகலை கொண்டு அறியலாம்.

> **"மன்றல் பேய்மகள் வந்துகைக் கொள்கென**
> **நின்றெறி பலியின் நெடுங்குரல் ஓதையும்"[19]**

என்ற வரிகளைச் சுட்டலாம். இதனால் பேய்க்குப் பலிப் பொருளை நின்றெறியும் வழக்கம் அக்கால மக்கள் சமுதாய

நம்பிக்கையினைப் புலப்படுத்துவதை அறியலாம். நடைமுறையில் பலிப்பொருளாக ·எலுமிச்சம் பழம் அறுத்து எறிவது இங்கு ஒப்பிடத்தக்கது.

## வழிபாடு செய்வோரின் நம்பிக்கைகள்

வழிபாடு என்பது நம்பிக்கையோடு தொடர்புடையது. திரௌபதியம்மன் வழிபாட்டுச் சடங்கில் பகாசூரனுக்குச் சோறிடும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் பகாசூரனை வதை செய்து கொல்வதான சடங்குமுறை முடிவடைந்த பின்னர் பகாசூரனுக்காகக் கொண்டுவந்த சோற்றை இளஞ்சிறார்கள் முதற்கொண்டு ஆடவரும் பெண்டிரும் வாங்கி உண்கின்றனர். இவ்வாறு உண்டால் நோய் நீங்கப்பெறும் என்ற நம்பிக்கை யுணர்வும் திருமணமான பெண்கள் உண்டால் விரைவில் மகப்பேறு கிட்டும் என்ற ஆழமான நம்பிக்கையும் மக்களிடையே காணப்படுகின்றன. இந்நிகழ்ச்சியில் அனைத்துச் சமூக இன மக்களும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மக்களும் பங்கு கொள்வது குறிப்பிடத்தக்கது. இதனை அனைவரும் பகுத்துண்ணும் முறையாகவும் கருதலாம்.

## படுகளத்தில் உதிரச் சோறு அறைதல்

ஊர்ப் பொதுவிடத்தில் சதுர வடிவில் நான்கு பக்கங் களிலும் புளியங்கொம்பால் வேலி அமைக்கின்றனர். உள்ளே செல்வதற்கு நான்கு பக்கங்களிலும் வாயிற்கதவு போன்று வழி விடப்பட்டுள்ளது. இதனைப் படுகளம் என்று அழைப்பர். இப்படுகளத்தை அரவான் சிலையைக் கொண்டு ஒருமுறை சுற்றிவருவர். பின்னர் பாரதக் கதையைச் சுருக்கமாகப் படித்து முடித்ததும் அரவான் சிலை முன்பாகக் கோழி பலிகொடுத்து அதனுடைய இரத்தத்தைச் சோற்றுடன் கலந்து உருண்டையாக்கி அரவான் வாயில் துணி வெளுப்போர் சமூகத்தைச் சார்ந்த ஒருவரைக் கொண்டு அறைவர். இவ்வாறு அறையும் போது அறைந்தவர் முகம் விகாரமாய்க் காணப்படும். இந்நிகழ்ச்சி ஆண்டுக்கொருமுறை தவறாது நடைபெறும்.

அரவானுக்குச் சோறு அறைதல் நிகழ்ச்சியை எக்காரணத்தி னாலும் விட்டு விடுவதில்லை. இவ்வாறு செய்யாமல் விட்டால் ஊருக்குத் தீங்கு நேரிடும் என்று கருதி ஆண்டுதோறும் இச்சடங்குமுறை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இச்சடங்குமுறை அச்சத்தின் காரணமாக நம்பிக்கை வயப்பட்ட

தாக அமைகிறது. முன்பு படுகள நிகழ்ச்சியின்போது ஆடு பலி கொடுக்கப்பட்டதாகவும் தற்போது கோழி என்றும் எலுமிச்சம் பழம் என்றும் பலிப்பொருள்கள் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றம் பெற்று வருகின்றன. இந்நிகழ்ச்சி பொதுத் திருவிழாவின் பகற்பொழுதுச் சடங்காக நடைபெறுவதால் அனைத்துச் சமூக இன மக்களும் குறிப்பாக வன்னியர் இனத்தைச் சார்ந்தவர்களும் பெருமளவில் பங்குகொள்வது குறிப்பிடத்தக்கது.

### சாம்பலைப் புனிதத் தன்மையாகக் கருதுதல்

திரௌபதியம்மன் கோயில் விழாவின் சடங்காக அரக்கு மாளிகை விழா நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியின் இறுதியில் எரியூட்டப்பட்ட அரக்கு மாளிகையின் சாம்பலை மக்கள் தொட்டு, வணங்கி எடுத்துச் சென்று வீட்டிலும் நிலத்திலும் இடுகின்றனர். இதனால் குடும்ப வாழ்வு வளம் பெருகும் என்றும் நல்ல விளைச்சல் ஏற்படும் என்றும் நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வாறு செய்கின்றனர். இதே போன்று தீ மிதி விழாவின்போது கிடைக்கும் சாம்பலைப் புனிதப் பொருளாகக் கருதி இவ்வாறு மேற்கொள்கின்றனர். இதன்வழி மக்களின் மரபு வழிப்பட்ட சமய நம்பிக்கைகளை அறிந்து கொள்ள முடிகிறது.

### வேண்டுதல்களும் அவை தொடர்பான நம்பிக்கைகளும்

மக்களைத் துன்பத்திலிருந்து காப்பாற்றக் கூடியது இறைச் சக்தி ஒன்றே என்பது தமிழர்களின் நம்பிக்கையாகும். பிணிகள், தீய சக்திகள் ஆகியவற்றிற்கு ஆட்படாமலும் இயற்கை வளந்தரவும் குழந்தைச் செல்வம் முதலியன உண்டாகவும் தெய்வத்தை முழுமையாக நம்பினர். தெய்வத்தை உண்மையாக நம்புகின்றபோது புறச்செயல்கள் எதுவும் தம்மை பாதிக்காது என்ற நம்பிக்கையின் விளைவாகத் தன்னையே வருத்திக் கொள்கின்ற நேர்த்திக் கடன்களில் ஈடுபட்டனர். தொன்று தொட்டு வரும் தமிழர்களின் சமய நம்பிக்கையில் பேரின்ப வீடு பேறு அடைய வேண்டி இம்மையில் சிற்றின்பங்களைத் துறந்து, தருமங்கள் பல செய்து நேர்ந்துகொள்ளும் செயல் மேலானது. அகத்தை ஒருமுகப் படுத்துவதோடு புறத்தையும் ஒருமுகப் படுத்தச் சில செயல்களை மக்கள் மேற்கொண்டனர். இதன் விளைவாக வந்த நேர்த்திக் கடன்களே தீமிதித்தல் மற்றும் அங்கப்பிரதட்சனம் முதலியவையாகும்.

### தீமிதித்தலில் மக்களின் நம்பிக்கை

திரௌபதியம்மன் கோயிலில் தீமிதித்தலில் பலதரப்பட்ட சமூக இனத்தைச் சார்ந்தவர்களான வன்னியர், முதலியார், நாயக்கர், ரெட்டியார், செட்டியார், யாதவர், பத்தர், ஆசாரி போன்றோர் பங்கு பெறுகின்றனர். இவ்வகுப்பைச் சார்ந்த பெண்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஆண்களோ அல்லது பெண்களோ இடம் பெறுவது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது; இது மரபாகப் பேணப்படுகிறது. புதுச்சேரிக்கு அருகில் உள்ள கன்னியக்கோயில், மாத்தூர் போன்ற ஊர்களில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. இக்கோயில் திருவிழாவில் எல்லாத் தரப்பு ஆண்களும் தீமிதிக்கின்றனர். ஆனால் மாரியம்மன் கோயில் திருவிழாவில் தீமிதித்தில் நிகழ்ச்சிக்குப் பதிலாகத் 'தீச்சட்டி ஏந்தி ஆடிவருதல்' என்ற நிகழ்ச்சி அனைத்துச் சமூக இனப் பெண்கள் மத்தியில் இன்றும் சிறப்பிடம் பெற்று வருகிறது.

### தீ மிதித்தலின் நோக்கம்

பிற உற்சவ விழாவில் பங்கு கொள்வதைக் காட்டிலும் தீமிதித் திருவிழாவில் பக்தர்களின் கூட்டம் ஏராளம். மேலும் இத்தீமிதித் திருவிழாவில் பங்குபெறும் ஆண்கள் பெரும்பாலோர் கொடி ஏற்றியது முதற்கொண்டு காப்புக் கட்டிக்கொண்டு விரதமிருக்கின்றனர். ஆண்களில் வயது வித்தியாசமின்றி வேண்டுதலின் அடிப்படையில் அனைவரும் வெள்ளிக்கிழமை யன்று மஞ்சள் ஆடை அணிந்து கொண்டு தீமிதிக்கின்றனர். விரதம் இருப்பதற்குக் காரணங்கள் பல. திரௌபதியம்மனிடம் அருட்சக்தி பெறவும் தீயவை தவிர்க்கவும் துன்பங்கள் நீங்கி நல்வாழ்வு பெறவும் வேண்டும் என்பதே பெரும்பாலோரின் கருத்தாக அமைகிறது. மேலும் நினைத்த காரியங்கள் வெற்றி யடைய வேண்டும் என்ற வேண்டுதலை மையமிட்டும் தீமிதிக்கின்றனர். இதில் பெரும்பாலோர் இளைஞர்களாகவும் திருமணமான ஆடவர்களாகவும் உள்ளனர். இத்தீமிதித்தல் நிகழ்ச்சி பல்லாண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது. இது எக்காலத்தில் தோன்றியது என்பது தெரியவில்லை.

### சாட்டையடி பெறுதல்

தீமிதிப்போர் 'மறலை மக்கள்' என்று அனைவராலும் அழைக்கப்பெறுவர். தீமிதித்து பாலாற்றைக் கடந்து செல்லும் அனைவருக்கும் சாட்டை அடி வலது கரத்தில் கொடுக்கப்

படுகிறது. இதற்கு என்ன காரணம் என்று வினவியபோது சிலர் அறிவியல் பூர்வமாக விளக்கம் அளித்தனர். ''தீ மிதித்த பின்பு ஏற்படும் ஓர் மருள் நிலையிலிருந்து உலக இயல்பு நிலைக்கு மறலை மக்கள் மீண்டுவர இவ்வடி தரப்படுகிறது என்பர்''.[20] இச்சாட்டையடி நிகழ்ச்சி அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களிலும் தீமிதித்த பின்னர் நடைபெறுகிறது. நம்பிக்கை வயப்பட்ட பழக்கவழக்கமாக இதனைக் கருத முடிகிறது.

## களைப்பு நீங்கப் பானகம் அளித்தல்

தீக்குழி இறங்கிப் பாலாற்றைக் கடந்து வந்து சாட்டை அடி பெற்ற அனைவருக்கும் வெப்பம் நீங்க நீர்மோர் அல்லது வெல்லநீர் உறவினர் மூலம் வழங்கப்படுகிறது. மேலும் இந்நீரைப் பருகினால் பசி களைதல், உடல் வலிவு பெறல், சோர்வு நீங்கல் போன்றவை நிகழும் என்று நம்பப்படுகிறது அதுவே உண்மை என்றும் கொள்ளப்படுகிறது.

## அங்கப் பிரதட்சணம் வருதலில் பக்தர்களின் நேர்த்திக்கடன்

பக்தர்களின் வேண்டுதல்கள் நிறைவேறிய பின்பு திரௌபதியம்மன் கோயில் கிணற்று நீரிலோ அல்லது குளத்தின் நீரிலோ நீராடி மஞ்சள் ஆடை அணிந்து ஈர மேனியுடன் கையில் வேப்பிலையுடன் திரௌபதியம்மனை நினைத்துக் கொண்டு தலையைக் கோயில் பக்கமாக வைத்துக் கொண்டு காலை நீட்டிப் படுத்தவாறு வலப்புறமாக அங்கப்பிரதட்சனம் வருவர். இதில் ஆடவர் பெண்டிர் என்ற வேறுபாடு இல்லை. இவ்வாறு வலம் வந்த பின்பு மூலவர் சன்னதிக்குச் சென்று வேண்டுதலை நிறைவு செய்வர். அப்போது கோயிற் பூசாரி திரௌபதியம்மனுக் குரிய வீரகாந்தப் பொருளை எடுத்து வந்து நெற்றியில் தடவ மயக்கம் தெளிந்து தம் இல்லம் திரும்புவர். இதனை உடல் வருத்தும் நேர்த்திக்கடன் என்று அழைப்பர்.

அங்கப்பிரதட்சனத்தில் ஆடவர், பெண்டிர், சிறுவர் என்று வயது வித்தியாசம் இன்றி வேண்டுதலை நிறைவேற்றுவர். தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் எவ்விதக் குற்றமும் குறையும் இல்லாமலிருக்கவே இவ்வேண்டுதல். உடலில் ஏற்பட்டிருக்கும் நோய் குணமடைந்த பின்பு இவ்வேண்டுதலின் படி அங்கப் பிரதட்சனம் செய்து நேர்த்திக்கடனை நிறை வேற்றுவர். இதனைக் கள ஆய்வில் காணமுடிகின்றது. 'அங்கம்' என்றால் உடல், 'பிரதட்சனம்' என்பது சுற்றுதல் என்று

பொருள் அமையும். இதன் வழி உடல் முழுவதும் மண்ணில் படுமாறு கோயிலை வலம்வருதல் என்பது பொருள். இவ்வேண்டுதலின் போது அசைவ உணவை நீக்கி விரதம் மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் சமய நம்பிக்கையின் மீதுள்ள பற்றுதல் நேர்த்திக் கடனில் உள்ள அக்கறை போன்றவை புலனாகும்.

## தெய்வமுற்று ஆடுவோரின் பலன் கேட்டல்

தெய்வமுற்று ஆடும் நிகழ்ச்சி கிராமப்புற மக்களின் மத்தியில் வழிவழியாகப் பின்பற்றப்படும் நம்பிக்கையாகும். இதன் வழியாக மக்களுடைய பண்புகள் உள்ளத்து உணர்வுகள் வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது. விழாக் காலங்களில் கூழ்வார்த்தல் நிகழ்ச்சியன்று பம்பையும், உடுக்கையும், கொட்டு மேளமும் முழங்கப்படு கின்றன. அத்தருணத்தில் மருள் வந்து அம்மையார் ஒருவர் குதித்தும் துள்ளியும் ஆடுவர். ஊர் மக்கள் எல்லோரும் அத்தெய்வமே தம்முன் ஆவேசமாக வந்து ஆடுவதாகக் கருதி அதற்குரிய மரியாதையைச் செய்யப் பணிவன்புடன் சூழ்ந்து நிற்பர்.

கொட்டு மேளங்கள் இல்லாமல் இவ்வாடல் நிகழ்ச்சி நடைபெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அப்போது கோயிற் பூசாரி ஊர் மக்களைப் பாதுகாத்து வருவாயா தாயே! செய்யும் வழிபாட்டு முறைகள் திருப்திதானே! என்று வினவுவார். திருப்தி என்றால் கையிலே கற்பூரம் ஏற்றிக் கொடுப்பர். அதை வாங்கி வாயில்போட்டு விழுங்கி மயக்கம் கொள்வர். குறிப்பிட்ட நேரம் கடந்ததும் சுயநினைவு பெறுவர். குறை உண்டு என்று கூறினாலும் அடுத்தமுறை சிறப்பாகச் செய்கிறோம் தாயே என்று கூறி வழிபாட்டுச் சடங்கை நிறைவு செய்வர்.

ஆடுபவருடைய செயல்கள் நம்மை வியப்பில் ஆழ்த்தும் தன்மை உடையதாக இருக்கின்றன. ஆயினும் அத்தகைய ஆடல்களின் சிறப்பு இயல்பு படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகின்றன எனலாம். நடைமுறையில் இளைஞர் களின் மத்தியில் சிலர் கிண்டலும் கேலியும் செய்து சிரிப்பதையும் வயதானவர்கள் கன்னத்தில் போட்டுகொள்வதும் கள ஆய்வில் காணமுடிகின்றது. பொதுவாகப் பார்க்கும்போது தெய்வமுற்று ஆடுபவர் ஆட்டத்தில் அச்சமும் ஆவேசமும்

கலந்த உணர்வே மேலோங்கியிருத்தலைக் காணமுடிகிறது. இந்நிகழ்ச்சி ஊர் மக்களுடைய நலத்தை மையமிட்டுப் பலன் கேட்கும் வகையில் அமைந்துள்ளது. இந்நிகழ்ச்சியில் இடம் பெறும் பெண் எச்சமூகத்தினராக இருப்பினும் தெய்வத்திற்கு இணையாக மரியாதைச் செய்யப்படுவதைக் காணமுடிகிறது.

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர்ப் பிறர் கூறும் சொற்களைச் சகுனமாகக் கொள்ளும் வழக்கம் பழங்காலந் தொட்டே மக்களிடம் நிலவி வந்ததை இலக்கியங்கள் சுட்டும். இதனைப் பண்டைத் தமிழர்கள் விரிச்சி எனச் சுட்டியுள்ளனர். ''விரிச்சி என்பது வரும் காரியத்தை விரிவாய் முன்னே தெரிவிப்பதாகும்''[21] என்பார் சு. வித்தியானந்தன். இதன்வழி திரௌபதியம்மன் கோயிலில் தெய்வமுற்று ஆடுபவர் பம்மை உடுக்கையின் மூலம் தம்மை மீறிய ஆற்றலின் வெளிப் பாடாகவே பெண் ஒருத்தி சொற்களைக் கூறுவர் இதை நம்பிக்கையின் அடிப்படையில் தெய்வமே நேராக வந்து அருள் கூறுவதாக மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

## மக்களின் வேண்டுதல்களும் நேர்த்திக் கடன்களும்

### கன்னிப் பெண்களின் வேண்டுதல்கள்

திருமணம் ஆகாத கன்னிப் பெண்கள் தனக்கு மனம்போல மாப்பிள்ளை கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வைகறை வேளையில் துயிலெழுந்து குளிர்ந்த நீராடித் திரௌபதியம்மன் கோயிலை வலம் வருவர். குறிப்பிட்ட காலம்வரை நோன்பு இருத்தல் இதனடிப்படை. இவ்வாறு செய்தால் விரைவில் சிறந்த கணவன் கிடைக்கப்பெறுவான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இது செய்யப்படுகிறது. பாவை நோன்பு இதனுடன் ஒப்பு நோக்குதற்குரியது. திருக்கோயிலை வலம் வருதல் நிகழ்ச்சி பன்னூறு ஆண்டுகளாக வழக்கிலிருந்ததைப் பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டும்.

திருக்கோயிலை வலம் வருவோர்க்கு அல்லவை நீங்கி நல்லவை பயக்கும் என்று மக்கள் நம்பினர். மேலும் வலம் வருவோரைக் கண்டாலும் நற்பேறு கிட்டும் என்று மொழிவர். ''தனது வலிமையின் மீது நம்பிக்கை வைத்து வாழ்வதற்கே வலது காலை முதலில் எடுத்து வைக்கச் சொன்னார்கள் இந்துக்கள்''[22] என்பார் கண்ணதாசன். பழங்காலம் முதல் இன்று வரையிலும் வலம் வெற்றியைத் தரும், ஆக்கத்தை அளிக்கும்

என்ற நம்பிக்கை மக்களின் மனத்தில் பதிந்திருப்பதை அறிய முடிகிறது.

நடைமுறையில் திருமணத்தின்போது புனிதத் தீயை வலம் வருதல் நிகழ்ச்சியும் தீமிதி விழாவின்போது தீயை வலம் வருதல் நிகழ்ச்சியும் வலக்கையில் காப்புக் கட்டிக்கொள்ளும் நிகழ்ச்சியும் சிறப்பிடம் பெறுகின்றன. மேலும் வலதுகாலை எடுத்துவைக்கச் சொல்லும் பழக்கமும் வலது கையால் பொருளைக் கொடுத்தலும் வாங்குதலும் பெருவழக்காக உள்ளன. இவையாவும் நம்பிக்கையின் காரணமாக மக்களிடையே வாழையடி வாழையாகத் தொடர்ந்து வருதலைக் காணமுடிகிறது. இதன்வழி வலம்படுதலின் சிறப்பை உணர முடிகிறது. திரௌபதியம்மன் கோயில்களில் வலம் வருதல் நிகழ்ச்சி அதற்குரிய முறைகளுடன் மேற்கொள்ளப் பெறுகின்றது.

## குழந்தைப் பேறு வேண்டல்

கன்னிப்பெண்கள் விரதமிருந்து நல்ல கணவன் அமைய வேண்டும் என்று வேண்டிக்கொள்வதைப் போன்று திருமணமான பெண்களும் நல்ல ஆண்குழந்தை பெறவேண்டுமென்று நேர்ந்து கொள்கின்றனர். வேண்டுதல் நிறைவேறிய பின்பு விழாக் காலங்களில் தாயும் சேயும் மற்றும் உறவினர்களுடன் வந்து பொங்கலிட்டு வேண்டுதலை நிறைவேற்றுவர். நல்வாழ்வு வேண்டி நின்றாள் ஒரு பெண் என்பதை ஐங்குறுநூற்று பாடல் அடியின் மூலம் அறியலாம்.

> "குன்றக் குறவன் கடவுள் பேணி
> இரந்தனன் பெற்ற எள்வனைக் குறுமகள்"[23]

மேலும் திரௌபதியம்மன் உலா வரும்போது தன் வீட்டருகே அம்மனை வேண்டிக் கணவன் குடவிளக்கு எடுக்கும் பழக்கமும் ஒப்பு நோக்கத்தது.

சில சமயம் திருமணம் செய்துகொண்ட தம்பதியினருக்குப் பல ஆண்டுகள் கடந்தும் குழந்தைப் பேறு கிடைக்கப் பெறவில்லையெனின் திரௌபதியம்மனிடம் "எம் மருமகளுக்கு மகப்பேறு கிடைக்கப் பெற்றால் அடுத்த வருடம் உன் சன்னதியில் குடும்பத்தோடு வந்து பொங்கலிட்டுத் தொட்டில் கட்டுவேன் என வேண்டுவர்".[24] வேண்டுதல் நிறைவேறிய

பின்பு குடும்பத்தோடு வந்து பொங்கலிட்டுத் தொட்டிலைக் காணிக்கையாக்குவர். இவை யாவும் அம்மனின் அருளால் கிடைக்கப் பெற்றதாக நம்பி மனநிறைவு கொள்வர்.

## கோயிற் பிரசாதம் உயர்வு பெறுதல்

நம்பிக்கையின் அடிப்படையில் பல தொண்டுகள் செய்தால் குழந்தைப் பேறு கிட்டும் என்று கூறுவதாகப் பின்வரும் நாட்டுப்புறப்பாடல் ஒன்று சுட்டும்.

**"மைந்தன் பெறவேண்டுமென்று**
**வருந்திய பாண்டியர்கள்**
**சாலைகள் போட்டு வைப்பார்**
**சத்திரங்கள் கட்டி வைப்பார்"**[25]

நற்பலன்களால் குழந்தைப் பாக்கியம் உண்டாகும் என நம்பி, பல தொண்டுகள் இன்றுவரை செய்துவருவதை அறியலாம். அன்ன தானத்தைத் திருக்கோயிலில் இறைவன் அல்லது இறைவியின் முன் அளிக்கும்போது சிதறாமல் மக்கள் வாங்கி உண்கின்றனர். இந்நிலை பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் சிறப்பாக நடைபெறுகிறது.

## தானியப்பிச்சை எடுத்தல்

கிராமத்தில் வசிக்கும் பெண் ஒருவருக்குப் பல மாதங் களாகக் கண்பார்வை குறைவு ஏற்பட்டது. அவ்வமயம் "திரௌபதியம்மனின் சக்தியை உறவினரும் மற்றவர்களும் எடுத்துக் கூற அம்மனிடம் வேண்டிக்கொண்டாள் அந்தப் பெண். அதனையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு கண் அறுவைச்சிகிச்சை செய்தபின்னர் குணமடைந்ததாகவும் கூறினார்.'[26] இங்கு மருத்துவம் இரண்டாம் நிலையில் கருதப் பெற்றது. திரௌபதியம்மனிடம் வேண்டிக் கொண்டதற்கு ஏற்பக் குணமடைந்த அந்தப் பெண்ணே வீடுவீடாகச் சென்று தானியப் பிச்சைப் பெற்று பொங்கலிட்டு வேண்டுதலை நிவர்த்தி செய்தாள். பொங்கல் இட்டுப் படையல் செய்ய வில்லையெனின் திரௌபதியம்மனின் கோபத்திற்கு ஆட்பட்டு, கண்பார்வை இழக்கநேரிடும் என்பதை மனதிற்கொண்டு பொங்கலிட்டு நிவர்த்திச் செய்வதைக் காணமுடிகிறது. முந்தைய காலங்களில் தானியப்பிச்சை எடுத்தல் மிகவும் சிறப்புப் பெற்று இருந்ததாகவும் இப்போது நடைமுறையில் தானியப் பிச்சை எடுப்போரின் எண்ணிக்கை குறைவாக

இருப்பதாகவும் கூறுவர். இதன்மூலம் அச்ச உணர்வும் நம்பிக்கையின் வழி தொடர்வதைக் காணமுடிகிறது.

## முளைப்பாரி எடுத்தல்

முளைப்பாரி எடுத்தல் முறை முன்பு பெருவழக்கிலிருந்த தாகவும் தற்போது இம்முறை மக்களிடையே குறைந்து வருவ தாகவும் கூறுவர். இன்றும் விவசாயிகள் தம் மனையாளிடம் தானியங்களைப் பெற்று திரௌபதியம்மன் கோயிலில் வைத்து வழிபட்ட பின்னரே நிலத்தில் விதைக்க ஆரம்பிக்கின்றனர். அறுவடைக்குப் பின்னர் விழாக் காலங்களில் கொடிமரத்தில் அடியில் அல்லது கோயில் கிணற்று அருகில் நவதானியங்களை இட்டு நீரைப் பாய்ச்சி முளைக்க வைக்கின்றனர். இத்தானியங் களின் வளர்ச்சியைப் போன்றே ஊரிலுள்ள வேளாண்மைப் பயிர்களும் செழித்து வளரும் என்று நம்புகின்றனர். புதியதாகத் திருமணம் செய்துகொண்டு வரும் தம்பதியினர் கோயிலின் கிணற்று அருகிலோ அல்லது குளத்தின் அருகிலோ நவதானியங் களை இடுவர். நவதானியங்களின் வளர்ச்சியைப் போன்றே இல்லற வாழ்வும் வளம் பெருகும் என்பது இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

## உண்டியலில் காணிக்கைச் செலுத்துதல்

திரௌபதியம்மன் கோயில்களின் உண்டியலில் காணிக்கைச் செலுத்துதல் என்பது வேண்டுதலின் முக்கிய அம்ச மாகும். மக்கள் நேர்ந்து கொண்டதற்கேற்பப் பணமாகவோ அல்லது பொருளாகவோ காணிக்கைச் செலுத்துதல் உண்டு. இவை யாவும் அறங்காவலரின் துணைகொண்டு திரௌபதியம்மன் கோயிலின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாகக் காணிக்கைச் செலுத்துதலை மூன்று பிரிவுகளுக்குள் உட்படுத்தலாம்.

1. முடிப்பணம் செலுத்துதல்
2. மறைமுகப் பணம் செலுத்துதல்
3. உலோக உறுப்புகள் செலுத்துதல்

### 1. முடிப்பணம் செலுத்துதல்

கிராமங்களில் உள்ள கால்நடைகள் ஏதேனும் நோயால் தாக்கப்பட்டிருக்கும்போது அக்கால்நடைகளுக்குச் சொந்தக் காரர் திரௌபதியம்மனிடம் பூரணக் குணமடைய வேண்டும் என்று வேண்டுவர். குணமடைந்த பின்பு அவற்றை

அக்கால்நடைகளைப் போன்றே வெள்ளித் தகட்டினால் செய்து உண்டியலில் இடுவர் அல்லது கால்நடைகளை நல்ல விலைக்கு விற்று மஞ்சள் துணியில் வைத்துக்கட்டி வழிபாட்டிடத்தில் வைப்பர். குடும்பத்தில் எவ்விதப் பணக் குறைவு வந்தாலும் அப்பணத்தை எடுத்து செலவு செய்வதில்லை. பிரார்த்தனைக் குரிய பணத்தை எடுத்தால் தன்னையும் தன் குடும்பத்தையும் தண்டிப்பாள் என்று நம்புகின்றனர். எந்தக் குற்றம் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் திரௌபதியம்மனின் குற்றம் மட்டும் இருக்கக் கூடாது என்று எண்ணி செயல்படுவர். ''ஒருவேளை குடும்பத்தில் மிகத் துன்பம் வரும் காலத்து பிரார்த்தனைக்குரிய பணத்தை எடுத்து திரௌபதியம்மனின் மீது பாரத்தைப் போட்டு (பொறுப்பு) குடும்பச் செலவு செய்வர். பின்னர் அப்பணத்தை இருமடங்காகச் சேர்த்து முடிப்பணம் செலுத்துவர்''[28] என்பர்.

### 2. மறைமுகப் பணம் செலுத்துதல்

இவ்வூர் மக்களேயன்றி வேற்று ஊர் மக்களும் தமது குடும்ப நலன் செழிக்கத் திரௌபதியம்மனிடம் வேண்டிக் கொள்வர். வேண்டிக் கொண்டதற்கேற்ப வெளியூரில் உள்ளவர்கள் திருவிழாவில் கலந்து கொள்ள முடியாத சூழல் ஏற்படும்போது, பங்கேற்கச் செல்லும் பிறரிடம் முடிப் பணத்தைக் கொடுத்து அனுப்புவர். இது 'மறைமுகப் பணம் செலுத்தும் முறை' என்று அழைப்பர். முடிப்பணத்தைக் கொண்டு வரும் நபர் பயபக்தியுடன் உண்டியலில் செலுத்திய பின்னர் திரௌபதியம்மனை வணங்கி வழிபட்டுச் செல்வர். இவ்வாறு நேர்ந்து கொண்டதன்படித் தவறாமல் முடிப்பணம் செலுத்துவர். இதன்மூலம் திரௌபதியம்மனிடம் கொண்டிருக்கும் பக்தி பயம் ஆகியவற்றை அறியமுடிகிறது.

### 3. உலோக உறுப்புகள் செலுத்துதல்

ஒரு குடும்பத்தில் மூன்றாவது மகனுக்கு உடல்நலம் குன்றி நோய்வாய்ப்பட்டுப் பல நாள் இருந்தபோது அவன் குணமடைய வேண்டித் திரௌபதியம்மனை வேண்ட இரவில் அவ்வீட்டில் இருக்கும் பெண்ணின் கனவில் அம்மன் தோன்றி இச்சின்னஞ் சிறு பிஞ்சு (இளைய வயதுடைய பிள்ளை) வாழவேண்டிய பிள்ளை. எனவே ஒரு நொடிப் பொழுதும் தாமதிக்காமல் மருத்துவமனைக்குக் கொண்டு செல்க என்று கட்டளை யிட்டதாக மொழிவர். அவ்வாறு ''திரௌபதியம்மனை வேண்டியவாறு மறுநாள் காலையில் அக்குழந்தையை எடுத்துச்

சென்று மருத்துவமனையில் சேர்த்து உயிர்ப்பிழைக்க வைத்தாள்'[29]. இதற்குக் காணிக்கையாகப் பொங்கலிட்டு குழந்தையைப் போன்று வெள்ளியினால் செய்து உண்டியலில் சமர்பித்தனர்.

மக்கள் தங்களுடைய உடல் உறுப்புகளில் ஏதாவது தீங்கு ஏற்படின் திரௌபதியம்மன் கோயிலை வலம் வந்து நேர்ந்து கொள்வர். பூரண குணமடைந்த பின் அந்த உறுப்புப் போலவே வெள்ளியினால் செய்து பொங்கலிட்டுத் திரௌபதியம்மனுக்குக் காணிக்கையாக்குகின்றனர் என்பது நடைமுறையில் இருந்து வரும் வழக்கம்.

## பூக்கட்டிப் போட்டுப் பார்த்தல்

தங்களுடைய வீட்டில் திருமணம் என்றால் குல தெய்வத் திடம் அல்லது அருட்சக்தி நிறைந்த திரௌபதியம்மனிடம் வாக்குக் கேட்டல் என்பது ஒன்று. இவ்வழக்கம் கிராம மக்களிடையே மட்டும் அல்லாமல் நகர் வாழ் மக்களிடமும் தொடர்வதைக் காணலாம். பொதுவழிபாட்டின்போது பொங்கல் வைத்துத் திரௌபதியம்மனின் நல்லருள் கிடைக்க மூன்று வண்ணமுடைய (சிவப்பு, மஞ்சள், வெள்ளை) பூக்களைத் தனித்தனிக் காகிதத்தில் வைத்து மடித்து தெய்வத்திடம் வைத்து வழிபட்ட பின்பு, கோயிற் பூசாரி ஒரு சிறுவனை விட்டு ஏதேனும் ஒன்றை எடுக்கச் சொல்லுகிறார். குழந்தையும் தெய்வமும் ஒன்று என்ற நிலையை இங்கு எண்ண முடிகிறது. பலன் கேட்பவரை மூன்றில் ஏதாவது ஒரு வண்ணத்தை நினைத்துக் கொள்ளச் சொல்லுகிறார் பூசாரி. நினைத்த பூவினை அக்குழந்தை எடுத்தால் நினைத்த காரியம் வெற்றியடையும் என்றும் நம்புகின்றனர். பின்னர் முழுமனதுடன் அச்செயலில் ஈடுபடுகின்றனர்.

சில சமயம் திருமணப் பொருத்தத்திற்குத் திரௌபதியம்மனின் இசைவை வேண்டுவர். அவ்வமயம் கோயிற் பூசாரி வண்ணப் பூக்களுக்குப் பதிலாகத் திருநீர், குங்குமம், வீரகாந்தம் போன்றவை தனித்தனிக் காகிதத் துண்டுகளில் வைத்து கட்டி அம்மனிடம் வைத்து நல்லருள் பெறுவர். ஆனால் நினைத் ததற்கு மாறாக வாக்குக் கொடுப்பின் அவ்விடத்தில் சம்மந்தம் செய்ய மறுக்கின்றனர். மீறினால் திரௌபதியம்மனின் கோபத் திற்கு ஆளாக நேரிடும் என்ற அச்ச உணர்வு கொள்கின்றனர்.

நல்வாழ்வு அமைவதற்குத் திரௌபதியம்மனின் இசைவு தேவை என்பர். அவ்வாறு தந்தால் பல்லாண்டு பிரச்சனையின்றி வளமுடன் வாழலாம் என்ற நம்பிக்கை உணர்வு மேலோங்கி இருத்தலை நடப்பியலில் அறியமுடிகிறது. இதே முறை போன்று பல நல்ல செயல்களுக்குத் திரௌபதியம்மனின் அருளைப் பெறுகின்றனர். இதன்வழி "திருக்கோயில்களின் அன்றாட நடைமுறைகள் திருவிழாக்களில் பங்குபெறுவோரின் மனவியல்புகள் இன்ன பிறவற்றை உற்று நோக்குங்கால் பல நிகழ்வுகள் தொன்ம வழிச் சடங்குகளாகவே இடம்பெற்றிருப் பதை உணரமுடிகிறது"[30] என்பர் அ. அறிவுநம்பி. இவ்வாறு நடைமுறையில் திரௌபதியம்மன் கோயில் விழாக்களிலும் பொது வழிபாட்டிலும் பல தொன்மவழிச் சடங்குகளும் வேண்டுதல்களும் நேர்த்திக் கடன்களும் நிகழ்ந்து வருவதைக் கள ஆய்வுவழி அறியலாம்.

*தொகுப்புரை*

1. அச்சத்தின் காரணமாக நம்பிக்கைகள், வேண்டுதல்கள், நேர்த்திக்கடன்கள் ஒன்றோடொன்று தொடர்புடைய கூறுகள் அமைகின்றன.

2. பண்டைக்காலம் தொட்டே தமிழர்கள் கடவுள் நம்பிக்கை யுள்ளவர்கள் என்றும் பல தெய்வங்களை வணங்கியவர்கள் என்றும் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

3. விழாவைத் தொடங்குவதற்கு முன் எல்லை கட்டுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சி ஊரின் எல்லை யொட்டி நடத்தப்படுகிறது. இது காலம்காலமாக நடந்து வருகின்ற மரபு வழிப்பட்ட சடங்கு முறையாகக் கருதப் படுகிறது.

4. ஊரின் புறத்தே அமைந்திருக்கும் காவல் தெய்வமான அய்யனாருக்கு ஊரார் குழுவாகச் சென்று பொங்கல் இட்டு வழிபடுவர். அவ்வமயம் உயிர்ப்பலியாக ஆடு, கோழி போன்றவை கொடுக்கப்படுகின்றன.

5. திரௌபதியம்மன் கோயில் விழாவை வேனிற்காலத்தில் அமாவாசைக்குப் பிறகு வளர்பிறை நாளில் - நல்ல நாளில் - நல்ல நேரத்திலும் கொண்டாடுகின்றனர். இது பண்டையோர் மேற்கொண்ட விழாவினை மையமிட்டதாக அமைவதைக் காணலாம்.

6. திரௌபதியம்மன் கோயில் விழாவில் பகற்பொழுது சடங்காகப் பகாசூரன் வதைவிழா நடைபெறுகிறது. அவ்விழாவிற்குக் கொண்டுவரும் பகாசூரன் சோற்றை உண்டால் மக்களின் நோய் நீங்கும் என்ற நம்பிக்கையும் திருமணமான பெண் உண்டால் குழந்தைப் பாக்கியம் கிட்டும் என்ற நம்பிக்கையும் மேலோங்கியிருத்தலைக் காணமுடிகிறது.

7. விழாவின் ஒரு சடங்காகக் களபலி நிகழ்ச்சி நடைபெறு கிறது. அவ்வமயம் உயிர்ப்பலிப் பொருளான கோழியைக் கொடுப்பதன் மூலம் ஊருக்கு எவ்விதத் தீங்கும் நேராது என்று மக்கள் நம்புகின்றனர்.

8. விழாவில் தீமிதித்தல் விழா, அரக்குமாளிகை விழா போன்றவை சிறப்பிடம் பெறுகின்றன. இச்சடங்கின்போது கிடைக்கின்ற சாம்பலைப் புனிதத் தன்மையாகக் கருதி வீட்டிலும் நிலத்திலும் வைப்பதால் வளம் பெருகும் என்று நம்பிக்கைக் கொள்கின்றனர். தெய்வத்துடன் தொடர்புடைய கதை நிகழ்ச்சிகள் இவ்வாறு சடங்காக அமைவது கருதத் தக்கது.

9. திரௌபதியம்மன் வழிபாட்டின் ஒரு கூறாக உடல் வருத்தம் சார்ந்தவை, உடல் வருத்தம் சாராதவை என இருவகை நேர்த்திக் கடன் இடம்பெறுகின்றன. இதில் உடல் வருத்தம் சார்ந்தவையான தீ மிதித்தல் அங்கப் பிரதட்சனம் செய்தல் மூலம் மக்கள் தெய்வத்தின் அருளைப் பெறலாம் என்ற நம்பிக்கை உணர்வு கொண்டிருத்தலை அறியமுடிகிறது.

10. பொங்கலிடுதல் என்பது பல்வேறு நிலைகளில் மகிழ்ச்சி யினை மையமிட்டும் நன்மை வேண்டியும் வளமை வேண்டியும் வழிபாடாக நிகழ்வதை அறியலாம்.

11. சமுதாயத்தில் நோன்பு இருத்தல், குழந்தைப் பேறு வேண்டல், தொட்டில் கட்டுதல் போன்றவை சிறப்பிடம் பெறுவதால் நேர்ந்து கொள்ளும் பெண்களின் எண்ணிக்கையும் பக்தி உணர்வும் மேலோங்கியிருத்தலை அறியமுடிகிறது.

12. பெண்கள் மாவிளக்கு ஏற்றுதல், தானியப் பிச்சை எடுத்தல் போன்றவை வேண்டுதலின் நேர்த்திக் கடன்களாக அமைக் கின்றன.

13. முடிப்பணம் செலுத்துதல், மறைமுகப் பணம் செலுத்துதல், உலோக உருப்புகள் அளித்தல் போன்றவை யாவும் நலம் கருதியும் மேன்மை அடைய வேண்டும் என்றும் நம்பிக்கையின் அடிப்படையில் செய்யப்படுகின்றன. திரௌபதியம்மனை மனம்குளிரச் செய்யவேண்டிப் பல்வேறு வழிபாட்டு முறைகளும் சடங்குகளும் வேண்டுதல்களும் சிறப்பிடம் பெறுகின்றன.

***சான்றெண் விளக்கம்***


1. *Emile Durkheim, The Elementary forms of Religious Life, p. 62.*
2. *க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.103*
3. *அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப. 245*
4. *சி. பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப. 543*
5. *தொல்காப்பியம், சொல்லதிகாரம், நூற்பா எண். 812*
6. *நற்றிணை, 175 : 7 - 8*
7. *நற்றிணை, 327 : 1 - 3*
8. *சுசிலா கோபாலகிருஷ்ணன், சங்க இலக்கிய நிமித்தங்கள் 'என்னுரை'*
9. *சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம், ப.11*
10. *சாமி சிதம்பரனார், பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், பக். 58 - 59.*
11. *சு. சக்திவேல், நாட்டுப்புறவியல், பக். 139 - 140*
12. *பரிபாடல், 76 - 79*
13. *அகநானூறு, 141 : 6 - 8*
14. *சிலப்பதிகாரம், 5 : 64 - 66*
15. *சிலப்பதிகாரம், 5 : 72 - 74*
16. *செந்தமிழ் அகராதி, ப. 140*
17. *தே. ஞானசேகரன், மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள், ப. 11*
18. *கண்ணப்பன், கோயிற் பூசாரி, நேர்காணல், பிள்ளைச்சாவடி, வயது 55, நாள் 22.05.99*
19. *மணிமேகலை 7 : 84 - 85*
20. *வீ. காந்தி, நேர்காணல், பிள்ளைச்சாவடி, வயது 42, நாள் 22.05.99*
21. *சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப. 196*
22. *கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்து மதம், (முதல் பாகம்) ப.75*
23. *ஐங்குறுநூறு, 257 : 1- 2*
24. *ம. ஜெயலட்சுமி, நேர்காணல், பிள்ளைச்சாவடி, வயது 55, நாள் 20.05.2000.*

25. ........, நாடோடிப் பாடல்கள் காட்டும் நம்பிக்கை, ப.13

26. ஜானகியம்மாள்,.நேர்காணல், பிள்ளைச்சாவடி, வயது 85, 18.04.99.

27. தனம், நேர்காணல், பிள்ளைச்சாவடி, வயது 55, நாள் 15.04.98

28. வீ. லோகநாதன், நேர்காணல், பிள்ளைச்சாவடி, வயது 80, நாள் 15.04.98

29. லோ. தனலட்சுமி, நேர்காணல், பிள்ளைச்சாவடி, வயது 60, நாள் 15.04.98.

30. அ. அறிவுநம்பி, தேடல் (மூன்றாம் தொகுதி), பக். 24 - 25.

## இயல் 4

# திரௌபதியம்மன் கோயில்களும், சமுதாயப் பணிகளும்

*முன்னுரை*

சமயம் என்பது சமுதாய நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட சமுதாயக் கூறேயாகும். பண்டைய காலந்தொட்டு தமிழர்களின் சமூக வாழ்வில் ஊடுருவிப் பரந்து நிலைத்தவை கோயில்களே யாகும். இக்கோயில்களை ஆராய்வதன் மூலம், தமிழர்களின் சமயப் பண்பாட்டை அறிந்துகொள்ள முடியும். ''சமயம் என்பது சமூக உறவை வளர்க்கும் சாதனம். மனிதன் தன் ஆசைகளைச் சொல்லிக்கொள்ளவும், தன் ஏமாற்றங்களுக்கு ஆறுதல் காணவும் இது உதவுகிறது''[1] என்பார் எஸ். இராதாகிருஷ்ணன். காரணம் தெரியாத முடிபுகள், பரம்பரையாக வந்த கொள்கைகள் புராணக் கதைகள், இவற்றை விலக்கி விட்டால் சமயம் என்பதே இல்லாமல் போய்விடும் என்றும் கருத இடமுண்டு. ''மனிதனுக்கு ஏற்படும் அடிப்படைத் தேவையை நிரப்பிக் கொள்வதற்காக மனிதனுடைய அறிவு படைத்த ஒன்றே சமயமாகும்''[2] என்று கலைக் களஞ்சியம் சுட்டுகிறது. இதன் மூலம் சமயத்தின் (Religion) சிறப்பினை அறியமுடிகிறது. இச்சமயத்தின் வெளிப்பாடே திருக்கோயில்கள் எனலாம். பொதுவாகத் தெய்வங்களின் அடிப்படையில் திருக்கோயில் களை இருவகையாகக் கொள்ளலாம்.

1. சைவ, வைணவ, ஆகம மரபுகளுக்குட்பட்ட கோயில்களில் இடம்பெறும் முதன்மைத் தெய்வங்களைப் பெருந் தெய்வக் கோயில்கள் என்பர்.

2. ஆகம மரபுகளுக்குட்படாத தெய்வங்களைச் சிறுதெய்வக் கோயில்கள் என்பர்.

கோயிலின் சிறப்புக் கருதியே 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றும், ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் பொன்மொழிகள் தோன்றின. இன்று கோயில்

இல்லா ஊர்களே இல்லை என்ற அளவிற்கு ஊர்தோறும் திருக்கோயில்கள் இருப்பதைக் காணலாம். இதன்மூலம் மக்களின் பக்தியும் வழிபாட்டுச் சிந்தனையும் மேலோங்கி யுள்ளதை அறியவியலும். கோயில்கள் வழிபடும் இடங்களாக (Place of Worship) மட்டும் அல்லாமல் அவை நாட்டின் சமய வரலாற்றுக்கும் சமூகம், கலை, பண்பாடு போன்றவற்றின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கின்றன. ''கோயில்கள் குடிகளைத் தழுவியும் குடிகள் கோயிலைத் தழுவியும் இருந்து வந்துள்ள நிலைமையைக் காணலாம்''[3] என்பார் நாகப்பா. நாச்சியப்பன். திருக்கோயில்கள் மக்களின் நம்பிக்கையின் சின்னமாக (Symbol of hope) இருந்து வருதலை இதன்மூலம் அறியலாம். ''திருக்கோயில்கள் மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு அளப்பறிய தொண்டாற்றின. மனிதன் பொருளுலகத்திற்கு அப்பால் தன் மனதைச் செலுத்தி உடலும் உணர்வும் ஒன்றுபட்டு இறைவனைக் காணும் வாய்ப்பை நல்கின''[4] என்பர்.

### கோயில் / ஆலயம் : பொருள் விளக்கம்

கோயில் என்பது கோ + இல் என்று பிரித்துப் பார்த்தல் 'கோ' என்பது உலகியல் துறையில் அரசனையும், ஆன்மீகத் துறையில் இறைவனையும் சுட்டும். 'இல்' என்ற சொல் இறைவனின் உறைவிடமாகக் கொள்ளப்படுகிறது. 'ஆலயம்' என்பது ஆ + லயம் என்ற இரு சொற்பொருளை உணர்த்தும். 'ஆ' என்பது பசு எனும் பொருள்கொண்டு ஆன்மாவைக் குறிக்கும் 'லயம்' என்பது தன்னையிழந்து ஒன்றிவிடல் என்னும் பொருளை உணர்த்தும். ஆன்மா தன் தனித் தத்துவத்தை இழந்து இறைவனுடன் ஒன்றிவிடும் சூழலுக்கான இடமாக ஆலயம் அமைகிறது எனலாம்.

### ஆலயங்களின் நோக்கம்

இறைவன் உறைவிடமாகவும் அடியார்கட்கு வெளிப்படத் தோன்றும் இடமாகவும் கோயில் திகழ்கிறது. ஆன்மாக்கள் அறியாமையிலிருந்து விடுபட்டு இறைவனிடம் கலந்து இன்புறும் வாய்ப்பையும் சூழலையும் ஆலயங்கள் தருகின்றன. பழங்காலத்திலிருந்து திருக்கோயில்கள் தமிழர் வாழ்க்கையில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்று விளங்குகின்றன. திருக் கோயில்கள் வழிபடும் இடங்களாக மட்டும் அல்லாமல் வாழ்க்கைக்கு உதவும் சமூக நிறுவனங்களாக விளங்குகின்றன. ''வழிபாட்டின் இந்த அடிப்படையில் கடவுளர்களும் கடவுளர்

களுக்காகக் கோயில்களும் கோயில்களுக்காகச் சமயங்களும் ஏற்பட்டன'[5] என்பர். கோயில்களின் மூலம் தமிழர்களின் சமயப் பண்பாட்டை அறிந்துகொள்ள முடியும். "ஒரு கிராமத்து மக்களின் வாழ்வியலை அறியவேண்டுமானால் அக்கிராமத்தில் உள்ள கோயில்களையும் அங்குள்ள தெய்வங்களையும் கண்டு கொள்ள வேண்டும்."[6] என்பார் துளசி. இராமசாமி. இன்று நடைமுறையில் ஆண்தெய்வக் கோயில்களும் பெண்தெய்வக் கோயில்களும் அதிக அளவில் காணப்படுகின்றன. "பெரும் பாலான கிராமக் கோயில்கள் நீர் நிலைக்கருகிலேயே இருக்கும். ஏனெனில் கிராமங்களில் வாழ்வோர் பெரும்பாலும் விவசாயத்தை நம்பி இருப்பவர்கள். நீர் அவர்களது வாழ்வில் பெரும் இடம் வகிக்கிறது"[7] என்பார் சு. சக்திவேல். இவ்வாறு ஊர்தோறும் கோயில் காணப்பெறுவது பொதுவான ஒன்றாகப் புலனாகிறது.

இம்மையில் நல்வாழ்வையும் மறுமையில் வீடு பேற்றினையும் விரும்பி மக்கள் கோயில் வழிபாட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு மனநிறைவு பெறுகின்றனர். "திருக்கோயில்கள் மக்களது வாழ்க்கையில் பல வகைகளில் பயன் அளித்தும் பல முறைகளில், வளம்படுத்தியும் வருகின்றன'[8] என்பர். "மனிதன் அறிவு, இச்சை, செயல் என்ற மூன்று இயல்பு களைக் கொண்டவன். அவனது இம்மூன்று இயல்புகளுக்கும் உணவளிக்கும்படி மூன்று வகையான முறைகளில் கோயில் இலக்கணம் அமைந்துள்ளது. அவை கோயில் அமைப்பு முறை, பூசை முறை, வழிபடும் முறை என்பனவாகும்'[9] என்பார் வ. தேனப்பன். இதன்வழி மனிதனது உண்மை நிலையைக் கூறி அவன் தெய்வ நிலையை அடையக் கோயில்கள் தத்துவ விளக்கமாக அமைந்துள்ளன என அறியவியலும். மனிதன் உடம்பு அல்லன், குணங்களல்லன், அறிவுமல்லன் அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட ஆன்மாவே என்ற உண்மையை விளக்குவதே திருக்கோயிலின் தலையாய நோக்கமாகும்.

### திருக்கோயில் கட்டமைப்பு

திரௌபதியம்மன் கோயில் அமைப்பைக் காணுங்கால் மனித உடம்பின் உருவமாகவே இருப்பதைக் காணலாம். இவ்வாறு அமைவதைப் பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

| மனிதனின் உறுப்பு | | திருக்கோயிலின் கூறுகள் |
|---|---|---|
| 1. தலை | - | கருவறை |
| 2. கழுத்து | - | அருத்த மண்டபம் |
| 3. இரு தோள்கள் | - | இரு காவல் தெய்வங்கள் |
| 4. வயிற்றுப் பகுதி | - | மகா மண்டபம் |
| 5. கைகளும் பிற உறுப்புகளும் | - | திருச்சுற்று |
| 6. முதுகுத் தண்டு | - | கொடிமரம் |
| 7. கால்கள் | - | முன்கோபுரம் |

இதன்வழி மக்கள் திருக்கோயிலின் மேல் கொண்டுள்ள ஈடுபாட்டை அறியமுடிகிறது. ''மனிதனைத் தெய்வமாக்கும் திருப்பணிக்காகக் கோயில்கள் கட்டப்பெற்றதால் கோயிலின் அமைப்பு மனித உடம்பின் உருவமாகவே அமைந்துள்ளதை ஆகமங்கள் உணர்த்துகின்றன''[10] என்பார் வ. தேனப்பன். பொதுவாக இத்தகைய ஆகமங்களின்படி, திரௌபதியம்மன் கோயில்கள் இருப்பது எண்ணத்தக்கது. எனினும் திருக்கோயில் களின் இடவசதியைப் பொருத்து மாறுபாடுகள் சிலவும் இடம்பெற்றுள்ளன.

பிள்ளைச்சாவடி என்னும் ஊரில் இடம் பெறும் திரௌபதியம்மன் திருக்கோயில், கருவறை, அருத்த மண்டபம், முன் மண்டபம், மகா மண்டபம், சுற்றுப் பிரகாரம் ஆகிய பகுதிகளைக் கொண்டு அமைந்துள்ளது. திருக்கோயிலுக்கு உள்ளே தென்கிழக்குத் திசையில் இராகவேந்திரா சன்னதியும் வடமேற்குத் திசையில் சிறு மண்டபமும் இடம் பெறுகின்றன. திருக்கோயிலின் பின்புறம் திருக்குளம் அமைந்துள்ளது. இவ்வமைப்பு நிலை வரைபட விளக்கத்தின் வழி தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

## கருவறையின் அமைப்பு

திரௌபதியம்மன் திருக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயிலின் கருவறையில் இடம் பெறும் மூலவரான திரௌபதியம்மன் சிலை இரண்டரை அடி உயர முடையதாக நின்ற நிலையில் உள்ளது. இவ்வுரு ஒரே கல்லில் உருவாக்கப் பெற்று பீடத்தின் மேல் அமைக்கப் பெற்றுள்ளது. திரௌபதியம்மனின் வலது கரத்தில் கிளியுடன் கூடிய

பூங்கொத்து காணப்பெறுகிறது. இடதுகரம் சாதாரணமாகத் தொங்கிய நிலையில் வடிவமைக்கப் பெற்றுள்ளது. ஒரேயொரு இடத்தில் மட்டும் இடதுகையில் பூங்கொத்து காணப்படுகிறது. மேலும் திரௌபதியம்மனின் திருமுகம் சாந்தமான முகத்துடன் காணப்படுகிறது. இதே அமைப்புப் போன்றே அனைத்துக் கோயில்களிலும் திரௌபதியம்மன் காட்சியளிக்கின்றது. கோர்க்காடு என்னும் ஊரில் இடம் பெறும் திரௌபதியம்மன் மூலவர் சிலை சிறிய அளவு (சுமார் இரண்டடி) உயரம் உடையதாக நின்ற நிலையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

புதுச்சே மற்றும் தர்மாபுரி ஆகிய ஊர்களில் இடம் பெறும் மூ பவர் சிலையான - திரௌபதியம்மனுக்கு நெற்றிச் சுட்டிகை அணிவிக்கப்படுகின்றது. சில ஊர்களில் திரௌபதியம்மனுக்கு மட்டும் தலைக்கவசம் அணிவிக்கப் படுகிறது. மடுகரை திரௌபதியம்மன் கோயிலில் முகத்தைத் தவிர உடல் முழுவதும் வெண்கலத் தகட்டினால் அமைத்து இருக்கின்றனர்.

''திரௌபதியம்மனுக்குக் காலையில் அபிடேகம் செய்யப் பெற்ற பின்பு மஞ்சள் நிற ஆடையோ, பச்சை நிற ஆடையோ, சிகப்பு நிற ஆடையோ அணிவித்து வழிபாடு செய்வர். வளமை செழுமை கருதியே இவ்வாறு செய்வதாகக் குறிப்பிடுகிறார்''[11] கோவிந்தசாமி.

திரௌபதியம்மன் கோயிலின் உயிர் நிலையாக விளங்குவது கருவறையில் உள்ள அழகிய திருஉருவமேயாகும். இதனை மூலவர் என்றும் அவ்விடத்தை 'மூலஸ்தானம்' என்றும் அழைப்பர். கருவறையிலிருக்கும் திரௌபதியம்மனை வணங்கும் பொழுது யான் எனது என்ற தன்மைகளை நீக்கி இரண்டறக் கலந்து வழிபடுதல் வேண்டும் என்பர். மனித உடல் அமைப்பில் தலை எவ்வாறு சிறப்பானதாகக் கருதப்படு கின்றதோ அதைப்போன்று கோயிலின் கருவறையில் இருக்கும் மூலவர் சிலை முதன்மையாக வைத்து வழிபடப் படுகின்றது.

### தீப விளக்கேற்றுதல்

கருவறையில் மூலவர் சிலைக்கு (கற்சிலை) வடதிசையில் தொங்கும் விளக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. கற்பூர தீப வழிபாடு தொடங்குவதற்கு முன் திருவிளக்கு ஏற்றப்படுகிறது. அதன் பின்னர் மூலவர் சிலைக்குக் கற்பூர தீபம் தினமும் இரு

வேளை நடத்தப்படுகிறது. தொங்கும் விளக்கு இல்லாத் திரௌபதியம்மன் கோயிலில் காமாட்சியம்மன் விளக்கு ஏற்றப் படுகிறது. ''கருவறையில் இருக்கும் திரௌபதியம்மனின் உண்மை வடிவினைக் காண வேண்டுமெனில் கற்பூர தீப வழியே காணுதல் சிறப்புடையதாகும்''[12] என்பார் வெங்கடேசன். கருவறையில், கோயிற் பூசாரி அவரது உதவியாளர் தவிர, பிறர் அனுமதிக்கப்படுவதில்லை. இது எல்லாக் கோயில்களிலும் இம்முறைமையே பொதுவாக மேற்கொள்ளப் பெறுகின்றது.

### திருஉருவச்சிலை சக்தி பெறுதல்

பண்டையோர் கட்டிடங்களை அமைக்கும்பொழுது நாள் குறித்து, திசைகளையும் அவற்றில் உள்ள தெய்வங்களையும் நோக்கி அமைத்தனர் என்பதை நெடுநல்வாடை கொண்டு அறியலாம்.

> ''நூலறி புலவர் நுண்ணிதிற் கறியிட்டுத்
> தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
> பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து''[13]

என அறிய முடிகின்றது. இன்றும் நடைமுறையில் நல்ல நேரம் பார்த்து, கோயிற் கட்டிட வேலையைத் துவக்குவதைக் காணலாம். 'நாள் செய்வதை நல்லவர் செய்யார்' என்னும் பொன்மொழி ஒப்பிடத்தக்கது. கருங்கல்லால் ஆன மூலவர் சிலை வடிவமைப்பதில் புகழ் பெற்றவரைக் கொண்டு திரௌபதியம்மன் உருவச்சிலையை வடிவமைப்பர். அதன் பின்னர்த் தண்ணீரிலும் தானியத்திலும் பல நாட்கள் வைத்து சக்தி ஏற்றிய பின்பு கருவறையில் மேடை அமைத்து சமயப் பெரியோர்களின் துணை கொண்டு பிரதிட்டை செய்வர். அவ்வாறு கோயிலில் பிரதிட்டை செய்யாமல் வைத்தால் தெய்வங்கள் அருள் புரிவதில்லை என்பர். எனவே மூலவர் கோயில் கொள்ளச் செய்யப்பட்டும் கோபுரம் குடமுழுக்குச் செய்து வழிபடப்பட்டும் வருகின்றது. கோயிலின் கருவறையில் உள்ள திருஉருவம் திரௌபதியம்மனின் அருள் உருவமாகவும் கோபுரம் அருள் சின்னமாகவும் விளங்குகின்றன என்பர். ''பருப்பொருளான கட்டிடங்கள் அதிலும் கருங்கற்களாலான கட்டிடங்கள் படைத்தவர்கள் மாண்ட பின்னும் பன்னூற்றாண்டுகள் நிலை பெறத் தக்கனவாகும். எனவே ஓரின நாகரிகத்தினை நீண்ட காலம் நிலைபெறச் செய்யும்

கட்டிடக் கலைக்குத் தனியிடமுண்டு''[14] என்பார் அ. தட்சிணாமூர்த்தி. இந்நிலையில் திரௌபதியம்மன் கோயிற் கட்டிடக் கலையை நோக்கும்போது அதன் சிறப்பு அறியப் படும்.

## கோபுர அமைப்பு

கருவறை விமானம் பெரும்பாலும் இரட்டை அடுக்கு களைக் கொண்டதாக அமைக்கப் பெற்றுள்ளது. கோபுர உச்சியில் திருக்கோயிலின் அமைப்புக்கேற்றவாறு ஒற்றை எண்ணில் (1, 3, 5) முடியுமாறு கோபுரக் கலசங்கள் வைக்கப்படுகின்றன. இக்கோபுரக் கலசத்தில் வரகு தானியத்தை வைத்துக் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) செய்வதால் அம்மனின் அருட் சக்தி பெருகும் என்றும் நம்புகின்றனர். தற்போது கோயிலின் முகப்புக் கோபுரத்திலும் கோயில் மணி இடம்பெறும் இடத்திலும் கலசம் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரௌபதியம்மனின் கோபுரக் காட்சியைக் காண்போரின் இருள் எனும் மயக்கத்தை நீக்கி அருளைக் கொடுக்கும் தன்மை யுடையது என்பர். இன்று நடைமுறையில் மூலவர் இருக்கும் கருவறைக்கு மேல் எழுப்பப்பட்டுள்ள கோபுரத்தை மக்கள் வணங்கிச் செல்வதைக் காணமுடிகிறது. எனவே கோயிலில் முதன்மையாக வைத்து எண்ணப்படுவது கோபுரக்காட்சி எனலாம். கருவறைக்கு மேற்பகுதியிலும் கோயிலின் முகப்பிலும் உருவாக்கப்பட்டுள்ள கோபுரங்களில் தெய்வங் களின் உருவங்கள் சுதையினால் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## அருத்த மண்டபம்

கருவறையின் முன்னர் உள்ள இடத்தை 'அருத்த மண்டபம்' என்று அழைப்பர். மனித உடம்பின் கழுத்துப் பகுதியாகவே இதனைக் கருதுவர். இவ்விடத்தில் பொதுவாக எல்லாத் திரௌபதியம்மன் கோயில்களிலும் சக்திக் கரகம், வெண்கலச் சிலைகள் போன்றவை இடம் பெறும். அருத்த மண்டபத்தின் வடபுறத்திலும் தென்புறத்திலும் பீடம் அமைக்கப் பெற்று அதன்மேல் வெண்கலச் சிலைகளை (விக்கரங்கள்) வைப்பர். சில திரௌபதியம்மன் கோயில்களில் மேடை (பீடம்) அமைக்கப்படவில்லை எனில் மரப் பலகைக் கொண்டு அதன்மேல் வெண்கலச் சிலைகளை வைப்பர். ''சாதாரண

தரையில் விக்கிரகங்களை வைத்தால் தெய்வங்களின் அருட் சக்தி குறைந்துவிடும் என்ற நம்பிக்கையில் மேடை அல்லது மரப் பலகைகளில் வைப்பர் என்பர்''.[15] இவ்விடம் வழிபாடு செய்வோர் நிற்கவும் வழிபடு பொருட்கள் வைக்கவும் பெரும்பான்மையும் பயன்படுகிறது.

*வெண்கலச் சிலைகள்*

திரௌபதியம்மன் கோயில்களில் மகாவிஷ்ணு, அருச்சுனன், திரௌபதி போன்ற வெண்கலச் சிலைகள் இல்லாத கோயிலே இல்லை எனலாம். இச்சிலைகள் யாவும் அழகிய நிலையில் கலை நயத்துடன் வடிவமைக்கப் பெற்று காண்போர் மனதைக் கவரும் நிலையில் அமையப் பெற்றுள்ளன. ''பாரதப் போரில் பாண்டவர்களின் வெற்றிக்குத் துணையாக இருந்த காரணத்தி னாலும் திரௌபதியின் மானத்தைக் காப்பாற்றியதனாலும் திரௌபதியம்மன் கோயில்களில் மகாவிஷ்ணுவின் சிலை இடம் பெறுவதாகக் கூறுவர்''.[16] இவ் அருத்த மண்டபத்திற்கு அடுத்த நிலையில் மகா மண்டபம் இடம் பெறுகின்றது.

*மகா மண்டபம்*

திரௌபதியம்மன் கோயிலில் இடம்பெறும் மகா மண்டபத்தை இருவகையாகப் பிரித்தறியலாம்.

1. முன் சிறு மண்டபம்
2. முன் பெரு மண்டபம்.

*முன்சிறு மண்டபம்*

அருத்த மண்டப நுழை வாயிலின் இரு புறங்களிலும் கிழக்குத் திசையில் மேடை அமைத்து அதன் மேல் முழுமுதற் கடவுளான விநாயகர் சிலையும் முருகன் சிலையும் மாரியம்மன் சிலையும் (கற்சிலை) சூலமும் வைத்து வழிபடு கின்றனர். பின்னர் மரத்தினால் செய்யப்பெற்ற, பல தெய்வ உருவச் சிலைகளும் வண்ணம் தீட்டி வரிசையாக அவ்விடத்தில் வைத்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் திரௌபதியம்மன் மகாவிஷ்ணு, பாண்டவர்களின் உருவச் சிலைகள், சுபத்திரை தபசு செய்யும் அருச்சுனன் உருவம் போன்றவை இக்கோயிலில் சிறப்பிடம் பெறுகிறது.

திரௌபதியம்மன் கோயிலில் இடம்பெறும் மரச் சிலைகள் அனைத்தும் கலைநயத்தோடு காணப்படுகின்றன.

எல்லாத் திரௌபதியம்மன கோயில்களிலும் மர உருவச் சிலைகள் மற்றும் மர வாகனங்கள் இடம் பெறுகின்றன. சான்றாகத் தர்மாபுரி திரௌபதியம்மன் கோயிலில் இடம் பெறும் மர உருவச் சிலைகள் குறிக்கத் தக்கவையாகும்.

சில திரௌபதியம்மன் கோயில்களில் மட்டும் தருமர் சிலை இடம்பெறுவதில்லை. இதற்குக் கூறும் காரணம் "தருமர் கேட்பவருக்கு இல்லையென்று சொல்லாது கொடுக்கும் வள்ளன்மை கொண்டவராதலின், இச்சிலையிருப்பின் இதே சூழலைப் பின்பற்ற வேண்டிய நிலை வரும். எனவேதான் தருமர் சிலை இக்கோயிலில் இடம் பெறவில்லை"[17] என்பார். இதன் மூலம் மக்களின் நம்பிக்கையை ஒருவாறு அறிய முடிகிறது.

இச்சிறு முன் மண்டபத்தில் ஆண்களும் பெண்களும் மற்றும் இளஞ்சிறார்களும் வரிசையாக நின்று திரௌபதியம்மனைப் பார்த்தவாறு வீழ்ந்து வணங்கியும் அவ்விடத்தில் இடம்பெறும் தெய்வச்சிலைகளின் திருப்பாதங்களைத் தொட்டு வணங்கியும் தம் இல்லம் செல்வர்.

சிறு மண்டபத்தில் இடம்பெறும் மேற்கூரை உட்பகுதியில் மிக நீண்ட கருங்கல்லினால் வடக்குத் தெற்காகத் தளம் போன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற் கூரையின் மையப் பகுதியில் கருங்கல்லில் இரு மீன்களின் உருவமும் யானையின் முன் தோற்ற உருவமும் ஒன்றை யொன்று தொடுவது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்வமைப்பு முறையை நோக்கும் போது தளம் அமைக்கப்படுவதற்கு முன் சிற்பக் கலைஞரைக் கொண்டு வடிவமைக்கப்பட்டதா அல்லது தளம் அமைத்த பின்பு வடிவமைக்கப்பட்டதா என்ற அய்யப்பாடு எழும். இதன் மூலம் சிற்பக்கலைத் திறனையும் பழமையையும் அறிய முடிகிறது. இதே சிற்பக்கலை திறனைப் போன்று மண்ணாடிப் பட்டு திரௌபதியம்மன் கோயிலில் உள் மண்டபக் கூரையில் இடம் பெறுவதைக் காணலாம். சிறு மண்டப நுழைவாயிலின் இரு திசைகளிலும் துவாரபாலகிகளின் உருவுகள் நின்ற நிலையில் சுதைச் சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

### முன் பெரு மண்டபம்

முன் பெரு மண்டபத்தில் கீழ் திசையைத் தவிர மற்ற மூன்று திசைகளிலும் சுவற்றில் பல்வேறு நிலையில்

தெய்வங்களின் சுதைச் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் யாவும் வாழ்வாங்கு வாழும் தத்துவங்களை அறிவுறுத்துகின்றன எனலாம். மேலும் வடதிசையில் முத்தால் ராவுத்தர் சிலை கருங்கல்லினால் வடிவமைக்கப் பெற்று அமர்ந்த நிலையில் காணப்படுகின்றது.

திரௌபதியம்மனின் நேர் எதிரே வெளி மண்டபத்தில் சிறு மண்டபம் போன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனை நீராழி மண்டபம் என்று அழைப்பர். அதில் போத்தராசா (Potta Raaza) என்ற காவல் தெய்வம் நின்ற நிலையில் கருங்கல்லினால் கோர உருவத்துடன் வலக்கையில் நீண்ட கத்தி ஏந்தியும், இடக்கையில் சிம்ம உருவத்தைப் பிடித்தவாறும் காட்சி தருகின்றது. இந்நீராழி மண்டபம் கொடிக் கம்பத்திற்கு அருகில் இருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பிள்ளைச்சாவடி திரௌபதியம்மன் கோயிலில் இடம்பெறும் நீராழி மண்டபம் போன்று வேறு எந்தத் திரௌபதியம்மன் கோயில்களிலும் இடம் பெறவில்லை. இம்மண்டபத்தின் மேல் பகுதியில் கிழக்குத் திசையில் திரௌபதியம்மனின் உருவமும் மேற்குத் திசையில் காத்தவராயன் உருவமும் வடதிசையில் கிருஷ்ணனின் உருவமும் தென்திசையில் விநாயகர் உருவமும் சுதைச் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. மற்ற திரௌபதியம்மன் கோயில்களில் சிறு மண்டபம் தனியாக இருக்கும். பொது வெளி மண்டபத்தில் 'போத்தராசா' அல்லது 'முன்னோடியான்' என்ற பெயரில் ஆண் தெய்வம் காவல் தெய்வமாக வணங்கப் படுகிறது.

இத்தெய்வத்துடன் சில திரௌபதியம்மன் கோயில்களில் வேறு ஒரு வடிவம் முத்தால் ராவுத்தர் அல்லது முத்தால் ராயர் என்ற பெயரில் தெய்வமாக வணங்கப் பெறுகிறது. "தமிழ்நாட்டில் பெரும்பாலும் ஆண் தெய்வங்கள் அம்மன் கோயில்களில் துணைத் தெய்வங்களாகவே இருக்கின்றன. கோயில்களில் உள்ள அம்மன் கருவறையைக் காத்து அம்மன் இடும் கட்டளையை நிறைவேற்றுபவைகளாகவே இருக் கின்றன"[18] என்பார் துளசி. இராமசாமி. இதன் மூலம் திரௌபதியம்மன் கோயில்களில் உள்ள துணைத் தெய்வங் களாக அல்லது காவல் தெய்வங்களாகப் போத்த ராசாவும் முத்தாலு ராவுத்தரும் இருப்பது நினைவு கூரத்தக்கது.

## முத்தால் ராவுத்தர் சிலை அமைப்பு

இச்சிலையைப் பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் முத்தால் ராவுத்தர் என்றும் துலுக்கசாமி என்றும் ஊரில் உள்ள மக்கள் குறிப்பிடுகின்றனர். தெலுங்கு மொழி பேசும் இனத்தாருக்குரிய தெய்வமாக முத்தால் ராயர் என்றும் முஸ்லிம் இனத்தாருக்குரிய தெய்வமாக முத்தால் ராவுத்தர் என்றும் கூறப்படுகிறது. இது பற்றிய தெளிவான செய்திகள் கிடைக்கப்பெறவில்லை. எனினும் திரௌபதியம்மனின் பரிவாரத் தெய்வமாக முத்தால் ராயர் கருதப்பெறுகிறார்.

பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் மதிற் சுவற்றை ஒட்டி அல்லது கோயிலின் அருகில் வடதிசையில் பீடம் போன்று அமைக்கப்பட்டு அதன் மேல் அமர்ந்த நிலையில் இச்சிலை நிறுவப்பட்டுள்ளது. பிள்ளைச்சாவடி திரௌபதியம்மன் கோயிலில் இடம்பெறும் முத்தால் ராவுத்தர் சிலை அமைப்புப் போன்றே பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் காண முடிகின்றது. சில திரௌபதியம்மன் கோயில்களில் காவல் தெய்வச் சிலை மாறுபட்டுக் காணப் படுகிறது.

காட்டேரிக்குப்பம் திரௌபதியம்மன் கோயிலில் மதிற் சுவற்றை ஒட்டி வடதிசையில் குதிரைவடிவில் சிறிய கற்சிலை ஒன்று காணப்படுகிறது. இவ்வுருவையே முத்தால் ராவுத்தர் என்று சொல்லி அவ்வட்டார மக்கள் பல வருடங்களாகத் தொடர்ந்து வணங்கி வழிபடுகின்றனர்.

வாதனூரில் உள்ள திரௌபதியம்மன் கோயிலில் கருங்கல்லினால் முத்தால் ராவுத்தர் சிலையும் அருகில் சுதை உருவமாகக் குதிரைச் சிலையும் காணப்படுகின்றன. இக்குதிரை பெரிய தோற்றத்துடன் நின்ற நிலையில் அமைக்கப்பட்டிருக் கிறது. இதே அமைப்புப் போன்றே தர்மாபுரி திரௌபதியம்மன் கோயிலில் சுதையினால் குதிரை உருவம் வடிவமைக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏம்பலம் திரௌபதியம்மன் கோயிலில் சுதையினால் செய்யப்பட்ட முத்தால் ராவுத்தர் சிலையமைப்பு அமர்ந்த நிலையில் பெரிய வயிற்றுடனும் கைகளைக் கால்களின் மேல் வைத்திருப்பது போன்றும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவருக்குக் காவலாகச் சுதையால் நின்ற நிலையில் ஒருவரும், விலங்கும் (நாய்) இருப்பது குறிப்பிடத்தக்கது. முத்தால்

ராவுத்தர் சிலையமைப்புப் போன்றே கரையாம்புத்தூர் திரௌபதியம்மன் கோயிலில் இடம் பெறுவது குறிப்பிடத் தக்கது. ஊருக்கு ஊர் முத்தால் ராவுத்தர் சிலை உருவம் சிற்சில மாறுபாடு இருப்பினும் பொதுவான அமைப்பாகத் தாடியுடனும் பெரிய வயிற்றுடனும் அமர்ந்த நிலையில் கருங் கல்லினால் அல்லது சுதைச் சிற்பமாக இருப்பது குறிக்கத்தக்கது. இவருக் குரிய வாகனமாகச் சுதையால் குதிரை உருவம் இடம் பெறுவது எண்ணத்தக்கது.

## போத்தராசாவின் உருவச்சிலை அமைப்பு

திரௌபதியம்மன் கோயில்களில் போத்தராசா அல்லது முன்னோடியான் என்ற காவல் தெய்வம் கருவறையில் இருக்கும் திரௌபதியம்மனுக்கு முன்னர் நின்ற நிலையில் இடம் பெறும். இடும் கட்டளையை நிறைவேற்றுபவராகவும் இவர் காணப்படுவதாகக் கூறுவர். அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களில் இவ்வுருவத்தின் வலது கரத்தில் நீண்ட கத்தி இருப்பதும் இடது கரத்தில் சிறிய சிம்ம உருவத்தைப் பிடித்துக் கொண்டு இருப்பதும் பொதுவானது.

காட்டேரிக்குப்பம் திரௌபதியம்மன் கோயிலில் காவல் தெய்வமாகப் போத்தராசாவின் கல் உருவச்சிலை ஒன்று வெளி மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இவரது உருவ அமைப்பு ஆவேசமாக இருப்பதைப் போன்று காணப்படுகிறது. இதே அமைப்புப் போன்றே ஏம்பலம் திரௌபதியம்மன் கோயிலில் இடம்பெறும் போத்தராசா உருவமும் அமைந்திருக் கிறது. ஏனைய கோயில்களில் இடம்பெறும் போத்தராசாவைக் காட்டிலும் கரையாம்புத்தூர் திரௌபதியம்மன் கோயிலில் இடம்பெறும் போத்தராசா சிறிய உருவத்துடனும் கழுத்தில் பெரிய மாலையுடனும் இரு கரங்களில் மேற் சுட்டியவற்றுடன் நின்ற நிலையில் உள்ளது.

கரிக்கலாம்பாக்கம் திரௌபதியம்மன் எதிரே கற்சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இக்கற்சிலையில் எவ்வித உருவமும் பொறிக்கப்படவில்லை. இதனையே காவல் தெய்வமான போத்தராசா என்று அழைக்கின்றார். அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களில் இடம் பெறும் போத்தராசா சிலையினின்றும் இது மாறுபட்டுக் காணப்படுகின்றது. பொதுவாகக் காவல் தெய்வமான போத்தராசா அல்லது முன்னோடியான் மூலவரான திரௌபதியம்மனைப் பார்த்தவாறு எல்லாத்

திரௌபதியம்மன் கோயில்களிலும் இடம்பெறுவது குறிக்கத் தக்கது.

*கொடிமரம்*

கோயிலின் கருவறைக்கு நேராக வெளி மண்டபத்தில் மேடை (பீடம்) அமைத்து அதன்மேல் கொடிமரம் நிறுவப் பட்டுள்ளது. இக்கொடி மரத்தை மனிதனின் முதுகுத் தண்டோடு ஒப்புமைப் படுத்திக் கூறுவர். இதன்மூலம் இதன் சிறப்புத் தன்மை புலனாகும். கொடிமரத்தைத் 'துவஜஸ்தம்பம்' என்றும் 'துஜகம்பம்' என்றும் 'கொடிக்கம்பம்' என்றும் 'கொடிமரம்' என்றும் பலவாறு வழங்குகின்றனர். இக்கொடிமரம் பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் நிலையான மரத்தினால் நிறுவப்பட்டுள்ளது. இதே அமைப்புப் போன்று தர்மாபுரி, புராணசிங்கு பாளையம், கூடப்பாக்கம் மற்றும் திருவாண்டார்கோயில் ஆகிய ஊர்களில் நிறுவப்பட்டுள்ள கொடிமரம் குறிப்பிடத்தக்கவையாகும்.

ஏம்பலம் திரௌபதியம்மன் கோயிலின் கொடிமரம் சிமெண்ட் கலவை கொண்டு கட்டப்பட்டதாகும். இதுபோன்ற அமைப்புமுறை வேறு எந்தத் திரௌபதியம்மன் கோயில் களிலும் இடம் பெறவில்லை எனலாம். பொதுவாக யார் ஒருவர் திருக்கோயிலில் கொடிமரம் வைக்கின்றாரோ அவரே அந்தப் புண்ணியத்தில் இறைவனடிச் சேர்வார் என்பது மக்களின் நம்பிக்கையாகும். அவ்வகையில் கொடிமரத்தின் அடியில் பி. முத்தையா ஆச்சாரி மற்றும் மா. வரதராசு நாயக்கர் உபயம் என்று இருவரின் பெயர் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. பார்ப்பதற்கு மரத்தினால் செய்யப்பெற்ற கொடிமரம் போன்றே காணப்படுகிறது. மூன்றுவகை தரமான மரங்களைப் கொடி மரத்திற்காகப் பயன்படுத்தலாம் என்பர். ஆனால் இக்கொடி மரம் அதனின்றும் மாறுபட்டுக் காணப்படுவது சிந்தனைக்குரிய ஒன்றாகும். கொடிமரத்தின் நோக்கமாவது "கொடிமரத்தின் நீளம் கோவிலின் உயரத்திற்கு ஏற்ப இருக்கும். தீயவர்களை அகற்றவும் சிவகணங்களையும் தேவர்களையும் அழைக்கவும் பக்தர்களைப் பாதுகாக்கவும் கொடிமரம் நிறுவப்பட்டுள்ளது"[19] என்பார் சி. இரத்தினம். அவ்வகையில் பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் கொடிமரம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

எல்லாத் திரௌபதியம்மன் கோயில்களிலும் இடம்பெறும் கொடிமரத்தை ஆய்ந்து அறியுங்கால் நான்கு வகையான கொடிமரங்கள் இருப்பதை வகைப்படுத்தலாம்.

1. மரத்தினால் செய்யப்பெற்ற நிரந்தரமான கொடிமரம்.
2. சிமெண்ட் கலவை கொண்டு ஏற்படுத்தப்பட்ட கொடிமரம்.
3. கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட கொடிமரம்.
4. மூங்கில் மரத்தினால் நிறுவப்பட்ட தற்காலிகக் கொடிமரம்.

### *1. மரத்தினால் செய்யப்பெற்ற நிரந்தரமான கொடிமரம்*

பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் தேக்கு மரத்தினால் செய்யப்பெற்ற கொடிமரமே காணப்படுகிறது. இக்கொடிமரம் பீடத்தின் மேல் அமைக்கப்பெற்றிருக்கிறது. இப்பீடத்தைப் 'பத்திர பீடம்' என்றழைப்பர். இதன் அருகில் பலிபீடம் காணப்படுகிறது. இதன் நோக்கமாவது ஒவ்வொரு வரும் கோயிலுக்குச் செல்லும்போது பிணிப்பு அறுமாறு மனத்தைப் பலியிட வேண்டும். இதன் பொருட்டே ஆன்மாவைப் பாசக்கயிறு சுற்றியுள்ளதை நினைவுகூரும் வகையில் கொடி மரத்தில் கயிறு சுற்றப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் தருப்பைச் செடியைக் கொண்டு கொடிமரத்தைச் சுற்றுவர். பின்னர் மிக நீண்ட வெண்ணிறத் துணியால் மஞ்சள் நீர் தெளித்து கொடிமரத்தின் மீது சுற்றுவர். இந்நிகழ்ச்சி கொடிமரத்தில் 'கொடியேற்றம்' நிகழ்ச்சியின்போது நடைபெறும். விழா முடிவடைந்ததும் கொடிமரத்திலிருந்து கொடியை அவிழ்த்து தாம்பலத் தட்டில் வைத்து எடுத்துச் சென்று மூலவர் சன்னதியில் வைப்பர். கொடி ஏற்றுதலும் கொடி இறக்குதலும் பிராமணரைக் கொண்டு கோயிலின் ஆகம விதிப்படி நடைபெறும். சில சமயம் கொடியிறக்குதலின் போது கோயில் பூசாரியைக் கொண்டு நடைபெறும்.

### *2. சிமெண்ட் கலவை கொண்டு கொடிமரம் அமைத்தல்*

ஏம்பலம் திரௌபதியம்மன் கோயிலின் வெளி மண்டபத்தில் சிமெண்ட் கலவை கொண்டு செய்யபெற்ற கொடிமரம் இடம்பெற்றுள்ளது. இவ்வமைப்புப் போன்று வேறு எந்தத் திரௌபதியம்மன் கோயில்களிலும் இடம்பெற வில்லை. இக்கொடிமரத்தின் அடியில் தெய்வங்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

### 3. கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட கொடிமரம்

கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட கொடிமரம் கரிய மாணிக்கம் திரௌபதியம்மன் கோயிலில் இடம் பெறுகின்றது. இதுபோன்ற கொடிமரம் வேறு எந்தத் திரௌபதியம்மன் கோயில்களிலும் இடம்பெறவில்லை எனலாம். இக்கொடிமரம் சுமார் பதினைந்து அடி உயரம் கொண்டதாகும். இக்கொடி மரத்தின் அடியில் தெய்வங்களின் உருவங்கள் வடிவமைக்கப் பட்டுள்ளன.

### 4. மூங்கில் மரத்தினால் நிறுவப்பட்ட தற்காலிகக் கொடிமரம்

சில திரௌபதியம்மன் கோயில்களில் விழாக் காலங்களில் மட்டும் மூங்கிலான கொடிமரத்தை நட்டு அதன்மீது மஞ்சள் தடவித் தருப்பைப்புல் போன்றவற்றைச் சுற்றுவர். பின்னர் கொடிமரத்தின் மீது மஞ்சள் நீர் தெளித்து மாங்கொத்து வைத்துக் கட்டுவர். இந்நிகழ்ச்சி பிராமணரைக் கொண்டு நல்ல வேளையில் நடைபெறும். திருவிழா முடிந்த பிறகு மூங்கிலான கொடிமரத்தை எடுத்துவிடுகின்றனர்.

பிள்ளைச்சாவடி திரௌபதியம்மன் கோயிலில் இடம்பெறும் கொடிமரத்தின் அடிப்பகுதியில் பித்தளைத் தகட்டினால் நான்கு திசைகளிலும் தெய்வங்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவை முறையே கிழக்குத் திசையில் திரௌபதியம்மனின் உருவமும், மேற்குத் திசையில் காத்தவராயன் உருவமும் வடக்குத் திசையில் கிருஷ்ணனின் உருவமும், தெற்குத் திசையில் விநாயகர் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. நிலையான கொடிமரம் இடம்பெறும் திரௌபதியம்மன் கோயில்களில் பல்வேறு தெய்வங்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இறைவன் அனைத்துத் திசைகளிலும் உள்ளான் என்பதைச் சுட்டுவதாக இது அமைகின்றது.

### பலி பீடம்

ஆய்வுக்குட்பட்ட அனைத்துத் திரௌபதியம்மன் கோயில் களிலும் நிலையான பலி பீடம் அமைக்கப்பட்டுள்ளது. தாமரை மலரைத் தலைகீழாக வைத்ததுபோன்று கருங்கல்லால் பலி பீடம் நிறுவப்பட்டுள்ளது. இதன் நோக்கமாவது மனிதன் பலி பீடத்தை நெருங்கியதும் நான் இச்சை உடையவன் அல்லன் என நினைத்துத் தன் சுயநல இச்சைகளைப் பலி கொடுக்க வேண்டும்

என்பர். இதனால் பூதான்மா நிலையினின்று அந்தரான்மா நிலையை அடைவர். எனவே பலிபீடம் பிணிப்புகளின் நீக்கத்திற்குக் காரணமாகிறது. எனவே இதனைப் 'பலி நாதர்' என்று அழைப்பர். மக்கள் பலி பீடத்தைத் தொட்டு வணங்கிய பின்னர் கருவறையில் இருக்கும் திரௌபதியம்மனை வணங்கி வழிபட்டுச் செல்வர். நிலையானக் கொடிமரம் இல்லையா யினும் நிரந்தரமான பலிபீடம் இல்லாத திரௌபதியம்மன் கோயிலே இல்லை எனலாம்.

## திருச்சுற்று (பிரகாரம்)

பிள்ளைச்சாவடி திரௌபதியம்மன் கோயில் ஒரே திருச்சுற்றைக் கொண்டு அமைகின்றது. இதே அமைப்புப் போன்றே ஆய்வுக்குட்பட்ட அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களும் அமைகின்றன. கருவறையில் இருக்கும் திரௌபதியம்மனை வணங்கி வழிபட்ட பின்னர் இடமிருந்து வலமாகக் கோயிலை மும்முறை வலம்வந்து வணங்குவர். அவ்வமயம் திருச்சுற்றில் இடம்பெறும் தெய்வங்களின் திருப்பாதங்களைத் தொட்டு வணங்குவதுண்டு. அவற்றில் குறிப்பிடத்தக்க தெய்வங்களாகத் துர்க்கையம்மன், மாரியம்மன், இராகவேந்திரா சன்னதி ஆகியவை இடம்பெறுவது குறிப்பிடத் தக்கது. தென்புறத்தில் சமையல் அறையும் இராகவேந்திரா சன்னதியும் வட புறத்தில் பெரிய வாகனம் நிறுத்தும் இடமும் பல அறைகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றன. இராகவேந்திரா சன்னதி இடம் பெறுவதன் அடிப்படைக் காரணத்தைப் போதிய அளவில் பெற இயலவில்லை.

## துர்க்கையம்மன் சன்னதி

துர்க்கையம்மனின் திருஉருவம் திரௌபதியம்மன் கோயிலில் திருச்சுற்றில் இடம் பெறுகிறது. திருச்சுற்றின் வடபுறம், வட திசை நோக்கிய நிலையில் இவ்வம்மன் அமைகிறது. துர்க்கையம்மன் எருமைத் தலைமீது நின்ற நிலையில் ஆவேசமாக இருப்பதைப் போன்று சுதைச்சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது. துர்க்கையம்மன் எழுந்தருளியுள்ள இடத்தில் குங்குமம் (சிகப்புப் பொடி) பிரசாதமாகக் கொடுக்கப் படுகிறது. இதேபோன்ற அமைப்புடைய துர்க்கையம்மன் சூரமங்கலம் திரௌபதியம்மன் கோயிலில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

### வாகனங்கள் இடம் பெறும் அறை

திருச்சுற்றின் வட திசையில் பல அறைகள் காணப் படுகின்றன. இவ்வறை ஒன்றில் மிகப் பெரிய கருட வாகனம் நிறுத்தப்பட்டுள்ளது. விழாக்காலங்களிலும் சிறப்பு நாட் களிலும் இக்கருட வாகனத்தைப் பயன்படுத்துவர். பின்னர் பாதுகாப்பாக இவ்வறை ஒன்றில் வைக்கப்படும். இதே போன்று ஒவ்வோர் ஊரின் - திரௌபதியம்மன் கோயில் களிலும் மரத்தினால் செய்யப் பெற்ற மிகப்பெரிய கருட வாகனம், சிங்க வாகனம், அன்ன வாகனம் போன்றவை கலைநயத்துடன் வடிவமைக்கப் பெற்று இடம் பெறுகின்றன. சான்றாகச் சூரமங்கலம், முருங்கப்பாக்கம், புராணசிங்குப் பாளையம் குறிப்பிடத்தக்கவையாகும். திருக்கோயிலையும் கோயிலில் இடம் பெறும் வாகனங்களையும் அறங்காவலர் குழுவினரும் கோயிற் பூசாரியும் செவ்வனே பராமரித்து வருகின்றனர்.

பிற அறைகளில் விழாக்காலம் தவிர மற்ற நாட்களில் படித்த இளைஞர்களைக் கொண்ட சமூக அமைப்பின் மூலம் ஏழை மாணவர்களுக்கு இரவுப் பாடசாலை நடத்தப்படுகிறது. விழாக்களில் விழா நிகழ்ச்சியைக் காண்பதற்காக விடுமுறை அளிக்கப்படுகிறது. அவ்வமயம் அந்த அறைகளைத் கூத்து ஆசிரியர்களும் பிற கலைஞர்களும் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

திருச்சுற்றில் ஏம்பலம் திரௌபதியம்மன் கோயிலின் தென்புறத்தில் ஒரு சிறிய சன்னதியில் அரவான் தலை மட்டும் சிமெண்ட் கலவை கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அவ்வுருவத்திற்குப் பல வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. இவ்வரவான் சிலை வைத்திருக்கும் அறையைத் திருவிழாக் காலங்களைத் தவிர மற்ற நாட்களில் கதவை மூடித் தாழ்ப்பாள் இடுவர். ''சிறுவர்கள், கன்னிப் பெண்கள், கருவுற்ற மங்கையர்கள் பார்த்தால் பயப்படுவர் என்ற காரணத்தினால் கதவை மூடி வைப்பது வழக்கம்''[20] என்பார் மு. கதிர்வேல். இதே அமைப்புப் போன்றே பிள்ளையார்குப்பம் கூத்தாண்டவர் கோயிலில் அரவான் தலை (கற்சிலை) வைக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக மடுகரைத் திரௌபதியம்மன் கோயிலில் கூத்தாண்டவர் சன்னதி இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

பிள்ளைச்சாவடி திரௌபதியம்மன் கோயிலில் வட கிழக்குத் திசையில் பழமை வாய்ந்த கிணறு ஒன்று உள்ளது. விடியற் காலையில் கோயிற் பூசாரி நீராடி இக்கிணற்றிலிருந்து நீரைக் கொண்டுவந்து கருவறையில் இருக்கும் திரௌபதியம்மனை நீராட்டி வழிபாடு செய்வர். பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் கிணறு இடம் பெறுவதும் பின்னர்க் குழாயின் மூலம் நீர் கொண்டுவந்து அம்மனை வழிபாடு செய்வதும் சிறப்பிடம் பெறுகிறது.

## முன் முகப்பு கோபுரங்கள் : இணைந்த நிலையில் திருக்கல்யாணக் காட்சி

பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் மதிற் சுவற்றுடன் கூடிய முன் முகப்புக் கோபுரங்கள் இடம் பெறுகின்றன. இக்கோபுரத்தில் மகாவிஷ்ணு அருகில் இருக்க அருச்சுனன் திரௌபதி ஆகிய இருவர்களின் திருக்கல்யாண நிகழ்ச்சி சுதையினால் உருவாக்கப்பட்டிருக்கும். களஆய்வுக்குட் பட்ட திரௌபதியம்மன் கோயில்களில் இவ்வாறு இருப்பதைக் காணமுடிகிறது. சான்று : பிள்ளைச்சாவடி திரௌபதியம்மன் கோயில், சூரமங்கலம், கூடப்பாக்கம், திருவாண்டார்கோயில், கரிக்கலாம்பாக்கம், மணவெளி, கிருமாம்பாக்கம், சோரப்பட்டு, சஞ்சீவி நகர், இலாஸ்பேட்டை, கூனிச்சம்பட்டு, ஏம்பலம், மடுகரை, பாகூர், நெட்டப்பாக்கம், அரியாங்குப்பம், புதுச்சேரி முதலியவையாகும். இன்றும் திருமண மண்டப முகப்பில் திருக்கல்யாண நிகழ்ச்சியினைக் சுதைச்சிற்ப வடிவில் அமைந்துள்ளனர்.

## தனித்த நிலையில் திரௌபதியம்மனின் திருக்காட்சி

சில திரௌபதியம்மன் கோயில்களில் முன்முகப்பு கோபுரத்தில் துவார பாலகிகளுடன் திரௌபதியம்மன் மட்டும் நின்ற நிலையில் சுதைச்சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. திரௌபதியம்மனின் வலக்கரத்தில் கிளியுடன் கூடிய பூங்கொத்து ஏந்தியவாறும், இடக்கரம் இயல்பாகத் தொங்கிய நிலையில் மூலவர் சிலையமைப்புப் போன்றே காணப் படுகின்றது. சான்று : அரும்பார்த்தபுரம், கலிதீர்த்தாள்குப்பம், தர்மாபுரி, புராண சிங்குபாளையம், கரையாம்புத்தூர் போன்றவை.

## திரு உருவங்கள் காட்டும் கலப்பு நிலை

திரௌபதியம்மன் கோயிலில் காணப்படும் திருஉருவங் களை நோக்கும்போது கலப்புநிலை இருப்பது தென்படுகிறது.

சிவன், பார்வதி போன்ற முதன்மைத் தெய்வங்கள் சுதைச் சிறப்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இவர்களுடன் உறவுடைய விநாயகர், முருகன் போன்ற தெய்வங்களும் இடம்பெறு கின்றன. மேலும் மாரியம்மன், துர்க்கையம்மன் போன்ற பிற தெய்வங்களும் காணப்படுகின்றன. புராணத் தொடர்பில்லாத அனுமார் சிலை அரிதாக இடம்பெற்றுள்ளது. இது இடம் பெற்றிருப்பது ஆய்வுக்குரியதாக உள்ளது. இறை அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவ்வுருவம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது பொதுவான கருத்தாகும். காவல் தெய்வ மான போத்தராசா, முத்தாலு ராவுத்தர் போன்ற சிலைகள் கோயிலில் இடம்பெறுகின்றன. இதன் மூலம் திரௌபதியம்மன் கோயில் அமைப்பு முறையில் கலப்பு நிலை இருப்பதை அறியமுடிகிறது.

## திருக்கோயிலின் உடமைப் பொருள்களும் நிர்வாக முறையும்

திரௌபதியம்மன் கோயிலுக்கு உரிமையானவற்றில் உற்சவத் திருவுருவங்கள் ஆகும். அத்திரு உருவங்களின் மேல் அணிவிக்கப்படும் ஆபரணங்கள் குறிப்பிடத்தக்கவை. மேலும் இக்கோயிலுக்கென்று நிலங்கள் ஒவ்வோர் ஊரிலும் இடம் பெறுகின்றன. இந்நிலத்தின் மூலம் வரும் நிதி, வழிபாடு மற்றும் விழாக்கள் நடத்தவும் கோயிலைப் பராமரிக்கவும் ஓரளவு பயன்படுகின்றது எனலாம். மேலும் அரசுப் புறம்போக்கு மரங்கள் அல்லது அரசுக்குச் சொந்தமான மரங்களை அறங்காவலர் குழுவினர் மொத்த ஏலம் எடுப்பர். பின்னர் அம்மரங்களைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து ஊரார்க்கு ஏலம் விடுவர். இவ்வேலத்தின் மூலம் வரும் நிதியைக் கொண்டு அறங்காவலர் குழுவினர் ஆண்டுத் திருவிழாவைத் திரௌபதியம்மன் கோயிலில் நடத்துகின்றனர். சான்று: பிள்ளைச்சாவடி, சோரப் பட்டு போன்றவை.

## அறங்காவலர் குழுவின் பணிகள்

திரௌபதியம்மன் கோயிலில் தினமும் வழிபாடு நடை பெறுவதை மேற்பார்வையிடவும் கோயில் நிலங்களிலிருந்து வரும் வருவாயைக் கவனிக்கவும் திருக்கோயிலைப் பராமரிக்கவும் அறங்காவலர் குழு உள்ளது. இக்குழுவே பூசாரியையும் வேலை யாளையும் தேர்ந்தெடுக்கிறது. கோயிலைச் சுத்தம் செய்து தினசரி வழிபாடு நடத்த பூசாரிக்கு மாதவருமானமோ அல்லது நிலமோ அல்லது நெல்லோ ஊருக்கு ஏற்றவாறு வழங்கப்

படுகிறது. மேலும் திரௌபதியம்மன் கோயிலை ஒட்டியே பூசாரி அல்லது அர்ச்சகருக்கு வீடு வழங்கப்படுகிறது (சான்று : தருமாபுரி, காட்டேரிக்குப்பம் திரௌபதியம்மன் கோயிற் பூசாரி) திருக்கோயிலில் இடம்பெறும் பூசாரியும் இதை ஒரு தெய்வீகப் பணியாகக் கருதி வழிபாட்டை மேற்கொள்கின்றார். உரிய நேரத்தில் வழிபாட்டைச் செய்தால்தான் வழிபாடு சிறப்புறும். இம்மக்களும் நீண்ட நாள் நோய் நீங்கி வளம்பெற்று வாழ்வர். இதை மனதிற்கொண்டே கோயிற் பூசாரியை அவ்வூரிலேயே குடி வைத்திருப்பது எண்ணத்தக்கது. இந்த நடைமுறை பொதுவாகவே சிற்றூர்க் கோயில்களில் காணப் படுவதுதான், எனினும் சிற்சில வேறுபாடுகள் தென்படுவது சுட்டத்தக்கது.

## சமயப்பணி ஆற்றுதல்

திரௌபதியம்மன் கோயில்களில் சிறப்பான வழிபாடு களைச் செய்ய அனைத்து முயற்சிகளையும் அறங்காவல் குழுவினர் செய்து வருகின்றனர். கண்ணன் பிறப்பு மற்றும் சிவராத்திரி போன்ற விழாக்களையும் நடத்துகின்றனர். கண்ணன் பிறப்பு (கிருஷ்ண ஜெயந்தி) விழாவின் போது யாதவகுல மக்கள் முன்னின்று உறிகட்டித் திருவிழாவைக் கோயிலிலும் தெருக்களிலும் சிறப்பாக நடத்துகின்றனர். சிவராத்திரியின்போது சிவ வழிபாட்டைப் பின்பற்றுவோரில் பெரும்பாலோர் உண்ணா நோன்பிருந்து கண்விழித்து இறைவன் திருப்புகழைப் பாடி மகிழ்வர். பின்னர் ஆகம விதிகளின்படி அமுது செய்து அனைவருக்கும் கொடுப்பர். திரௌபதியம்மன் கோயிலில் ஆண்டுக்கொருமுறை விழா மட்டும் அல்லாமல் புதிய வருடப் பிறப்பின் போதும் கிருஷ்ண ஜெயந்தியின் போதும் வைகுண்ட ஏகாதசியின்போதும் சுவாமியை அலங்காரம் செய்து மங்கல இசைமுழங்க ஊர்வலமாக எடுத்துவருவர். இதுபோன்ற சமயப் பணிகளைச் சிறப்புறச் செய்யும் அறங்காவலர் குழுவின் பணி போற்றுதற்குரியதாகும். எனவே கோயில் உற்சவங்கள் செம்மையாக நிகழ வழிகாட்டுபவர்களாக அறங்காவலர்கள் உள்ளதை உணரலாம்.

## சமுதாயப் பணி ஆற்றுதல்

பண்டைக்காலந் தொட்டு கோயில்கள் சமுதாயத்தின் ஆற்றல்மிக்க இடங்களாகவே இருந்துள்ளன. இன்றும் கோயிலைத் தழுவிய மக்கள், மக்களைத் தழுவிய கோயிலும்

எனப் பண்டைத் தமிழ்ச் சமுதாய அமைப்பைப் போலவே நடைமுறையில் செயல்பாடுகள் வருவதைக் காணமுடிகிறது. ''சமுதாயப்பணிச் சிறக்க நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் திருக்கோயில் தத்துவம் மேலாண்மைபெற்று விளங்க வேண்டும்''[21] என்பார் குன்றக்குடி அடிகளார். கோயிலைச் சமுதாய இடமாக மக்கள் கொண்டிருந்தனர் என்பதற்கு இன்று நடைபெற்றுவரும் ஊர்ப் பொதுக்கூட்டம், கருத்தரங்கம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இன்றும் திரௌபதியம்மன் கோயில்களில் மாதம் ஒருமுறை ஊர்ப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. அப்பொதுக் கூட்டம் உள்ளூர் நீதிமன்றமாகச் செயல்பட்டு வருகிறது. இக்கூட்டம் கோயிலில் நடைபெறுவதால் மக்கள் மனசாட்சியுடன் நேர்மையாக நடந்துகொள்கின்றனர். தவறு செய்ததற்குத் தண்டனையாக அபராதத் தொகை கட்டுதலும் மேற்கொண்டு தவறு செய்யாமல் இருக்க உறுதி ஏற்பதும் இம்மன்றத்தில் மேற்கொள்ளப் பெறுகின்றன. தண்டனைக்கேற்றவாறு அபராதம் பெறப்பட்டுக் கோயிலின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவர். இன்றும் பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் இம்முறை கடைபிடிக்கப் பட்டு வருகின்றன.

### திருக்கோயிலே கல்விச்சாலையாகத் திகழ்தல்

திரௌபதியம்மன் கோயிலில் ஏழை எளிய மாணவர்களுக்காக இரவு பாடசாலை, படித்த இளைஞர் அமைப்பின் துணைக்கொண்டு நடத்தப்படுகிறது. மாணவர், மாணவியர்களுக்கு நல்லொழுக்கம் கற்றுத்தரவும், அறிவுக்கண் திறக்கவும் சில தொண்டு நிறுவனங்கள் கோயிலுடன் இணைந்து பல பணிகளைச் செய்து வருகின்றன.

### கருத்தரங்கம்/பட்டிமன்றம் நடத்துதல்

தமிழரின் தாய்மொழியாம் தமிழையும் சமயத்தையும் வளர்க்கும் வண்ணம் பல தத்துவ அறிஞர்கள் பங்குகொண்டு ஆகமங்களின்படித் தனிச்சிறப்புகளை ஆராய்ந்து ஆய்வுரைகளாகத் திருவிழாவில் வழங்குவர், திருக்குட நன்னீராட்டு விழாவின் போது வெளியிடப்படும் சிறப்பு மலரும் திரௌபதியம்மன் கோயிலில் இடம் பெறுகின்றது. தனிச் சொற்பொழிவுகளும் நடத்தப்படுகின்றன. மேலும் பட்டிமன்றம், வழக்காடு மன்றம் போன்றவைகளின் மூலம் வழிபாட்டை முதன்மையாகக் கொண்ட சமுதாயப் போக்குகளும் ஆராயப் பெறுகின்றன.

## தொழிலாளர்கள் நல்வாழ்வு பெறுதல்

கோயில் விழா கொண்டாடுவதன் நோக்கம் திரௌபதியம்மன் அருள்பெறுதல் எனலாம். அதற்கு அடுத்த நிலையில் பல்வேறு பட்ட தொழிலாளர்கள் ஊதியம் பெற வாய்ப்புக் கொடுக்கப்படு கிறது. பொதுவாக எல்லாக் கிராமங்களிலும் விவசாய வேலை முடிந்த பிறகே விழாவைத் துவக்குகின்றனர். விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் ஒரு சிறு பங்கை விழாவிற்குக் கொடுக்கின்றனர். அம்மனின் அருளால் நல்ல விளைச்சல் ஏற்பட்டதாகக் கருதும் போக்கினை மக்களிடம் காணமுடிகிறது. கோயிலில் நிகழும் பொதுப் பொங்கலிடும் நிகழ்ச்சியில் உழைப்பாளிகள் பலன் பெறுகின்றனர். தொழிலாளர் களின் கூட்டுழைப்பால் மட்டுமே ஊர்த் திருவிழாக்கள் நிகழ முடியும். எனவே திருவிழாக்களின்போது அவர்களுக்குப் பல வசதிகளும் வருமானங்களும் கிடைக்கின்றன. அதைப் போலவே இசைக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள் ஆகியோர் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மக்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்துகின்றனர். இந்நிகழ்ச்சிகள் யாவும் மனத்திற்கு விருந்தளிக்க வல்லதாக அமைகின்றன. இதுபோன்ற நிகழ்ச்சிகளை விழாக் காலங்களில் மட்டுமே காணமுடியும். விழாவின்போது கலைஞர்கள் சிறப்பும் வருவாயும் பெறுவது பொதுவான நடைமுறையாகும்.

விழாக்களினால் கலை ஆற்றலும் கலை அனுபவமும் மேலோங்கும் நிலை ஏற்படுகின்றது. கலைகளின் வளர்ச்சிக்குத் திருவிழாக்களை முதன்மையாகக் கொள்வது மிகையாகாது. கலைகள் வளருவதன் மூலம் கலைஞர்களும் வளர்ந்து மக்கட் சமுதாயத்திற்கும் கலைக்கும் உள்ள தொடர்பினை ஏற்படுத்த முடிகிறது.

## திருவிழா ஒருமித்த உணர்வை ஏற்படுத்தல்

மக்களுக்கு ஓர் ஆன்மீகச் சூழ்நிலையை உருவாக்கித் தருகின்ற நிலை விழாக் காலங்களில் காணமுடியும். இச்சூழல் களில் மக்கள் ஆன்மீகச் சிந்தனை பெற்று ஆன்மாவினைப் பற்றிய செய்திகளை அறியும் வண்ணம் அமைகிறது. இவ்விழாக் காலங்களை ஒவ்வொரு மனிதனும் பயன்படுத்திக் கொண்டால் இந்நாட்களை இம்மையில் அடையும் பயனுள்ள நாட்களாகக் கொள்ளலாம்.

மக்கள் அனைவரும் ஒருமித்த உணர்வுடனும் வலிமை யுடனும் இருப்பதைத் திருத்தேர் விழா எடுத்துக்காட்டும் 'ஊர்கூடித் தேர் இழுப்பது' என்பது பொதுமொழி. விழாக் காலங்களில் திரௌபதியம்மன் வீதியுலா வரவேண்டி மக்கள் தெருக்களில் உள்ள குப்பைகளை அகற்றியும் வழியில் உள்ள மரங்களை வெட்டியும் ஒழுங்குபடுத்துவர். இதன்மூலம் ஊர் புதுப்பொலிவுடனும் சுகாதாரத்துடனும் காணப்பெறும். இதுபோன்று ஒவ்வொரு கிராமங்களிலும் ஆண்டுதோறும் நடைபெறும். அவ்வமயம் எவ்விதப் பிரச்சனைகளும் ஏற்படா வண்ணம் அறங்காவல் குழுவினர் பார்த்துக்கொள்வர். எல்லாம் வல்ல திரௌபதியம்மனின் அருள் வேண்டி மக்கள் ஒருங்கிணைந்து இப்பணிகளைச் செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விழாக் காலங்களில் கலைஞர்கள் மட்டும் அல்லாமல் பிறரும் பங்குகொண்டு தத்தம் தொழிலைச் செவ்வனே செய்வதைக் காணமுடிகிறது. சான்று : தீவட்டி பிடிப்பவன், மின்விளக்கு அலங்காரம் செய்பவன், வானவெடி விடுவோர், மேளக்காரர் போன்றோரின் செயல்பாடுகள் குறிப்பிடத் தக்கவை. எனவே சிற்றூர்க் கோயில்கள் - குறிப்பாகத் திரௌபதியம்மன் கோயில்கள் பற்ட ப பணிகளைச் செய்வதை உணரமுடிகிறது.

## தொகுப்புரை

1. கோயில்களை ஆய்வு செய்வதன் மூலம் தமிழர்களின் சமயப் பண்பாட்டை அறிந்து கொள்ள முடிகிறது. சமயம் என்பது சமூக உறவை வளர்க்கும் ஒரு கருவியாகச் செயல் படுவதை அறியலாம்.
2. 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றும் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் பொன் மொழிகள் கோயிலின் சிறப்பைத் தெரிவிக்கின்றன.
3. திருக்கோயில்கள் வழிபாட்டிடங்களாக (Place of workship) மட்டும் அல்லாமல் நாட்டின் சமய வரலாற்றுக்கும் சமூகம், கலை, பண்பாடு போன்றவற்றின் வளர்ச்சிக்கும் இடம் அளிப்பனவாகத் திகழ்கின்றன.
4. திருக்கோயில் வழிபாட்டால் நல்வாழ்வையும் வீடு பேற்றினையும் பெற இயலுமென்பது மக்களின் ஆழமான நம்பிக்கையாகும்.

5. மனிதனின் உண்மைநிலையைக் கூறி அவனைத் தெய்வ நிலைக்கு உயர்த்தத் திருக்கோயில்கள் தத்துவ விளக்கமாகத் திகழ்கின்றன எனலாம்.

6. மனிதனைத் தெய்வமாக்கும் திருப்பணிக்காக மனித உடம்பின் உருவமாகவே ஆகமங்களின்படித் திரௌபதியம்மன் கோயில்கள் இருப்பதை ஒப்பிடலாம்.

7. அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களிலும் மூலவர் சிலை நின்ற நிலையில் வலக்கரத்தில் கிளியுடன் கூடிய பூங்கொத்தை ஏந்தியவாறும் இடக்கரம் இயல்பாகத் தொங்கிய நிலையிலும் காணப்படுகின்றன. மாறுபட்டும் காணப்பெறுகிறது.

8. திரௌபதியம்மன் மூலவர் சிலைக்கு, அபிடேகத்திற்குப் பின்னர் மஞ்சள் நிற ஆடையோ அல்லது பச்சை நிற ஆடையோ அல்லது செழுமை நிற ஆடையோ அணிவிக்கப் படும். இவையாவும் வளமை, செழுமை கருதியே மேற்கொள்வதாக மக்கள் நம்பிக்கை கொள்கின்றனர்.

9. கருவறையில் இருக்கும் தொங்கும் விளக்கு அல்லது காமாட்சியம்மன் விளக்கு ஏற்றிய பின்பு மூலவரான திரௌபதியம்மனுக்குக் கற்பூர தீபம் காண்பிக்கப்படுகிறது.

10. போத்தராசா என்ற காவல் தெய்வம் மூலவர் சிலைக்கு நேர் எதிரே வலக்கையில் கத்தியை உயரத் தூக்கிய நிலையிலும் இடக்கையில் சிம்ம உருவத்தைப் பிடித்திருப்பது போலவும் நின்ற நிலையில் காணப்படுகிறது.

11. முத்தால் ராவுத்தர் அல்லது முத்தால் ராயர் என்ற மற்றொரு காவல் தெய்வம் அமர்ந்த நிலையில் தாடியுடனும் பெரிய வயிற்றுடனும் தெற்குத்திசை நோக்கியவாறு அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களிலும் காணப்படுகின்றது.

12. பெண்தெய்வக் கோயிலான - திரௌபதியம்மன் கோயில் களில் ஆண் தெய்வமான இரு காவல் தெய்வங்கள் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

13. திரௌபதியம்மன் கோயிலின் வெளிமண்டபத்தின் தளம் நீண்ட கருங்கல்லால் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இத்தளத்தின் உள் மண்டபத்தில் இரு மீன்களின் உருவமும் யானையின் முன் உருவமைப்பு போன்று பொறிக்கப் பட்டுள்ளன. இது கோயிலின் பழமையை உணர்த்துவதாகக் கூறுகின்றனர்.

14. சில திரௌபதியம்மன் கோயில்களின் வெளிமண்டபம் சுட்ட செம்மண் ஓடுகளாலும் சிமெண்ட் தகடுகளான கூரை களாலும் உருவாக்கப்பட்டுள்ளது.

15. கோயிலின் கொடிமரத்தை மனிதனின் முதுகுத் தண்டோடு ஒப்பிடுவதன் மூலம் கொடிமரத்தின் சிறப்பினை அறிய முடிகிறது. இக்கொடிமரம் பல பொருட்களால் உருவாக்கப் பட்டிருத்தலைக் கள ஆய்வுவழி அறிய முடிகிறது.

16. பத்திரபீடத்தின் மேல் நிலையான கொடிமரம் நிறுவப் படுகிறது. கொடிமரத்தின் அடிப்பகுதியில் நான்கு திசை களிலும் தெய்வங்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இத்தெய்வங்கள் யாவும் மக்களைக் காக்கும் தெய்வங்கள் எனக் கூறுவர்.

17. பலிபீடம் பிணிப்புகளின் நீக்கத்திற்குக் காரணமாகத் திகழ்கிறது. எனவே இதைப் பலிநாதர் என அழைப்பர். நிலையான கொடிமரம் இல்லையாயினும் நிரந்தரமான பலிபீடம் இல்லாத் திரௌபதியம்மன் கோயிலே இல்லை எனலாம். இதன் மூலம் பலிபீடத்தின் அவசியம் உணரலாம்.

18. திரௌபதியம்மன் கோயில்களில் சிவன், பார்வதி, முருகன், விநாயகர், மாரியம்மன், துர்க்கையம்மன் போன்றவை சுதைச் சிற்பங்களாகவும் கருங்கல்லினாலும் வடிவமைக்கப் பட்டுள்ளன. இதன் மூலம் வழிபாட்டில் கலப்புகள் இருப்பது தென்படுகிறது.

19. அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களிலும் வெண்கலச் சிலைகளும் (அருச்சுனன், திரௌபதி, மகாவிஷ்ணு) மரத்தினால் செய்யப்பெற்ற தெய்வங்களின் உருவச்சிலை களும் மிகப்பெரிய வாகனங்களும் இருப்பதைக் காண முடிகிறது.

20. அரவான் சிலை பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் காகித அட்டைகளினாலும் சில கோயில் களில் குயவரைக்கொண்டு மண்ணாலும் உருவாக்கப் படுகிறது.

21. திரௌபதியம்மன் கோயிலுக்கென்று அசையும் பொருட்களும் அசையாப் பொருட்களும் உள்ளன. எனினும் அசையாப் பொருட்களின் மூலம் வரும் நிதியைக் கொண்டு வழிபாடும் விழாவும் நடத்துவது பொது மரபாகும்.

22. திருக்கோயிலில் அறங்காவலர் குழுவின் பணியாக வழிபாட்டை நடத்துதலும் கோயிலைப் பராமரித்தலும் முதன்மையாகக் கொள்ளப்படுகின்றன.

23. திரௌபதியம்மன் கோயிலே பஞ்சாயத்து இடமாகவும் கல்விச்சாலையாகவும் செயல்பட்டு வருவதைக் கள ஆய்வு வழி அறியமுடிகிறது.

24. விழாக்காலத்தில் கலைஞர்கள் மக்களை மகிழ்விப்பதோடு மட்டுமல்லாமல் நல்ல பல பக்திக் கதைகளைக் கூறித் தெய்வச் சிந்தனைகளையும் ஊட்டுகின்றனர். இதனால் கலைஞர்கள் நல்வாழ்வு பெறுதலோடு மட்டும் அல்லாமல் மக்களையும் நல்வாழ்விற்கு அடித்தளமிடுகின்றனர்.

*சான்றெண் விளக்கம்*


1. எஸ். இராதாகிருஷ்ணன், நம்பிக்கையின் மறுமலர்ச்சி (த. ஆ), ப.12.
2. கலைக் களஞ்சியம், தொகுதி நான்கு, ப. 44.
3. நாகப்பா. நாச்சியப்பன், திருக்கோயில் வழிபாடு, ப. 12.
4. அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப. 468.
5. சு. இராஜசேகரன், திருக்கோயில்களில் தொழில் சமுதாய உறவுகள், ப. 3.
6. துளசி. இராமசாமி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், ப. 6
7. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 143.
8. கோ. முத்துசாமிப் பிள்ளை, கும்பேசுவரர் திருக்கோயிலும் மகாமகத் திருவிழாவும் ப. 1.
9. வ. தேனப்பன், ஒன்பது நகரக் கோயில்கள், ப. 55.
10. வ. தேனப்பன், மேலது, ப. 58.
11. த. கோவிந்தசாமி, நேர்காணல், சோரப்பட்டு, வயது 60, நாள் 11.05.99.
12. த. வெங்கடேசன், நேர்காணல், திருவாண்டார் கோயில், வயது 60, நாள் 10. 05. 99.
13. த. வெங்கடேசன், நேர்காணல், திருவாண்டார் கோயில், வயது 60, நாள் 10. 05. 99.
14. அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப. 313.

15. நாராயணசாமி, நேர்காணல், சஞ்சீவி நகர், வயது 65, நாள் 10. 05. 99.

16. விஸ்வநாத அய்யர், நேர்காணல், மண்ணாடிப்பட்டு, வயது 79,

17. ஐ. கோவிந்தராஜ் நேர்காணல், கலிதீர்த்தாள் குப்பம், வயது 55, நாள் 12.05.99.

18. துளசி. இராமசாமி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், ப. 11.

19. சி. இரத்தினம், காஞ்சிபுரம் ஏகாம்பரம் நாதர் கோயில் - ஓர் ஆய்வு, ப. 57.

20. மு கதிர்வேல், பூசாரி, நேர் காணல், ஏம்பலம், வயது 50, நாள் 13.05.99.

21. தவத்திரு குன்றக்குடி அடிகளார், நமது நிலையில் சமயம் சமுதாயம், ப. 33.

# நிறைவுரை

*நிறைவுரை*

மனித இனத்தை நல்வழிப் படுத்திடவும் கூட்டுணர்வாகச் (Team spirit) செயற்பட வைக்கவும் சமயம் பெரும் பங்கு பெறுவதை நடப்பியல் வழி அறியமுடிகிறது. இதன் வழி சமயத்தின் தேவையையும் பயனையும் உணரமுடிகிறது.

பண்டைத் தமிழர்கள் தொடக்க காலத்தில் ஞாயிறு, திங்கள், ஆறு, கடல், மலை, நெருப்பு போன்ற இயற்கையைத் தெய்வங்களாக வழிபட்டனர் என்பதை இலக்கிய வழி அறியமுடிகிறது. சான்றாக இன்றும் நடைமுறையில் ஆற்றுத் திருவிழா என்றும் மாசி மகத் திருவிழா (கடலாற்று விழா) என்றும் மக்கள் வழிபாடாற்றி வருவதைக் காணமுடிகிறது.

அச்சம் தரும் செயல்களே, மனிதனை இயற்கை வழிபாட்டிற்கு அழைத்துச் சென்றன எனலாம். பின்னர் நாளடைவில் வழிபாடு பெருகிப் பல்வேறு சடங்குமுறைகள் வளரலாயின. அதன் அடிப்படையில் விழா எடுத்து நன்றிக் கடன் ஆற்றினர். எனவே இயற்கை வழிபாட்டை உலகின் முதன்மையான வழிபாடாகக் கொள்ளலாம்.

வீரர்களுக்கு இணையாகப் பத்தினிப் பெண்டிருக்கும் நடுகல் வழிபாட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்பதைப் பண்டைய இலக்கியத்தின் வாயிலாக அறிய முடிகிறது. சான்றாக, கண்ணகியைப் பத்தினித் தெய்வமாகக் கருதி இன்றும் மதுரைப் பகுதியில் வழிபாடாற்றி வருவது எண்ணத்தக்கது.

தொடக்க காலத்தில் பெண்டிர் தலைமை நிலையைப் பெறுவதற்குப் பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம். குழந்தையைப் பெற்றுத் தருவதும் அடுத்த நிலையில் வேளாண்மையைப் பெருக்குவதும் பெண்கள் பங்கில் நிகழ்ந்தன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பெண்கள்

முதலிடத்தை வகித்தனர். எனவே பொருளாதார முறையில் பெண்களின் பங்கு தலைமை நிலையை அடைந்திருந்தது. இச்சமூக மதிப்பின் வெளிப்பாடாகச் சக்தி வாய்ந்த தெய்வங்கள் பெண் தெய்வங்களாகத் தோற்றம் பெற்றன.

'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் இறையுணர் வினால் மக்கள் தொன்று தொட்டுப் பல தெய்வங்களை அவரவர் விருப்பத்திற்குத் தக வழிபடுகின்றனர். மேலும் பெண்மையை முதன்மை நிலையில் வைத்துப் போற்றும் நிலையில் அன்னை வழிபாடு, சக்தி வழிபாடு போன்றவை இலக்கியங்களில் இடம் பெற்றன. நடைமுறையிலும் இவ்வழிபாடு சிறப்புற்றிருப்பதைக் காணமுடிகிறது.

புராணங்களை அடியொற்றியே பெரும்பாலும் காப்பியத் தலைவிகள் காப்பியங்களில் சுட்டப்பெறுகின்றனர். அரசாண்ட மன்னன் கண்ணகிக்குக் கோயில் எடுத்துச் சிறப்புச் செய்திருப்பதும் மணிமேகலையை மணிமேகலா தெய்வத்தோடு ஒப்புமை படுத்துவதும் கருதத்தக்கன. புராணங்களை இணைத்துக் காப்பியங்கள் அமைத்ததைப்போல மன்னன் வழியைப் பின்பற்றி மக்கள் கோயில் வழிபாட்டை மேற்கொண்டனர் என்பதை அறியமுடிகிறது.

சமுதாயத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர், மேலோர், கீழோர், பெரியோர், சிறியோர் முதலான பாகுபாடுகள் தோன்றி வளர்ந்ததைப் போன்று தெய்வங்களிலும் பெருந்தெய்வம், சிறுதெய்வம் என்று பாகுபாடுகள் தோன்றின. இது வழிபாட்டு முறைமையை அடிப்படையாகக் கொண்ட பிரிப்பாகும். சிவன் என்றும் சக்தி என்றும் பிரித்தனர். ஏனைய தெய்வங்களையும் 'ஆண் தெய்வம்' என்றும் 'பெண் தெய்வம்' என்றும் பல நிலைகளில் பிரித்து ஆற்றல் உள்ள தெய்வமாக மக்கள் வழிபாடாற்றி வருகின்றனர்.

பெண் தெய்வங்கள் பல பெயர்களில் தமிழகமெங்கும் இடம்பெற்றுள்ளன. தமிழகத்தின் வடமாவட்டங்களிலும் புதுச்சேரியிலும் திரௌபதியம்மன் வழிபாடு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற பொன்மொழிக்குத் தக இறைவனை மக்கள் பழங்காலந்தொட்டு இன்று வரையிலும் வணங்கி வழிபாடு செய்து, விழா ஆற்றி

வருகின்றனர். இதன்வழி மக்களை ஒருங்கிணைக்க வழிபாடும் விழாக்களும் முதன்மையாக எண்ணப்படுகின்றன.

ஞானிகள் இறைவனைத் தம் மனக்கோயிலில் வைத்து வழிபடுவர். ஆனால் மக்கள் ஒழுக்க நெறியோடு வாழ்வதற்குப் புறவழிபாடான திருக்கோயிலே பெரிதும் துணைபுரிகின்றது.

அவரவர் தேவைக்கு ஏற்பச் செய்யப்படும் வழிபாட்டைத் தன்நல வழிபாடு எனலாம். நாள், வார, மாத வழிபாடு இதனுள் அடங்கும். உலகப் பொது நன்மைக்காகச் செய்யப்படும் சிறப்பு வழிபாடுகள் இதனுள் அடங்கும்.

விழாக் காலங்களில் ஊரின் எல்லைப்புறத்தில் இருக்கும் கொடிய ஆவிகளைச் சாந்தப்படுத்தும் வகையில் எலுமிச்சம் பழத்தை அறுத்து நான்கு திசைகளிலும் எறிவர். இந்நிகழ்ச்சி அனைத்துக் கோயில்களுக்கும் பொதுவான தாகும்.

திரௌபதியம்மன் கோயிலில் விழாக் காலங்களில் கொடி கட்டியதைத் தொடர்ந்து அன்றைய தினமே மாரியம்மனுக்குக் கூழ்வார்த்தல் நிகழ்ச்சி ஊரின் பொதுவிடத்தில் நடை பெறுகிறது. மழை கொடுத்த மாரியம்மனுக்குச் சிறப்புச் செய்வ தாகவும் மழைவளம் தொடர வேண்டியும் கூழ்வார்த்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சி கெங்கை அம்மனை நினைவுகூரும் வகையிலும் மக்கள் மழைக்கு நன்றி செலுத்தும் முறையிலும் இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

விழாக் காலங்களில் அனைத்து உற்சவத்திலும் மற்றும் சிறப்பு நாட்களில் மட்டும் பகற் பொழுதில் மூலவர் சிலைக்கும் (திரௌபதியம்மன்) உற்சவ மூர்த்திகளுக்கும் (வெண்கலச் சிலைகள்) சிறப்பு அபிடேகம் அறங்காவலர் குழுவின் துணை யோடும் ஊர்ப் பெரியோர்களின் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெறுகிறது. பின்னர் இரவு நேரத்தில் மங்கல இசை முழங்கத் திரௌபதியம்மனும் பிற பரிவாரத் தெய்வங்களும் உலா வருவர்.

விழாக் காலங்களில் பகற் பொழுதில் புராணச் செய்திகளை மையமாகக் கொண்டு பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அவற்றுள் அரக்கு மாளிகை விழா குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சி ஊர் மக்களால் மந்தைவெளியில் நடத்தப்படுகிறது. எரியூட்டப்பட்ட சாம்பலை நிலத்திலும் வீட்டிலும் இட்டால்

வளர்ச்சியும் வளமும் பெருகும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வாறு செய்யப்படுகிறது.

பகற்பொழுதில் நடக்கும் நிகழ்ச்சியாகப் பகாசூரன் வதை விழா ஊர்ப் பொதுமக்களால் மந்தைவெளியில் நடத்தப் படுகிறது. பலம் பொருந்திய வீமன் கொடியவனான சூரனை அழித்து வெற்றிக் கொண்டதாக எண்ணிச் சூரனுக்காகக் கொண்டு வரும் சோற்றை மக்கள் அனைவரும் வாங்கி உண்பர். அவ்வாறு வாங்கி உண்டால் குடும்பம் நலம்பெறும் என்றும் திருமணமான பெண்கள் உண்டால் குழந்தைப் பேறு கிட்டும் என்றும் நம்பிக்கையினடிப்படையில் இவ்வாறு செய்வர். இது அனைவரும் பகிர்ந்துண்ணும் முறையைச் சுட்டுவதாக அமைகிறது எனலாம்.

'அருச்சுனன் தபசு நிகழ்ச்சி' பகற்பொழுதில் நடைபெறும் நிகழ்ச்சியாக அமைகிறது. அருச்சுனன் வில்லை வளைத்து வெற்றிபெற வேண்டும் என்பதற்காக வடக்கு நோக்கி ஒரு காலை மடக்கி நின்ற நிலையில் தவம் இருப்பதாக இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

திரௌபதியம்மன் கோயில் வெளி மண்டபத்தில் பிராமணரைக் கொண்டு காலைவேளையில் ஊர்ப் பெரியோர் களின் முன்னிலையில் திரௌபதிக்கும் அருச்சுனனுக்கும் திருமண நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. பின்னர் உணவு பரிமாறப் படுகிறது. தெய்வத்திற்கே திருமணம் செய்து வைப்பதைப் புண்ணியமாகவும் பெரும் பாக்கியமாகவும் மக்கள் கருது கின்றனர். மேலும், திருமண நிகழ்வில் கன்னிப் பெண்கள் கலந்து கொள்வதால் விரைவில் திருமணம் நடைபெறும் என்ற நம்பிக்கையில் கோயிலில் குழுமியிருத்தலைக் கள ஆய்வுவழி அறியமுடிகிறது.

'அரவான் களபலி' சடங்கு முறை இன்றித் திரௌபதியம்மன் கோயிலில் திருவிழா இல்லை என்றே சொல்லலாம். பாரதப் போரில் வெற்றி பெறுதல்வேண்டி அரவானைப் பலிகொடுத்ததைப் போன்று, விழாக் காலங்களில் அரவான் உருவச் சிலைக்கு ஆடு அல்லது கோழி போன்ற வற்றைப் பலி கொடுப்பர். ஆனால் அரவான் உருவச் சிலையை மட்டும் தனியாக வைத்து வழிபடுகின்ற வழக்கம் பிள்ளையார் குப்பம் என்னும் ஊரில் இரண்டுநாள் திருவிழாவாக நடை பெறுகிறது. அதன்வழி அரவான் களபலிச் சடங்கு முறையின் வளர்ச்சியினை அறியலாம்.

திரௌபதியம்மன் கோயில் என்றாலே 'தீ மிதித்தல்' நிகழ்ச்சி நினைவுக்கு வரும். பெண் தெய்வமான திரௌபதியம்மனுக்கு ஆடவர்கள் (வன்னியர், முதலியார், செட்டியார், ரெட்டியார், நாயக்கர் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்) மட்டும் தீ மிதிக்கின்றனர். பெண்கள் தீ மிதிப்பது கிடையாது. பெண்களும் முன்வருவதில்லை. மேலும் தாழ்த்தப் பட்ட சமூக இன மக்கள் தீ மிதிப்பது கிடையாது. இதன்வழி, குறிப்பிட்ட சமூக இனத்தவருக்கு மட்டும் உரிய வழிபாட்டுக் கோயிலாக இருப்பதை அறியமுடிகிறது.

தீ மிதித் திருவிழாவைத் தொடர்ந்து மறுநாள் காலையில் தருமருக்கு முடிசூட்டு விழா (பட்டாபிஷேகம்) ஊர்ப் பெரியோர்களின் முன்னிலையில் நடைபெறுகிறது. இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் உணவு வழங்கப்படுகிறது. பொதுமக்கள் உணவு உண்ட பின்னர், உடலும் உள்ளமும் நிறைவு பெற்றுத் திரௌபதியம்மனை வணங்கித் தம் இல்லம் திரும்புவர். இதன்வழி மக்களிடையே ஒருமித்த உணர்வை ஏற்படுத்த இவ்வம்மன் கோயில் முன்னுதாரணமாக இருப்பதைக் காணலாம். பின்னர் பிராமணரைக் கொண்டு கொடியிறக்கம் செய்து பூசாரியால் அக்கொடியினை மூலவர் சன்னதிக்குக் கொண்டு சென்று வைத்து வழிபடுவர். விழாக் காலங்களில் பகற்பொழுது நிகழ்ச்சியாக வழிபாட்டுச் சடங்கு முறைகளும் மாலை நேர நிகழ்ச்சியாக மேடை நாடகங்களும் இன்னிசை நிகழ்ச்சிகளும் இரவு நேர நிகழ்ச்சியாகத் திரௌபதியம்மன் சுவாமியுடன் வீதியுலா வரும் நிகழ்ச்சியும் மற்றும் தெருக்கூத்து நிகழ்ச்சியும் தொடர்ந்து நடைபெறு கின்றன. ஆண்டுக்கொருமுறை நடக்கும் இத்திருவிழாவில் ஊர் மக்கள் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டு மன நிறைவு கொள்வர்.

அனைத்துத் திரௌபதியம்மன் கோயில்களிலும் மூலவர் சிலை நின்ற நிலையில் வலக்கரத்தில் பூவுடன் கிளி இருப்பதைப் போன்றும் இடக்கரம் தொங்கிய நிலையிலும் காணப்படுகிறது. திரௌபதியம்மனின் தோற்ற அமைப்பைக் காணுங்கால் மதுரை மீனாட்சி அம்மனின் உருவத்தை ஒத்துக் காணப்படுகிறது.

'போத்தராசா' என்ற காவல் தெய்வம் மூலவர் சிலைக்கு நேர் எதிரே வலக்கையில் கத்தியைத் தூக்கிய நிலையிலும்

இடக்கையில் சிம்ம உருவத்தை பிடித்துக் கொண்டு நின்ற நிலையிலும் காணப்படுகிறது. முத்தால் ராவுத்தர் அல்லது முத்தால் ராயர் என்ற காவல் தெய்வம் அமர்ந்த நிலையில் தென்திசை நோக்கியவாறு பெரிய வயிற்றுடனும் நீண்ட தாடி யுடனும் காட்சியளிக்கிறார். இப்பெண் தெய்வக் கோயிலில் ஆண் தெய்வங்கள் காவல் தெய்வமாக இருப்பது குறிப்பிடத் தக்கது.

கோயிலின் கொடிமரம் மூலவர் இருக்குமிடத்தைச் சுட்டுவதாக அமைகிறது. கோபுரத்தின் உயரத்திற்கு ஏற்ப நிலையான கொடிமரம் அமைக்கப்படுவது ஒரு சிறப்பம்ச மாகும். மேலும் இக்கொடிமரம் மனிதனின் முதுகுத் தண்டோடு ஒப்புமை படுத்துவதன் மூலம் இதன் உயர்வினை அறியலாம். நிலையான கொடிமரத்தின் அடிப்பகுதியில் நான்கு திசை களிலும் தெய்வங்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

மூலவர் சிலையைக் காண்பதற்கு முன் கோயிலில் சுயநலமாகிய இச்சையைப் பலி கொடுத்துப் பின்னரே உள்ளே செல்லவேண்டும். பலிபீடம் என்பது பிணிப்புகளின் நீக்கத் திற்குக் காரணமாகத் திகழ்கிறது. எனவே இதைப் பலிநாதர் என்றழைப்பர். நிலையான கொடிமரம் இல்லையாயினும் நிரந்தரமான பலிபீடம் அனைத்துத் திரௌபதியம்மன் கோயில் களிலும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது இதன்வழி பலி பீடத்தின் தேவையை அறியமுடிகிறது. நடப்பியலில் பெருந் தெய்வக் கோயில்களிலும் வளர்ச்சியடைந்த சிறு தெய்வக் கோயில்களிலும் பலிபீடம் இருப்பது சுட்டத்தக்கது.

திரௌபதியம்மன் கோயில்களில் துர்க்கையம்மன், மாரியம்மன் போன்ற பெண் தெய்வச் சிலைகள் இடம்பெறு கின்றன. மேலும் பெருந்தெய்வங்களான சிவன், பார்வதி ஆகியவை சுதைச் சிற்பங்களாகத் திரௌபதியம்மன் கோயிலில் இடம்பெறுகின்றன.

திரௌபதியம்மன் கோயிலுக்கென்று அசையும் பொருட் களும் அசையாப் பொருட்களும் இருப்பதால், இதன்மூலம் வரும் நிதியைக் கொண்டு வழிபாட்டையும் விழாவையும் நடத்துகின்றனர். மேலும் பஞ்சாயத்துக் கூட்டங்கள் நடத்துதல், கோயிலைப் பராமரித்தல் போன்றவை யாவும் அறங்காவலர் குழுவின் பணியாக அமைகின்றன.

விழாக் காலங்களில் கலைஞர்கள் மக்களை மகிழ்விப் பதோடு மட்டும் அல்லாமல் புராணத்தோடு தொடர்புடைய பல நல்ல பக்திக் கதைகளைக் கூறித் தெய்வச் சிந்தனைகளை ஊட்டுகின்றனர். கலைஞர்கள் நல்வாழ்வு பெறுவதோடு மட்டும் அல்லாமல் அந்நிகழ்ச்சிகளின் வழியே மக்களை நல்வாழ்வுக்கு உட்படுத்தவும் செய்கின்றனர்.

கோயிற் சட்டங்களை (Temple law) மீறி நடந்தால் திரௌபதியம்மனின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பர். இதன்வழி கோயிலுக்கும் மக்களுக்கும் உள்ள இறுக்கமான தொடர்பினை அறியலாம்.

தமிழர்கள் கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் என்றும் பல தெய்வங்களை வணங்கியவர்கள் என்றும் இலக்கியவழி அறிய முடிகிறது. இதன்மூலம் நம்பிக்கையின் தொன்மையை அறியலாம்.

திரௌபதியம்மனின் காவல் தெய்வமாகப் போத்தராசா, முத்தால் ராவுத்தர் போன்ற காவல் தெய்வங்கள் இருப்பதைப் போன்று ஊரின் புறத்தே அமைந்திருக்கும் காவல் தெய்வமான அய்யனார் அல்லது வீரன் தெய்வத்திற்கு ஊரார் திரளாகச் சென்று பொங்கல் இட்டு வழிபடுகின்றனர். அவ்வமயம் உயிர்ப்பலிக் கொடுத்தல் சிறப்பிடம் பெறுகிறது. உயிர்ப்பலி கொடுத்தால் உயிர்ப்புச் சக்தி மேலோங்கும் என்ற நம்பிக்கையே அடிப்படையாக அமைகிறது.

திரௌபதியம்மன் கோயில் விழாவை வேனிற்காலத்தில் அமாவாசைக்குப் பிறகு (வளர்பிறை நாளில்) நல்ல நேரத்தில் கொண்டாடுகின்றனர். இவ்வாறு செய்வதன்மூலம் ஆண்டு தோறும் விழா தொடர்ந்து நடக்கும் என்று நம்பிக்கை மக்களிடையே மேலோங்கி இருத்தலை அறியமுடிகிறது.

திரௌபதியம்மன் கோயில் விழாவில் தீ மிதித்தல், அரக்கு மாளிகை விழா, கும்பாபிடேகத்திற்கு முன்பு ஓமக்குண்டம் ஏற்படுத்துதல் போன்றவை சிறப்பிடம் பெறுகின்றன.

திரௌபதியம்மன் வழிபாட்டின் ஒரு கூறாக உடல் வருத்தம் சார்ந்தவை, உடல் வருத்தம் சாராதவை என இருவகை நேர்த்திக் கடன்கள் காணப்படுகின்றன. இதில் உடல் வருத்தம் சார்ந்தவையாகத் தீ மிதித்தல், அங்கப் பிரதட்சணம் போன்ற வற்றைக் குறிப்பிடலாம். பொங்கலிடுதல் என்பது மகிழ்ச்சியினை

மையமிட்டும் நன்மையினையும் வளர்ச்சியினையும் வேண்டி நடைபெறும் ஒருவகை நேர்த்திக் கடன் எனலாம்.

சமுதாயத்தில் நோன்பு இருத்தல், குழந்தைப்பேறு வேண்டல், தொட்டில் கட்டுதல் போன்றவை சிறப்பிடம் பெறுவதால் நேர்ந்துகொள்ளும் பெண்களின் எண்ணிக்கையும் நம்பிக்கையும் அதிகமாக உள்ளது. இவை உடல் வருத்தம் சாராதவை.

விழாக் காலங்களில் பெண்கள் மாவிளக்கு ஏற்றுதலும் தானியப் பிச்சை எடுத்தலும் தன்நலம் கருதி வேண்டுதலின் நேர்த்திக் கடன்களாக அமைகிறது எனலாம் பொதுநிலையில் முடிப்பணம் செலுத்துதல், மறைமுகப் பணம் செலுத்துதல், உலோக உறுப்புகள் அளித்தல் போன்றவை யாவும் குடும்பம் மேன்மை அடைய வேண்டும் என்ற நம்பிக்கையில் செய்யப் பெறுகின்றன. சுருங்கக் கூறின் ஆண்டுதோறும் விழா எடுத்துச் சிறப்பு செய்வதன்மூலம் திரௌபதியம்மனின் மனம் குளிர்கிறது என்றும் மக்கள் நோயின்றி இன்புற்று வாழ இது உதவுகிறது என்றும் கருதுகின்றனர். இவ்வாறு புதுவை மக்களைப் பல வகைகளில் கவர்ந்துள்ளது திரௌபதி வழிபாடு.

# பின்னிணைப்புகள்

*பின்னிணைப்பு - 1*

*ஸ்ரீ திரௌபதியம்மன் துதி*

யாகத்தில் பிறந்தவளே எங்கட்கெல்லாம்
யாவையுமே தருபவளே! அம்மா உன்றன்
அடிபணிந்து நிற்கின்ற எமக்கு என்றும்
அருள்புரிவாய் பாஞ்சாலி உமையே போற்றி!

மருமாலை சூடியே பாஞ்சால ராஜன் மகளாகி வந்து
பெருமான் தனக்கு தங்கையுமாய் வந்துதித்த பேர்நங்கை
தருமசையாலும் சகல சம்பத்து தந்து என்முன் வருவாள்
எனக்கு வரந்தரவே கொஞ்சி நடந்து வருவாள்
என்னம்மன் பாஞ்சாலி குல தெய்வமே.

துருபதன் வேள்வியில் சங்கரன் அருளினால்
திருமகள் நாயகன் நங்கையாய் தோன்றியே!
தருனா மைவகின் கேதிலா மனைவியார்
திரௌபதி மலரடி பணிந்து போற்றுவோம்!

## பின்னிணைப்பு - 2

### திரௌபதியம்மன் கோயில் பற்றிய குறிப்புகள்

*1. இலாசுப்பேட்டை (புதுச்சேரி நகராட்சி)*

இவ்வூரில் குடி கொண்டிருக்கும் திரௌபதியம்மன் கோயில் கிழக்கு மேற்கு வீதியில் வட திசை நோக்கியவாறு இருப்பது இதன் சிறப்பம்சம் ஆகும். இக்கோயில் ஏற்பட்டதற்கான பழங்கதையோ அல்லது தல புராணமோ இருப்பதாக தெரியவில்லை. இருப்பினும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறுவர். இவ்வூரில் மூன்று ஆண் தெய்வக் கோயில்களும் மூன்று பெண்தெய்வக் கோயில்களும் இடம்பெறுகின்றன. இவ்வூரில் பல சமூக இனத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இதில் குறிப்பிடத் தக்கவர்கள் வன்னியர், செட்டியார், ரெட்டியார், முதலியார் போன்றவர்கள். இக்கோயிலுக்கென்று அசையும் சொத்துக்கள் அசையாச் சொத்துக்கள் இருக்கின்றன. அசையாச் சொத்துக்களின் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு தினமும் இருவேளை வழிபாடுகள் நடைபெறுகின்றன. மேலும் ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் ஊர்ப் பொதுமக்களால் அறங்காவலர் குழுவின் துணைகொண்டு சீரும் சிறப்புமாகத் திருவிழா நடத்தப்படுகிறது.

*2. புதுச்சேரி (புதுச்சேரி நகராட்சி)*

புதுச்சேரியில் புகழ்பெற்ற பல கோயில்கள் இருப்பினும் பலநாட்கள் தொடர்ந்து விழா ஆற்றிவரும் கோயிலாகத் திரௌபதியம்மன் கோயில் திகழ்கின்றது. பெரும்பாலும் ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதத்தில் விழாவைத் தொடங்கி ஆடி மாதத்திலேயே முடிப்பது இதன் சிறப்பம்சமாகும். மேலும் விழாக் காலங்களில் தினமும் இரவு ஏழு மணிக்குத் திரௌபதியம்மன் வீதிஉலா வருவதும் அதனைத் தொடர்ந்து பாரதப் பிரசங்கமும் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் பல சமூக இனத்தைச் சார்ந்த மக்கள் பங்குகொள்வது குறிப்பிடத்தக்கது.

*3. அரும்பார்த்தபுரம் (உழவர்கரை நகராட்சி)*

இவ்வூரில் பழம்பெரும் கோயில்கள் ஐந்து உள்ளன. இரண்டு ஆண் தெய்வக் கோயில்களும் மூன்று பெண் தெய்வக் கோயில்களும் இடம்பெறுகின்றன. மக்கள் பொதுத் தெய்வமாகத் திரௌபதியம்மனையும் வன்னிய இனத்தவர் குல

தெய்வமாகவும் வணங்கி வருகின்றனர். புல சமூக இனத்தவர் இருப்பினும் குறைவான எண்ணிக்கை உடையோராக 'உடையார்' இனத்தவர் இருப்பது சுட்டத்தக்கது. இவ்வூர் கோயிலுக்கென்று நான்கு ஏக்கர் நிலம் உள்ளது. இதில் வரும் வருவாயைக் கொண்டு தினமும் இருவேளை பூசைகள் நிகழ் கின்றன. திரௌபதியம்மன் கோயில் புகைவண்டி சாலையை ஒட்டி அமைந்திருக்கிறது. இக்கோயிலை ஒட்டி மிகப் பெரிய திடல் காணப்படுகின்றது.

### 4. சஞ்சீவி நகர் (உழவர்கரை நகராட்சி)

இவ்வூரில் தெரு முற்றத்தில் பழம்பெரும் திரௌபதியம்மன் கோயில் ஒன்று கிழக்குத் திசை நோக்கியவாறு அமைக்கப் பட்டுள்ளது. பலநூறு ஆண்டுகளுக்கு முன்னதாகத் தோற்று விக்கப்பட்டதாக மொழிவர். இவ்வூரில் இக்கோயிலைத் தவிர கெங்கையம்மன் கோயிலும், செங்கழுநீர் அம்மன் ஆலயமும் உள்ளன. இவை மட்டுமன்றி ஆண் தெய்வக் கோயில்கள் இரண்டு (விநாயகர், வீரபன்பன்). இடம் பெறுகின்றன. இவ்வூரில் வசிக்கும் பெரும்பாலோர் வன்னிய இன மக்கள் இவர்கள் தங்களின் உற்சவத்தைப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு வருடமும் வைகாசித் திங்களில் 10 ஆம் நாள் முதல் ஒன்பது நாள் திருவிழாவாகச் சீரும்சிறப்புமாக நடத்துகின்றனர். திங்கட்கிழமையில் தீ மிதிப்பது இக்கோயிலின் சிறப்பம்ச மாகும். சிறப்பு நாட்களில் அபிடேக ஆராதனை நிகழ்வ துண்டு. பிராமணர் அல்லாதோர் கோயிற் பூசாரியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

### 5. தர்மாபுரி (உழவர்கரை நகராட்சி)

மக்கள் அனைவரும் வந்து வழிபடும் அளவிற்கு ஊரின் மத்தியில் திரௌபதியம்மன் கோயில் இடம்பெறுகிறது. கோயில் இடத்தில் கோயிற் பூசாரிக்கு வீடு ஒதுக்கப்பட்டுள்ளது. அவர் தினமும் இருவேளை அம்மனுக்கு வழிபாடு செய்து வருகிறார். இவ்வூரில் வன்னிய இனமக்கள் பெரும்பான்மை யானோர் வசிக்கின்றனர். மேலும் சிறுபான்மையினராக முதலியார், செட்டியார், ரெட்டியார் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள் இருப்பினும் அனைவரும் ஒன்றிணைந்து சித்திரைத் திங்களில் ஐந்து நாட்கள் விழா நடத்துகின்றனர்.

### 6. பிள்ளைச்சாவடி (உழவர்கரை நகராட்சி)

ஊரின் மையப்பகுதியில் திரௌபதியம்மன் கோயில் இடம்பெற்றிருக்கிறது. ஊரின் பெரும்பான்மையான பகுதி புதுவை எல்லைக்குட்பட்டும் சிறுபான்மையான பகுதி தமிழக எல்லைக்குட்பட்டும் காணப்படுகிறது. இருப்பினும் திரௌபதியம்மன் கோயில் புதுவை எல்லை ஒட்டி அமைந் திருக்கிறது. எனினும் மக்களிடையே எவ்வித வேறுபாடும் இன்றிக் கூட்டங்களும் விழாக்களும் தங்குதடையின்றி நடந்து வருகின்றன. இக்கோயிலுக்கென்று விளைநிலம் இருக்கிறது. இதன் ஒருபகுதி கோயிற் பூசாரிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வரும் நிதியைக் கொண்டு இருவேளை தினமும் வழிபாடு நடைபெற்று வருகிறது. இவ்வூரில் வன்னிய இனமக்கள் அதிக எண்ணிக்கையிலும் குறைவான எண்ணிக்கை உடையவராக யாதவர், ஆசாரி, பத்தர், செட்டியார் போன்றோர் இருக்கின்றனர். அறங்காவலர் குழுவின் மேற்பார்வையில் ஆண்டு தோறும் வைகாசித் திங்களில் ஏழு நாள் உற்சவம் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது.

### 7. திலாசுப் பேட்டை (வீம கவுண்டன் பாளையம்) உழவர்கரை நகராட்சி

இவ்வூரில் பழம்பெரும் கோயில்கள் பல இருப்பினும் அவற்றில் தொன்மை வாய்ந்த கோயிலாகத் திரௌபதியம்மன் கோயில் கிழக்கு திசை நோக்கியவாறு ஊரின் மையப்பகுதியில் அமைந்திருக்கிறது. இவ்வூரில் பல சமூக இனத்தவர்கள் வாழ்ந்த போதிலும் வன்னியர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. குறைந்த எண்ணிக்கை உடையவராக ஏகாளி போன்றோர் காணப்படுகின்றனர். இவ்வூர்க் கோயிலுக்கென்று நாலரைக் காணி நிலம் இருக்கிறது. இந்நிலத்தில் வரும் வருமானத்தைக் கொண்டு இருவேளை வழிபாடு. கோயிற் பூசாரியால் சிறப்பான முறையில் நடைபெறுகிறது திரௌபதியம்மன் கோயிலில் ஆடி மாதத்தில் விழாத் தொடங்கி ஏழு நாட்கள் வரை உபயதாரர்களும் அறங்காலவர் குழுவும் சேர்ந்து வெகு சிறப்புடன் நடந்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### 8. அரியாங்குப்பம் (அரியாங்குப்பம் கொம்யூன்)

இவ்வூரில் பழம்பெரும் கோயில்கள் பல உள்ளன. இவற்றில் ஆண் தெய்வக் கோயில்கள் மூன்றும், பெண்

தெய்வக் கோயில்கள் பன்னிரண்டும் இடம்பெறுகின்றன. இவற்றுள் மிகப் பழம்பெரும் கோயிலாக ஊரின் மையப் பகுதியில் திரௌபதியம்மன் கோயில் பொலிவுடன் இருப்பதைச் சுட்டலாம். இக்கோயிலுக்கருகாமையிலேயே பெருமாள் கோயில் ஒன்றும் உள்ளது. இரு கோயிலையும் பிராமணர் அல்லாத கோயிற் பூசாரியே நிர்வகித்து வருகிறார். இக்கோயிலுக்குச் சொந்தமாக நான்கு ஏக்கர் விளைநிலம் உள்ளது. மேலும் பனை, தென்னை மரங்களும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வூரில் வன்னிய இனமக்கள் அதிக மாகவும் துணி வெளுப்போர் (வண்ணார்) இனமக்கள் குறைவாகவும் வாழ்கின்றனர். மேலும் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆண்டுதோறும் விழா எடுத்துச் சிறப்புச் செய்கின்றனர்.

### 9. பூரணாங்குப்பம் (அரியாங்குப்பம் கொம்யூன்)

ஊரின் நடுவில் அமைந்திருக்கும் திரௌபதியம்மன் கோயில் மிகவும் பழமை வாய்ந்த கோயிலாகவும் பல இடங் களில் சேதமடைந்தும் காணப்படுகிறது. எனினும் தினமும் இருவேளை கற்பூர தீப வழிபாடு கோயிற் பூசாரியைக் கொண்டு நிகழ்த்தப்படுகிறது. பொதுவாக ஆனி மாதத்தில் வளர்பிறை நாளில் திருவிழா பல்வேறு சமூகத்தினரும் (வன்னியர், கிராமணி, செட்டியார்) ஒருமித்த உணர்வுடன் கொண்டாடு கின்றனர். நிதி வசூலிக்கப் பட்டு அறங்காவலர் குழுவின் துணையோடு ஆண்டுதோறும் சிறப்பாக விழா நடைபெற்று வருகிறது.

### 10. ஏம்பலம் (நெட்டப்பாக்கம் கொம்யூன்)

பழம்பெரும் கோயிலான திரௌபதியம்மன் கோயில் ஊரின் மையப் பகுதியில் கிழக்குத் திசை நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் மட்டும் அல்லாது, ஆண் தெய்வக் கோயில்கள் நான்கும் பெண் தெய்வக் கோயில்கள் ஐந்தும் ஊரின் பலவிடங்களில் உள்ளன. ஊரில் வன்னிய இனமக்கள் அதிகமாக வாழ்கின்றனர். மேலும் செட்டியார் (வாணிபம்) பத்தர், ஆசாரி போன்ற சமூக இனத்தவர் குறைவாக வாழ்கின்றனர். இருப்பினும் பிற கோயிலில் நடைபெறும் விழாக்களைக் காட்டிலும் திரௌபதியம்மன் கோயில் விழாக்கள் ஆண்டுக்கொரு முறை வைகாசித் திங்களில் பதினோரு நாட்கள் சீரும் சிறப்புமாக அறங்காவலர் குழுவின் துணைகொண்டு நடைபெறுகிறது.

### 11. கரியமாணிக்கம் (நெட்டப்பாக்கம் கொம்யூன்)

ஊரின் மையப் பகுதியில் அமைந்துள்ள இத் திரௌபதியம்மன் கோயில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தோற்றம் பெற்றதாக மொழிவர். இக்கோயிலைப் புதுப்பித்து 13.07.1981 ஆம் ஆண்டு கும்பாபிடேகம் நடத்தப்பெற்றது. இக்கோயிலுக் கென்று அரை ஏக்கர் நிலம் உள்ளது. இதைக் கொண்டு கோயிற் பூசாரி இருவேளை பூசைகளை மேற்கொண்டு வருகிறார். இவ்வூரில் · ன்னியரும் ரெட்டியாரும் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்றனர். குறைவான எண்ணிக்கையில் கிராமணி, நாயக்கர், செட்டியார் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சாதி வாரியாக பிரிக்கப்பட்டு திருவிழாவிற்கு நிதி வசூல் செய்து ஒற்றுமை யுடன் சித்திரைத் திங்களில் (19.04.1994) ஐந்து நாட்கள் திரு விழாவாக நடத்தப்பெற்றது. அதன்பின்னர் கடந்த ஆறு ஆண்டுகளாகத் திருவிழா நடத்தப்பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

### 12. கரிக்கலாம்பாக்கம் (நெட்டப்பாக்கம் கொம்யூன்)

இவ்வூரின் மையப் பகுதியில் வடக்கு தெற்கு வீதி சந்திப்பில் உள்ள திரௌபதியம்மன் கோயில் கிழக்குதிசை நோக்கியவாறு பல நூறு ஆண்டுகளுக்கு முன்னதாகத் தோற்றவிக்கப்பட்டதாக மொழிவர். இக்கோயிலுக்கென்று அரைக் காணி நிலம் இருக் கிறது. இதன் வருமானத்தைக் கொண்டு தினமும் இருவேளை ஆராதனை கோயிற் பூசாரியைக் கொண்டு நடத்தப்படுகிறது இவ்வூரில் பல தரப்பட்ட சமூக இனமக்களான வன்னியர், செட்டியார், யாதவர், உடையார் போன்றோர் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூரில் அதிக எண்ணிக்கையில் வன்னிய சமூகத்தினரும் குறைந்த எண்ணிக்கையில் உடையார் இனத்தவரும் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. சாதி அடிப்படையில் நிதி வசூலிக்கப்பட்டு ஆண்டுதோறும் வேனிற் காலத்தில் வளர்பிறை நாளில் கொடியேற்றத்திற்குப் பிறகு ஆறு நாட்கள் திருவிழாவாக அனைத்துச் சமூக இன மக்களாலும் ஒருமித்த உணர்வுடன் திருவிழா நடத்தப்படுகிறது. இவ்விழா அறங்காவலர் குழுவின் துணையோடு நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### 13. கோர்க்காடு (நெட்டப்பாக்கம் கொம்யூன்)

ஊரின் எல்லையை ஒட்டித் திரௌபதியம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் தென்புறத்தில் பெரிய

லிங்கத்தையுடைய சிவன் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்க கோயிலாக இருப்பதற்கு இதன் பழமையையே சான்றாகக் கொள்ளலாம். இவ்வூரில் வன்னியர் (படையாச்சி கவுண்டர்) அதிக எண்ணிக்கையில் உள்ள வராகவும் அதற்கு அடுத்த நிலையில் ரெட்டியார், யாதவர், நாயுடு, செட்டியார், கிராமணி, ஆசாரி போன்ற சமூகத்தினரும் ஒன்றுபட்டு வாழ்ந்து வருகின்றனர். விழாக் காலமான வைகாசித் திங்களில் பௌர்ணமி முதற்கொண்டு ஒன்பது நாள் உற்சவமாக அனைத்து சமூகத்தினராலும் அறங் காவலர் குழுவின் துணையுடன் ஒருமித்த உணர்வுடன் ஆண்டு தோறும் விழா எடுத்துச் சிறப்புச் செய்வதைக் காண முடிகிறது.

### 14. சூரமங்கலம் (நெட்டப்பாக்கம் கொம்யூன்)

ஊரின் நடுவில் அமைந்திருக்கும் திரௌபதியம்மன் கோயில் மிகவும் பழமை வாய்ந்த கோயிலாகக் காட்சி தருகிறது. இக்கோயிலின் வட புறத்தில் முத்தாலம்மன் கோயிலும் தென் புறத்தில் விநாயகர் கோயிலும் இடம் பெற்றிருக்கிறது. இக் கோயிலுடன் செல்வ விநாயகர் கோயில், பால தண்டாயுதபாணி கோயில், அய்யனாரப்பன் கோயில் போன்ற கோயில்களுக்கு ஆவணித் திங்களில் ஞாயிற்றுக் கிழமை 26-ஆம் நாள் (10.9.1999) காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் இந்து அறநிலையத் துறை அமைச்சர் (வெ. வைத்தியலிங்கம்) அவர் களின் முன்னிலையில் ம கும்பாபிடேகம் நடைபெற்றது. பின்னர்த் தினமும் இருவேளை பூசை கோயிற் பூசாரியைக் கொண்டு நடைபெற்றது. இக்கோயிலுக்கென்று சொத்துகள் கிடையாது எனினும் மக்கள் நிதி வசூலித்து திருவிழாவைச் சிறப்புற செய்வதைத் தமது கடமையாகக் கொள்கின்றனர்.

### 15. நெட்டப்பாக்கம் (நெட்டப்பாக்கம் கொம்யூன்)

இவ்வூரில் மிகப் பழம்பெரும் கோயிலான திரௌபதியம்மன் கோயில் பல நூறு ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்றதாகக் கூறுகின்றனர். மேலும் இக்கோயிலை ஒட்டி வடதிசையில் சோழர் காலத்துச் சித்தி விநாயகர் கோயிலும், தென்திசையில் பெருமாள் கோயிலும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இத்திரௌபதியம்மன் கோயிலில் முறையே 1944, 1964 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் கும்பாபிடேகம் நடந்ததாகக் கோயிற்

கல்வெட்டில் இருந்து அறிய முடிகிறது. இக்கோயிலுக்கென்று ஒரு காணி நிலம் இருக்கிறது. இதைக் கொண்டு இருவேளை பூசைகள் கோயிற் பூசாரியைக் கொண்டு தினமும் நிகழ்கிறது. இவ்வூரில் பல தரப்பட்ட சமூகத்தினர் இருப்பினும் வன்னிய இனமக்கள் அதிக அளவில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இரத்த உறவுள்ள சமூகக் குடும்பங்கள் என்ற அடிப்படையில் நிதி வசூலிக்கப்பட்டு, ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் வளர்பிறை நாளில் ஐந்து நாட்கள் திருவிழாவாக ஒருமித்த உணர்வுடன் நடத்தப்படுகிறது. இவ்விழா அறங்காவலர் குழுவின் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### 16. மடுகரை (நெட்டப்பாக்கம் கொம்யூன்)

ஊரின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் திரௌபதியம்மன் கோயிலில் ஸ்ரீ கூத்தாண்டவர் சுவாமி கோயிலும் இடம் பெற்றிருப்பது இதன் சிறப்பு அம்சமாகும். பிற திரௌபதியம்மன் கோயிலில் அரவான் தலை மட்டும் இடம்பெறும். இக்கோயிலுக்குச் சொந்தமாக ஐந்து ஏக்கர் நிலம் உள்ளது. இதன் வருவாயோடு விழாக் காலங்களில் ஊரில் மொத்தமாக பணம் வசூல் செய்து ஒன்பது நாள் திருவிழாவை வன்னியர் ரெட்டியார் போன்ற அதிகமாக வாழும் சமூக இனமக்களும், எண்ணிக்கையில் குறைவாக வாழும் நாயக்கர் செட்டியார் இனமக்களும் விழாவைத் துவக்குகின்றனர். இவ்விழாவில் அறங்காவலர் குழுவின் பங்கு பணி போற்றுவதற்குரியதாகும்.

### 17. கரையாம்புத்தூர் (பாகூர் கொம்யூன்)

ஊரின் நடுவில் குடி கொண்டிருக்கும் திரௌபதியம்மன் பல சமூக இன மக்களாலும் வணங்கும் பொதுத் தெய்வமாக அருள் பாலிக்கின்றாள். இவ்வூர் கோயிலுக்கென்று ஒன்றரை காணி நிலம் உள்ளது. இந்நிலத்தின் மூலம் வரும் நிதியைக் கொண்டு தினசரி வழிபாட்டு முறைகளும் திருவிழாக்களும் நடத்துகின்றனர். இவ்வூரில் வன்னிய இனமக்களும் ரெட்டியார் இனமக்களும் மிகுதியாக வாழ்கின்றனர். செட்டியார், கிராமணி வகுப்பைச் சார்ந்தவர்கள் குறைவான எண்ணிக்கையில் வசிக் கின்றனர். இருப்பினும் அனைவரும் ஒற்றுமையுடன் இருந்து விழாக் காலங்களில் தெருவாரியாக நிதி வசூலிக்கப்படும் சித்திரைத் திங்களில் பத்து நாட்கள் உற்சவமாக அறங்காவலர்

சூழுவின் துணைகொண்டு ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறுகிறது.

*18. குருவிநத்தம் (பாகூர் கொம்யூன்)*

ஊரின் நடுவில் உள்ள திரௌபதியம்மன் கோயில் மிகவும் பழமை வாய்ந்த கோயிலாகக் காட்சியளிக்கின்றது. இக்கோயிலைப் புதுப்பிக்கும் பணி தொடர்ந்து நடை பெற்று வருகிறது. இதனருகில் மாரியம்மன் கோயில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதனைத் தவிர இவ்வூரில் ஆண் தெய்வக் கோயில்கள் இரண்டும், பெண் தெய்வக் கோயில்கள் மூன்றும் இடம்பெறுகின்றன. இவ்வூரில் அதிக எண்ணிக்கையில் வாழும் மக்களாக வன்னியர் இனத்தாரும் அதற்கு அடுத்த நிலையில் செட்டியார், ரெட்டியார், ஆசாரி, நாயுடு, கிராமணி ஆகிய இனத்தவர்களும் குறிப்பிடத் தக்கவர்கள். தலைக்கட்டுகள் என்ற முறையில் பிரித்து நிதி வசூல் செய்து ஊர்த் திருவிழாவினை ஆனி மாதத்தில் ஆண்டுக் கொரு முறை அறங்காவலர் குழுவின் மேற்பார்வையில் நடைபெறுவதுண்டு.

*19. பாகூர் (பாகூர் கொம்யூன்)*

ஊரின் நடுவில் அமைந்திருக்கும் திரௌபதியம்மன் கோயில் சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறுவர். இதன் அருகில் பழம்பெரும் பெருமாள் கோயில் ஒன்றும் உள்ளது. இக்கோயிலுக்கென்று ஏழு காணி நிலம் உள்ளது. இதன்மூலம் வரும் வருவாயைக் கொண்டு இருவேளை பூசைகள் நிகழ்கின்றன. மேலும் இவ்வூரில் ஆண் தெய்வக் கோயில்கள் எட்டும், பெண் தெய்வக் கோயில்கள் ஏழும் குடிகொண்டிருக்கின்றன. இவ்வூரில் வன்னிய இனமக்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றனர். குறைவான எண்ணிக்கை உடையவர்களாக ரெட்டியார் செட்டியார் போன்றோர் உள்ளனர். தெருவாரியாக நிதி வசூல் செய்து ஆண்டுதோறும் ஆடித் திங்களில் பத்து நாள் உற்சவமாக அறங்காவலர் குழுவின் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது.

*20. கூனிச்சம்பட்டு (மண்ணாடிப்பட்டு கொம்யூன்)*

ஊரின் மேற்குப் புறத்தில் திரௌபதியம்மன் கோயில் - இடம் பெற்றிருக்கிறது. இதன் அருகில் மாரியம்மன் கோயிலும்

சிவன் கோயிலும் இடம் பெற்றிருப்பது போற்றுதற்குரியதாகும். ஆண் தெய்வக் கோயில்களைக் காட்டிலும் (6) பெண் தெய்வக் கோயில்கள் (4) குறைவாக இருப்பினும் 20 நாட்கள் திருவிழாவாகத் திரௌபதியம்மன் கோயிலில் நடைபெறுவது இதன் சிறப்பம்சமாகும். பலதரப்பட்ட சமூக இனமக்கள் வாழ்ந்திருந்த போதிலும் ஒற்றுமை யுணர்வுடன் நிதி வசூல் செய்து திருவிழாவைச் சித்திரை மாதத்தில் துவக்குகின்றனர். அதிக எண்ணிக்கையுள்ள மக்களாக வன்னிய இனத்தவரும் அதற்கு அடுத்த நிலையில் முதலியார், ரெட்டியார், நாயுடு போன்ற இனத்தவர்களும் வசித்து வருகின்றனர். இக்கோயில் அறங்காவலர் குழுவின் மேற் பார்வையில் தினமும் இருவேளை பூசைகள் நிகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

### 21. கலிதீர்த்தாள்குப்பம் (மண்ணாடிப்பட்டு கொம்யூன்)

இவ்வூரில் ஆண் தெய்வக் கோயிலைக் காட்டிலும் பெண் தெய்வக் கோயில்கள் அதிகம் உள்ளன. இதில் பழமை வாய்ந்த கோயிலாகவும் பல நாட்கள் தொடர்ந்து திருவிழா செய்யும் திருக்கோயிலாகத் திரௌபதியம்மன் கோயில் திகழ்கிறது இக்கோயிலுக்கென்று ஆறு காணி நிலம் இருக்கிறது. இந்நிலத்தை குத்தகைவிட்டு அதன்மூலம் வரும் நிதியைக் கொண்டு வழிபாடுகளும் திருவிழாக்களும் செய்கின்றனர். தெருவாரியாக நிதி வசூலிக்கப்பட்டு, பத்து நாட்கள் திருவிழா வைகாசித் திங்களில் சீரும் சிறப்புமாக அறங்காவலர் குழுவின் துணையோடு ஆண்டுதோறும் நடைபெறுகிறது. மிகப் பெரிய மர வாகனங்கள் திருவிழாவில் பயன்படுத்துவது இக்கோயிலின் சிறப்பம்சமாகும்.

### 22. காட்டேரிக் குப்பம் (மண்ணாடிப்பட்டு கொம்யூன்)

இவ்வூரில் பழம்பெரும் கோயில்களாகத் திரௌபதியம்மன் கோயிலும் மாரியம்மன் கோயிலும் இடம்பெறுகின்றன. எனினும் பல நாட்கள் செய்யும் திருவிழாவாகத் திரௌபதியம்மன் கோயில் காணப்படுகிறது. இவ்வூரில் ஆண் தெய்வக் கோயில்கள் ஐந்தும் பெண் தெய்வக் கோயில்கள் இரண்டும் உள்ளன. இங்கு வன்னியர் சமூக இனத்தவர் அதிகமாகவும் நாயுடு, முதலியார் இனத்தவர் குறைவாகவும் வாழ்கின்றனர். திரௌபதியம்மன் அனைவருக்கும் பொதுத் தெய்வமாக வணங்கி வழிபட்டு வருகின்றனர். இக்கோயிலுக் கென்று 30 ஏக்கர் விளைநிலம் உள்ளது. இதில் ஒரு சிறு

பகுதியைக் கோயிற் பூசாரிக்கு ஒதுக்கி விடுகின்றனர். இதைக் கொண்டு அம்மன் கோயிலின் அபிடேக ஆராதனை தினமும் நிகழ்த்தப்படுகின்றது. உறவுடையோர் அல்லது தலைகட்டுகள் என்ற அடிப்படையில் நிதி வசூல் செய்து ஆண்டுதோறும் 18 நாட்கள் திருவிழா சிறப்பாக அறங்காவலர் குழுவின் துணையோடு நிகழ்த்தப்படுகிறது.

## *23. செல்லிப்பட்டு (மண்ணாடிப்பட்டு கொம்யூன்)*

இவ்வூரின் அருகில் அமைந்துள்ள திரௌபதியம்மன் கோயில் புதுப்பிக்கப்பட்டு கார்த்திகை மாதத்தில் 26-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி அளவில் அஷ்ட பந்தன மகா கும்பாபிடேகம் (12.12.1999) பெரியோர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைப்பெற்றது. ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் வளர்பிறை நாளில் திருவிழாவைத் தொடங்குவது மரபாகக் கொள்கின்றனர் பதின்மூன்று நாள் உற்சவமாக அறங்காவலர் மேற்பார்வையில் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து நடைபெறும். இங்கு வன்னியர், நாயுடு, செட்டியார் எனப் பல சமூக இனத்த வர்களும் விழாவில் பங்குகொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## *24. செட்டிப்பட்டு (மண்ணாடிப்பட்டு கொம்யூன்)*

ஊரின் தொடக்கத்திலேயே மிகப் பழமைவாய்ந்த திரௌபதியம்மன் கோயில் இடம்பெற்றிருக்கிறது. இக் கோயிலின் வட புறத்தில் மாரியம்மன் கோயிலும் எழுந்தருளப் பெற்றிருக்கிறது. இரு கோயிலையும் சேர்த்து மிகப் பெரிய மதிற்சுவர் நான்கு திசைகளில் அமைக்கப் பட்டுள்ளது. பல ஆண் தெய்வக் கோயில்களையும் பெண் தெய்வக் கோயில் களையும் கொண்ட சிறப்பு வாய்ந்த இவ்வூரில் வன்னிய இன மக்கள் மிகுதியாகவும் அதற்கு அடுத்த நிலையில் ஆசாரி, செட்டியார் என்ற சமூகத்தினரும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் ஒன்றுபட்டு ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் வளர்பிறை நாளில் பன்னிரண்டு நாட்கள் தலைக்கட்டுகள் என்ற அடிப்படையின் மூலம் நிதி வசூல் செய்து விழாவை நடத்து கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கோயிலுக்கென்று அரைக் காணி நிலம் இருக்கிறது.

## *25. சோரப்பட்டு (மண்ணாடிப்பட்டு கொம்யூன்)*

ஊரின் மையப் பகுதியில் திரௌபதியம்மன் கோயில் அழகிய தோற்றத்துடன் அமைந்துள்ளது. இவ்வூரில் மொத்தம்

ஆறு பழம்பெரும் கோயில்கள் காட்சியளிக்கின்றன. ஆண் தெய்வக் கோயில்கள் இரண்டும் பெண் தெய்வக் கோயில்கள் நான்கும் இடம் பெறுகிறது. இக்கோயில்களுக்கென்று 9 காணி நிலம் இருக்கிறது. இதைக் கொண்டு தினமும் இருவேளை நைவேத்தியம் கோயிற் பூசாரியைக் கொண்டு நிகழ்த்தப் படுகின்றது. இவ்வூரில் வன்னிய இனத்தவர் அதிக எண்ணிக்கை யிலும் குறைவான எண்ணிக்கையில் ரெட்டியார், முதலியார், யாதவர், பத்தர் போன்றோரும் உள்ளனர்.

## 26. திருவாண்டார்கோயில் (மண்ணாடிப்பட்டு கொம்யூன்)

ஊரின் அருகாமையில் அமைந்துள்ள திரௌபதியம்மன் கோயில் மிகவும் பழமை வாய்ந்த கோயிலாகக் காணப்படு கிறது. இக்கோயிலுக்கு நான்கு முறை கும்பாபிடேகம் (1955, 1966, 1977, 1988) நடந்ததாக கூறுவர். இக்கோயிலுக்கென்று இரண்டு ஏக்கர் நிலம் உள்ளது. பிராமணர் அல்லாத கோயிற் பூசாரியே இக்கோயிலை நிர்வகித்து வருகிறார். இவ்வூரில் ஆண் தெய்வக் கோயில்கள் மூன்றும், பெண் தெய்வக் கோயில்கள் ஆறும் உள்ளன. இவ்வூரில் வன்னியரும் செட்டியாரும் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர். குறைவான எண்ணிக்கையில் செட்டியார், ஆசாரி வகுப்பைச் சார்ந்தவர்கள் உள்ளனர். தலைகட்டுகள் என்ற முறையில் பணம் வசூலித்து ஒவ்வொரு சமூகத்தினரும் ஒவ்வொரு உபயமாக / உற்சவமாக வைகாசித் திங்களில் ஆண்டுதோறும் சீரும் சிறப்புமாகப் பத்து நாட்கள் திருவிழா நடத்தி வருகின்றனர். அறங்காவலர் குழு இன்றி ஊர்ப் பெரியோர்களால் செவ்வனே செயல்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 27. புராணசிங்கு பாளையம் (மண்ணாடிப்பட்டு கொம்யூன்)

ஊரின் நடுவே இடம் பெற்றுள்ள திரௌபதியம்மன் கோயில் பல சமூக இனமக்களாலும் வழிபடப்பட்டு வருகின்றது. இவ்வூரில் ஆண் தெய்வக் கோயில்கள் ஐந்தும் பெண் தெய்வக் கோயில்கள் மூன்றும் இடம்பெறுகின்றன. இவ்வூரில் வன்னிய இனமக்கள் அதிகமாகவும் ரெட்டியார் இனமக்கள் குறை வாகவும் வாழ்கின்றனர். இக்கோயிலுக்கென்று இரண்டு ஏக்கர் விளைநிலம் இருக்கிறது. இதைக் கொண்டு நைவேத்தியம் தினமும் கோயிற் பூசாரியைக் கொண்டு நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் பத்துநாட்கள் திருவிழாவாகத் தலைகட்டு முறை என்று அடிப்படையில் பிரித்து நிதி வசூல் செய்து

அனைத்து இனமக்களாலும் ஒற்றுமையுடன் விழா நடத்தப் படுகின்றது. அரசின் துணையின்றி அவ்வூர் மக்களே திரௌபதியம்மன் கோயிலை நிர்வகிப்பது போற்றுதற்குரிய தாகும். மேலும் சிறப்பு வாய்ந்த மர உருவச் சிலைகளும் இடம்பெற்றிருப்பது அழகுக்கு அழகு சேர்ப்பனவாக உள்ளன.

## 28. மண்ணாடிப்பட்டு (மண்ணாடிப்பட்டு கொம்யூன்)

ஊரை ஒட்டியே திரௌபதியம்மன் கோயில் திகழ்கிறது. இக்கோயிலின் அருகாமையில் விளைநிலங்கள் காட்சியளிக் கின்றன. இவ்வூரில் ஆண் தெய்வக் கோயில்கள் மூன்றும் பெண் தெய்வக் கோயில்கள் மூன்றும் உள்ளன. திரௌபதியம்மன் கோயிலுக்கும் முருகன் கோயிலுக்கும் இருவேளை அன்ன, நைவேத்தியம் செய்பவராக விஸ்வநாத அய்யர் திகழ்கிறார். இவ்வூரில் வன்னிய இனமக்கள் அதிக அளவிலும் ரெட்டியார் வகுப்பைச் சார்ந்தவர்கள் குறைந்த அளவிலும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

## 29. வாதானூர் (மண்ணாடிப்பட்டு கொம்யூன்)

ஊரின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் திரௌபதியம்மன் கோயிலின் அருகில் மாரியம்மன் கோயிலும் இடம்பெற்றிக்கிறது. இரு அம்மன் கோயிலையும் சேர்த்து நான்கு திசைகளிலும் மதிற்சுவர் ஒன்று காணப்படுகிறது. இக்கோயிலுக்கு அரை ஏக்கர் நிலம் உள்ளது. ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் பத்துநாட்கள் திருவிழா நடைபெறுகிறது. திருவிழாவை வன்னியர் இனமக்கள் முன்னின்று நடத்து வதையும் செட்டியார், ரெட்டியார் நாயக்கர், ஆசாரி போன்றோர் விழாவில் பங்கு கொண்டு சிறப்புச் செய்வதையும் அறிய முடிகிறது.

## 30. முருங்கப்பாக்கம் (முதலியார்பேட்டை கொம்யூன்)

இவ்வூரில் பழம்பெரும் கோயில்கள் பல உள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்க திரௌபதியம்மன் கோயில் இக்கோயில் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப் பட்டது. கோயில் ஊரின் மையப்பகுதியில் இடம்பெறுகிறது. இக்கோயிலில் ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் கொடி யேற்றம் செய்து ஆறு நாட்கள் தொடர்ந்து விழா நடைபெற்று வருகிறது. இவ்வூரில் பல சமூக இனத்தவர்கள் இருப்பினும்

வன்னியர்குல மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

*31. உருவையார் (வில்லியனூர் கொம்யூன்)*

பழம்பெரும் கோயிலான திரௌபதியம்மன் கோயில் உருவையார் என்னும் சிற்றூரில் கரிகால்சோழ மன்னன் ஆட்சி செய்வதற்கு முன்பாகவே நிறுவப்பட்டுள்ளது என திரௌபதியம்மன் கோயிலைப் பற்றி எக்யபுர ஸ்தல புராணம் கூறும். இவ்வூரில் வன்னிய இனமக்கள் மிகுதியாகவும் ஆசாரி, குயவர், யாதவர் மற்றும் முதலியார் இன மக்கள் குறைவாகவும் வாழ்கின்றனர். இவ்வூரில் ஆண் தெய்வக் கோயில் ஒன்றும் பெண் தெய்வக் கோயில்கள் நான்கும் இடம்பெற்றுள்ளன. இக்கோயிலுக் கென்று ஐந்து காணி நிலம் இருப்பதாகக் கூறுவர். இதைக் கொண்டு தினமும் இருவேளை பூசைகள் நடைபெறுகின்றன. திரௌபதியம்மன் கோயிலில் ஆண்டுக் கொரு முறை பத்து நாள் திருவிழாவாகப் பங்குனி மாதத்தில் ஊர் மக்களும் அறங்காவலர் குழுவும் மற்றும் உபயதாரர்களும் சேர்ந்து வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர்.

*32. வில்லியனூர் (கனுவாப்பேட்டை) (வில்லியனூர் கொம்யூன்)*

இவ்வூரின் மைப் பகுதியில் வடக்கு தெற்கு வீதியில் (கடை வீதியில்) பழம்பெரும் திரௌபதியம்மன் கோயில் இடம்பெற்றுள்ளது. இவ்வூரில் ஆண் தெய்வக் கோயில்கள் பத்தும் பெண் தெய்வக் கோயில்கள் ஐந்தும் காணப்படுகின்றன. அனைத்துக் கோயில்களுக்கும் சேர்த்து மூன்று காணி நிலம் இருப்பதாகக் கூறுவர். இதில் வரும் வருமானத்தைக் கொண்டு நைவேத்தியம் நிகழ்த்தப்படுகிறது. இவ்வூரில் வன்னிய இனமக்கள் அதிகமாகவும், செட்டியார் (வாணிபம்) சமூக இனமக்கள் குறைவாகவும் வாழ்ந்து வருகின்றனர். மேலும் யாதவர், செங்குந்தர், ரெட்டியார் போன்றோரும் வசித்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் ஒருமித்த உணர்வுடன் வாழ்ந்து வருகின்றனர். தெரு வாரியாக நிதி வசூலிக்கப்பட்டு திருவிழா ஆண்டுதோறும் நடைபெறுகின்றது.


*33. கூடப்பாக்கம் (வில்லியனூர் கொம்யூன்)*

இவ்வூரின் நடுவில் அமைந்திருக்கும் திரௌபதியம்மன் கோயில் மிகவும் பழமை வாய்ந்த கோயிலாகக் காட்சி தருகின்றது. இவ்வூரின் அருகில் இருக்கும் அகரம்,

உளவாய்க்கால், சோனேரிக்குப்பம் போன்ற ஊர்மக்கள் அனைவரும் இவ்வூர்த் திருவிழாவில் பங்குகொண்டு 13 நாட்கள் திருவிழாவை, ஆடி மாதத்தில் சிறப்பாகக் கொண்டாடு கின்றனர். இவ்வூரில் செட்டியார், ரெட்டியார், நாயுடு, முதலியார், கிராமணி, போன்றோரும் திருவிழாவில் பங்கு கொள்கின்றனர். இங்குப் பிராமணர் அல்லாதார் கோயிற் பூசாரியாக இருந்து தினமும் இருவேளை பூசைகள் நடத்தி வருகின்றார். அறங்காவலர் குழுவின் ஒத்துழைப்பின் பேரில் ஆண்டுதோறும் விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## பின்னிணைப்பு - 3

### நிழற் படங்கள்



திரௌபதியம்மன் திருக்கோயிலின் அழகிய தோற்றம்



திரௌபதியம்மன் திருக்கல்யாணத்திற்கு வருகை தரும் சான்றோர் பெருமக்கள்



திருக்கல்யாண நிகழ்ச்சியை நடத்தும் பொறுப்புத்தாரர்கள்



திரௌபதியம்மன் திருக்கோயிலில் பொங்கலிடும் காட்சி




துர்க்கையம்மனின் அழகிய சுதைச் சிற்பம்




முத்தால் இராவுத்தரின் சிலை அமைப்பு



திருக்கோயிலில் இடம்பெறும் மகாவிஷ்ணு அருச்சுனன் மற்றும் திரௌபதியம்மன் திருவுருவங்கள்



திரௌபதியம்மன் உலா வரும் திருக்காட்சி



திருக்கோயிலில் இடம்பெறும் பலிபீடம் மற்றும் கொடிமரம் .



குடமுழுக்கு நன்நீராட்டு விழாவைக் காண மக்களின் கூட்டம்

# துணைநூற் பட்டியல்


## உரைநடை நூல்கள்

1. அடிகளார் (குன்றக்குடி) — நமது நிலையில் சமயம் சமுதாயம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

2. அழகு கிருஷ்ணன் பொ. — சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும்
ஐந்திணைப் பதிப்பகம்,
திருவல்லிக்கேணி, சென்னை.
பதிப்பு - 1988.

3. அருணாசலம். ப — பக்தி இலக்கியம்
பாரி புத்தகப் பண்ணை,
சென்னை.
பதிப்பு - 1983.

4. அறவாணன் க.ப. — தமிழர்தம் தலைமை வழிபாடு
184, பிரகாசம் சாலை, சென்னை - 108.
முதற்பதிப்பு - 1990.

5. அறவாணன் க.ப. — தமிழ்ச் சமுதாய வரலாறு
(பண்டைக்காலம்)
தமிழ்க்கோட்டம்,
91, இரண்டாம் தெரு, மோகன் நகர்,
புதுச்சேரி - 5.
முதற்பதிப்பு - 1992.

6. அறவாணன் க.ப. — தமிழர்தம் மறுபக்கம்
பாரி நிலையம், பிராட்வே, சென்னை
முதற்பதிப்பு - 1984.

7. அறவாணன் க.ப. — மர வழிபாடு
பாரி நிலையம், பிரகாசம் சாலை,
பிராட்வே, சென்னை - 108.
முதற்பதிப்பு - 1984.

8. அறவாணன் க.ப. — தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்
பாரி நிலையம், பிரகாசம் சாலை
பிராட்வே, சென்னை
இரண்டாம் பதிப்பு - 1991.

9. அறிவுநம்பி. அ — தமிழகத்தில் தெருக்கூத்து
அமுதன் நூலகம், காரைக்குடி - 1
முதற்பதிப்பு - 1986.

10. அறிவுநம்பி. அ — தமிழரின் தெய்வநெறிச் சிந்தனைகள்
அமுதன் நூலகம், காரைக்குடி - 1
முதற்பதிப்பு - 1993.

11. இரத்தினம். சி. — காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் - ஓர் ஆய்வு
உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை - 113.
முதற்பதிப்பு - 1998.

12. இராதாகிருஷ்ணன். எஸ் — நம்பிக்கையின் மறுமலர்ச்சி (மொ.பெ)
அமுத நிலையம், சென்னை
பதிப்பு - 1968.

13. இராசமாணிக்கனார் — தமிழர் வாழ்வு
செல்வி பதிப்பகம், காரைக்குடி
பதிப்பு - 1976.

14. இராமசாமி. துளசி — நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள்
டி.டி.பி.ஐ. அஞ்சல், தரமணி,
சென்னை - 113.
முதற்பதிப்பு - 1985.

15. இராமநாதன். ஆறு (பதிப்பாசிரியர்) — நாட்டுப்புறவியல் ஆய்வுமுறைகள்
சமூகவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை,
முதற்பதிப்பு - 1990.

16. இராஜசேகரன், சு. — திருக்கோயில்களில் தொழில் சமுதாய உறவுகள்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை. பதிப்பு - 1995.

17. கண்ணதாசன். — அர்த்தமுள்ள இந்துமதம் (முதல்பாகம்)
வானதி பதிப்பகம், சென்னை.
பதிப்பு - 1984.

18. கணபதிராமன். எல் (பதிப்பாசிரியர்) — திருநெல்வேலிப் பகுதியில் சிறு தெய்வ வழிபாடு
திருமகள் நூலகம், தூத்துக்குடி - 2

19. காந்தி. க — தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
அடையாறு, சென்னை - 20.
முதற்பதிப்பு - 1986.

20. கிருஷ்ணசாமி. ப. — கொங்குநாட்டு வரலாறும் அண்ணன்மார் வழிபாடும்
தன்னானானே பதிப்பகம்
பெங்களூர் - 38.
முதற் பதிப்பு - பிப்ரவரி - 1998.

21. குளத்தூரான். க — தஞ்சை நகரிய சக்திக் கோயில்கள்
எட்டாம் உலகத் தமிழாராய்ச்சிப் பதிப்புச் சூழல் வெளியீடு. எண் - 20
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

22. கைலாசபதி. க — பழந்தமிழர் வாழ்வும் வழிபாடும்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை - 48.
முதற்பதிப்பு - 1996.

24. கைலாசபதி. க — பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்
மக்கள் வெளியீடு,
24, உனிக அலி சாகிப் தெரு,
சென்னை - 2
இரண்டாம் பதிப்பு - 1978.

25. சக்திவேல். சு — நாட்டுப்புற இயல் ஆய்வு
மணிவாசகர் பதிப்பகம்,
8/7, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை - 108.
மூன்றாம் பதிப்பு - 1995.

26. சச்சிதானந்தம். வை — ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம்
ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ்,
அண்ணாசாலை சென்னை - 6
பதிப்பு - 1985.

27. சண்முக சுந்தரம். சு — நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம்
இலக்கிய மாணவர் வெளியீட்டகம்,
சென்னை.
பதிப்பகம் - 1975.

28. சண்முக சுந்தரம். சு — சுடலை மாடன் வழிபாடு
சமூக மானிடவியல் ஆய்வு,
காவ்யா பதிப்பகம், பெங்களூர்
பதிப்பு - 1993.

29. சரஸ்வதி வேணுகோபால் — நாட்டுப்புறவியல் கோட்பாடு
ஆய்வுகள் தாமரை வெளியீடு,
12-7/16, முதல் அவென்யு,
விஸ்வநாதபுரம் , மதுரை - 14
பதிப்பு - 1991.

30. சாமி பி.எல் — தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ
வழிபாடு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட், சென்னை
பதிப்பு - 1976.

31. சாமிநாதையர். உ.வே. (பதிப்பாசிரியர்) — சிலப்பதிகார மூலமும் அரும்பத
உரையும்
அடியார்க்கு நல்லாருரையும்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
பதிப்பு - 1985.

32. சாமிநாதையர். உ. வே. (பதிப்பாசிரியர்) — நற்றிணை மூலமும் உரையும்
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம், பெசன்ட் நகர்,
சென்னை - 90.

33. சாமிநாதையர். உ.வே. (பதிப்பாசரியர்) — பத்துப்பாட்டு மூலம்
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம், பெசன்ட் நகர்,
சென்னை - 90
இரண்டாம் பதிப்பு - 1993.

34. சாமிநாதையர். உ. வே. (பதிப்பாசிரியர்) — பரிபாடல் மூலமும்
பரிமேலழகருரையும்
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல் நிலையம், பெசன்ட் நகர்
சென்னை - 90.
ஆறாம் பதிப்பு - 1995.

35. சாமிநாதையர். உ.வே. (பதிப்பாசிரியர்) — புறநானூறு மூலமும் உரையும்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
பதிப்பு - 1985.

36. சாமிநாதையர். உ.வே. (பதிப்பாசிரியர்) — பட்டினப்பாலை மூலமும் உரையும்
டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பு
திருவான்மியூர்,
சென்னை.
பதிப்பு - 1974.

37. சாமிநாதையர். உ. வே. (பதிப்பாசிரியர்) — புறப்பொருள் வெண்பா மாலை
மூலமும் சாமுண்டி தேவநாம
கரியற்றிய உரையும்
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம், பெசன்ட் நகர்,
சென்னை - 90
பத்தாம் பதிப்பு - 1991.

38. சிதம்பரனார். சாமி — பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்
இலக்கிய நிலையம்,
சென்னை - 94
நான்காம் பதிப்பு 1988.

39. சீனுவாசன். இரா — சக்தி வழிபாடு
ஜெயகுமார் ஸ்டோர், நாகர்கோயில்
முதற்பதிப்பு - 1975.

40. சுசிலா. கோபாலகிருஷ்ணன் — சங்க இலக்கிய நிமித்தங்கள்
பாலாஜி பதிப்பகம்,
மதுரை - 14.
பதிப்பு - 1987.

41. சுப்பிரமணியன். ச. வே. (பதிப்பாசிரியர்) — தொல்காப்பியம் தெளிவுரை
மணிவாசகர் பதிப்பகம்,
9/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை - 108.
முதற்பதிப்பு - 1998.

42. சுப்பிரமணியன். ச.வே. — அகநானூறு மூலமும் உரையும்
உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்,
பெசன்ட் நகர்
சென்னை - 1.

43. சோமசுந்தரனார். பொ. வே. (உரையாசிரியர்) — திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், 1/140, பிரகாசம் சாலை, சென்னை - 1 மறுபதிப்பு - 1978.

44. ஞானசேகரன். தே — மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள் பார்த்திபன் பதிப்பகம் 12, கமாண்டிங் ஆபிசர் தெரு, மதுரை முதற்பதிப்பு 1987.

45. தட்சிணாமூர்த்தி. அ — தமிழர் நாகரிகமும் பண்பாடும் ஐந்திணைப் பதிப்பகம் 282, பாரதி (பைகிராப்ட்ஸ்) சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 5 முதற்பதிப்பு - 1987.

46. தேனப்பன். வ — ஒன்பது நகரக் கோயில்கள் தேன் வள்ளியம்மை பதிப்பகம் வெள்ளையன் ஊருணி வடக்கு தேவக்கோட்டை முதற்பதிப்பு - 1990

47. நாச்சியப்பன். நாகப்பா — திருக்கோயில் வழிபாடு மணிவாசகர் பதிப்பகம் சென்னை - 600 001 பதிப்பு - 1991.

48. நாராயணன். பி — நாட்டுப்புற நம்பிக்கைகள் மணிவாசகர் பதிப்பகம் சென்னை - 1 பதிப்பு - 1993.

49. பக்தவச்சல பாரதி. சீ — பண்பாட்டு மானிடவியல் மணிவாசகர் பதிப்பகம் 55, லிங்கி தெரு, சென்னை - 1 முதற்பதிப்பு - 1990

50. புலியூர்க்கேசிகன் (உரையாசிரியர்) — அகநானூறு மூலமும் உரையும் 184, பாரி நிலையம், பிராட்வே, சென்னை - 108.

51. புலியூர்க்கேசிகன் (உரையாசிரியர்) — ஐங்குறுநூறு மூலமும் உரையும் 184, பாரி நிலையம், பிராட்வே, சென்னை - 108 பதிப்பு - 1983.

52. மாணிக்கவேலு. மு. அ. — தமிழ்நாட்டில் நடராசர் வழிபாடு
அம்பலவாணர் பதிப்பகம்
45, அருணாசல நாயக்கர் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 2
முதற்பதிப்பு - 1994.

53. முத்துசாமிப்பிள்ளை. மு. கோ. — கும்பேசுவரர் திருக்கோயிலும்
மகாமகத் திருவிழாவும்
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்
பதிப்பு - 1992.

54. லூர்து. தே — நாட்டார் வழக்காற்றியல்
ஆய்வுக் கழகம்,
பெருமாள்புரம், திருநெல்வேலி,
பதிப்பு - 1987.

55. வானமாமலை. ந. — தமிழர் வரலாறும் பண்பாடும்
நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட்.
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட்,
சென்னை - 98.
நான்காம் பதிப்பு - 1997.

56. வானமாமலை. ந. — பழங்கதைகளும் பழமொழிகளும்
நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட்,
சென்னை - 98.
நான்காம் பதிப்பு - 1997.

57. வித்தியானந்தன். சு — தமிழர் சால்பு (சங்க காலம்)
பாரி புத்தகப் பண்ணை
சென்னை
பதிப்பு - 1971.

58. வேதாச்சலம். வெ — இயக்கி வழிபாடு
அன்னம் (பிரைவேட்) லிமிடெட்
சிவகங்கை
முதற்பதிப்பு - 1989

59. .......................... — நாடோடிப் பாடல்கள் காட்டும்
நம்பிக்கை (ப. இ)

## இலக்கிய நூல்கள்


1. கலித்தொகை — சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை
2. குறுந்தொகை — சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை பதிப்பு - 1965
3. தொல்காப்பியம் — சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை


## ஆங்கில நூல்கள்


1. Emile Durkhem — The Elementary forms of Religious life (New York) Free Press
2. Alf Hiltebeitel — The Cult of Draupadi Mythologies: From Gingee to Kuruksetra - Vol - I The University of Chicago Press Chicago and London - 1988
3. Alf Hiltebeitel — The Cult of Draupadi on Hindu Ritual and the Goddess Vol - II The University of Chicago Press Chicago and London - 1991
4. Right Reverend Henry White head. D.D. — The Village Gods of South India Asian Educational Services New Delhi - 110 035 Reprint - 1983.


## ஆய்வேடுகள்


1. அருட்கலை. கோ — வாழும் தமிழர் பண்பாட்டில் நம்பிக்கைகள், இளம்முனைவர் பட்ட ஆய்வேடு, தமிழியல்துறை, புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 14 ஆண்டு - 1990
2. அருள்தாசு. அ — வாழும் தமிழர் பண்பாட்டில் வழிபாடு, இளம்முனைவர் பட்ட ஆய்வேடு, தமிழியல் துறை, புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 14, ஆண்டு - 1990
3. முருகையன். அரங்க. மு — தமிழர்தம் சாதிய அமைப்புகள் (அடிப்படை: இலக்கியம், கல்வெட்டு, வழிபாடு)

முனைவர்பட்ட ஆய்வேடு,
தமிழியல் துறை,
புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி - 14. ஆண்டு 1994.

## ஆய்வுக் கட்டுரைகள்

1. அறிவுநம்பி. அ. — உருவு (தேடல்) மூன்றாம் தொகுதி புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி, முதற்பதிப்பு - 1990

2. இராமசாமி. துளசி — தமிழ்நாட்டில் திரௌபதியம்மன் வழிபாடு மற்றும் மதுரை மாவட்டத்தில் திரௌபதியம்மன் வழிபாடு (தமிழ்ச் சமுதாயமும் நாட்டுப்புறப் பண்பாடும்)

## அகராதிகள்

1. கலைக் களஞ்சியம்
தமிழ் வளர்ச்சிக் கழகம்
சென்னைப் பதிப்பு - 1968

2. செந்தமிழ் அகராதி
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

## இதழ்கள்

1. மாத இதழ் — ஆலயம் - சென்னை

2. நாளிதழ் — தினமணி, தினமலர் - புதுச்சேரி



முனைவர் உலக. வீரப்பன்..

யார் இவர்?

படிப்பதில் அக்கறை கொண்டு
விடுமுறை எடுத்து வந்து இளம்முனைவர்
படிப்பை மேற்கொண்டவர். அதனால்..
**இவர் ஒரு கல்வித் தும்பி**

அதன்பிறகு, கற்றது போதுமென
இருக்காமல் பகுதிநேர ஆய்வாளராக
ஆய்வை நிகழ்த்தியவர். அதனால்..
**இவர் ஒரு தங்கக் கம்பி**

புதுவைப் பல்கலைக்கழக அலுவலக
மேலாளர் நிலையிலிருந்துகொண்டு,
தமிழியல் துறையில் முனைவர் பட்டம்
பெற்ற முதலாமவர்; பிள்ளைச்சாவடி
ஊரின் முதலாவது தமிழ் முனைவர்;
அதனால்..
**இவர் ஒரு தமிழ்நம்பி**

எழுதுவதில் உண்மையான ஈடுபாடு
கொண்டு ஆய்வுக்கோவைகளிலும்
பிறவற்றிலும் எழுதுவதில் மகிழ்பவர்.
அதனால்..
**இவர் ஒரு நல்ல தம்பி**

**அ. அறிவுநம்பி**
தமிழாசிரியன்